# வாணிதாசன் கவிதைகள்

மலர் நிலையம்
133, பிராட்வே... சென்னை-1

RangaRakes tamilnavarasam.com

# உள்ளுறை

## I இயற்கை


| | | | |
|---|---|---|---|
| 1 | வாழ்க இளம்பரிதி | ... | 1 |
| 2 | காலை அழகு | ... | 5 |
| 3 | கதிரவன் வருகை | ... | 6 |
| 4 | சிற்றூர் | ... | 8 |
| 5 | எங்களூர் | ... | 10 |
| 6 | ஆறு | ... | 12 |
| 7 | வயல் | ... | 14 |
| 8 | பனை | ... | 16 |
| 9 | மாமரம் | ... | 18 |
| 10 | காட்டுப் பூ | ... | 19 |
| 11 | வாடிய மலர் | ... | 21 |
| 12 | அது யார்? | ... | 23 |
| 13 | இன்பச் சொத்து | ... | 25 |
| 14 | தையும் பிறந்தது! | ... | 27 |
| 15 | எவர் செயல்? | ... | 29 |
| 16 | அந்தி அழகு | ... | 30 |
| 17 | நிலவே, சொல்! | ... | 31 |
| 18 | அழகுப் பெண் | ... | 32 |


## II இன்பம்


| | | | |
|---|---|---|---|
| 19 | முதல் முத்தம் — | ... | 34 |
| 20 | பெட்டையும் சேவலும் | ... | 36 |
| 21 | சிரிக்காதே தோழா | ... | 38 |
| 22 | இனிப் பிரியேன்! | ... | 40 |
| 23 | உயிர் வாட்டும் காலம் | | 43 |
| 24 | அலர் தூற்றில் என்னும் | ... | 45 |
| 25 | கொடிய இரவு | ... | 46 |
| 26 | மறந்தாரே தோழி! | ... | 48 |
| 27 | உயிர் வாழாதே! | ... | 49 |
| 28 | அவளில்லை! | ... | 50 |
| 29 | என்னேடி கோபம்? | ... | 52 |


RangaRakes tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| 30 | ஒரு வார்த்தை | ... | 54 |
| 31 | வரச் சொல்லடி | ... | 56 |
| 32 | நீ இன்றேல்...? | ... | 57 |
| 33 | என்றும் மறவேன் ! | ... | 58 |
| 34 | எந்நாளோ ? | ... | 60 |
| 35 | துணியவில்லை ! | ... | 62 |
| 36 | நிலைத்து நிற்குமோ ? | ... | 64 |
| 37 | எட்டிப் பழமோ ? | ... | 65 |
| 38 | அது ஒரு நாள் ! | ... | 68 |
| 39 | காய்ந்தென்ன ? பெய்ந்தென்ன ? | ... | 69 |
| 40 | நினைப்பேனோ இல்லை ? | ... | 71 |
| 41 | நானென் சொல்வேன் ? | ... | 73 |
| 42 | காரணந்தான் என்னே ? | ... | 74 |
| 43 | என்ன உண்டாம் ? | ... | 76 |
| 44 | வேறெங்கோ நோக்குவதேன் ? | ... | 77 |
| 45 | கன்னியின் கனவு | ... | 79 |
| 46 | அறியாக் காதலி | ... | 81 |


## III மக்கள்


| | | | |
|---|---|---|---|
| 47 | தாய் | ... | 83 |
| 48 | மனைவி | ... | 85 |
| 49 | மகள் | ... | 87 |
| 50 | உழவன் | ... | 89 |
| 51 | பாட்டாளி | ... | 91 |
| 52 | குறவர் | ... | 93 |
| 53 | மீன்காரி | ... | 96 |
| 54 | பிச்சைக்காரி | ... | 97 |
| 55 | பைத்தியக்காரி | ... | 99 |


## IV புரட்சி


| | | | |
|---|---|---|---|
| 56 | புரட்சி | ... | 104 |
| 57 | மே நாள் | ... | 106 |
| 58 | மனமே இல்லை ! | ... | 107 |
| 59 | ஒன்றே போதும் ! | ... | 110 |
| 60 | இதுதானோ செய்வார் ? | ... | 112 |
| 61 | தீர்ப்புச் சொல்வீர் ! | ... | 113 |
| 62 | ஏன் தயக்கம் ? | ... | 115 |
| 63 | இவர்களே திருடர் ! | ... | 116 |


RangaRakes tamilnavarasam.com

## V இசைக்குரியார்

64 காந்தி ... 117
65 பாரதி ... 118
66 மறைமலையடிகள் ... 120
67 திரு. வி. க. ... 122
68 பேராசிரியர் சுந்தரனார் ... 123
69 கவிமணி ... 124

## VI தமிழ்

70 தமிழ்த் தாய் ... 125
71 தமிழ் வாழ்க ! ... 126
72 எங்கள் தமிழ் ... 128
73 தமிழ் நாடு ... 129
74 தாய் நாடு ... 131
75 தமிழர் ஆட்சி ... 133

## VII பூக்காடு

76 எழுத்தாளன் ... 134
77 கடல் ... 135
78 மணி ... 136
79 எது வேண்டும் ? ... 138
80 எது இன்பம் ? ... 139
81 சேரிக் கடை ... 140
82 பிறந்த ஊர் திரும்பல் ... 142
83 வெட்கி நடந்தேன் ... 145
84 எரிச்சல் ... 146
85 ஏக்கம் ... 148
86 சூறுவளி ... 150
87 கொடிது ! கொடிது ! ... 151
88 வணக்கம் ... 152


RangaRakes tamilnavarasam.com

# வாழ்க இளம்பரிதி !

கடற்பரப்பில் உப்பங் கழிப்பரப்பில் தாழை
மடற்பரப்பில் நெய்தல் மணற்பரப்பில் சாய்ந்த
முடப்புன்னைப் பைங்கிளையில் முண்டகப்பூங் காட்டில்
அடங்கி யிருந்தஇருள் அற்றொழியக் கீழ்க்கடல்மேல்
தங்கப் பரிதி தலைநிமிர்ந்தான் ; வாழியவே !
எங்குமே இன்பம் ! இளம்பரிதி வாழியவே !
வானில் மலையில் மரக்காவில் பூம்புதரில்
போனஒளி, அடடா! பொன்வெள்ளம்! பொன்வெள்ளம்!

ஆசை மனையாட்டி ! அன்பே ! இதைக்கேள்நீ !
மூசையிலே வைத்தெடுத்த பொன்னே முளைத்தகதிர் !
நீர்நிலம்கால் விண்ணை நிலைத்த பொருளையெல்லாம்
ஆட்டிப் படைப்பதுவும் ஆக்கம் விளைப்பதுவும்
வானம் முளைத்து வரும்பரிதி செய்கையடி !
நானிலத்தில் பொய்கை நறும்பூவில் வான்முகட்டில்
ஊனில் உடலில் உயிர்ப்பில் ஒளிவீசி
வானும் எழுச்சியினைச் செய்ததடி ! வாழ்ககதிர் !

இன்னும்கேள் : பெண்ணரசே ! ஏரி குளம்குட்டை
வற்றி வெடித்து மரக்கிளைகள் பட்டுவரச்
சுற்றிப் படர்ந்தகொடி தோப்பும் கலகலக்க
நன்செய பொலிவிழக்க நல்லாறு நீர்வற்றப்
புன்செய் இரைத்துழவன் நாளெல்லாம் போராட
வானம் அனல்சொரியும் ! மண்ணும் கனல்எழுப்பும் !

RangaRakes tamilnavarasam.com

இட்ட அடிவேகும் ! ஒட்டும் பொடிகாலில் !
பட்ட செடிகொடிகள் மொட்டை மரங்களெல்லாம்
வேகாது வெந்து வெறிச்சென் றிருந்திடுமே !
மண்ணெழுப்பும் கானல் ! வருங்காற்றுத் தீச்சொரியும் !
கண்ணுக்குத் தோன்றாத புண்ணாய் உடல்கொழிக்கும் !
சிற்றூரும் பேரூரும் தீய்ந்த முதுவேனில்
அற்றொழிக்கும் மக்கள் துயரற் றொழியவில்லை !

வானம் குமுறும் வளர்ந்தமலைக் கூட்டம்போல் !
ஏனம் வெறிகொண் டெழுதல்போல், யானை
தலைதெறிக்க ஓடும் தகைமைபோல் கார்வானில்
அங்குமிங்கும் ஓடும் ; அதிரும் ; முழவார்க்கும் !
சிங்கத் தமிழர் செருக்களத் தோசையென
வானம் இடிக்கும் ; மழைபொழியும் ! நீர்மூசைத்
தங்க உருக்குபாய் தாரைகளைப் போல்மின்னல்
கண்ணைப் பறிக்கும் ! கருத்தழிக்கும் காற்றிரைச்சல் !
நீண்டபனை தென்னை நிலைகால் தெரியாமல்
மூண்டெழுந்த காற்றுடனே ஆடும் ; முறிந்தொடியும் !
கொட்டகையில் மாடுகன்று கூண்டில் பறவைஇனம்
கட்டுண்டு மங்கிக் கலங்கும் பசியாலே !
வெளிச்செல்ல வொண்ணா ! வினைசெய்ய வொண்ணா !
ஒளியற்று மக்கள் ஒடுங்கிக் கிடந்திடுவர் !
தீமை விளைத்தகார் சென்றதுவாம் ! ஆனாலும்,

வெள்ளக் கொடுமை வெளிசெல்லக் கூடுவதோ ?
பள்ள வயல்நினைவால் பாழை மறந்தோமே !
ஓர்ஓசை கேட்டுமனத் தின்பம் பிறந்ததடி !
நீர்வயலில் பாய்ந்தோட நெஞ்சம் குளிர்ந்ததடி !
பச்சைக் கடல்போல் பரந்த வயல்வெளியில்
நச்சுப்புல் நீக்கி நலஞ்சேர் உரமிட்டு
வளர்த்தோம் ; மகிழ்ந்தோம் ! வயலில் பசுநெல்
கிளைப்பசும் பாம்பாய்க் கிளைத்து வளர்ந்தது !
கூதிர் அகலச் சிறுகுறை தோன்றியதே !

RangaRakes tamilnavarasam.com

தோப்பும் துரவும் விழிப்புலனுக் கெட்டாது
காப்புத் திரையிட்டு வைத்ததுபோல் மூடுபனி
மண்ணுக் கடியில் வளர்தீ இருப்பதைப்போல்
கண்ணுக்கு நீண்டமட்டும் காணும் பனிப்புகையே !
ஊதை உடல்நடுங்கும் ! ஊரெல்லாம் தீக்காயும் !
கொம்புத் துளிர்கருகும் ! கொத்தெல்லாம் சீர்அரும்பும் !
செம்பொன் சிறுகிண்ணம் போல்பூக்கும் பூசணிப்பூ !
ஆமை தலைபோல் அழகு சிறுகாயை
நாமடைய விட்டுவைக்கும் நற்பறங்கி! வீட்டோரத்
தோட்டத்து வேலியிலே தொங்கும் சுரைக்காய்கள்
மீட்டாது மாட்டிவைத்த மெல்யாழாம் ! தென்னைமரக்
குட்டை நிறைந்த குளிர்அல்லித் தாமரைநீர்
மட்டத்தில் வந்து மலர்பூக்க எத்தனிக்கும் !
செந்நெல் பழுத்ததுவே ! தீம்பலா முற்றியது !
கன்னலோ நாணற் கடல்போலப் பூத்ததுவாம் !
காட்டுப்பூனைப்பல்லாம் கார்முல்லை நீளரும்பு
வீட்டுக் கருகிருந்து மெல்லச் சிரித்தழைக்கும்!
யாழ்மீட்டும் தேன்வண்டு! யார்அதைப்போல் பாடவல்லார்?
வாட்டும் குளிர்காற்று வாய்க்கடையில் புண்செய்து
காட்டும் பனிநாள் கடந்துவந்த தைக்கண்டோம் !
தைகண்டோம் ! அன்பே ! தமிழ்கண்டோம் ! இந்நன்மை
வையத்துப் புத்தாண்டின் முன்னாள் வரக்கண்டோம்!
பொன்னொளியை வான்கடல்மேல் பூசிச் சிரித்தகதிர்
இன்னே வரக்கண்டோம்! இன்பம் வரக்கண்டோம் !
வாழ்க இளம்பரிதி ! புத்தாண்டு வாழியவே !

இல்லம் புதுக்கி எழில்புதுக்கி நீராடி
அல்லொத்த கூந்தல் அழகைப் பெருக்க
நறுநெய் தடவுக ! நன்றுக வாரிமுடி !
புத்தாடை பூண்நீ ! மலர்சூடு ! நம்வீட்டுச்
சொத்தாம் குழந்தைகளைத் தூய்மைப் படுத்துகவே !
நேற்றறுத்த நெல்லரிசி நீள்தாழை முள்ளாம்
திருத்திக் களைந்து செழுங்கரும்பின் கட்டிஇட்டுப்

RangaRakes tamilnavarasam.com

பானை உலையேற்றிப் பால்சொரிந்து தீக்கொளுத்தப்
பொங்கலோ பொங்கல்! பெரும்பொங்கல்! வாழியவே!
சிங்கத் தமிழர் திருநாளாம் வாழியவே!
'இங்குள்ளோர்க் கொன்றுமினி இல்லை!' எனுந்தீஞ்சொல்
தங்காது ஒழிக! தமிழ்வாழ்க! வாழ்க! எனச்
சூழ்ந்து குரலெழுப்பச் சோறு சமைத்துவரத்
தேனை நறுநெய்யை ஏலச் சிறுபொடியை
ஆனமட்டும் தூவிநீ ஆக்கிப் படைத்திடுவாய்!
கூப்பிடு வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி!
காப்பெதற்கு? கார்தந்த செல்வம் விளைபொருள்கள்!
சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன்விளைவாம்!
பங்காக்கி உண்போம்! பசியேது பின்நாட்டில்?

கொண்டுவா யாழை! குழந்தைகளைப் பாடவிடு!
பண்டைத் தமிழ்வீரம் பாடட்டும்; கேட்போம்!
அரசர் மடிமேல் அரும்புலவர் செந்நாவில்
ஓங்கி வளர்ந்த உயர்தமிழைப் பாடட்டும்!
ஊனுயிரை மக்கள் உணர்வை வளர்த்துவரும்
தேனும் செழுந்தமிழைப் பாடட்டும்; கேட்போம்!
உனது குரலினிமை உன்மக்கள் சொல்லில்
கனிந்துளது ஆதலினால் கண்மணிகள் பாடட்டும்!
வாழ்க இளம்பரிதி! வாழ்கவே தைப்பொங்கல்!
பொங்கலோ பொங்கல்! உளம்பொங்கும் இந்நாள்போல்
எங்கும் தமிழ்மக்கள் எந்நாளும் வாழ்க!
உயர்க பலதுறையில்! இன்பம் உயர்க!
அயர்விலும் நாட்டின் உயர்வே நினைக!
அறமும் திருவும் அறிவும் நிறைந்திடுக!
சீர்பெற்றுக் கன்னித் தமிழ்வாழ்க என்றும்!
திருநாடு வாழ்க சிறந்து!

RangaRakes tamilnavarasam.com

# காலை அழகு

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
புள்ளின ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி! 1

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே! 2

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை! 3

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி! 4

வீடு துலக்கும்பெண்கள் – குளிர்முகம்
வீசும் ஒளியழகில் – வான்
நாடு விட்டுநகரும் – முழுமதி
நாணி முகம்வெளுத்தே! 5

RangaRakes tamilnavarasam.com

# கதிரவன் வருகை

மயல்தரு கிழை நாளின்
வானத்தைக் காண எண்ணி
வயற்புறம் சென்றேன் ; நொச்சி
மணம்வீசும் வேலி யோரம்
குயில்நுணுக் கிளைகள் தாவிக்
'குக்குகுக்' கென்றே பாடும் ;
செயலற்று நின்றேன் வீசும்
சிலுசிலு காற்றில் நானே ! 1

சேக்கையை விட்டு மக்கள்
எழுந்திடச் சேவல் கூவும் ;
காக்கைகள் ஒன் றி ரண்டு
கரைந்திடும் தென்னந் தோப்பில் ;
வாக்கினைத் திருத்திக் கொள்ளும்
வாழைமேல் கிள்ளை தாவிப் ;
போக்கிடும் இருளைக் காலைச்
செந்நிறம் கீழ்வான் பூசி ! 2

விரிமலர் தேடி யென்றன்
மேலூராய்ந் தோடும் வண்டு ;
கருநிற மேகம் தூக்கம்
கலைந்தெழு சோம்பன் போலப்
புரண்டெழும் கீழ்வா னத்தே ;
புதுப்புது அழகைக் காட்டும்
எரிக்கிரை யாகு தந்தோ !
தொடுவானம் தீதீ எங்கும் ! 3

RangaRakes tamilnavarasam.com

பொன்னிறப் பரிதி யுண்டை
போர்வையை விலக்கி மெல்ல
நன்னிலை எட்டிப் பார்க்கும்;
நகர்ந்தெழும் விரைந்து வானில்!
தென்னைமேல் புதர்மேல் குட்டை
தேங்கிய நீரின் மீது
பொன்மழை; அடடா! அந்தப்
புதுமையே புதுமை யாமே! 4

RangaRakes tamilnavarasam.com

# சிற்றூர்

சேவல் கதிர்மீன் மணிகாட்டும்;
செந்தா மரைப்பூ வெறியூட்டும்;
நாவல் நிறத்துக் கருவண்டு
நல்லிசை எழுப்பும் மதுவுண்டு;
தாவி அலைந்து பசுமூங்கில்
தமிழிசை பாடும் சிற்றூரில்
காவல் கட்டுப் பாடில்லை;
காசைப் பறிப்பார் அங்கில்லை! 1

தாழை யருகே சிறுவீடும்,
தனித்தனி யாகக் கல்வீடும்,
வாழைத் தோப்பும், மாந்தோப்பும்,
வளைந்த சந்தின் கோடியிலே
மேழி மக்கள் உயிருண்டு
மிளிரும் பண்ணை வீடொன்றும்,
ஏழை முத்து மாரியம்மன்
இடிந்த கோவிலு மங்குண்டு! ௨

மண்குடம் இடையில் உடல்சாய்க்க
வலக்கை வீசி ஊர்வம்பைப்
பெண்கள் பேசி நடக்கையிலே
பிதுங்கிய மார்விழி உயிர்கொல்லும்;
கண்ணும் நாட்டில் சிற்றூரே
கவலை போக்கும் நன்மருந்து;
உண்ண உணவு இல்லையெனில்
உடையும் அணியும் என்செய்யும்? 3

RangaRakes tamilnavarasam.com

மாட்டைத் தேய்த்துக் குளிப்பாட்டி
மலர்குளம் அதிர விளையாடி
வீட்டை நோக்கி நீர்ஒழுக
விடைபோல் பையன் வருகையிலே
கோட்டைப் பொன்னை வார்த்தெடுத்த
குறுநகைச் சிறுமியர் உடலெல்லாம்
ஓட்டை ஓட்டை’ எனக்கூவி
ஓடி மறைவார் சிற்றூரில்! 4

ஒருவர் அறிந்தால் ஊரறியும்;
ஒற்றுமை ஒழுக்கம் அவரணிகள்;
பெருமை இல்லை; வீணாகப்
பேசும் வழக்கம் அவர்க்கில்லை;
எருமை கறந்த பால்தயிர்மோர்
எவர்க்கும் பொதுவாம் எனஎண்ணி
வருவார் போவார் யாவர்க்கும்
வழங்கல் ஒன்றே அவரறிவார்; 5

பயிரின் பசுமை, குயிலினிமை
பாட்டுப் பாட நமைத்தூண்டும்!
உயிரைக் கொல்லும் பொறிநமனவ்
வூரில் இல்லை! உடலெல்லாம்
வயிரம் ஏறித் தசைதிரண்டு
மாநிலம் காக்குந் தோளுடையார்
உயிருள வரையும் ஆண்டான்சொல்
உச்சியி லேற்கப் பிறந்தவரோ? 6

RangaRakes tamilnavarasam.com

# எங்களூர்

உடைத்திடும் கரையைத் தெற்கே
உருண்டோடும் செஞ்சி ஆறு;
மடையினில் நாரை தூங்கி
வழிபார்க்கும் சேலுக் காக;
குடையென மாவி ரிந்து
குளிர்நிழல் கொடுக்கும்; வீரர்
படையணி போல வாய்க்கால்
இருகரை பனைகள் நிற்கும்! 1

குட்டையும் குட்டை பூத்த
குளிர்அல்லிப் பூவும் கண்கள்
எட்டிய மட்டும் தோன்றும்;
இடையிடை கொடிக்கால், வாழை
எட்டிப்பார்த் தழைக்கும் நம்மை;
இருவிழி விருந்து காற்றுப்
பட்டு,நெல் அலையைப் போலப்
படிந்தெழுந் தாடுங் கூத்தே! 2

கொண்டலை முட்டு கின்ற
கோபுரம் இரண்டு தாங்கிப்
பண்டையர் கலையை, வாழ்வைப்
பண்பட்ட உளத்தைக் காண
உண்டொரு கோவில் எங்கள்
ஊருக்கு நடுவில்; பாசி
கொண்டநீர்க் குளம்நீ ராழி
குறைவிலா இன்ப ஊற்றே! 3

RangaRakes tamilnavarasam.com

பார்ப்பனச் சேரி கோயில்
பக்கலில் உண்டு; ஈசன்
தேர்வர நான்கு மாடத்
தெருவுண்டு; வலையை வீசி
ஈர்த்திடுங் கோவில் பூனை
விலைமாதர் இருப்பு; சொந்த 4
ஊரினைப் பிரிந்தோர் தங்கச்
சாவடி எங்கும் உண்டே!

எழுத்தறி சாலை, மக்கள்
இன்னிசை பயிலும் சாலை,
வழுவழுப் பான மொட்டை
மெய்ஞ்ஞான அடிகள் மாசு
கழுவிட முனையுங் கல்வி
மடம், தொழிற் சாலை பின்னும் 5
பழுதற உண்டு; எந்தப்
பகட்டுமே இல்லை யங்கே!

தண்டமிழ் ஊட்டுங் கல்விக்
கதிரவன் கழகம், சங்கு
கொண்டமால் இருப்பு, நல்ல
குடிபுனல் கூவம், ஏரி,
மண்டபம் மூலைக் கொன்று;
வழியெலாம் விளக்குத் தூண்கள்; 6
அண்டையில் புதுவை! எங்கள்
மிகுதேவைக்(கு) அட்டி யுண்டோ?

RangaRakes tamilnavarasam.com

# ஆறு

மலையில் பிறந்தேன்; தவழ்ந்திறங்கி
மண்ணில் பாய்ந்தேன் விளையாட;
இலையும், சருகும், உதிர்பூவும்
இயற்கை தந்தாள் வழித்துணைக்கே;
சலசலத் திடுவேன் கல்லிடுக்கில்;
சாரைபோல் நான்நெளிந் தோடிப்பின்
தலையை அசைப்பேன்; பாய்ந்தோடித்
தமிழ்த்தேன் இசையை மீட்டிடுவேன்! 1

பொன்னைப் பொடித்த மணல்மீது
புதுமணப் பெண்ணின் பொலிவடைவேன்;
மின்னும் வயிரக் கண்தவளை
மிதந்து வந்து, 'நாரையரே!
இன்னும் உலகம் பெருந்துயிலில்
இருப்பதாய் நினைவோ இத்தவசு?'
என்னும்; மீனினம் எழுந்தெழுந்து
இளித்துக் காட்டும்! எக்களிப்பேன்? 2

பெற்றால் நாட்டில் விடுதலையாம்
பேதமி லாவென் மனப்பான்மை;
சிற்றூர் பட்டினம் புகுந்தோடிச்
சேமித் தெடுத்துநான் எவ்வுயிர்க்கும்
நற்றாய் நாண ஊட்டிடுவேன்;
நலியா துலகைக் காத்திடுவேன்;
கற்றிடல் உண்டோ தளதளத்த
கன்னம் என்றன் சுழிப்பையெலாம்? 3

RangaRakes tamilnavarasam.com

உரிமை தடுப்பார் இவ்வுலகில்
உருக்குலைந் தழிவார் இடிகரைபோல் ;
மருவிக் கடலுடன் கலந்தாடி
வானில் திரிவேன் உருமாறி ;
உருளும் இடி,என் சிரிப்பொலிகேள் ;
உயிருக் குதவச் சிறுதுளியாய்
வருவேன் ; மண்ணில் ஓய்வில்லை ;
வாட்டம் தீர்ப்பேன் ; களிப்பேனே ! 4

RangaRakes tamilnavarasam.com

# வயல்

சாலையின் அருகே சென்றனன் ஒருநாள்;
‘சற்றுநில்’ என்றது கைம்மைக்
கோலம்சேர் முகத்தை ஒத்திருக் கின்ற
குறுவைநெல் அறுத்திட்ட நன்செய்;
வேலையை விட்டு நின்றனன்; சொல்லும்:
“விதவித இன்மொழி கூறிக்
காலையில் என்றன் உடலினை உழவன்
கசக்கினான்; ஏரால் களித்தான்! 1

சொல்லினால் என்னை மயக்கினான்; ‘எந்தச்
சோர்விலும் கைவிடேன்’ என்றான்;
‘வல்லவன் உழவன்; ஏற்றவன் நமக்கு;
வாழ்விலே துயரிலை’ எனநான்
அல்லிலும் பகலிலும் நினைத்தனன் களித்தே;
அடிக்கடி வந்தெனைப் பார்த்தான்;
நெல்லினை விதைத்தான்; சிரித்தான்; களித்தான்;
நெஞ்சினில் மகிழ்வுநான் அடைந்தேன்! 2

வேளையோ டுண்ண விருந்தினைக் கூவி
விரும்பிய தளிப்பதைப் போல
வேளையோ டெனக்கே உரத்தினைக் கொடுத்து
மிக்கநீர் ஊட்டினான்; என்னில்
வாளென நெற்பயிர் கருநிறம் பெற்று
வளர்ந்திடக் களித்தனன்; ஒவ்வோர்
நாளிரு வேளை என்றனைச் சுற்றி
நடந்தனன் நட்டநாள் தொடங்கி! 3

RangaRakes tamilnavarasam.com

பெண்தலை கோதி எடுத்திடு பேன்போல்
பிய்த்தனன் என்னுடல் களைகள் ;
தண்விழி மாதர் சுவைபெறக் காளை
தட்டிடா தெதனையுஞ் செய்வான்
மண்ணினில் பூநுகர் வண்டாம் உழவன் !
வஞ்சகம் அறிந்திலன் ! அந்தோ !
பெண்ணின் அறிவு பின்னென உரைத்தார்
பேச்சினிற் கிலக்குநான் ஆனேன்" 4

என்னலும் நானே எழுந்தனன் விரைந்தே ;
என்தொழில் நோக்கியே நடந்தேன் ;
உன்னிடுந் தோறும் உழவனைப் போல
ஒவ்வொரு நாட்டிலும் மக்கள்
தன்னலங் கருதி ஒவ்வொரு பொருள்மேல்
தாவியே வண்டெனப் பறந்து
மன்னிய நிலையாத் தன்மையைக் கண்டேன் ;
வாழ்வினில் வீழ்த்துவோம் அதையே ! 5

RangaRakes tamilnavarasam.com

# பனை

காயினில் குளிர்மை தந்தாய்;
கடுஞ்சுரம் வாழ்ந்திட் டாலும்
தோய்சுவைக் கனியால் எந்த
உள்ளமும் தொட்டாய்; ஏழை
வேய்ந்திடு கூரை யானாய்;
விசிறினாய் புழுக்கம் நீங்க;
பாயானாய்; தடுக்கு மானாய்;
பலவிதக் கூடை யானாய்! 1

கன்றுகள் ஆடு மாடு
கட்டிடக் கயிறு தந்தாய்;
தின்றிடக் கிழங்கு தந்தாய்;
திணிநட்புக் குவமை யானாய்;
என்றுமே அணிலின் கூட்டம்
வாழ்ந்திட இருப்புத் தந்தாய்;
மன்றுளோர் அறியக் காளை
ஊர்ந்திடும் மடலா னாயே! 2

அறிந்தவர் அறிவார் உன்றன்
அழகுச்சி விரிந்த மட்டை;
செறியோலைப் படப டப்புச்
சிந்தையை அள்ளும் பாட்டாம்!
கறுத்திடைப் பொன்பூ சுற்றக்
காய்க்குலை காட்டு! கள்ளின்
வெறியர்கள் கண்டு வெட்கச்
சாடுகின் றுயோ காற்றில்! 3

RangaRakes tamilnavarasam.com

காலிகள் மேயா வண்ணம்,
களைமிகுந் தழிக்கா வண்ணம்
வேலியைக் கட்டிப் போற்றி
விருப்புடன் வளர்த்தா ருண்டோ?
பாலிலா யாரும் அற்ற
குழவிநீ! பனையே! என்றும்
ஏலவே உதவு கின்றாய்!
உன்குணம் எவர்பெற் றாரே! 4



RangaRakes tamilnavarasam.com

# மாமரம்

சித்திரைத் திங்கள் கண்டு
சிரித்தனை தளிர்த்து; நீண்ட
கொத்துசேர் பூநாற் றத்தால்
கூவினாய்; இலவம் பஞ்சு
மெத்தையில் துயில்வார் போல
வண்டினம் தூங்கும் மெல்ல;
தத்தைகள் இணைந்து பச்சைத்
தழைஊசல் ஆடும் உன்னில்! 1

கலைநிறை உள்ளம் போல
விரிந்தனை; நிமிர்ந்தாய்; காய்கள்
குலைகுலை யாகக் கொண்டு
குனிந்தனை; கொடுத்தாய்; மாவே!
இலைசெறி உன்றன் நீழல்
இருந்திடாக் குறையா லன்றோ
மலைப்புறம் சென்று கோடை
வெப்பத்தைக் கழிக்கின் றார்கள்! 2

சாற்றினைச் சுவைத்துச் சப்பிக்
குப்பையில் தள்ளி விட்டார்;
மாற்றலர் மதியாச் செய்கை
உணர்ந்திட வளர்ந்தாய்; உன்னைப்
போற்றுதல் செய்கின் றார்கள்;
புகழுக்கோர் அளவே இல்லை;
'ஏற்றமோ மக்கள் செய்கை?'
என்றுநீ சற்றுக் கேளேன்! 3

RangaRakes tamilnavarasam.com

# காட்டுப்பூ

தோப்புக்கள் துரவு சுற்றி
என்மனம் போன போக்கே
காப்பின்றி நடந்தேன்; ஏதோ
காலினில் தைக்கக் கண்டேன்;
வேப்பனின் நிழலில் குந்திக்
களைந்தனன் வேரல் முள்ளை;
தோப்பிடைப் புதர்வாழ் காட்டுப்
பூமணம் தொட்ட தென்னை! 1

செம்மையில் சிறிது நீலம்
கலந்துகண் கவரு மின்ப
அம்மலர் போல வாழ்வில்
அதற்குமுன் கண்ட தில்லை;
கம்மென வீசும் நாற்றம்
கண்டிட மௌவல் நாணும்;
நம்மவர் சொல்லால் அப்பூ
விளித்தெனை நவிலும்; சொல்வேன்: 2

''அழகினில் குறைந்தா போனேன்?
அருங்கடி யிலையோ? என்னில்
ஒழுகிடும் தேன்க சப்போ?
ஒருகட்டு நாற்ற மில்லா
இழிமலர் சூடும் பெண்கள்
ஏனெனை வெறுக்கின் றார்கள்?
பழிச்சுதல் இன்றி மக்கள்
கொடுமையாய்ப் பார்ப்ப தேனோ? 3

RangaRakes tamilnavarasam.com

நாலுபேர் கூடிச் சொன்னால்
கெட்டதை நல்ல தென்பார்;
மூலத்தை ஆய்ந்து பாரார்;
முச்சிமேல் தூக்கி ஆர்ப்பார்;
சீலமில் மக்கள் கூற்றுத்
தீதடா தீதே!" யென்று
சாலையில் முணறிற் றப்பூ
தூக்கிவிடாக் கவிஞன் போலே! 4

'மாமியார் செய்த தைப்போல்
மருமகள் செய்வாள்' என்றிப்
பூமியில் பெண்கள் சொல்லும்
கொள்கையில் புரட்சி காண்போம்!
ஏமஞ்சேர் மலரிந் நாட்டில்
எம்மல ராயி னென்ன?
நாமிதைத் துலைபோல் தூக்கி
நல்லதைக் கொள்ளு வோமே! 5

RangaRakes tamilnavarasam.com

# வாடிய மலர்

மண்ணிலே பருவ முற்ற
மக்களின் முகத்தைப் போலக்
கண்களைக் கவர்ந்து, தோட்டச்
செடிக்கெலாம் களையைத் தந்து,
விண்ணினை நோக்கித் தென்றல்
வீச்சினில் ஆடு கின்ற
வண்ணமா மலரே! உன்றன்
வாழ்வினில் ஒன்று கண்டேன். 1

தேன்பெற வண்டுக் கூட்டம்
மணம்வரும் திசையை நோக்கி,
'நான்முன்னே? நீதான் முன்னே'
என்றுநள் ளிரவெ ழுந்த
வானத்தில் வட்ட மிட்டுக்
காதலை இசையால் மீட்டும்;
தேன்சுவை யுண்ணும்; உன்னில்
தேக்கிடும் காதல் வெள்ளம்! 2

உருவினில் ஊறி வந்த
ஒளியெலாம் ஒருநொ டிக்குள்
மருவிய வண்டால் உன்றன்
முகத்தினில் வழிந்து பாயும்;
பெருமையில் ஒருநாள் வாழ்ந்தாய்;
பிரிவினை யுணர்ந்தாய்; பின்னர்
வருமந்தச் சுரும்ப ரென்று
வழிபார்த்தாய்; அந்தோ! பேதை! 3

RangaRakes tamilnavarasam.com

காதலின் மின்னல் உன்னில்
கலந்திடு முன்னம் நீயோ
வேதனை அறியா உள்ள
விருவிருப் போடே வந்தாய்;
சாதலென் சொல்லைக் கேட்டுத்
தாங்கொணா வெறுப்புக் கொண்டாய்; 4
தீதினை அறியா உன்னைத்
தீய்த்ததக் காதற் றீயே!

ஒவ்வொரு நாளும் அந்த
உணர்ச்சியில் குன்றிக் குன்றிச்
செவ்விதழ் வண்ணம் மாறச்
சிரிப்பெலாம் எங்கோ தள்ளிக்
கவ்வையால் செடியில் நீயோ
காய்ந்தனை! உன்னைப் போல 5
ஒவ்வொரு நாளும் ஊரில்
உருக்குலை வாரும் உண்டே!

RangaRakes tamilnavarasam.com

# அது யார்?

வர்ணக் கலவைக் குழம்பெடுத்து
வானில் வாரிப் பூசுவதார்?
சொர்ணம் உருக்கி அதிகாலை
சுடர்ஒளி மண்ணில் பாய்ச்சுவதார்? 1

விலையில் மணியாம் ஒளிவீசும்
விண்மீன் வானில் இறைத்ததியார்?
அலைகடல் நீந்தும் முழுமதியின்
அங்கம் தேயச் செய்ததியார்? 2

முட்டைக் கருவைச் செப்பனிட்டு
மூக்கும் விழியும் ஆக்கியதார்?
கட்டாந் தரைமேல் சிரித்திடுவெண்
காளா னுக்கார் விதைநட்டார்? 3

மண்ணில் மலரும் பூக்களுக்கு
மதுவும் மணமும் புகுத்தியதார்?
வண்ணப் பண்ணிசைக் குயிலினத்தின்
வாக்கைச் சீர்பெறத் திருத்தியதார்? 4

கடையில் விற்கும் 'மல்கோவா'
கனியின் கொட்டைச் சிறைவீட்டில்
அடைத்துப் புழுவை உருவாக்கி
ஆதர வோடு காப்பதியார்? 5

ஆட்டம் ஆட மயிற்குலத்திற்(கு)
அழகிய தோகை அளித்ததியார்?
கூட்டைக் கட்டும் நுணுக்கமெலாம்
குருவிக் குலத்திற்(கு) உரைத்ததியார்? 6

RangaRakes tamilnavarasam.com

'இயற்கை' என்பார் அறிவுடையார்!
'இல்லை; கடவுள் செயல்!' என்பார்,
செயற்கு வேண்டிய செய்யாது
திண்ணை பேசும் வைதீகர்!

RangaRakes tamilnavarasam.com

# இன்பச் சொத்து

மலர்க்காடு பசியடக்கும் நல்லுணவு; பூத்த
மலர்பாடும் தேன்வண்டு செவிக்குணவு; பாய்ந்தே
இலைதழுவி வருதென்றல் உடற்கின்பம்; தோகை
மயிலினத்தின் பெருநடமோ இருவிழிக்குத் தேனும்!
கொலைபயின்ற என்னின்பப் பெண்ணுளின் நீலக்
கூர்விழியைச் சருகினிலே விரைந்தோடித் தாவும்
கலையினங்கள் காட்டாவோ? பெருமகிழ்ச்சிக் கூத்து!
கவலையில்லை; கருத்தளிக்கும் தனிமைஇன்பச் சொத்தாம்! 1

மேட்டினிலே புதரிடையில் நீண்டுயர்ந்து சாய்ந்த
வெள்வேல மரக்கிளையில் காதலிகள் புட்கள்
பாட்டினிலே மெய்மறப்பேன்; பழச்சாற்றின் ஓடை!
இரவென்றும் பகலென்றும் பாகுபா டில்லை!
வீட்டினிலே இருப்பதென்றால் வேப்பங்காய்; சிற்றூர்
வீணர்களின் நச்சரிப்போ விளக்கெண்ணெய்; பூத்த
காட்டினிலே திரிவதென்றால் கற்கண்டாம்; ஆழ்ந்த
கருத்தளிக்கும் மகிழ்வளிக்கும் தனிமைஇன்பச் சொத்தாம்! 2

குளத்தினிலே தாமரைகள் குறும்புப்பெண் கூட்டம்!
குதித்துவரும் கார்எருமை பரிந்துவரும் தோழன்!
உளத்தினிலே வெறியேற நாண்மறைக்க அல்லி
உள்ளுக்குள் ளேசிரிக்கும்; வானத்தில் திங்கள்
வளத்தினிலே பகலெல்லாம் களித்திருந்த வெய்யோன்
மலைமறைய வாழ்த்துரைக்கும் முறைவந்த தென்றே!
களத்தினிலே வென்றிகண்ட வீரன்போல் என்றன்
கால்விட்ட வழிசெல்வேன்; தனிமைஇன்பச் சொத்தாம்! 3

RangaRakes tamilnavarasam.com

வழியெல்லாம் புதுப்பூக்கள் மணம்வேட்கும் பெண்கள்!
வண்டினங்கள் மலிவென்றே ஏய்க்கவரும் ஆண்கள்!
விழியெல்லாம் இயற்கைதரும் விருந்துக்கே சொந்தம்!
வெறும்பேச்சு மற்றவைகள் எனக்கவலை வேண்டாம்!
அழிவெல்லாம் மற்றொன்றின் புதுப்பிறப்பு! வற்றா
அழகெல்லாம் எந்நாளும் குறைவதே இல்லை!
கழியெல்லாம் நீள்தாழை; சிறுநண்டின் செங்கால்
கருத்திழுக்கும்; கவலைஇல்லை; தனிமைஇன்பச் சொத்தாம்! 4

RangaRakes tamilnavarasam.com

# தையும் பிறந்தது

செய்யும் விளைந்தது;
தையும் பிறந்தது;
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம்! – புதுச்
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம்!
பொய்கை புதர்செடி
பூக்கள் நிறைந்தன;
பொன்னொளி எங்கணும் கண்டோம்! – புதுப்
பொன்னொளி எங்கணும் கண்டோம்! 1

மாவும் சுளைப்பலா
வாழையும் செந்நெலும்
வந்து குவிந்தது வீட்டில்! – தை
வந்தது வந்தது நாட்டில்!
கூவும் குயிலினம்
கூவாக் குயிலினம்
தாவிப் பறந்தது மேல்வான்! – ஒளி
தாவிப் பறந்தது கீழ்வான்! 2

சிட்டுச் சிறுவரின்
செங்கைக் கரும்புகள்
தொட்டுப் பிசைந்தன பொங்கல்! – அதை
இட்டு மகிழ்ந்தனர் பெண்கள்!
வெட்ட வெளியெலாம்
மெல்லியர் பண்ணிசை
மேவும்; சிலம்பொலி கேட்கும்; – தமிழ்
வெற்றி முரசெங்கும் ஆர்க்கும்! 3

# தையும் பிறந்தது

செய்யும் விளைந்தது;
தையும் பிறந்தது;
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம்! – புதுச்
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம்!
பொய்கை புதர்செடி
பூக்கள் நிறைந்தன;
பொன்னொளி எங்கணும் கண்டோம்! – புதுப்
பொன்னொளி எங்கணும் கண்டோம்! 1

மாவும் சுளைப்பலா
வாழையும் செந்நெலும்
வந்து குவிந்தது வீட்டில்! – தை
வந்தது வந்தது நாட்டில்!
கூவும் குயிலினம்
கூவாக் குயிலினம்
தாவிப் பறந்தது மேல்வான்! – ஒளி
தாவிப் பறந்தது கீழ்வான்! 2

சிட்டுச் சிறுவரின்
செங்கைக் கரும்புகள்
தொட்டுப் பிசைந்தன பொங்கல்! – அதை
இட்டு மகிழ்ந்தனர் பெண்கள்!
வெட்ட வெளியெலாம்
மெல்லியர் பண்ணிசை
மேவும்; சிலம்பொலி கேட்கும்; – தமிழ்
வெற்றி முரசெங்கும் ஆர்க்கும்! 3

RangaRakes tamilnavarasam.com

# எவர் செயல் ?

செந்நெல் விளைந்ததுவும்
தீங்கரும்பு முற்றியதும்
இந்நாள் எவர்செயலோ தோழி ? – நல்
இன்பப் பரிதிசெயல் தோழா ! 1

வாடை பனிக்காற்று
வாய்இறுக்கும் ஊதைகுளிர்
ஓடி மறைந்ததென்ன தோழி ? – உயிர்
ஓம்பும் பரிதிசெயல் தோழா ! 2

காடெல்லாம் பூப்பூத்துக்
காய்கனிக ளேமுதிர்ந்து
தேடி அழைப்பதென்ன தோழி ? – நாம்
செம்பரிதி வாழ்த்துதற்குத் தோழா ! 3

தாமரையில் சேல்புரளத்
தாழ்வரைகள் எக்களிக்க
நாமடைந்த பேறென்ன தோழி ? – தை
நற்பொங்கற் பெருநாளே தோழா ! 4

ஆடை திருத்திப்பொன்
அணிதிருத்தி நம்பெண்கள்
பாடி மகிழ்வதென்ன தோழி ? – நற்
பாற்பொங்கல் உண்டாடத் தோழா ! 5

RangaRakes tamilnavarasam.com

# அந்தி அழகு

ஓடைச் சலசலப்பில் – அழகு
ஒலிக்குது இன்னிசையாய்! – அதில்
ஆடுஞ்செவ் வல்லிமலர் – அழகை
அள்ளி இறைக்கு தடி! 1

கோதி உடல்கழுவிப் – பலநிறக்
குருவி குளிக்கையிலே – அழகின்
போதை தலைக்கேற – உடலுள்
புகுந்ததோர் புத்துணர்வு! 2

வான முகட்டி லெல்லாம் – பரிதி
வளர்த்திடு தீயழகில் – உயர்
ஞானம் பிறக்கு தடி! – மனத்தில்
நானற்றுப் போகு தடி! 3

மேற்றிசை வான மெல்லாம் – அழகு
விதவித மாகு தடி! – பெருங்
காற்றுடி போற்சுழன்று – அழகு
கண்ணைக் கவரு தடி! 4

அந்தி மயக்கினிலே – அழகு
அறிவுப் பெருஞ்சுடரை – என்
புந்தியில் மூட்டு தடி! – மனத்தில்
புதுமலர்த் தேன்பெருக் கே! 5

RangaRakes tamilnavarasam.com

# நிலவே சொல் !

**சொ**ந்தநா டுனக்குண்டோ வெண்ணிலாவே ? – அது
சுதந்தர நாடோசொல் வெண்ணிலாவே ?
இந்தநாள் அடிமைவாழ்வில் வெண்ணிலாவே ! – நீ
இருக்கமனம் சகிப்பாயோ வெண்ணிலாவே ? 1

உப்புக் கடல்பிறந்த வெண்ணிலாவே ! – உனக்(கு)
உண்மைத் தந்தைதாயார்சொல் வெண்ணிலாவே ?
எப்புவியும் உன்வரவை வெண்ணிலாவே ! – மக்கள்
ஏன்விரும்பு கின்றூர்சொல் வெண்ணிலாவே ? 2

அலைகள் வெருண்டோடி வெண்ணிலாவே ! – கரை
அழிந்திட மோதுவதேன் வெண்ணிலாவே ?
கலைஞன் உனதொளியில் வெண்ணிலாவே ! – இன்பக்
கற்பனையில் நீந்துவதேன் வெண்ணிலாவே ? 3

உரிமை வழிதடுக்க வெண்ணிலாவே ! – வானில்
ஓடிவரும் மேகங்களை வெண்ணிலாவே !
எரிகொண்டு தாக்குவையோ வெண்ணிலாவே ? – அன்றி
இணங்கிப் பணிவாயோ வெண்ணிலாவே ? 4

கன்னியர் முகமெலாம் வெண்ணிலாவே ! – நீ
கவர்ந்த முறையாதோ வெண்ணிலாவே ?
அன்னவர் உடல்கரிய வெண்ணிலாவே ! – நீ
அனற்சுடர் வீசுவதேன் வெண்ணிலாவே ? 5

அங்கம் வளர்ந்தழிய வெண்ணிலாவே ! – நீ
அல்லற்படும் காரணமென் வெண்ணிலாவே ?
மங்கையர் மனம்நொந்து வெண்ணிலாவே ! – உனக்கு
வழங்கிய சாபமோசொல் வெண்ணிலாவே ? 6

RangaRakes tamilnavarasam.com

# அழகுப் பெண்

சிலுசிலுக்கும் அதிகாலைக் கூண்டி னின்றே
செவிக்கின்பம் அளித்திட்டாள்; சிரித்தாள் பூவில்;
விலக்கினாள் இருள்திரையைக் கிழக்கு வானில்;
மெல்லநகை புரிந்திட்டாள்; பொற்றூள் சிந்தி
அலைகடலில் மணற்பரப்பில் மெருகை ஏற்றி
அள்ளுகின்றாள் உள்ளத்தை; தாழை பூத்துக்
கொலைவிழியைத் தூதனுப்பிச் சிரித்தாள்; நெஞ்சைக்
கொழும்புன்னைப் பல்காட்டிப் பறித்தே போனாள்! 1

ஓடையிலே முழவார்த்தாள்; வண்டாய்ப் பாடி
உயர்கவிதை தந்திட்டாள்; தென்ற லாகி
ஆடையினைப் பிடித்திழுத்தாள்; பனிப்புல் உச்சி
ஆயிரமாம் முகம்காட்டிச் சிரித்தாள்; தோப்புக்
கோடியிலே இசைமிழற்றி விளித்தாள்; சென்றேன்;
குளிர்பசுமை இலைக்காட்டில் மறைந்தாள்; பொய்கை
ஆடுகின்ற தாமரையில் சிரிப்புக் காட்டி
அருகிலெனை அழைத்திட்டாள் 'அழகுப் பெண்'ணாள்! 2

இனிக்கின்ற தமிழ்ப்பாட்டில் இருந்தாள்; மங்கை
இதழ்நடுவே எனையெட்டிப் பார்த்தாள்; உள்ளக்
கனிவேற்றும் இளங்குழவி நடையில் கண்ணில்
கட்டுண்டு கிடந்திட்டாள்; தமிழ வீரன்
நுனிவேலில் நடம்புரிந்தாள்; நடனப் பெண்கள்
நொடிப்பினிலே தவழ்ந்திட்டாள்; விளக்கில் நின்றாள்;
தனியான இடமவளுக் இல்லை; எங்குந்
தட்டுப்பட்டாள்; பொருளில் ஒட்டி நின்றாள்! 3

RangaRakes tamilnavarasam.com

வான்கண்டேன் ; மண்கண்டேன் ; இதற்குட் பட்டு
வளர்வனவும் அசைவனவும் கண்டேன் ; எங்கும்
நான்கண்டேன் அழகுதனை ! இன்பம் கொண்டேன் !
நலிவெல்லாம் நொடிமாற்றும் மாயக் காரி
தேனடையைப் பிழிந்தூட்டி அவளைத் தேடித்
திரிவாரை வாழ்விப்பாள் ; தனித்து வாழா
மானுக எனைமாற்றி விட்ட அந்த
வளர்எழிலை மணந்தாரே வாழ்ந்தார் ஆமே ! 4

# முதல் முத்தம்

தெருவினில் மண்ணில் குந்திச்
சிற்றிலை அமைப்பேன்; மெல்ல
அருகினில் வருவான்; ஒன்றும்
அறியான்போல் நடிப்பான்; கையில்
தெருமண்ணை வாரி என்றன்
தலையினில் தெளிப்பான்; இன்பம்
பெருகிட வெளிக்காட் டாமல்
'சீச்சீச்சீ! நாயே!' என்பேன். 1

அறையொன்று கொடுப்பான்; வீறிட்(டு)
அலறுவேன்; அன்னை என்னைச்
சிறைசெய்வாள்; மீண்டும் அந்தப்
பட்டியைத் தேடிச் செல்வேன்;
மறைந்திருந் தோடி வந்து
வழியினில் சிரிப்பான்; வேலி
நறைமலர் எனக்குச் சூட்டி
'நாட்டியம் ஆடெ'ன் பானே!

கழுத்தினில் கயிற்றால் தாலி
கட்டுவான்; உதிர்ந்த ஆலின்
பழுப்பினில் மண்ணை யிட்டே
'உண்'ணென்று பரிவாய்ச் சொல்வேன்;
'முழுச்சுவை உணவில் இல்லை'
என்றெனை முனிவான்; தேம்பி
அழுதிட இதழில் முத்தம்
அளித்தணைத் தடங்கச் செய்வான்! 3

RangaRakes tamilnavarasam.com

துன்பத்தை மாற்றும் அந்தத்
துடுக்கனின் முதல்முத் தத்தின்
இன்பத்திற் கீடு மண்ணில்
காட்டுவார் இல்லை! மெய்யில்
மன்னிய வடுவை யொக்கும்
மக்களின் இளமைச் செய்கை
என்னுள்ளம் அந்த நாளை
எண்ணியே ஏங்கு தந்தோ 4

RangaRakes tamilnavarasam.com

# பெட்டையும் சேவலும்

கண்ணினை மூடி மூடிச்
சாகசம் செய்யும் பெட்டை ;
அண்மையில் சேவல் நிற்கும் ;
பட்டுடல் அழகை வாரிக்
கண்களால் உண்ணும் ; ஒற்றைச்
சிறகினைக் காலில் தட்டிப்
பண்மீட்டும் ! அடடா ! காதல்
பறிபோகும் ! இன்பம் ! இன்பம் ! 1

பிட்டினில் நெய்யைப் பெய்து
பிசைந்துண்ணு வார்போல் குள்ளப்
பெட்டையும் ஆணும் இன்பப்
பெருங்கடல் நீந்தும் ; ஆங்கோர்
வட்டையாம் சேவல் காதல்
மலிவென்று நெருங்கித் தொட்டுப்
பட்டதைக் கண்ட தோட்டப்
படர்முல்லை சிரிக்கும் ! அந்தோ ! 2

செடிநிழல் குளிர்மண் சீய்த்துச்
சேக்கொரித் திருக்கும் பெட்டை ;
அடியொற்றித் தொடர்ந்து சேவல்
பக்கத்தில் அமரும் ; நாட்டுக்
குடித்தனக் காரர் நாணக்
கொஞ்சிடும் ; ஊடல் தீர்க்க
அடிக்கடி கழுத்தை நீட்டி
ஆர்த்திடும் சிறக டித்தே ! 3

RangaRakes tamilnavarasam.com

குப்பையைச் சிய்த்துச் சிய்த்துக்
குரல்காட்டும்; பெட்டை உண்ண
ஒப்புக்குத் தானும் உண்ணும்;
உடல்கோதி நேரம் போக்கும்;
இப்படி இவைபோல் வாழ
அறியாத மக்கள் வாழ்க்கை
சப்பிட்டுப் போன தென்று
சொல்வதில் தப்பே இல்லை! 4

RangaRakes tamilnavarasam.com

# சிரிக்காதே தோழா!

ஊரெல்லாம் தூங்கிற்று; நான்தூங்க வில்லை!
உயர்காதல் கொண்டவர்கள் உறங்குவதும் உண்டோ?
கூரம்பு விழியுடையாள்; சிறுவயதில் என்னில்
குடிபுகுந்தாள்; நானவளின் அடிமையாய்ப் போனேன்!
பேரறியேன்; ஊரறியேன்; பேசியதும் இல்லை!
பிரிந்திருந்து வாழ்வதுவோ இனியாகா தென்றால்!
யாரென்று கேட்காதே; முகம்பார்த்த தில்லை!
யாழ்இசையாள்! என்உயிராள்! சிரிக்காதே தோழா! 1

செடியினிலே பூப்பூக்கும்; கண்பறிக்கும்; அந்தச்
சிறுபூவைக் கொய்துமணம் நுகர்ந்திடுவார் மக்கள்;
செடிபூத்தல் இயற்கையடா! செடிப்பூவின் நாற்றம்
திசையிருந்து நுகருவதே அறிவுடையோர் செய்கை!
மடியிருத்திக் கொஞ்சுவதே காதலென்று சொன்னால்,
வண்டினங்கள் அவர்பேச்சைச் செவிமடுக்க வேண்டாம்!
கடிமணமும் பூவாழ்வும் ஒரேநாளின் எல்லை!
என்காதல் வேறுவகை! சிரிக்காதே தோழா! 2

அவள்நினைவில் உயிர்க்கின்றேன்; வாழ்கின்றேன்; ஒவ்வோர்
அணுவினிலும் அவள்உருவைக் காண்கின்றேன்; பொய்கைக்
குவளைஇதழ் அவளிதழே! மலைச்சாரல் குன்றம்
குளிர்தென்றல் அத்தனையும் அவளைத்தான் காட்டும்!
தவளைகளின் நீளொலியில் அவளைத்தான் கேட்பேன்!
தமிழ்க்கவிதை; தமிழூற்று! வேறென்ன வேண்டும்?
அவளின்றேல் நானில்லை; அழகில்லை; கண்கள்
அற்றவன்போல் ஆகின்றேன்! சிரிக்காதே தோழா! 3

RangaRakes tamilnavarasam.com

தேன்வேறு ; சுவைக்கின்ற மக்களோ வேறு ;
சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் ; சிந்திக்க வேண்டும் !
காற்றில், நெருஞ்சிதைக்கும் மணல்வெளியில், வானில்,
கதிர்விழையாப் பெருங்காட்டில் அவளைத்தான் காண்பேன் !
மான்பாயும் ; புலிஅடிக்கும் ; மயிலாடும் ; அந்த
மங்கையின் நினைவின்றி மகிழ்ச்சிகண்ட தில்லை !
வான்நிலவில் அவளைத்தான் என்கண்கள் காணும் !
சிரிக்காதே ! அவளின்றேல் மலராதென் வாழ்வே !! 4

# இனிப் பிரியேன்

காார்சுற்றித் திரிகின்ற மலைகண்டேன்; உன்றன்
கருங்கூந்தல் நான்கண்டேன்! காந்தளுன்றன் கைகள்!
வேர்சுற்றிக கிடக்கின்ற பாறைவந்த மான்கள்
வெருண்டோடும் பாம்பென்றே! உன்மருட்சி கண்டேன்!
ஊர்சுற்றிக் கிளம்புகின்ற பெரும்புகையாம் மேகம்;
வானமோ தோல்உரிக்கும்; உன்குமுறல் கண்டேன்!
தேர்சுற்றி வந்தாலும் நிலைக்குவந்தே சேரும்!
செந்தமிழே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 1

காடளந்து பூச்சூடிக் கனிவாரித் தந்து
களிப்பூட்டும் சிற்றூறு தமிழ்க்கவிதை பாடும்!
பீடளந்து நின்றிருந்தேன் முல்லையிலே ஓர்நாள்;
பெண்மயிலே! ஆட்டிடையன் சாய்கிளையில் குந்தி
நீடளந்து குழலிசைத்தான்; நின்குரலே கேட்டேன்!
நிலைகுலைந்து போனனடி பசுகத்தக் கேட்டு!
நாடளக்கும் ஆறென்றும் கடல்வந்தே சேரும்!
நறுந்தொகையே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 2

கோடெல்லாம் தழைபோர்த்துன் பசுமேனி காட்டும்!
குளம்குட்டை நெறிகின்ற பொன்னலைமேல் நாட்பூ!
ஏடெல்லாம் உன்முறுவல்! எழுதாத பாட்டாம்!
எழில்விழியைக் கயல்காட்டும்! வண்டுகளோ கூந்தல்!
தோடெல்லாம் படபடக்கும்; தென்றலிலே கிள்ளை
துணையோடு கொஞ்சுமொழி உன்வாய்ச்சொல்! புட்கள்
காடெல்லாம் திரிந்தாலும் கூடுவந்தே சேரும்!
கலித்தொகையே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 3

RangaRakes tamilnavarasam.com

கழைஉதிர்த்த முத்துகளுன் கண்ணீரைக் காட்டும்!
கடும்பாலைச் செந்தரையில் அங்குமிங்கு மாகத்
தழைஉதிர்த்த கிளைகளிலே வெண்கழுகுப் பேடை
தத்தளிக்கும்; கண்டென்றன் உளம்தத்த ளிக்கும்!
இழைஉதிர்த்த பொன்மணிபோல் ஆவாரை பூக்கும்;
இடர்வழியில் நான்தனித்து நடக்கின்ற போதும்
மழைஉதிர்த்த கார்போன்ற உன்முகமே தோன்றும்!
மணிப்புறவே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே!

சீறிவரும் அலைகாட்டும் உன்சுருண்ட கூந்தல்!
செழும்புன்னை மொட்டுகளுன் பல்வரிசை காட்டும்!
ஏறிவரும் சங்குகளோ கழன்றோடும்! உன்றன்
மெலிகையின் வளைகாட்டி என்னுயிரை வாட்டும்!
மீறிவரும் உன்விழிகள் கழிநீலம்! நெய்தல்
விரிந்தமணற் கரைபூத்த வெண்டாழைப் பூவில்
ஊறிவரும் தென்றலிலே உன்அணைப்பைக் காண்பேன்!
ஓவியமே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 5

பார்தழுவும் இளங்கதிரின் பொன்னொளியில் உன்றன்
பற்றுளமே காண்பனடி! பூப்புதரில் சிட்டு
நேர்தழுவும்; கண்கண்டு நெக்குருகும் நெஞ்சம்!
நெடுமாவின் செந்தளிரில் வண்டிரைத்த தாது
சீர்தழுவும் உன்மேனிப் பசலையெனத் தோன்றும்!
செம்பருத்திப் பூக்கொண்டைப் பொறிச்சேவல் வானக்
கார்தழுவும் கூரையிலே பெட்டையுடல் கோதும்!
கண்ணொளியே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 6

வயல்பாயும் மேதிகளோ புயல்பாயும் வானம்!
வண்டூதும் நீர்க்குவளை உன்விழியைக் காட்டும்!
கயல்பாயும் குளத்தினிலே கார்மறைத்த திங்கள்
கன்னியர்கள் நீர்ஆட்டம் மரைகளின்ஆர்ப் பாட்டம்!

RangaRakes tamilnavarasam.com

மயல்பாயும்; அங்குமுன்றன் மலர்முகமே தோன்றும்!
வாயூறிப் போகுமடி நீர்இறைப்போன் பாட்டு!
வெயில்பாயும்! கொடிசோங்கும்! உன்னிடையே தோன்றும்!
மெல்லியலே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 7

சன்னலிடை ஏக்கத்தை அந்திநினை வூட்டும்!
தனித்தபுள் கூப்பாட்டைக் கேட்டுமனம் சோரும்!
பின்னலிடைக் காய்ந்துதிர்ந்த முல்லைகளோ விண்மீன்!
பிறைகாட்டும் உன்நுதலை! உளம்காட்டும் நீள்வான்!
மின்னலிடை நினைவூட்டும்! முகம்காட்டும் திங்கள்!
விடிநிலவோ நீயடையும் வேதனையைச் சொல்லும்!
இன்னலிடை வாழ்ந்தாலும் நாம்இணைந்தே வாழ்வோம்!
என்னுயிரே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 8

RangaRakes tamilnavarasam.com

# உயிர் வாட்டும் காலம்!

சூல்கொண்ட கருமேகம் மலையுச்சி தாவும்!
தோகைமயில் பூப்புதரில் துணையோ டடங்கும்!
பால்கொண்ட தாய்மடியை இறுகணைக்கும் குட்டி!
பசுமூங்கில் தேனடையைச் சிதைத்துண்ட மந்தி
மால்கொண்ட கடுவன்வால் பாம்பென்றே அஞ்சும்!
மரக்கிளையில் கருங்குயில்கள் வாயபொத்தி நிற்கும்!
வேல்கொண்ட குறத்தியரின் விழிகண்ட வேடன்
மெய்ம்மறக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

கூடடையும் இளம்பேடை ஆணின்வழி பார்க்கும்!
குளித்துடலை அழகுசெய்யும் ஓடையிலே சிட்டு!
பூடடையும் வண்டினங்கள்! புதரடையும் மான்கள்!
பொழுதடையும் செவ்வானில்! ஒளியேங்கும் மேற்கில்!
ஆடடையும் பட்டியிலே! அழகடங்கும் பூவில்!
அடர்காட்டில் இருளடங்கும்! ஒலியடங்கும் தோப்பில்!
காடடையும் இருள்திரையுள்! கண்ணடையும் சோர்வு!
கவலைதரும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 2

படைநலியச் செல்லுகின்ற யானைகளைப் போலக்
குளம்விட்டுப் பாய்ந்துவரும் எருமைகளின் கூட்டம்!
நடைமெலிய இடைமெலியப் பெண்கள்சாய்ந் தாடி
நடந்துவரும் நீர்மொண்டு! நடந்துவரும் அந்தி!
பெடைமெலியக் காணாத ஆண்கிளிகள் வீட்டின்
பெருஞ்சுவரின் பொந்தடையும்! கொம்படையும் சிட்டு!
கடைமெலிய என்கால்கள் நடந்தலுத்துப் போகும்!
கருத்தழிக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 3

RangaRakes tamilnavarasam.com

நீரடங்கும் ஏரியிலே! நிழலடங்கும் தன்னில்!
நீள்கழுத்துப் பெருநாரை கோரையுள் ளடங்கும்!
காரடங்கும் தொடுவானில்; இருள்தாவும் கீழ்வான்!
கண்ணடிக்கும் ஒன்றிரண்டு முன்னெழுந்த விண்மீன்!
ஏரடங்கும் கொட்டகையில்! கன்றடங்கும் தூம்பில்!
இறைப்பினிலே அணிலடங்கும்! கூடடங்கும் சேவல்!
கூரடங்கும் விழிகளிலே! மனப்போ ரடங்கா!
குடிகெடுக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 4

குளத்தினிலே தாமரையின் குதிப்படங்கும்! தக்கைப்
பூண்டிலைகள் காம்படங்கும்! அலையடங்கும் நீரில்!
களத்தினிலே பிணைஅடித்த பண்ணடங்கும்! வாய்க்கால்
கரையடங்கும் நீர்ப்பாம்பு! மரமடங்கும் நொள்ளை!
தளத்தினிலே குதித்தாடும் நிலாக்கூட்டம் பெண்கள்
தாழ்வாரத் துள்ளடங்கும்! அடங்கும்கைப் பிள்ளை!
உள்ளத்தினிலே மகிழ்வடங்கும்! நினைவடங்கும் தோளில்!
ஊரடங்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 5

அலையடங்கும் நீள்கடலில்! வளையடங்கும் நண்டு!
மணல்மேட்டின் அருகுள்ள நீண்டவளைத் தெங்கில்
தலையடங்கும் வெண்காக்கை! தலையடங்கும் வானில்
முனைமடிந்த நீள்வாளாம் தாழைமடல் பூக்கத்
தலையடங்கும் கழிநீலம்; தலையடங்கும் இருளில்!
சாய்புன்னைக் கரையோரம் மணல்அடங்கும் ஆமை!
உலையடங்கும் கருமானின் கொட்டகைபோல் வானம்!
உருமாறும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 6

RangaRakes tamilnavarasam.com

# அலர் தூற்றில் என்னும் ?

புள்ளோட்டிக் கொண்டிருந்தேன் பரண்மீ திருந்து ;
புதுப்பூக்கள் கொய்துவர நீசென்றாய் அன்று ;
கள்ளுண்ண விழைகின்ற புதுக்குடியன் போலக்
காடெல்லாம் சுற்றியெனை வந்தடைந்து சேர்ந்தார் ;
தள்ளாம லாட்கொண்டேன் ; நீளின்பம் தந்தார் ;
தடைக்கல்லாய் வருமலைகள் நொடிப்போதில் தூளே !
முள்ளொத்த ஊரார்கள் அலர்தூற்றில் என்னும் ?
மூளுகின்ற இன்பத்திற் கிணைஇல்லை தோழி !

ஓடையிலே கண்சிவக்கக் குளித்திருந்தேன் ; வந்தார் ;
ஒருவருக்கும் தெரியாது மலர்கொய்து தந்தார் ;
பேடையுடன் குலவுகின்ற ஆண்சிட்டைக் காட்டிப்
பேசாது பின்புறமாய் எனைத்தழுவி நின்றார் ;
ஆடையினைப் பிடித்திழுக்கும் தென்றல்மேல் சீறி
அகப்பட்டான் கள்வனென்றார் ; எனையணைத்துக் கொண்டார் ;
போடிபோ! ஊரார்கள் அலர்தூற்றில் என்னும் ?
பொங்கிவரும் இன்பத்திற் கிணையில்லை தோழி ! 2

கண்பறிக்கும் மின்னல்வழி காட்டஎனைத் தேடிக்
காரிருளில் தூறலிலே மலைதாண்டி வந்தார் ;
எண்ணவெண்ணத் தெவிட்டாத தொகைப்பாட்டின் இன்பம்
என்சொல்வேன் அவர்மொழியே வரைதோளே தோழி !
மண்ணின்மேல் பேரின்பம் உண்டென்பார் வீணர் ;
வான்காட்டி ஏய்க்கின்றார் ; யாரொப்பு வார்கள் ?
கண்ணோடா தூரார்கள் அலர்தூற்றில் என்னும் ?
காளைதரும் இன்பத்திற் கிணைஇல்லை தோழி !

RangaRakes tamilnavarasam.com

# கொடிய இரவு

அல்லி :

அக்கா! அக்கா! தாமரை அக்கா!
மலர்ந்த உன்முகம் வாடிய தென்னே?
சிரித்த விழிநீர் சிந்துவ தேனோ?
களிப்பும் சிரிப்பும் கண்ணின் வீச்சும்
ஆடலும் பாடலும் அழகிய பேச்சும்
எங்கே அக்கா? ஏன் இப் படிநீ
வாடி வதங்கி மனஞ்சோர்ந் தனையோ?
குளத்தில் அரசியாய்க் குடிபுறந் தந்தநீ
தளர்ந்து சோங்கித் தலைசாய்த் தனையோ?

தாமரை :

இதுவும் கேட்பாய்; இன்னமும் கேட்பாய்!
உன்னை வெறுத்தென்? ஊரில் மாலை
பொற்றேர் பூட்டிய மாவின் கழுத்து
மணியின் ஓசை வரநகை சீய்க்கும்
பசலை மேனிப் பாவையைப் போல
வானம் நோக்கி வருமதி தாவி
உள்ளம் துள்ள ஒளிமுகம் காட்ட
இதழின் நடுவே இரண்டொரு பற்கள்
தோன்ற மிடுக்காய்த் தோன்று கின்றாய்;
ஆனாலும் இரவில் அண்டை அயல்போல்
என்னரு கிருந்து போக்கா திரவைப்
பரிதி மேற்கில் படர்ந்தான் அந்தோ!

RangaRakes tamilnavarasam.com

அல்லி :

காலையில் வந்தான்; களிப்பைத் தந்தான்;
மாலையில் பிரிந்தான்! இதற்கேன் வாட்டம்?

தாமரை :

வாயை மூடடி வாயாடிப் பெண்ணே!
நாளைக் கல்லவோ நல்லது கெட்டது
தோன்று முனக்குப்? பிறர்துயர் தோன்றும்?
துயர்ப்பட்டா லன்றி உலகம் தோன்றா(து)!
அண்டை அயலில் என்போன்ற பெண்கள்
பேசிச் சிரித்துப் பெரும்பெரும் கோட்டை
கட்டி இணைந்து களிப்பில் நீந்திக்
கிடக்கின் றார்கள்! கிடக்கின் றார்கள்!
இணைந்து வாழா இரவோ
கொடிதடி! யாதினும் கொடிதா கும்மே!

RangaRakes tamilnavarasam.com

# மறந்தாரே தோழி !

பொன்னில்லான் நல்இளமை ! பூவில்லாப் பொய்கை !
பொருள்விளங்காப் பாடல்நான் ! எனைமறக்கக் கூடும்...
என்னுயிரே ! பூங்கொடியே ! அவர்சென்ற திக்கில்
எழுந்தெழுந்து பாய்ந்தோடும் நெஞ்சிற்கென் சொல்வேன் ?
என்னூட்டுத் தமிழ்நாட்டுப் பழம்பாடல் போல
எதிர்ப்பெல்லாம் தூளாக்கி நிலைத்திருக்கும் நாணல்
முன்னோடும் மலைப்பாம்பு நீளாற்று வெள்ளம்
முன்கொணர்ந்த மணல்மேட்டை மறந்தாரே தோழி ! 1

காரில்லாப் பெருவானம் ! விளைவில்லாப் புன்செய் !
கதிர்காணு இளந்தளிர்நான் ! எனைமறக்கக் கூடும்...
நீர்மூழ்கிக் குதித்தாடும் பலபெண்கள் போல
நிறைகுளத்துத் தாமரைகள் ! அக்குளத்தின் ஓரம்
வேர்பருத்த கூன்ஆலின் விழுதேறித் தாவி
விளையாடும் ஆண்குரங்கு ! கீழிருக்கும் மந்தி
நேர்தொங்கும் வால்பற்றி விழுதென்றே ஏறும் !
நெடுமரத்துக் குளிர்நீழல் மறந்தாரே தோழி ! 2

பால்நிலவு இல்லாவான் ! பசுமைஇலாச் சோலை !
பழுக்காத கொம்புநான் ! எனைமறக்கக் கூடும்...
வேலியிலே அங்குமிங்கும் விசிவிட்ட நீண்ட
மென்கயிறு பூங்கொடிகள் ! புதரெல்லாம் கோவை
சேல்விழியார் பற்களாம் பூக்காத முல்லை
சிரித்ததடி எனைக்கண்டு ! செத்தேபோய் விட்டேன் !
மாலூட்டும் எனதன்பர் வந்துவந்து போன
தோட்டத்து வேலியை மறந்தாரே தோழி ! 3

RangaRakes tamilnavarasam.com

# உயிர் வாழாதே!

அதிகாலை வழிபார்த்தே இசைக்கும் புட்கள்;
அழகுசெயும் கீழ்வானம் பரிதிக் காக;
மதுதளும்பப் பேரரும்பு வண்டுக் கேங்கும்;
வளைமூங்கில் தலைநிமிரப் பசுமை தோயக்
கதிர்வரவை எதிர்நோக்கும்; மடிசுரந்து
கறவைகன்றை நினைந்துகத்தும்; கவிதைப் பெண்ணே!
உதித்தோடும் நல்லெண்ண உருவைக் கண்டேன்;
உன்வருகை காணுதென் நெஞ்சம் ஏங்கும்! 1

பாதாளத் துள்ளிருந்து நண்டுக் கூட்டம்
பார்த்தேங்கும் மழைவரவை; குளம்வாழ் ஆம்பல்
காதலினால் சிவப்பேறி மதியை நோக்கிக்
கடுந்தவசு செய்திருக்கும்; சுருண்டெ ழுந்து
மோதுதிரை யற்றதினால் ஏங்கும் நாணல்;
முழுமதியோ ஒளிக்காக வானில் ஏங்கும்;
மாதவிப்பூ சோலைவான் மலைகள் ஆறு
வாடினஎன் கண்களுனைத் தேடித் தேடி! 2

மாரிபெய ஏங்குகின்றார் உழவர் கூட்டம்;
வளமைபெறத் தாவரங்கள் வானை நோக்கும்;
காரிருளை ஒளிசெய்யும் நிலவுக் காகக்
காத்திருந்தே ஏங்குகின்றார் சிறுவர்; நெஞ்சில்
ஈரமின்றிப் பிரிந்துசென்ற தலைவர் நாட்டை
எதிர்நோக்கி ஏங்குகின்றார் கன்னிப் பெண்கள்;
கார்முகில்போல் பலவண்ணம் காட்டும் உன்றன்
கவின்முகத்தைக் காணுதென் உயிர்வா ழாதே! 3



RangaRakes tamilnavarasam.com

# அவளில்லை!

வருவேன் என்று மாலையிலே
வாக்குத் தந்தாள்; அவளைநான்
இரவில் சற்றும் தூங்காமல்
எட்டி எட்டிப் பார்த்திருந்தேன்;
ஒருவர் நடந்து வருவதைப்போல்
ஓசை கேட்க எழுந்திருந்தேன்;
தெருவில் இருந்த நாயொன்று
திண்ணை யோரம் படுத்ததுவே! 1

எண்ணந் தெண்ணிச் சன்னலண்டை
இருந்தேன் இரவில் வழிபார்த்து;
பெண்ணாள் வந்தாள் வீட்டோரம்;
பேசா தெழுந்து தாழ்விலக்கித்
திண்ணை வந்து கூப்பிட்டேன்;
தேடிப் பார்த்தேன்; அவளில்லை!
சுண்ணம் பிடித்த பந்தற்கால்
ஆடி யசைந்து தோன்றியதே! 2

என்னைத் தேடி அவளினிமேல்
வாராள் என்று படுக்கையிலே
கண்ணை இறுக்கிப் படுத்திருந்தேன்;
கதவு திறக்க அவளென்றே
எண்ணிக் குதித்துக் களிப்பினிலே
இருகை விரித்து நான்பாய்ந்தேன்;
பெண்ணாள் இல்லை; விளக்கேற்ற
ஓடிற் றங்கோர் பெருச்சாளி! 3

RangaRakes tamilnavarasam.com

மோசம் செய்தாள் எனையென்று
முணுமு ணுத்துப் படுத்திருந்தேன் ;
பேசா தவளென் படுக்கையிலே
பின்புறம் வந்தாள் ; உட்கார்ந்தாள் ;
ஆசை மீற அவள்கையைத்
தாவி யணைத்தேன் ; என்வீட்டுப்
பூசை நகத்தால் எனைக்கீறிப்
பொதுக்கென் றோடிப் போயதுவே ! 4

RangaRakes tamilnavarasam.com

# என்னேடி கோபம்?

பள்ளிக்குத் தோழருடன் நான்செல்லும் வழியில்
பலவண்ணப் பூவிருந்துன் அழகுமுகம் காட்டிக
கொள்ளைகொண்டாய் என்னுள்ளம்! நீவாழி என்றும்!
குயிலுருவில் பசுங்காவில் குரல்காட்டி அழைத்தாய்;
பள்ளத்தில் சலசலக்கும் காட்டாருய் வந்தாய்;
பாடிஎனை மகிழ்வித்தாய்; யாப்புவகை சொன்னாய்;
கள்நெகிழும் பூப்பறித்துன் தலைசூட்ட வந்தேன்
கவின்முகத்தை முறுக்குகின்ருய்! என்னேடி கோபம்? 1

புள்ளிசைக்கும் விடிகாலை உனைத்தேடி வந்தேன்;
புதரிருந்து மணம்வீசிச் சிரித்துவர வேற்ருய்;
கள்வெறியை எனக்கேற்றும் உன்விழியால் கெஞ்சிக்
'கவலைஏன்? உனைமறவேன்!' என்றதிது தானா?
முள்நிறைந்த காடெல்லாம் ஆய்ந்தாய்ந்து தேடி
உன்தலையில் முடிப்பதற்குப் பூப்பறித்து வந்தேன்;
கள்ளவிழிப் பெண்ணரசே! என்கையை விலக்கிக்
கண்ணெங்கோ திருப்புகின்ருய்! என்னேடி கோபம்? 2

மாலையிலே செவ்வானச் சுழல்பரிதி யாகி
வாரிஎனைச் சேர்த்தணைத்தாய்; நான்கலங்கும் வேளை
சாலையிலே வீசுகின்ற தென்றற்காற் ருகித்
தமிழ்த்தேனைப் பிழிந்தூட்டி இன்பத்தைச் சேர்த்தாய்;
மாலாகி விட்டனடி! உனைமறக்கப் போமோ?
வண்ணமலர் உனக்காக இதோபறித்து வந்தேன்;
வேல்போன்ற விழியாளே! நான்செய்த தென்ன?
வெறுக்கின்ருய் என்பூவை! என்னேடி கோபம்? 3

RangaRakes tamilnavarasam.com

ஆற்றோரம் மணற்பரப்பில் தனித்திருந்தேன் ; வந்தாய் ;
அணைத்துநிலா முகங்காட்டி என் அறிவைப் பறித்தாய் ;
காற்றாட வயல்வெளிக்கு நான்போகும் போது
கைகோத்துப் பலபேசி எனைத்தொடர்ந்து நின்றாய் ;
மாற்றில்லாச் செம்பொன்னே ! என் உயிரே ! அழகே !
மறந்துன்னை ஒருநாளும் தனித்திங்கு வாழேன் !
நாற்றஞ்சேர் பூப்பறித்துன் தலைசூட்ட வந்தேன் ;
நான்மாட்டேன் என்கின்றாய் ! என்னேடி கோபம் ? 4

RangaRakes tamilnavarasam.com

# ஒரு வார்த்தை

பார்க்கின்றாய் பார்க்காமல் நான்இருக்கும் பக்கம்;
பாட்டிசைத்துக் கொள்கின்றாய் தாழ்குரலில்; ஆடடா!
வார்த்தையை நினைக்கின்றாய்; ஆனாலும், நீதான்
வாய்திறவா திருக்கின்றாய் ஈதென்ன பசப்போ?
மோர்ச்சோற்றைக் கண்டலையும் பூனையைப்போல் உள்ளம்
முந்துதடி உனைத்தாவி; பொறுப்பென்மேல் இல்லை!
வார்த்தெடுத்த பொற்பாவாய்! என்னுயிரே! அழகே!
மயங்காமல் ஒருவார்த்தை சரியென்று சொல்லேன்! 1

வழிமறித்து நிற்கின்றாய் வேலியிடை நீதான்;
வாவென்று பூக்கையால் அழைக்கின்றாய்; அங்கும்
விழியாலே சிரிக்கின்றாய்; நானுன்னைத் தாவ
வேலுருவில் மறைகின்றாய்; என்னுயிரே! அழகே!
சுழித்திழியும் ஆற்றில்உன் முணுமுணுப்புக் கேட்டேன்;
தொலைந்ததடி என்துன்பம்; ஆனாலும், ஒன்றும்
மொழியாது நிற்கின்றாய்; பொறுப்பென்மேல் இல்லை!
மொய்குழலே ஒருவார்த்தை சரியென்று சொல்லேன்! 2

வண்ணமலர் நாற்றத்தை வாரிவந்து காலை
மகிழ்வூட்டி என்னுடலில் வலிமைசேர்க் கின்றாய்;
புண்ணான மனத்திற்குப் புதுப்பாட்டுப் போலப்
பொதியமலை மீதிருந்து தவழ்ந்துவரு கின்றாய்;
உண்ணுதற்கும் நினைவில்லை உனைக்காணுந் தோறும்;
ஆனாலும், உனக்கேனோ பொறுப்பில்லை என்மேல்
மண்ணீரம் அகப்பட்ட அரசிலைபோல் ஆனேன்!
வாழ்விக்க ஒருவார்த்தை சரியென்று சொல்லேன்! 3

RangaRakes tamilnavarasam.com

மன்னியழி யாதிருக்கும் என்னுயிரே! அழகே!
வாழ்விற்கு வளம்சேர்க்கும் உயிர்ச்சத்து நீதான்;
உன்னைவிட்டுத் தனித்தினிமேல் இவ்வுலகில் வாழ
ஒருநாளில் சிறுபோழ்தும் என்னாலே ஆகா;
என்காதல் சின்னாளில் மலைமீது மாலை
எரிந்துவிழும் பரிதியைப்போல் நாடறியத் தோன்றும்;
முன்கூட்டிச் சொல்கின்றேன்; பசப்பெல்லாம் வேண்டாம்!
முகம்திருப்பி ஒருவார்த்தை சரியென்று சொல்லேன்! 4

# வரச்சொல்லடி !

அந்தி ஒளியிழக்கும் ! பொற்கதிரைச் செவ்வானம்
சிந்தி மரக்காட்டைச் செங்காடாய் ஆக்கும் !
அணையாப் பெருந்தீ மலைஉச்சி எங்கும் !
துணைஅழைக்கும் பெண்மான் ! துணையழைக்கும் பெட்டை !
முணுமுணுக்கும் நீள்ஓடை ; மந்தி முணுமுணுக்கும் !
தேன்பாயும் சாரல் ! திசைபாயும் நல்லருவி !
மான்தேடி வந்தான் ! உயிர்பறித்தான் ; நாணிழந்தேன் ;
நாணோ டுடன்பிறந்த நான் ! 1

நொச்சி மணக்கும் ; நுணாமணக்கும் வேலியிலே !
உச்சிக்குக் கீழே உயரும் விடிவெள்ளி !
கீழ்வான் இருள்நழுவும் ! கீற்றுக்கீற் றுய்வானில்
செம்மை படரும் விடியற் சிறுகாலை
இன்பக் குளிர்காற்றுப் போல எனதருகில்
வந்தான்; உயிர்பறித்தான்; வாழ்வளிப்ப தாய்ச்சொல்லிச்
சென்றான்; எனதுயிரும் சென்ற தவனோடே !
கண்டால் வரச்சொல் லடி ! 2

வளைந்தோடும் ஆற்றின் மணற்கரையில் தாழ்ந்த
கிளையூசல் ஆடிற்றுப் பச்சைப் பசுங்கிள்ளை !
கோணற் கிழவி தலைபோலப் பூத்திருக்கும்
நாணற் பெருங்காட்டில் நாரை குரல்காட்டும் !
அன்றலர்ந்த பூவை அணைத்துவரும் தென்றல்போல்
வந்தான்; உயிர்பறித்தான்; வாழ்வளிப்ப தாய்ச்சொல்லிச்
சென்றான்; நினைவெல்லாம் சென்ற தவனோடே !
கண்டால் வரச்சொல் லடி ! 3

RangaRakes tamilnavarasam.com

# நீ இன்றேல்....!

அந்தியிலே தொடுவானம் தீப்பற்றி வேகும்
அழகெண்ணிக் கொண்டிருந்தேன்; கூடுவரும் புட்கள்;
மந்தையிலே ஆனிரைகள் கிளப்பிவிட்ட தூசி
மங்கிவரும் செவ்வொளியில்; மங்கிவரும் வானம்
சிந்தவிட்ட ஒளிமணியாம் உடுக்கூட்டம்! தம்மைத்
தேடிவரு. நிலவைஎதிர் தேடிவரும் முன்னே;
சிந்தையிலே உன்நினைவு தெவிட்டாத இன்பம்!
என்னுயிரே! நீஇன்றேல் சீரழியும் வாழ்வே! 1

சிட்டிணைகள் தோட்டத்து முருங்கையிலே கொஞ்சும்;
சிறுகுஞ்சு தாய்நோக்கி வாய்திறந்து கத்தும்;
பட்டுடலை அழகுசெய்யும் ஓடையிலே காகம்;
இலவங்காய் வால்முளைத்துப் பறப்பதைப்போல் கிளை
நெட்டாகக் கல்வீட்டுப் புறச்சுவரைத் தாவும்;
நீர்நிலையில் அல்லிமலர் மலர்நிலவுக் கேங்கும்;
ஓட்டாதோ நமதுள்ளம்? நான்செய்த தென்ன?
என்னுயிரே! நீஇன்றேல் உருக்குலையும் வாழ்வே! 2

வந்துடலைத் தொட்டணைக்கும் மலர்க்காட்டுத் தென்றல்;
உன்னணைப்பின் இன்பத்தை அதுசெய்வ துண்டோ?
சந்திருந்து குரலெழுப்பும் பூரிப்பில் ஆந்தை;
தழைக்காட்டுப் பழமரத்தைத் தாவிவரும் வெளவால்;
பொந்திருந்து வக்காவோ இரைதேடப் போகும்;
பொரிவண்டு மலர்க்காட்டில் புகுந்தெழுந்து பாடும்;
புந்தியிலே உன்நினைவு வற்றாத இன்பம்!
என்னுயிரே! நீஇன்றேல் புரையோடும் வாழ்வே! 3

# என்றும் மறவேன்

சாலையிலே எதிர்ப்பட்டாய்; நாணி நின்றாய்;
தழைமரத்தின் குளிர்மையுன் கண்ணில் கண்டேன்;
மாலையிலே கடலோரம் மதகின் மீது
வழிபார்த்து மிகஏங்கி நின்றேன்; வந்தாய்;
சேலையிலே முகம்பொத்து மகவைப் போலத்
தேம்பியழு திட்டஎனை அணைத்தாய்; பூக்கும்
காலம்போல் நெஞ்சத்தில் இன்பம் சேர்த்தாய்;
கவிப்பெண்ணே! உனைவாழ்வில் மறவேன் என்றும்! 1

இடம்கொடுத்தேன் என்மனத்தில்; அவளும் நானும்
இணைந்திருந்தோம் புறாப்போல; காய்ந்த பாலின்
குடமுடைத்தாள் நிலைஇல்லாள்; உண்மைக் காதல்
கொண்டார்க்கு வேறென்ன உலகில் வேண்டும்?
அடிபட்ட காயைப்போல் ஆனேன்; நெஞ்சில்
அலுப்புற்றேன்; பித்தனைப்போல் அலைந்தேன்; என்றன்
மடிபிடித்து வற்புறுத காதல் தந்து
வாழ்வித்தாய்! உனைஎன்றும் மறவேன்; வாழி! 2

உண்ணும்போ தென்னருகில் இருக்கின் றாய்நீ;
உறங்குகின்ற போதுடனே உறங்கு கின்றாய்;
கண்விழிக்கும் முன்னெழுந்து குயிலாய்ப் பாடிக்
களிப்புளத்தில் சேர்க்கின்றாய்; மறவேன் என்றும்!
பெண்ணரசே! நீஇன்றேல் இன்பம் சொட்டும்
பேச்சில்லை; மூச்சில்லை; கவிதை பாடும்
எண்ணத்திற் கிடமில்லை; பொருளைத் தேட
இருட்டறையில் நுழைந்தவன்போல் தவிக்கின் றேனே! 3

RangaRakes tamilnavarasam.com

தனிமையிலே கலங்குகின்ற வேளை வந்து
தழுவுகின்றாய்; வறுமையில்நான் தளிர்போல் வாட
இனியமொழி புகல்கின்றாய்; உலகில் யாரே
என்னைப்போல் கொடுத்துவைத்தார்? பெண்டு பிள்ளைக்
கனிவினிலே உன்னுரையின் கனிவைக் காண்பேன்;
கள்வெறியை ஊட்டுகின்ற உன்றன் கண்கள்
இனிமையிலே இவ்வுலகம் எதிர்த்திட் டாலும்
எதிர்த்திடுவேன்! உனைஎன்றும் மறவேன் நானே! 4

RangaRakes tamilnavarasam.com

# எந்நாளோ?

பெட்டியிலே சுருண்டகரும் பாம்பைப் போலப்
பின்னிவிட்ட சடையவளுக் கிருக்கு மென்றும்;
எட்டிப்பார்த் தேசிரிக்கும் சீய்த்து வானில்
எழுமதியாய்க் கொண்டைமலர்; கறுப்புச் சாந்துப்
பொட்டிருக்கும் முழுநிலவாய்; அவள்மை தோய்ந்த
புருவத்தின் நெளிவினிலே, அடடா! இன்பம்
கொட்டுகின்ற விழிபாயும்; என்றன் உள்ளச்
சோர்வகற்ற அவள்வருநன் னாளெந் நாளோ? 1

பல்லிருக்கும் மாதுளையின் வித்தைப் போலப்;
பழச்சாற்றைப் பிழிந்தெடுத்துத் தேனில் சேர்த்த
சொல்லிருக்கும் அவள்வாயில்; என்பேர் கேட்டுத்
துடிதுடிக்கும் செவ்விதழ்கள்; கலையின் நுட்பம்
வல்லார்போல் கழுத்திருக்கும்; உடல்நோ யூட்டும்
வாட்டத்தைத் தீர்க்கஅவள் முனையும் போது
கல்மலையாய் ஒன்றுவந்து குறுக்கே நிற்கும்;
களிப்பூட்ட அவள்வருநன் னாளெந் நாளோ? 2

இடையிருக்கும் துடியைப்போல்; எடுத்த மார்பென்
இதயத்தை அரித்தரித்து நினைவைத் தேய்க்கும்;
நடையிருக்கும் மயிலைப்போல்; முறுவல் பாயும்
நல்லிதழில் குடியிருக்கும் தமிழ்த்தேன் இன்பம்;
கடைக்கண்ணில் அருளிருக்கும்; அவள்தன் னுள்ளம்
காத்திருக்கும் என்வரவை; பிரிவில் நெஞ்சம்
துடிதுடிக்கும் நிலைகண்டே என்னைத் தேடித்
தோகையவள் அணைக்கவரு நாளெந் நாளோ? 3

உள்ளத்தில் அணைத்தென்னை இதழில் இன்பம்
ஊட்டுகின்ற நினைவிருக்கும் அவளுக் கென்றும் ;
கள்ளமிலா அவள்முகத்தின் எழிலில் என்றன்
கற்பனையின் ஊற்றிருக்கும் ; வாழ்க்கைத் துன்பப்
பள்ளத்தில் வீழாது தடுத்தாட் கொள்ளும்
பரிவிருக்கும் ; விழிப்பிருக்கும் ; கார்கா லத்து
வெள்ளத்தைப் போலவள்மேல் வெறிகொண் டோடும்
விருப்பத்தைத் தணிக்கவரு நாளெந் நாளோ ? 4

உடையிழந்தோன் கையைப்போல் என்னைத் தாவும்
உணர்விருக்கும் ; விழிகுளிரும் ; முல்லைத் தேனின்
அடைஇதழ்கள் கசிந்தின்பம் சொட்டச் சொட்ட
அத்தானென் றெனையழைக்கும் ; மார்பு விம்மும் ;
மடைகாக்கும் நாரையைப்போல் நான்வந் தேகும்
வழிபார்க்கும் பொற்பிழம்பு ; ஆனா லென்றன்
உடைமனத்தின் புண்ணாற்றிக் கவிஞர் நாட்டில்
உயர்த்தியெனை வாழ்விக்கும் நாளெந் நாளோ ? 5

RangaRakes tamilnavarasam.com

# துணியவில்லை!

அந்தியிலே வருகின்றாள் என்னைத் தேடி;
அலைமோதும் என்நெஞ்சிற் காசை காட்டக்
குந்துகிறாள் என்னருகில்; நான்தி ரும்பக்
குனிந்தெழுந்து நடக்கின்றாள்; குறும்புக் காரி!
'இந்தாரும்' என்கின்றாள் தமிழ்த்தேன் ஊறும்
இதழ்நீட்டி; நானெழுந்தேன்; என்றன் உள்ளத்
தொந்தரவைப் பலநாளாய் அறிந்தி ருந்தும்
குறைமுடிக்க அவளேனோ துணிய வில்லை! 1

கடலோரம் நான்சென்றேன் அமைதி தேடக்;
கைக்காரி அவள்வானில் தவழ்ந்து வந்தாள்;
உடைந்தஎன் மனம்பின்னும் ஊக்கம் கொள்ள
உட்கார்ந்தாள் என்னருகில்; அடடா! அந்தக்
கடைக்கண்ணால் எனைப்பார்த்தாள்; தமிழ்த்தேன் ஊறும்
கண்வீச்சில் அவள்செய்யும் கொடுமை யெல்லாம்
நொடிப்போதில் நான்மறந்தேன்; இன்னும் ஏனோ
நுண்ணிடையாள் குறைமுடிக்கத் துணிய வில்லை! 2

படுக்கையில் புரண்டிருந்தேன்; அவளப் போது
பலநாளாய்ச் செய்துவரும் கொடுமை எண்ணி
நடுவேளை என்னருகில் வந்தாள்; 'சற்று
நான்பாடும் பாட்டொன்றைக் கேட்பா' யென்றாள்;
'முடியாது போ' என்றேன்; என்றன் நெஞ்சில்
மூண்டிருக்கும் துயரத்தை மாற்ற எண்ணிக்
'கொடுக்கின்றேன் இத'மென்றாள்; குதித்தெ ழுந்தேன்;
குறைமுடிக்க அவளேனோ துணிய வில்லை! 3

RangaRakes tamilnavarasam.com

அவளெனக்குச் செய்துவரும் கொடுமை எண்ணி
ஆற்றினிலே குளித்திருந்தேன் ; அங்குப் பூத்த
குவளையிலே முகங்காட்டி 'வா வா' என்று
கூப்பிட்டாள் ; நான் 'மாட்டேன்' என்றேன் ; 'உன்றன்
கவலையினை மாற்றுகின்ற இதழி தோபார் !
காலத்தைத் தாழ்த்தாதே ! வா ! வா !' என்றாள் ;
தவளையைப்போல் தாவியவள் மேலே பாய்ந்தேன் ;
குறைமுடிக்க அவள்ஏனோ துணிய வில்லை ! 4

RangaRakes tamilnavarasam.com

# நிலைத்து நிற்குமோ?

பள்ளிக் கிருவரும் இணைந்து போனோம்;
பலப்பல பேசிப் பாட்டையில் களித்தோம்;
வெள்ளம் கண்ட நாரையைப் போல
விரைந்தோடி விட்டாய்! மறக்குமோ நெஞ்சம்? 1

பொருளும் அழகும் மறைத்ததோ கண்ணைப்?
பூக்கொய்த போழ்து நீசொன்ன யாவும்
இருள்விளக் கென்றுநான் களித்தேன்; மோசம்
ஏன்செய் தாய்நீ? பெண்களுக் கழகோ? 2

வடமலை யொருநாள் வயல்வெளி யாகும்;
வயலும் ஒருநாள் பெருமலை யாகும்;
கடலும் ஒருநாள் கல்மே டாகும்;
காடும் ஒருநாள் பேரூ ராகும். 3

மாயும் அழகின் செருக்கால் என்கை
மறுத்ததென் நெஞ்சை உறுத்துதல் காண்பாய்;
வேயிரு தோளும் விம்மும் மார்பும்
விரிமலர் முகமும் நிலைத்து நிற்குமோ? 4

நீயும் ஒருநாள் கிழவி யாவாய்;
நினைப்பாய் அன்றே உன்பெரும் தவற்றை;
சாயும் உலகில் யாவும் ஒருநாள்;
என்தமிழ்ப் பாட்டுத் தலைதாழ்த் தாதே! 5

RangaRakes tamilnavarasam.com

# எட்டிப் பழமோ?

காற்றில் பறக்கும் உடையிறுக்கி —அந்தக்
கறுப்பி எடுத்தனள் நெற்பயிரை ;
சேற்றில் புதைந்த அடிபெயர்த்தாள் ;—தமிழ்த்
தீஞ்சுவை பாய்ச்சினள் ; நாற்றுநட்டாள் ;
காற்றில் குலையும் தலையழகும் ,—அவள்
கட்டுடல் நாவல் கருநிறமும்
ஊற்றுநீர் கண்ட வெயில்மான்போல்—சுப்பன்
உண்டுநின் றனவன் கண்ணிரண்டால் ! 1

சேலையுள் விம்மிடு மாதுளைத்தோள்—அவள்
செந்நிற மேறிய பல்வரிசை
நூலிடை செம்பொட்டுக் காதோலை—உடல்
நோய்செய்யச் சாலையில் காத்திருந்தான் ;
மாலைக் கதிரொளி மங்கமங்கக்—குள்ள
வாத்தைப் பழித்தவள் வந்து சேர்ந்தாள் ;
'வேலை முடிந்ததா ? சற்றுநின்றே—என்றன்
விண்ணப்பம் கேளடி !' என்றுரைத்தேன் ! 2

உள்ளத்தைக் கண்ணில் அறிந்தஅவள்—ஏனோ
ஒன்றும் அறியாதாள் போல்நடித்தாள் ;
கள்ளச் சிறுநகை பூத்துநின்றாள் ;—கண்ணை
மேலே உயர்த்திக் கடைக்கணித்தாள் ;
'துள்ளும் இளமானே ! கார்முகிலே !—பழத்
தோப்பே ! இளங்கோவே ! நீள்நிலவே !
உள்ளம் பறித்தனை ! கொள்ளேடி !—என்றன்
உடலும் இதோவுனக்(கு)' என்றணைத்தான் ! 3



RangaRakes tamilnavarasam.com

கண்ணில் இருகண்ணை ஒற்றியொற்றி–அந்தக்
காளை அவளுடல் சேர்த்தணைத்தான் !
'விண்ணைக் கொடுத்தாலும் வேண்டுவமோ ?–புவி
மீதர சாள வேண்டுவமோ ?
மண்ணைப் பிளக்கும் இடிவிழினும்–காதல்
வாழ்வினில் மாழ்குவம்' என்றுரைத்தான் ;
கண்ணில் சிறுநகை காட்டியவள்–அந்தக்
காளை இசைக்கொரு தாளமிட்டாள் ! 4

தாயின் உயிர்போகு தென்றாலும்,–சொந்தத்
தந்தை உயிர்போகு தென்றாலும்
வேயிரு தோளை யணைந்திருப்பார் !–சிறு
வேதனை கொள்ளார் ! மிகையலவே !
காயும் முழுமதி யவள்முகத்தே–படர்
கார்முகில் கண்டான் ; துடிதுடித்தான் ;
'நாயே ! ஈ தென்னடி வீண்கலக்கம் ? –கொடு
நஞ்சும் உனக்காக உண்ப'னென்றான் ! 5

'உள்ளக் கலப்பினில் என்னாண்டே–நாம்
ஒன்றுபட் டோம்; பிறர் கண்டுவிட்டால்
தள்ளுவர் உங்களைச் சாதிவிட்டே !–பல
சாத்திரம் சொல்லி இடித்துரைப்பார் ;
துள்ளுவர் ஈனச் செய்கையீதென்(று)–உமைத்
தூற்றுவர் நம்மூர் மனித'ரென்றாள் !
உள்ளம் குழம்ப எழுந்திருந்தான்;–'கட்டை
உத'றென்று சொன்னது குப்பனுள்ளம் ! 6

'எட்டிப் பழமோ பறைச்சிஇதழ் ?–மன
இன்பத்திற் கேதடி சாதிமதம் ?
மொட்டுப் பலவகை யானாலும்–அதன்
முருகு தருஞ்சுவை ஒன்'றென்றான் !

RangaRakes tamilnavarasam.com

எட்டிப் பரந்ததே இச்செய்தி–தீயால்
எரியும் வீட்டுக் கரும்புகைபோல் !
குட்டை மனத்தவர் சூழ்ச்சியெல்லாம்–குப்பன்
குன்றி லடிபடும் பானையாச்சே ! 7

RangaRakes tamilnavarasam.com

# அது ஒரு நாள்

காளை வால்பற்றி முதுகினில் தாவிக்
கைதட்டிக் கரணம் அடித்ததும் ஒருநாள்!
கோளரி போன்றஎன் சோட்டுச் சிறுவரின்
கும்பலில் எங்கும் திரிந்ததும் ஒருநாள்! 1

மரத்தினில் ஏறி அம்பெனப் பாய்ந்து
மலர்க்குளம் அதிரக் குதித்ததும் ஒருநாள்!
கரத்தினில் தாமரைப் பூக்களைக் கொய்து
கன்னியர்க் கீந்து களித்ததும் ஒருநாள்! 2

அல்லியின் தண்டைக் கிள்ளி யொடித்தே
அழகுப் பூமாலை தொடுத்ததும் ஒருநாள்!
செல்லிஎன் அத்தை மகள்கழுத் திட்டுச்
சிரித்துக்கை தட்டிக் குதித்ததும் ஒருநாள்! 3

தோப்புள் நுழைந்து மாங்கனி கவரத்
தோகை யவள்முது கேறிய தொருநாள்!
மாப்பிள்ளை பெண்ணுமாய் நாங்கள் இருவரும்
வாழ்க்கை நடத்திக் காட்டிய தொருநாள்! 4

கள்ளமில் என்றன் இளமைத் துடுக்குகள்
கட்டாந் தரைப்புல் லானது வாழ்வில்!
உள்ளத்தில் இன்பம் ஊட்டிய நாட்கள்,
ஒவ்வொன்றாய் வந்தின்று கண்முன்னே நிற்கும்! 5

நன்று தீதறியா இளமனந் தன்னில்
நாளும் வளர்த்தனள் காதல் பயிரை;
இன்றவள் யாரோ? எனக்கே துரிமை?
என்னே! உலகக் கொடுமையும் என்னே! 6

RangaRakes tamilnavarasam.com

# காய்ந்தென்ன? பேய்ந்தென்ன?

பண்ணுண்டே சாரலில்
பாட்டுண்டே ஓடையில்
உண்ண உணவேனோ அத்தான்?–நமக்(கு)
உண்ண உணவேனோ அத்தான்? 1

கிழங்குண்டு காடெல்லாம்
கிளையெல்லாம் தேனுண்டே
உழவுத் தொழிலேனோ அத்தான்?–நமக்(கு)
உழவுத் தொழிலேனோ அத்தான்? 2

கொக்குக் குருகுண்டே
குன்ற விலங்குண்டே
பக்கத் துறவேனோ அத்தான்?–அக்கம்
பக்கத் துறவேனோ அத்தான்? 3

வட்ட நிலவுண்டே
பட்டப் பகல்போலே
இட்ட விளக்கேனோ அத்தான்?–எண்ணெய்
இட்ட விளக்கேனோ அத்தான்? 4

நீலக் கடலுண்டே
நீள்தாழைக் காடுண்டே
காலை மலர்ந்தென்ன அத்தான்?–வானம்
காய்ந்தென்ன பேய்ந்தென்ன அத்தான்? 5

RangaRakes tamilnavarasam.com

நீயுண்டு நானுண்டு
நெஞ்சினில் அன்புண்டு
நீயென்ன செய்திடும் அத்தான்?-கொடுந்
தீயென்ன செய்திடும் அத்தான்? 6

தோப்புத் துரவுண்டு
தூமலர்க் காடுண்டு
காப்புடை இல்லமேன் அத்தான்?-நமக்குக்
காப்புடை இல்லமேன் அத்தான்? 7

RangaRakes tamilnavarasam.com

# நினைப்பேனோ இல்லை?

எனைக்கண்டு முகம்மலரும் ; நடைமாறிப் போகும் ;
இதழிடையே புன்முறுவல் நடமாடும்; வேலின்
முனைபாயும் என்விழிமேல் ; வாய்திறக்க ஆ! ஆ!
முருங்கைப்பூ மொட்டுக்கள் வரிசையாய்த் தோன்றும் ;
நனைசுவரின் ஓரத்தே பூத்திருக்கும் முல்லை
நல்லரும்பை எடுக்கின்ற வேளையிலும் என்மேல்
நினைவிருக்கும் ; கண்சிரிக்கும் ; ஆனாலு மென்றன்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை ? 1

நாரெடுத்துப் பூத்தொடுத்துக் கொண்டிருப்பாள் ; தம்பி
நகர்ந்துவந்து பின்புறமாய் எழுந்திருந்து நிற்க
மார்போடு சேர்த்தணைப்பாள் ; கன்னத்தில் முத்த
மழைபொழிவாள்; கடைக்கண்ணால் சிரித்தென்னைப் பார்ப்பாள் ;
“ஊருக்குப் போவோமா?” எனமெல்லச் சொல்லி
உடன்பாட்டைத் தெரிவிப்பாள் ; உள்ளோடிப் போவாள் ;
கூர்விழிக்கோ எனைக்கண்டால் கொண்டாட்டம்! ஆனால்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை ? 2

பள்ளிவிட்டு வருவேளை வழிபார்த்து நிற்பாள் ;
பார்த்தவுடன் பார்க்காது வேறெங்கோ பார்ப்பாள் ;
கள்ளவிழிக் கொளிசெய்ய மைதீட்டும் போதும்
கருத்திருக்கும் என்மீது ; கிணற்றோரம் நீரை
மொள்ளுகின்ற போழ்தினிலும் என்பேரைச் சொல்லி
முணுமுணுக்கும் செவ்விதழ்கள் துடிதுடிக்கும் பேச ;
கொள்ளையின்பம் எனைக்கண்டால்! ஆனாலும் என்றன்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை ? 3

RangaRakes tamilnavarasam.com

பக்கத்து வீட்டிற்கு நான்வந்தால் போதும்;
பாசாங்குக் காரியொன்றும் அறியாதாள் போல
'அக்கா'வென் றவ்வீட்டுப் பெண்தேடி வந்தே
அடுக்களையில் மறைந்திருப்பாள்; எட்டியெட்டிப் பார்ப்பாள்;
பக்குவமாய் இரண்டொன்று பேசாது பேசிப்
பார்க்காதாள் போலென்னைப் பார்த்திருப்பாள்; ஆனல்,
நெக்குருகும் என்மனத்தின் சோர்வகற்றி யென்றன்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை? 4

# நானென் சொல்வேன் ?

ஆள்காட்டி விரலாலே ஒவ்வோர் ஏட்டை
அவள்புரட்டிக் கொண்டிருப்பாள் நூலெ டுத்து ;
வாள்விழியோ என்னருகில் வந்து வந்து
வட்டமிடும் ; நகைகாட்டும் ; கூர்ந்து நோக்கும் !
மீள்வதுண்டோ கருவண்டு மலரில் வீழ்ந்தால் ?
மெல்விரலைச் சுவைத்திருக்கும் குழவிக் கென்றும்
தாள்சோர்ந்து போவதுண்டோ ? கண்ணும் கண்ணும்
தம்முள்ளே பேசுவதை நானென் சொல்வேன் ? 1

தெருவினிலே வாத்தைப்போல் அசைந்த சைந்து
சிரிக்காமல் சிரித்தவளும் நடந்து போவாள் ;
ஒருவருக்கும் தெரியாமல் அவள்மைக் கண்கள்
ஓடிவரும் அன்போடு ; வேறு யார்க்கும்
புரியாத வகையினிலே பேசும் ; சற்றுப்
போய்த்திரும்பி மற்றொன்று சொல்லும் ; நெஞ்சில்
உருவேறிப் போனதடா ! அந்தக் கண்கட்(கு)
உவமையுண்டோ ? பேசுவதை நானென் சொல்வேன் ? 2

தாயோடு வீட்டினிலே தட்டிக் கப்பால்
தன்னுருவை மறைத்திருப்பாள் ; தட்டிச் சந்தில்
பாய்ந்துவரும் அவள்கண்கள் ; கொஞ்சிக் கொஞ்சிப்
பலபேசும் ; பரிகசிக்கும் ; நானென் சொல்வேன் ?
காய்கின்ற முழுநிலவும், தென்றற் காற்றும்,
கடல்தொலைவில் எழுப்புகின்ற இசையும் அந்த
மாயவிழிக்(கு) ஈடாமோ ? என்னை ஊக்கி
வாழ்விக்கும் விழிப்பேச்சை நானென் சொல்வேன் ? 3

RangaRakes tamilnavarasam.com

# காரணந்தான் என்னே ?

கடலோரம் காற்றூட நின்றிருந்தேன் ; நீலக்
கருங்கடலில் அலைநெளிவில் தொடுவானில் மீனில்
மடம்நிறைந்த உன்விழியே தோன்றுதடி ! சாய்ந்த
மலர்ப்புன்னை மொட்களுடன் பல்வரிசை காட்ட
உடலெல்லாம் உயிரெல்லாம் பாயுதடி இன்பம் !
உனைமறக்க ஒருநாளும் ஆகாதே என்றால் !
கடைக்கண்ணைத் திருப்பாது வேறெங்கோ நோக்கி
என்னுயிரை வாங்குகின்ற காரணந்தான் என்னே ? 1

தழைக்காட்டில் தனிமையாய்த் திரிகின்ற போதும்,
தாங்காத வெய்யிலிலே நடக்கின்ற போதும்,
மழைபட்ட செந்நெல்லின் வளங்கண்ட போதும்,
வற்றாத சிற்றோடைப் பூக்கண்ட போதும்
அழியாத உன்வழியே தோன்றுதடி எங்கும் !
அரைநொடியும் உனைமறக்க ஆகாதே என்றால் !
பிழைஎன்ன செய்தேன்நான் ? வேறெங்கோ நோக்கி
என்னுயிரைப் பிரிக்கின்ற காரணந்தான் என்னே ? 2

மடமையிலே வாழுகின்ற மக்களொரு பக்கம்
வயிற்றுக்குச் சோறளிக்கும் மனைவியொரு பக்கம்
அடக்குமுறை அம்பெய்து வாட்டுகின்ற போதும்
அன்பளிக்கும் உன்விழிகள் ; துன்பத்தைப் போக்கும் ;
இடையினிலே வந்ததென்ன ? உனைமறக்கப் போமோ ?
என்வாழ்வே ! குளிர்நிழலே ! இளந்தென்றற் காற்றே !
கடைக்கண்ணைத் திருப்பாது வேறெங்கோ நோக்கி
என்னுயிரை வாங்குகின்ற காரணந்தான் என்னே ? 3

RangaRakes tamilnavarasam.com

வான்மறந்து விண்மீன்கள் வேறெங்கே செல்லும்?
மலர்விட்டுக் கருவண்டு மதுவெங்கே தேடும்?
மீன்கூட்டம் நீர்நிலையைப் பிரிந்திருப்ப துண்டோ?
வெற்பிழிந்து தவழ்ந்துவரும் மெல்லருவி தாவித்
தான்கலக்கும் கடலன்றி வேறெங்கே செல்லும்?
தமிழ்ச்சுவையே! உனைமறக்க ஒருபோதும் ஆகா!
மானவிழியைத் திருப்பாது வேறெங்கோ நோக்கி
என்னுயிரை வாங்குகின்ற காரணந்தான் என்னே? 4

RangaRakes tamilnavarasam.com

# என்ன உண்டாம்?

குட்டை குளங்கள் நிறைந்ததடி! - வெள்ளைக்
கொக்கைக் குருகையங் காரழைத்தார்?
வட்ட நிலவுண்டாம் என்றுரைத் தேஓடிப்
பெண்ணே! மறைவதால் என்ன உண்டாம்? 1

தோப்பு மரங்கள் பழுத்ததடி! - பெண்ணே!
சாப்பிட வௌவாலை யாரழைத்தார்?
காப்புண்டு வீட்டில் என்றுரைத் தேஓடிக்
கண்ணே! மறைவதால் என்ன உண்டாம்? 2

தினைக்கதிர் சாய்ந்தது புன்செய்யிலே-பெண்ணே!
தின்னக் கிளியையங் காரழைத்தார்?
மனையகத் தன்னையும் சுற்றமும் உண்டென்று
மானே! மறைவதால் என்ன உண்டாம்? 3

காற்று மழைமின்னல் வந்ததடி!-பெண்ணே!
காட்டுக் குயிலைஇங் காரழைத்தார்?
கூற்றொருத்த ஊர்க்காவல் உண்டென்று சொல்லிப்பின்
ஓடிமறைவதால் என்ன உண்டாம்? 4

கொல்லையில் முல்லை சிரித்ததடி! - பெண்ணே!
கூப்பிட்டா வந்தன வண்டினங்கள்?
தொல்லை தரும்இந்த ஊரென்று வீணாகச்
சொல்லி மறைவதால் என்ன உண்டாம்? 5

RangaRakes tamilnavarasam.com

# வேறெங்கோ நோக்குவதேன்?

கார்தவழும் மலைமுகட்டைப் பொற்கையால் தாவிக்
கதிர்தழுவும்; கீழ்வானை மெல்லஇருள் தழுவும்;
வேர்தவழும் பாறையினைக் களிரோடி வந்து
மேற்றழுவும்; மரமேறி ஆண்தழுவும் மந்தி;
நீர்தவழும் சிற்றோடை பூத்தமலர் தென்றல்
வளிதழுவும்; நீள்கொம்புக் கலைதழுவும் பெண்மான்;
ஏர்தவழும் உன்விழிகள் என்னின்பப் பேழை!
ஏன்தழுவும் வேறெங்கோ? என்னேடி செய்தேன்? 1

கோடுயர்ந்த மரக்கிளையைக் கொடிசுற்றும்; புள்ளிக்
குயில்கூவும் இசைக்கேற்ப ஆறுமுழ வார்க்கும்;
ஆடுயர்ந்த செடிதாவி மேய்ந்திருக்கும்; பொய்க்கால்
அடிபெயர்க்கும் மேய்ப்போன்வாய்க் குழல்கேட்டுச் சூழும்;
காடுயர்ந்த கொன்றையிலே குரல்காட்டும் போத்து;
காதுயர்த்தித் துணைதேடித் துள்ளிமுயல் பாயும்;
பீடுயர்ந்த உன்விழிகள் என்னின்பப் பேழை!
ஏன்தழுவும் வேறெங்கோ? என்னேடி செய்தேன்? 2

குட்டையிலே அளிகண்டு பூசிரிக்கும்; வாழைக்
குலைகோதப் பசுங்கிள்ளை ஆணழைக்கும்; தென்னை
மட்டையிலே பெண்ணணிலோ தன்துணையைத் தாவும்;
வாலுயர்த்திப் பாய்ந்துவரும் காளையினைப் பார்த்துத்
தொட்டியிலே நீருந்தும்; பசுகத்தி யழைக்கும்;
துணைச்சேவல் குரல்கேட்டுக் குதித்தோடும் பெட்டை;
வெட்டியிலே போகுதடி பொன்னான நேரம்!
வேறெங்கோ நோக்குவதேன்? என்னேடி செய்தேன்? 3

புரண்டுவரும் அலைகண்டு பூரிக்கும் நெய்தல்;
புதுப்பெண்ணைப் போல்நண்டு வேப்பம்பூக் கண்ணால்
வெருண்டுவரும் அலவனுக்கு விருந்தூட்டும்; தாழை
விரிந்துமடற் கைவிரித்து நாரைவர வேற்கும்;
உருண்டுவரும் சங்கிற்குப் புன்னைநகை காட்டும்;
உயர்பனையில் கடற்காக்கை ஆணைஎதிர் நோக்கும்;
சுருண்டுவரும் அலைக்கூந்தல் துடியிடையே! அன்பே!
வேறெங்கோ நோக்குவதேன்? என்னேடி கோபம்? 4

# கன்னியின் கனவு

வானத் தழகிடுளி - எனது
வட்ட முகத்திலென்பார்
நானதைக் கேட்டவுடன் – சிறிது
நாணித் தலைகுனிவேன். 1

செவ்வரி பாயுதென்பார் – எனது
சேல்விழி துள்ளுதென்பார்
ஒவ்வோர் உறுப்பினுக்கும் – பலப்பல
உவமை கூறிடுவார். 2

என்னைப் பிடித்திழுப்பார் – ‘விடுவிடு’
என்றுநான் பொய்யுரைப்பேன் !
கன்னல் மொழிந்திடுவார் – ‘குசுகுசு’
காவியஞ் சொல்லிடுவார். 3

என்சொல் மதித்திடுவார் – சோர்வில்
என்னுயிர் காத்திடுவார்
முன்னரே நான்நடப்பேன் – காதல்பெற
முற்படும் வாலிபன்போல். 4

வீட்டு அரசாட்சி – உனது
விருப்பம் என்றுரைப்பார்
பாட்டுக்கள் பாடென்பார் – நீர்
பாவம் பிடியுமென்பேன். 5

RangaRakes tamilnavarasam.com

காசு பணம்சேர்த்தே - வாழ்வில்
களிப்பினைக் கண்டதுண்டோ ?
மாசிலா அன்பணைப்பில் என்றும்
மணிப்புறாப் போல்வாழ்வோம். 6

செந்நிற நீர்போல - உருண்டு
செல்வோம் வாழ்வினிலே!
எந்நிலை பெற்றிடினும் - பங்கு
எங்கள் இருவருக்கே. 7

எங்கள் உயிர்கவர்ந்த—மழலைத்
தங்கப் பதுமைகளைத்
திங்களாய்ப் போற்றிடுவோம் -- சுதந்தரத்
தீரராய் ஆக்கிடுவோம் ! 8

என்மனம் வேண்டாத - அசடு
எவனைப் பெறுவேனோ ?
அந்நிலை அற்றாலே - நாட்டின்
அடிமைத் தளை தெரிக்கும் ! 9

பெண்கள் மணவாழ்வின் - உரிமை
பெற்றிட நான்முனைவேன்
கண்கள் எனக்குண்டு - விரும்பும்
காதலன் நானடைவேன் ! 10

RangaRakes tamilnavarasam.com

# அறியாக் காதலி

ஆற்று மணற்பரப்பில், — உள்ளம்
அள்ளிடும் செவ்வொளியில் — அவள்
மேற்றிசை வானிருந்து — மயிலென
மெல்ல நடந்து வந்தாள்! 1

வெட்கம் சிறிதுமின்றி — அவள்
வேல்விழி தூதனுப்பி — 'என்
பக்கம் வருக'வென்றாள் — துள்ளிப்
பாய்ந்தேன் அவளருகில்! 2

மண்ணில் பலவுயிர்கள் — பேசும்
வாக்கின் நுணுக்கமெலாம் — தமிழ்ப்
பண்ணில் எனக்குரைத்தாள் — இன்பப்
பார்வை மொழியாலே! 3

ஆடை பிடித்திழுத்தேன்; — பலப்பல
அன்பு மொழியுரைத்தேன்;
ஓடையுள் சென்றொளித்தாள்; — என்
உள்ளம் வெறிகொளவே! 4

தோப்பினில் பாட்டிசைத்தாள் — கிளைதொறும்
தொத்தித்தொத்தி மகிழ்ந்தே! — 'ஓய்,
மாப்பிள்ளை! உண்ணவாரும்! — ஓட்டு
மாம்பழம் தாரேன்' என்றாள். 5



RangaRakes tamilnavarasam.com

கார்முகில் ஏறிவந்தாள்; – என்
கண்ணைக் கவர்ந்துவிட்டாள்; – அவள்
யாரென நானறியேன்; – பெயர்
யாதெனக் கேட்டறியேன் ! 6

ஒவ்வோர் பொருளினுள்ளும் – நிறைந்து
ஒளிமுகம் காட்டுகின்ருள் - அவள்
செவ்வரி கண்கண்டால் – மனம்
வேறென்றில் சென்றிடுமோ ? 7

RangaRakes tamilnavarasam.com

# தாய்

கத்தும்செங் குழவி நோயைக்
கண்டதற் குரிய செய்வாள்;
கொத்துப்பூஞ் சிரிப்பைக் காணக்
குலுக்குவாள்; குறும்பு செய்வாள்;
சித்திரை துளிர்த்த மாவின்
சிறுஇலை கால்கை தூக்கி
முத்தமோர் கோடி ஈவாள்;
முன்துயர் மறந்து நிற்பாள்! 1

குந்தவைத் திருகை சேர்த்துக்
கொட்டுவாள்; கொட்டச் செய்வாள்;
தந்தையைக் காட்டச் சொல்வாள்;
தாத்தாவைக் காட்டச் சொல்வாள்;
செந்திரு விரலால் பிள்ளை
சுட்டிடச் சிரிக்கக் கண்டு
வந்தது கண்ணே(று) என்று
வாரிமார்(பு) அணைத்துக் கொள்வாள்! 2

ஒவ்வொரு சொல்லைச் சொல்லி
ஊக்குவாள்; சொல்லச் சொல்வாள்;
செவ்விரு கையைப் பற்றிச்
சிறுநடை நடக்கச் செய்வாள்;
கொவ்வைக்குத் தாவுங் கிள்ளை,
குப்பையில் மேயும் கோழி
ஒவ்வொரு நாளும் பிள்ளை
உணவுண்ண அழையா நிற்பாள்! 3

RangaRakes tamilnavarasam.com

காய்தாங்கும் கொடியாம் அன்னை ;
கண்ணிமை எனினும் ஒக்கும் ;
தாயைப்போல் இதயம் கோதும்
துயரினைத் தடிவார் இல்லை;
தாயினை இழந்தார் வானத்
தண்துளி காணுப் புன்செய்;
தாயினை இகழ்வார் மாற்றுந்
தாய்வர உணரு வாரே ! 4

RangaRakes tamilnavarasam.com

# மனைவி

வானத்தைப் பார்ப்பாள் ; அந்தி
வண்ணத்தைப் பார்ப்பாள்; நெஞ்சம்
ஏனென விளக்கிச் சொல்ல
இயன்றிடாத் துயர்க ருக்க
மோனத்தில் சோர்ந்து நிற்பாள்;
முழுமதி முகம்சு ளுக்கிப்
"போனவர் இன்னும் என்ன
புரிகிறார் ஆங்கே?" என்பாள். 1

புத்தகம் அசட்டை யாகப்
புரட்டியே பார்ப்ப தைப்போல்
அத்தையின் ஏவல் செய்வாள்;
அவள்மனம் இன்னும் ஏனோ
புத்தியில் இனிக்கும் மாசிப்
புதுத்தென்றல் தன்னை யொத்த
அத்தானைக் காணோ மென்று
அடிக்கடி கேட்கா நிற்கும். 2

சிறுஒலி கேட்க வந்து
கதவினைத் திறந்து பார்ப்பாள்;
வறுமையில் வாழும் மக்கள்
முகமென வாடும் கண்கள்;
துறையிலா வாவி தன்னில்
குளித்திடச் சுற்று வார்போல்
அறையினுள் செல்வாள்; வாயில்
அருகினில் வந்து பார்ப்பாள். 3

RangaRakes tamilnavarasam.com

வீட்டினுள் இருக்க உள்ளம்
விட்டிடா தவளை ஈர்க்கும் ;
கேட்டிடு தெருவோ சையில்
கேள்வனின் குரலைக் கேட்பாள்;
ஓட்டமும் நடையு மாக
உள்ளிருந் தோடி வந்து
பாட்டையை எட்டிப் பார்ப்பாள் ;
சிரித்திடும் பழித்துப் பாட்டை ! 4

வாயிலில் நின்று நின்று
வழிபார்ப்பாள் தலையைச் சாய்த்து;
சாயலில் கணவன் ஒத்தார்
சார்ந்திடத் தொலைவில் கண்டு
வேயிரு தோளு யர்த்தி
விம்முவாள்; அவள்மைக் கண்ணோ
நோய்கொண்டு பொருளொவ் வொன்றும்
நுழைந்(து)'அவர் எங்கே ?' என்னும் ! 5

ஆண்களே இப்ப டித்தான்
அலுவலில் சென்றால் தாங்கள்
வேண்டிய பொருள்கி டைத்த
பின்னரே மீள்வார் வீட்டை !
ஈண்டிவர் வருகைக் காக
ஏங்கிடு உயிரை ஏனோ
காண்டிடல் இல்லை என்பாள்
கதவினைப் பற்றிச் சாய்ந்தே ! 6

RangaRakes tamilnavarasam.com

# மகள்

எழுதுகோல் எடுத்துக் கையால்
சுவடியின் ஏட்டைத் தள்ளி
எழுதுவாள் மேதை போல;
ஏதேதோ முணுமு ணுப்பாள் ;
மெழுகுவாள் எச்சில் துப்பி;
மேலாடை இழுத்துச் சுற்றி
விழுந்தடி பணிவாள்; தாய்போல்
வேலைகள் செய்வாள் கிள்ளை ! 1

ஆடையும் அணியும் கேட்பாள்;
அணிந்தபின் நடந்து பார்ப்பாள்;
சாடைகள் செய்வாள்; பாட்டி
சாயல்போல் நடந்து போவாள்;
ஏடவிழ் பூவைப் போல
இன்னகை புரிவாள்; பெற்றோர்
வாடிய முகத்தை மாற்றும்
மருந்தவள் பெற்ற தெங்கோ ? 2

சிற்றிலை அமைத்து மண்ணில்
சிறுசோறு சமைப்பாள்; அந்தச்
சிற்றிலைச் சிதைக்கக் காணில்
சீறுவாள்; என்னைக் கூவிப்
பற்றுடன் உண்ணச் சொல்வாள் ;
பாட்டுகள் பாடிப் பாடிப்
பெற்றவள் போலப் பொம்மை
பிள்ளைதா லாட்டு வாளே ! 3

RangaRakes tamilnavarasam.com

செவ்விதழ் அவள்வாய் முத்தம்
தேன்சுவை மீறும்; அந்தச்
செவ்விதழ் பிறக்கும் சொற்கள்
பொருள்காண நிகண்டிங் கேது ?
செவ்விசேர் நீலக் கண்கள் ;
சிறுநகை நச்சுப் பற்கள் ;
மௌவலின் நாற்றம் வீசும்
தலைமயிர்; வான வாழ்வே ! 4

RangaRakes tamilnavarasam.com

# உழவன்

காலையில் நுகத்தில் எருதுகள் பூட்டிக்
கலப்பையைக் கட்டினன் உழவன்!
பாலிலாத் தாயின் முலையினைக் குழவி
பற்களால் கடித்திழுப் பதுபோல்
சாலையாய் நிலத்தைச் சேக்குலம் பிளக்கும்
தலையசைத் திடுமொரே யளவாய்;
காலுளை பெயர்க்க அவைபடும் பாடு
கண்டுநான் கருத்திழந் தேனே! 1

ஏருடன் விரைந்து சேற்றினில் தாண்டி
எடுத்தடி வைத்தவன் நடப்பான்;
காரினைத் தூக்கிச் சிக்கிய மண்ணைக்
காலினல் தள்ளுவான்; அதட்டித்
தார்கழி நீட்டக் காளைகள் உடலைத்
தாழ்த்தி நெளித்துமுன் இழுக்கும்;
சோர்ந்திடும் போழ்தில் பாட்டுகள் இசைப்பான்;
சொக்கிடும் உலகமே அடடா! 2

புல்சிறு செடிகொடி சாய்ந்திடும்; சேற்றில்
பொறுக்கிடும் புழுக்களைக் காக்கை;
எல்லொளி கருக்கப் பூட்டிய ஏரை
இடையிடை நிறுத்துவான்; உழுவான்;
கெல்லிட உழவுன் பொறுத்திடு நிலம்போல்
கேடுவந் துற்றிடு வேளை
நல்லவர் கலங்கார்; உடலுயிர் பிறந்த
நாட்டினிற் குதவிவாழ் வாரே! 3

RangaRakes tamilnavarasam.com

தலைமேல் உழத்தி உணவொடு வந்தாள் ;
சாட்டியை வீசிஏர் நிறுத்தித்
தலைதிகழ் பாகை அவிழ்த்தனன் ; மாட்டைத்
தட்டினன் ; தடவினன் முதுகில் ;
இலைசெறி மரத்தின் நிழலில் கூழை
இன்பமாய்க் குடித்தனன் ; களித்தான் ;
சிலைவிழி கொடுக்கும் வெற்றிலை மென்று
திரும்பினன் வினைசெய மீண்டும். 4

உழவனைக் கேட்டேன் ; உழத்தியைக் கேட்டேன் :
'உள்ளெலும் புலுத்திட நாங்கள்
மழைகுளிர் காற்று வெய்யிலில் உழைத்தால்
மடிக்கொரு கவள'மென் றுரைத்தார் ;
உழவரே நாட்டின் மூச்சடா ! அடிமை
ஓட்டிடும் மருந்தவர் ! கண்டாய் !
உழுபடை தந்த பெரும்பொருள் கொற்றம்
உணர்ந்தவர்க் குதவுவார் யாரே ! 5

RangaRakes tamilnavarasam.com

# பாட்டாளி

பாட்டாளி முதலாளி யாவரும் ஒன்றே;
பங்கிட்டுச் சரிபாதி அடைகுவம் நன்றே;
நாட்டில் விளைபொருள் வான்தந்த செல்வம்;
நாமொன்றாய் உடுத்துண்டே உயிர்வாழல் இன்பம்! 1

கடுமழை வெய்யிலில் உழைத்தவர் யாரோ?
காய்கறி நெல்கூலம் விளைத்தவர் யாரோ?
குடிநீர் நிறைகூவம் சமைத்தவர் யாரோ?
கூடை குடிசை முடைந்தவர் யாரோ? 2

குளிர்நீக்கப் பலஆடை நெய்தகை யார்கை?
கோட்டை மதில்சுவர் செய்தகை யார்கை?
களியானை மிடறேறி நாட்டினைக் காக்கக்
கைவேலும் வாளும் கொடுத்தகை யார்கை? 3

பலபல அழகாடை தைத்தகை எவர்கை?
பதஞ்செய்து தோலினைத் தைத்தகை எவர்கை?
மலைகாடு பாய்ந்தோடும் புகைவண்டி ஊர்தி
வரப்போகப் பெரும்பாட்டை ஆக்கிய தார்கை? 4

அழுக்காடை தூய்மைப் படுத்திய தார்தோள்?
ஆற்றணை கட்டிநீர் தேக்கிய தார்தோள்?
முழுமீசை அரைமீசை தாடியொதுக்கி
முகத்தில் அழகையுண் டாக்கிய தார்கை?

RangaRakes tamilnavarasam.com

பொன்னை யுருக்கி அணிசெய்த தார்கை?
பொங்கும் கடல்தாண்டச் செய்தகை யார்கை?
அந்நிய நாட்டினர் பேச்சை நொடியில்
அட்டியின்றிக் கேட்கச் செய்தகை எவர்கை? 6

மேற்றிசை வீழ்சுழல் பரிதியைப் போல
வெந்த இரும்பினால் தீய்ந்தகை யார்கை?
காற்றாடு மாடமும் கூடமும் மாலை
கனிதரு சாலையும் கட்டிய தார்கை? 7

கண்ணைக் கவரும் மணிதந்த தார்கை?
கல்லைச் செதுக்கி உயிர்தந்த தார்கை?
மண்ணைக் குடைந்து கருப்பொருள் ஈட்டி
வாழ்வுக் குறுதுணை யானதோள் யார்தோள்? 8

குன்றைப் பிளந்து வழிதந்த தார்தோள்?
குட்டை குளம்ஏரி வெட்டிய தார்தோள்?
நன்றி மறந்தவர்க் கொன்றுநான் சொல்வேன்:
நாட்டிற் குயிராகும் தொழிலாளர் கூட்டம்! 9

கொடுமையடா மண்ணில் சிலருண்டு வாழல்!
கூழுக்கும் வழியற்றுப் பாட்டாளி தாழல்!
உடைமை பொதுவாக்கி வாழ்வோமிந் நாட்டில்!
ஊரை வளைப்போரை வேர்கல்லிச் சாய்ப்போம்! 10

மண்ணில் பெரும்பொருட் கேன்தனி நாட்டம்?
மக்கள் பசிபோக்கா ஈட்டமென் ஈட்டம்?
கண்ணிமை போன்றவர் தொழிலாளர் கூட்டம்!
கலந்துண்டு வாழ்வமென்றால் ஏனோஇவ் வோட்டம்? 11

RangaRakes tamilnavarasam.com

# குறவர்

வீட்டினுள் இருக்க உள்ளம்
விரும்பிட வில்லை ; சிற்றூர்ப்
பாட்டையில், குளிர்மை தோய்ந்த
பசுமர நிழலில் சென்றேன் ;
மேட்டினில் அங்கும் இங்கும்
சம்புவால் வேய்ந்த கூரை
காட்டிற்றுக் குறவர் இன்பக்
களஞ்சியக் குடிசை தன்னை ! 1

'இச்சிறு குச்சி வீட்டை
விருப்பம்போல் எடுத்துச் சென்று
குச்சியை நாட்டி யாங்கே
குடித்தனம் செய்யும் விந்தை,
மச்சடை இல்லம், வானை
மருவிடு மாடம் வாழும்
இச்சக மாந்தர்க் கேதோ ?'
என்றதே என்றன் உள்ளம். 2

இயற்கையின் எழிலைப் போல
இருந்தனர் ஆணும் பெண்ணும் ;
முயற்கண்ணி தோளில் மாட்டி,
முன்மார்பில் நரித்தோல் போர்த்து
வயிற்றினில் சிறுதோல் பையை
வரிந்தனன் குறவர் காளை !
கயற்கண்ணாள் சிரித்தாள்! ஆ! ஆ!
களாக்காடு பழுத்த தாங்கே ! 3

RangaRakes tamilnavarasam.com

அழுக்கெலாம் உறையும் செம்மைப்
பாவாடை அரையில் தொங்கும்;
வழுவழுப் பான தோளை
மறைத்திடும் பச்சைச் சட்டை;
கழுத்தினில் பிள்ளைக் காகக்
கட்டிய ஏணை தன்னில்
விழியினைக் கசக்கி எட்டி
வேடிக்கை பார்க்கும் பிள்ளை! 4

கண்ணினைச் சுழற்றி வெட்டிக்
கையினை முறுக்கிச் சுற்றிப்
பெண்புருப் போல ஓடிப்
பின்வந்து நிமிர்ந்து நின்று
பண்ணிசை சேர வாயில்
வந்ததைப் பாடிப் பாடி
உண்ணவோர் கவளத் திற்கும்
ஒவ்வொரு வீடும் நிற்பாள்! 5

குழவிகள் இடுப்பில் கட்டும்
கொக்குக்கால் குருவிக் கால்கள்;
பழந்துணி தைக்க ஊசி,
பால்மணி, நரிப்பல், ஈச்சம்
பழக்காய்கள் கோர்த்த தேபோல்
பவழங்கள், மாட்டின் பிச்சு,
அழகுமான் கொழுப்பின் உண்டை,
அவள்விற்பாள் கூவிக் கூவி! 6

'குறலச்சை' என்பார் மண்ணில்
கொள்கைக்கு வாழா மாந்தர்!
குறவரோ தம்மை வாட்டும்
வயிற்றுக்குக் கூச்சல் செய்வார்;

RangaRakes tamilnavarasam.com

மறத்திணை எதிர்த்து வாழ்ந்த
வலிமிகு தமிழர் தத்தம்
அறமெனும் கொள்கை விட்டே
ஆழ்ந்தனர் அடிமை வாழ்வில்! 7

இடுக்கணை அறியா மக்கள்
இச்சைபோல் சுற்றிச் சுற்றிச்
கிடைத்ததை உண்டு இன்பக்
கிள்ளைபோல் பறந்து பாடிக்
குடித்தனம் செய்து வாழும்
குறவரைக் காணில், 'நாட்டில்
குடித்தனம் தொல்லை தொல்லை'
என்றவர் குருடர் என்போம்! 8

RangaRakes tamilnavarasam.com

# மீன்காரி

'என்னென்ன மீனிது? சொல்லி'டென்றேன்; - அவள்
ஏறிட்டுப் பார்த்தனள் கூர்விழியாள் !
'தின்னத்தின் னச்சுவை மீறுமையா! - எங்கும்
தேடக் கிடைக்காது ! கொள்வீர்' என்றாள். 1

'நொச்சிச் சுரு'கென்றேன் 'இல்லை! இல்லை - இது
நுணலைக் கருவா' டெனச்சிரித்தாள் ;
'பச்சைநெத் திலி,காரை பத்தியப் பொடி - இது !
பார்க்கிறீரா?' என்றாள் ; ஊம் ! ஊம்' என்றேன். 2

பாளை விரிந்தது; வாய்திறந்தாள் - முத்துப்
பற்கள் விளங்கின நீர்த்துளிபோல் !
காளை இதயப் பெருங்கடலில் - என்றுங்
கட்டின்றிப் பாய்வாளை 'இந்தா' என்றாள். 3

'பிட்டுக் குதவிடும் இந்தச்சுரு - புளிப்
பெய்சாறுக் காகிடும் இக்கிழங்கான் ;
எட்டென்றும் பத்தென்றும் உண்ணுது - சேர்த்தால்
என்றைக் கடைவது இன்பம்?' என்றாள். 4

'நாளைக்குப் பின்னைக்கு வேண்டுமென்று - ஒரு
நாளும் நினைப்பது இல்லையோ நீ !
கோளர்வாழ் இந்த உலகினிலே -- சிறு
குருவிபோல் வாழுதல் நன்றோ?' என்றேன் ; 5

புன்னை சிரிப்பெனக் கன்னிசொல்வாள் - இந்தப்
பூமியில் இன்பமாய் வாழுதற்கே
என்னரும் கிள்ளையும், சுற்றமும் ஆளனும்
எனக்குண்டே ! வேறென்ன வேண்டும்? என்றாள். 6

கள்ள மறியா தவளிதய - இன்பக்
கலகலப் பான இசைமொழித் தேன்
கொள்ளை கொள்ளை, அக்கடைத் தெருவில் - ஏழைக்
குதூகல வாழ்க்கை எனக்கில்லையே ! 7

RangaRakes tamilnavarasam.com

# பிச்சைக்காரி

மண்கலம் தாங்கி ஒவ்வோர்
வாயிலில் பிச்சை கேட்பாள் ;
உண்ணுவாள் அங்கோர் வீட்டில்
உதவிய எச்சில் சோற்றை ;
மண்மீது இடிந்த வீட்டில்
துயிலுவாள் ; மழைகு ளிர்க்கோ
மண்சீய்த்துச் சுருண்டு தூங்கும்
ஞமலிபோல் வாழு வாளே ! 1

வட்டுடல் மறைக்க மீன்இல்
வலைஞனின் பறியைப் போல
ஒட்டிய வயிற்றைக் காட்டி
ஒருகாசு கேட்பாள் ; வண்டி
முட்டுகள் கடைகள் கோயில்
முன்நிற்பாள் ; ' அம்மா ...! ஐயா ...!
எட்டுநாள் ஆச்சே சோற்றை
என்கண்ணால் கண்'டென் பாளே ! 2

மோசம்செய் தேழை சோற்றை
முழுமையும் திருடும் செல்வர்
ஏசுவார் ; ' சிச்சி !' என்பர் ;
' இல்லைபோ ' என்பார் ; மற்றும்
காசுகள் சிலர்கொ டுக்க
அவள்கண்கள் காட்டு கின்ற
மாசிலாக் குளிர்மைக் கிந்த
வையகம் ஈடோ அம்மா ! 3



RangaRakes tamilnavarasam.com

கல்லிடைப் பிறந்து வானத்
துளிவரக் காணு தேங்கும்
மெல்லிளஞ் செடியைப் போலப்
பசியினுல் மெலியும் ஏழை
அல்லலை நீக்க எண்ணுர் ;
'அவரவர் ஊழாம்' என்பர் ;
நல்லதோ ? நாட்டீர் ! சொல்வீர் !
நாம்செய்யும் இந்தத் தீர்ப்பே ! 4

RangaRakes tamilnavarasam.com

# பைத்தியக்காரி

'பைத்தியக் காரி! பைத்தியக் காரி!'
அவளுக்கு மக்கள் அளித்த பெயரிது!
'பைத்தியக் காரி! பைத்தியக் காரி!'
கூக்குரல் இட்டனர் குறும்புச் சிறுவர்கள்;
தொடர்ந்தனர் அவளை; சூழ்ந்து கூவினர்:

முகத்தை நீட்டினர்; விழித்துப் பார்த்தனர்;
கையைத் தட்டிக் கத்தினர்; குதித்தார்;
கல்லால் வீசினர்; கைக்கோல் நீட்டினர்;
சிரித்தனர்; துரத்தினர்; செல்வழி மறித்தனர்;
திரும்பிப் பார்த்தாள்; சிரித்தாள்; தீய்ந்த

அரும்பு முல்லை அரும்பிற்று; நீள்விழி
உணர்வறு பார்வை ஓடும்; நிலைக்காது!
முகிலிடைப் பட்ட முழுமதி முகத்தில்
புகையிடைப் பட்ட ஆடியாம் கன்னம்!
செம்மை தேய்ந்த இதழில் சிறுநகை

தேய்ந்தது; சொற்கள் தேய்ந்து சிதறின;
வதங்கிய சிறுகொடி பதுங்கிய இடுப்பு
மழையிலா மூங்கில்; வளையிலாக் கைகள்
கண்டதை எடுத்தன; கருகிய உடலில்
பொத்தல் ஆடை தொத்திக் கிடந்தது!

சிரித்தாள்; சிரித்தாள்; குலுங்கச் சிரித்தாள்!
'பைத்திய உலகம்! பைத்திய உலகம்!'
என்றாள்; ஏதோ முணறினாள்; அழுதாள்;
சிரித்தாள் மீண்டும்; அதையே செப்பினாள்!
வெள்ளிக் குழம்பை முகிலின் விளிம்பில்

RangaRakes tamilnavarasam.com

அள்ளித் தீட்டும் அந்தி வானம்;
செக்கர் சிந்திய செந்தீச் சுடரை
மந்திகள் பார்த்து மருளும்; வழுக்கைக்
குட்டிகள் தாய்மடி கெட்டியாய்ப் பற்றும்;
சாலைத் தென்னை ஓலை தவழ்ந்து

மாலைப் போதின் மாலை நுகர்ந்து
மாலை வாழ்த்தும் மாலைத் தென்றல்;
கருங்குயில் தோப்பில் விருந்து வழங்கும்.
மேற்கில் பரிதி மெல்ல நழுவ
வீட்டை நோக்கி விரைந்து நடக்கும்

மாட்டை ஓட்டி வந்தான் குப்பன்.
பாடும் அருவி பாடத் தூண்டியது.
பாடினான் பள்ளு; தமிழ்ச்சுவை பாய்ந்தது.
குப்பன் அவ்வூர்க் குடிகளில் ஒருவன்;
முதலியார் வகுப்பு; முதல்சிறி துடையவன்;

எழுதப் படிக்க எண்ணத் தெரிந்தவன்;
மனைவி இறக்க துணைவிதேடாது
வாழ்க்கையில் சலித்து வாழ்ந்து வருபவன்;
'காலம் மக்கள் கருத்தை மாற்றும்!
புள்ளும் மாவும் உள்ளம் கிளர

எத்தனை போழ்துநாம் இப்படி வாழ்வதோ?
இல்லோர்க் கெல்லாம் இல்லென் றோது
நல்லறம் செய்ய இல்லறம் பேணக்
களைத்துவரு வேளை உளத்துமகிழ் வூட்டத்
துன்பம் விலக்கி இன்பம் நல்க

அமைச்சு போன்றே ஆய்வுரை கூறத்
திருத்திய உண்டி அருத்தி மகிழ
மனைவி வேண்டும் மனைவி வேண்டும்!'
இப்படிப் பலப்பல எண்ணி நடந்தான்.
'அண்மையோ, சேய்மையோ அணிபெறு மூதூர்?'

RangaRakes tamilnavarasam.com

என்றொரு மணிக்குரல் இசைத்தது பின்புறம்;
திரும்பிப் பார்த்தான் கரும்பு மொழியை!
கரிய மரத்தில் கடைந்த ஒளிச்சிலை!
வான்தவழ் மதியம்! தாமரைப் பொய்கை!
வண்டு தீந்தமிழ் வாளை மூங்கில்

இத்தனை இயைந்த இன்ப இருப்பிடம்!
எழுதா ஓவியம்! புனையாக் கவிதை!
இட்டடி வைத்தே எதிர்வரக் கண்டான்;
கலந்தது நெஞ்சம்! கலந்தனர் வாழ்வில்!
கன்றுங் காலியும் ஒன்றொன் றாக

வளர்ந்தது; அவர்கள் வாழ்வும் வளர்ந்தது!
வீடும் வயலும் விளைவைப் பெருக்கின;
ஆடும் மயிலவள்; அவன்கார் மேகம்!
அவள்யாழ்! அவனதை மீட்டும் மெல்விரல்!
உடல்அவள்! உயிரவன்! இயக்கமோ உயிர்மெய்!

தமிழ்அவள்; அவன்தமிழ் தந்த கலித்தொகை!
அகப்பொருள் இலக்கணம் இலக்கியம் அன்ன
வாழ்ந்தனர்; மற்றவர் வாழ வாழ்ந்தனர்!
ஒருநாள் குப்பன் உயிர்போன் றாளின்
தாழ்ந்த பிறப்பைச் சாற்றக் கேட்டான்;

'உண்மையா?' என்றான். 'உண்மை'யென் றாளவள்!
மானம் அழிந்ததாய் மனத்துள் புழுங்கினான்;
ஏசலும் பூசலும் எழுந்தொலிப் பனபோல்
எண்ணினான்; சோர்ந்தான்; எங்கோ நோக்கினான்;
சாதிப் பிரிவும் தாழ்வும் உயர்வும்

மனத்திரை முன்னர் வந்துவந் தாடின;
'கண்ணே! மணியே! விண்ணே! மழையே!
காவியச் சுவையே! ஓவிய உருவமே!
வாழ்ந்தோம் பலநாள்! மறக்கவா முடியும்?
எருமை நெய்யரி எனவாழ் மக்கள்

RangaRakes tamilnavarasam.com

சாதியைக் குலத்தைத் தாங்கிவாழ் கின்றார்;
இணைந்துநாம் வாழ இனிமுடி யாது...
மீறி வாழ்ந்தால் ஊரில் உள்ளோர்
தொல்லை தருவார்; கொல்லை விளையாது!
விலக்குவார் நம்மை; யாவையும் விலக்குவார்!

இங்குளோர் உன்னை இன்னாள் என்றே
அறியு முன்னர் அயலூர் சென்று
வாழ்ந்திரு; நானே வந்துபோ யிருப்பேன்'
என்றான் குப்பன். ஏந்திழை கலங்கினாள்;
கெஞ்சினாள்; வெதும்பினாள்; கீழ்வீழ்ந் தழுதாள்!

'நஞ்சுண் டிறப்போம்; நாமினிப் பிரியோம்;
வாழ்வோம் ஒன்றி; வருந்துயர் வரட்டும்!
உள்ளக் கலப்பே கொள்ளை இன்பமாம்!
துயரும் தொல்லையும் தூள்படச் செய்வோம்;
மூடர்க்கு அறிவை யூட்டுவோம்; அதனால்

கேடுகள் வரினும் இன்பமே கேடுகள்!
எதிர்ப்பிடை வாழ்வதே இன்பத்துள் இன்பம்!
எதிர்ப்போம்; மூட வுலகை எதிர்ப்போம்!'
என்றாள்; கெஞ்சினாள்; இருதாள் பிடித்தாள்
மறக்க முடியா மாணிக்கப் புதையல்!

மங்கையின் மாண்பும் வாய்மையும் தூய்மையும்
ஒருபுறம் இழுக்க ஒருபுறம் சாதிச்
சனிய னிழுக்கத் தவித்தான் பேதை!
பாதியில் வந்த சாதிப் பிரிவு
தலைதூக் கியதே! தாழ்ந்தான் குப்பன்!

'முடியா(து); ஊர்ப்பகை ஏற்க முடியா(து)'
என்றான் குப்பன்... எதிர்த்தாள் மங்கை!...
வெருட்டி அவளைவேர் கல்ல நினைத்தான்;
தடியைத் தூக்கி 'நடநீ' என்றான்;
மறுத்தாள்; அவனோ கறுத்துச் சீறினான்!

RangaRakes tamilnavarasam.com

தாக்கினான்; தாங்கினாள். மீண்டும் தாக்கினான்;
தாக்குந் தடியைத் தட்டிப் பறித்தாள்;
'இதுதான் ஆண்மையோ? இதுதான் ஆண்மையோ?
மலரைக் கசக்கினாய்; மலர்ச்செடி அழித்தாய்!
மற்றையோர் பேச்சை மறையென நம்பினாய்!

வஞ்சகர் வாழ வகுத்தார் சாதி;
சாதியும் குலமும் காதலுக் கேது?
மேதியும் பெற்றமும் வெவ்வே றாகும்;
மடமை யல்லவா மக்களைப் பிரித்தல்?
அன்றே இவையெலாம் ஆழ்ந்துபார்க் காமல்

அழித்தாய்; நீமட்டும் அழியா திருப்பதோ?'
என்று சீறினாள்; எடுத்தாள் தடியை!...
ஓடினான் குப்பன்; ஓடினான்...ஓடினான்...
'பைத்தியம்! பைத்தியம்! பைத்தியம்' என்றே
பலரிடம் கூறிப் பட்டம் கட்டினான்;

கட்டி வைத்துக் கொட்டி யடக்கினான்;
பைத்திய மற்ற பாவையை முற்றிய
பைத்திய மாக்கினான் பைத்தியக் காரன்!
உண்மை யுணரா உலுத்த மக்கள்
பைத்தியம் என்றே பறையடித் தார்கள்!

வஞ்சகர் வாழ மற்றவர் மீது
நெஞ்சறி பொய்யை நீட்டிக் கூறுவர்;
ஒத்துக் கேற்ற மத்தளம் இசைக்கும்
உதவாக் கரைகள், மட்டிகள்
வாழ்ந்ததால் தமிழர் வாழ்விழந் தாரே!

RangaRakes tamilnavarasam.com

# புரட்சி

கொடுமையிலே நசுக்குண்ட மக்கள் நெஞ்சம்
கொந்தளிக்க, மேன்மேலும் கொடுமை மீற,
'விடுபடுவோம், இன்றேல்நாம் வீழ்வோம்' என்று
மீளவெறி கொண்டெழுதல் புரட்சி; வாழ்க!
அடிமேலோர் அடிவீழ அமியும் ஓர்நாள்
அசைந்தாடும்; உயிருள்ள மக்கள் நெஞ்சம்
துடிதுடித்துப் பதைபதைத்து வலிய கட்டைத்
தூளாக்கத் திரண்டெழுதல் புரட்சி; வாழ்க! 1

ஆண்டானின் கீழிருந்து பசியால் வாடி
அடிபட்டு நோயுற்ற ஏழை மக்கள்
மீண்டோட வெறுத்தெழுதல் புரட்சி; நூறு
மேருமலை தடுத்தாலும் அடங்கா தப்பா!
வேண்டாத கொள்கையினைத் தாங்கித் தாங்கி
வெதுப்புற்று மனம்நொந்து வாழ்ந்த மக்கள்
ஈண்டுள்ள கொடும்பழக்க வெள்ள ஆற்றை
எதிர்த்தேற இறங்குவதே புரட்சி; வாழ்க! 2

எண்ணத்தில் எழுமாற்றம் புரட்சி! நாளும்
எழுத்தினிலும் பேச்சினிலும் அதனைக் காண்போம்;
வெண்ணாட்டுப் பெர்னாட்ஷா, பிளோட்டோ, லிங்கன்,
விரும்புலெனின், காரல்மார்க்ஸ், விட்மன், ரூசோ,
கிண்ணத்தில் தருநஞ்சை அமுதாய் உண்ட
கிளர்ச்சிவிதை சாக்ரடீஸ், இங்கர்சால், சன்யாட்சன்,
கண்ணொத்த ஈ. வெ. ரா., காந்தி, அண்ணா,
கருத்துநிறை வள்ளுவர்சொல் புரட்சி; வாழ்க! 3

RangaRakes tamilnavarasam.com

தன்மனம்போல் ஆளுங்கின்ற அரசின்வாயில்
தவிக்கின்ற பெருமக்கள் பொறுமை மீற
இன்னுயிரைத் துரும்பாக எண்ணி யொன்ருய்
எழுந்தெதிர்த்துக் கோல்சாய்த்தல் புரட்சி; வாழ்க!
என்னுயிரே! தமிழ்நாடே! புரட்சி யின்றி
எந்நாளும் நீவாழ ஒன்று சொல்வேன்:
மன்னுபசி கீழ்மேலாம் கொடுமை நீக்கு;
வளம்பெருக்கக் கட்டாயத் தொழிலுண் டாக்கே! 4

# மே நாள்

பெயலெலாம் பொய்த்த போதும்,
பெருநிலை வறண்ட போதும்
வயலெலாம் உழவன் தோளால்
விளைத்தனன்; வளப்பம் சேர்த்தான்;
செயலெலாம் மறந்தார், அன்னோன்
செயலினில் வாழும் செல்வர்!
புயல்தோன்ற இதுபோ தாதா?
மேதினப் புரட்சி வாழ்க! 1

பலபொருள் விளைத்தான் கூலி
இரவெலாம் பகலைப் போல;
உலையினில், தொழிற்கூ டத்தில்
உழைத்தனன்; தேய்ந்தான்; அன்னோன்
இலக்கியத் தோளால் வாழ்ந்தோர்
கொழுத்தனர்; ஏய்த்தே வந்தார்;
மலையெனில் என்னும்? தாங்கா
விடில்மலை பிளந்தே போகும்! 2

படைபலம், நிலைமைக் கேற்பப்
பக்கத்து மேளம் கொட்டும்
நடைபலம் உடைய வேதக்
குருக்களை நம்பி நம்பித்
தடைபல விதித்தான் வேந்தன்;
வறுமையா தடைக்க டங்கும்?
உடைமையைப் பொதுவாய்ச் செய்த
மேவிழா உயர்க! வாழ்க!! 3

RangaRakes tamilnavarasam.com

# மனமே இல்லை !

கல்வீடு தோட்டம் கொட்டில்
கண்கவர் மாடி வீடு
செல்வர்கள் ஆடப் பாடச்
சித்திர மாடங் கட்டி
அல்பகல் உழைக்கும் கொத்தன்
மழைகுளிர் ஒண்ட ஒன்றும்
இல்லையே ! இதனைத் தீட்டப்
புலவரீர், மனமே இல்லை ! 1

ஒருசிலர் மாடி வீட்டில்
உண்டாடிக் களித்தி ருக்க
ஒருசிலர் அவர்கள் வீட்டுக்
கோடியில் உடையே இன்றித்
தெருவினில் கிடைத்த மிச்சில்
தின்றுடல் வளர்க்கக் கண்டும்
பெரும்புல வர்கட் கேனோ
பேச்சில்லை; மனமே இல்லை ! 2

வான்தரு வளத்தை ஏழை
மக்களின் உழைப்பை எல்லாம்
நான்சொந்தக் கார னென்று
நண்ணிடும் பெரிய செல்வன்
தானய்யா கள்வ னென்று
மக்கள்முன் சாற்று தற்கிங்கு
ஏனோநீர் தயங்கு கின்றீர் ?
புலவரே ! மனமே இல்லை ! 3

RangaRakes tamilnavarasam.com

இளைப்பினை மாற்ற ஊரில்
கையேந்தி இரந்த பிச்சை
உளத்தினில் சிறும கிழ்வை
ஊட்டிடக் கஞ்சி காய்ச்சிக்
குளக்கரை மரத்தின் கீழே
குடித்திடும் குறவர் வாழ்வின்
தளர்ச்சியைப் புலவீர் ! நீக்கத்
தயக்கமேன் ? மனமே இல்லை ! 4

மழையினில் குளிரில் காற்றில்
வயலெலாம் உழுது வெட்டித்
தழைமண்டி நெல்வி ளைத்துப்
பசிநோயைத் தணிக்கும் ஏழை
உழவனுக் கிந்த நாட்டில்
உணவில்லை; புலவீர் ! உங்கள்
எழுத்தினில் இவர்கட் கெல்லாம்
இடமில்லை; மனமே-இல்லை! 5

கன்னியின் சிரிப்பும், கெண்டைக்
கடைக்கண்ணின் வீச்சும், வான
மின்னலின் இடையும், சாய்ந்த
மெல்லியல் நடையும் உங்கள்
நன்னூலுக் கழகு செய்யும் !
நாயைப்போல் ஒருசி லர்கள்
இன்னலில் வாடக் கண்டும்
எழுதிட மனமே இல்லை ! 6

தமிழ்மறை போற்று கின்றீர்;
சங்கநூல் விளக்கு கின்றீர்;
தமிழ்மொழி எங்கள் ஈசன்
தந்ததொன் மொழியென் கின்றீர்;

RangaRakes tamilnavarasam.com

தமிழ்மொழி தொலைக்க வந்த
இந்தியை வெட்டிச் சாய்க்கத்
தமிழ்ப்புல வீர்காள் ! ஏனோ
தயங்குறீர் ? மனமே இல்லை ! 7

தமிழரே திராவி டத்தில்
தனியர சாண்டி ருக்கத்
தமிழர்கள் வடவ ருக்குத்
தலைசாய்த்து வாழ்வ தற்குத்
தமிழரில் ஒருசி லர்கள்
'சரிசரி' போடக் கண்டும்
தமிழ்க்கொடு வாளெ டுக்கத்
தயக்கமேன் ? மனமே இல்லை ! 8

RangaRakes tamilnavarasam.com

# ஒன்றே போதும்!

அடிமையின் அடிமையாய்ப் பாகூரில் சிலநாள்
அரசினரின் பணியேற்று நானிருக்கும் நாளில்,
துடிதுடித்து நாக்குழற ஒருபறைச்சி வந்தாள்;
'முள்ளிலவம் மரமுண்டோ? சொல்லுங்கள்' என்றாள்;
கடைக்கண்கள் முத்துமுத்தாய் நீர்சொட்ட நின்றாள்;
கைபிசைந்து வான்நோக்கி நெடுமூச்சு விட்டாள்!
'இடிவீழ்ந்த தென்னையைப்போல் இருக்கின்றாய் நீதான்!
என உனக்(கு)?' எனக்கேட்டேன்; அவள்சொன்னாள்;
சொல்வேன்: 1

நேற்றாண்டை வேலைக்குப் போகாமல் நோயால்
நின்றுவிட்டான் என்பறையன்; படுத்திருந்தான் வீட்டில்;
'சோற்றுக்கு வழியற்ற அடிமைகளுக் கிங்கு
நோயென்ன? தூக்கமென்ன?' என்றதட்டி ஆண்டை,
'நாற்றுக்கு நீரிறைக்கப் போ' என்றார்; நின்றான்;
'நட' என்று கோலெடுத்தார்; 'தலைசுற்று' தென்றான்;
'கூற்றொத்த நெஞ்சினர்கள் ஆண்டைகளின் கூட்டம்!
கூலிக்கு வாயேது? செல்!' என்றேன்; போனான்! 2

தடுமாறி நீர்இறைக்க வயலுக்குச் சென்றான்
தன்னாண்டை பேச்சிற்கும் வயிற்றுக்கும் அஞ்சி;
உடல்காய்ச்ச லோடேற்றம் மிதித்திட்டான்; தவறி
ஒடிந்துவிழு நெடுமரம்போல் கிணற்றோரம் வீழ்ந்தான்;
'ஒடிந்ததுகால்!' என்றோடி ஆண்டையிடம் சொன்னேன்;
'ஒன்றுமில்லை! பாசாங்கு! போடிப்போ!' என்றார்;
'துடிதுடிக்கு தென்னெஞ்சம்; எங்களுக்கோர் உதவி
மரமெங்கே? சொல்லுங்க!' எனக்கதறிக் கேட்டாள்! 3

RangaRakes tamilnavarasam.com

தலைநோக்கா டென்றவுடன் ஓடோடி வந்து
தலைதாங்க உடல்தாங்க ஆள்கோடி உண்டு;
விலைகொடுத்து மேல்நாட்டு மருந்துகளை வாங்க
மேலான மருத்துவரை நொடிப்பொழுதில் கூவச்
செலவிற்குப் பணமுண்டு; யார்தந்த சொத்து ?
திருடியுண்டு பிழைக்கின்ற ஆண்டைகளின் கூட்டம்
நிலைகெட்டுப் போவதற்குப் பொதுவுடைமை வேண்டும் !
ஈதொன்றே போதாதோ ? நீசொல்லேன் தம்பி! 4

RangaRakes tamilnavarasam.com

# இதுதானா செய்வார்?

காலையில் நானொரு சாலையி னோரம்
உலாவச் சென்றேன்; ஊரில் உள்ள
குளத்தில் முறுவற் றாமரைக் குமரிகள்
'வா'வென் றென்னை மலர்த்தலை அசைத்துக்
கூப்பிட் டார்கள்; குறும்புக் காரிகள்!

சென்றேன்; என்னைச் சிரித்துவர வேற்றனர்;
உட்கார்ந்தேன்;
துறைக்கல் லொன்று கண்ணீர் சிந்தி
அழுதுகொண் டிருந்தது அக்குளக் கரையில்;
'இன்றோ திருநாள்! பொங்கற் பெருநாள்!

செந்நெல் அரிசியும் தீம்பாகும் கூட்டி
மக்க ளெல்லாம் உண்டு மகிழ்ச்சியில்
பொங்கிக் குதிக்கும் பொங்கல் நன்னாளில்
உனக்கென்ன வந்தது? சொல்'லென் றேன்நான்!
'எண்ணெய் மஞ்சள் இளநீர் முழுக்காடிப்

புத்தாடை பூண்டு பூப்பலி ஏற்றுச்
சிரித்ததோ நிற்கும் சிலையும் நானும்
மலையில் பிறந்தோம்! ஆனால், மாக்கள்
எங்கள் நிலையை இவ்வா றாக்கினர்?
முறையோ?' என்றது; அதற்கு நானோ,

'தங்கட் குள்ளே சாதியுள் சாதியும்
உயர்வும் தாழ்வும் ஏற்று வாழும்
மக்கள் இதுதானா செய்வார்?
இன்னமும் செய்வார்' என்று நடந்தேனே!

RangaRakes tamilnavarasam.com

# தீர்ப்புச் சொல்வீர்!

கிளையினில் இணைந்து வாழும்
கிளி, குயில், வீட்டில் நீங்கள்
வளர்த்திடுங் கோழி, முல்லை
மகிழ்ச்சியை நெஞ்சில் தூண்டும்;
உளத்தினில் பொங்கும் காதல்
உணர்ச்சி, ஆண் பெண்ணுக் கொன்றே!
இளைத்தவர் பெண்கள் என்றா
விதவையர்க் கின்னல் செய்தீர்? 1

மூத்தவள் மாள நீங்கள்
மறுமணம் முடிக்கின் றீர்கள்;
ஆத்திரம் கொள்கின் றீர்கள்;
அறுத்தவள் மணப்பேச் சென்றால்
சாத்திரம் காட்டு கின்றீர்;
தலையெழுத் தென்கின் றீர்கள்;
ஆத்தமுங் கிலைப்போல் நாட்டில்
விதவையர் அழிதல் நன்றா? 2

தலையினை வாரி மஞ்சள்
முகமெலாம் பூசி வான
நிலவுபோல் சாந்துப் பொட்டு
நெற்றியில் இட்டே இன்று
கலகலப் போடு வாழும்
கன்னியர் கூட்டம் காணச்.
சிலைகளா நாங்கள்? நாட்டீர்!
சிந்தித்துத் தீர்ப்புச் சொல்வீர்! 3



RangaRakes tamilnavarasam.com

விடுதலை விரும்பு கின்றீர் !
ஆண்கட்கு மட்டுந் தானா ?
மடுவினில் வீழ்த்தி மீளும்
வழியினைத் தடுப்பார் போலத்
தடுக்கின்றீர் , விதவைப் பெண்கள்
தப்பிடும் வழிதான் என்னே ?
நடுநிலை தாங்கி, நாட்டீர்!
நல்லதோர் தீர்ப்புச் சொல்வீர் ! 4

RangaRakes tamilnavarasam.com

# ஏன் தயக்கம் ?

ஆணிறந்தால் பெண்மற்றோர் ஆளன் அடைவதற்கு
வீண்வாதம் பேசி விதிர்விதிர்ப்பார் — நாணமின்றிப்
பெண்ணிறக்க வேறுமணம் பெற்றிடுதல் நீதியென்பார் ;
எண்ணில் இவரெதற்(கு) ஈடு ? 1

உன்சோட்டுப் பெண்களெலாம் உற்ற துணையோடே
இன்புற்று வாழுகின்றார் இவ்வுலகில் – என்கிளியே !
ஆணுக் கொருநீதி ஆக்கியதா லுன்வாழ்வை
வீணாய்க் கழிப்பதுவோ ? விள் ! 2

உன்தகப்பன் தங்கை உடன்பிறந்தான் வாழ்க்கையில்
இன்னிணையில் சேர்ந்தே இருக்கின்றார் – உன்மனது
கைம்பெண்நீ வேண்டாம் களிப்பெனுமோ சற்றுநினை
நம்முரிமை நாடுவது நாம். 3

மஞ்சள் குளித்து மலர்சூடிப் பொட்டிட்டுக்
கஞ்சவிழி தீட்டிக் களிப்படைய – வஞ்சி
துடிதுடித்தா லாமோ ? துணிந்தெடுநீ இன்றே
மடமை இனமழிக்கும் வாள். 4

எதிர்ப்பட்டால் குற்றமும் ஏழை விதவைக்
கதிர்ப்பட்டால் குற்றமும் காண்பார் – மிதித்துலகை
நீன்போ லெதிர்த்தேறு! மீளும் வகையிதுதான்!
ஏன் தயக்கம் ? இன்னே எழு ! 5

RangaRakes tamilnavarasam.com

# இவர்களே திருடர் !

படுக்கையில் கிடந்தேன் ; பனிக்காற்றுக் கதவின்
இடுக்கால் புகுந்தெனை எழுப்பிற்று ; விழித்தேன் ;
மாடியில் முல்லை மலர்சிரித் தழைத்தது ;
பாடிற்று வண்டு ; பாட்டையைத் துழவி
ஓடின விழிகள் ; உயர்ந்தது ஞாயிறு ;
செத்த எலியொன்று தெருவில் கிடந்தது !
கத்தின காக்கைகள் ; கொத்தின அதனை !
என்றன் எண்ணக் குதிரைகள் எங்கோ
சென்றன ; திரும்பின ; தெருவிடை நின்றன !
உணவைத் திருடிய எலியை வீட்டார்
பிணமாய்ச் செய்தனர் ; பேதைமை ! பேதைமை !
அணையாப் பசிநோய் யார்க்கும் பொதுவாம் !
உணர்வும் பொதுவாம் ; ஊக்கமும் பொதுவாம் !
சாக்கா டொன்றே இவையெலாம் தவிர்ப்பது.
மற்றோர் உழைப்பை மடக்கிப் பெருக்கித்
தமதென் றெவர்க்கும் சாற்றித் திரிவோர்
திருட்டை விளைப்பவர் ! இவர்களே திருடர் !
இவர்களைப் போன்ற எலிகளும் உளவே !
பூனை இல் வீட்டில் பொருளை இரவில்
சிறிதே திருடும் வீட்டுச் சிறுஎலி !
நாட்டைத் திருடி நலிவைப் பெருக்கி
உயர்வு தாழ்வை உண்டாக்கித் திரியும்
நாட்டெலி யல்லவோ நாம்கொல்ல வேண்டும் !
ஆவன செய்வ தறியாது
வீட்டெலி கொல்லல் வீண் ! வீண் ! வீணே !

RangaRakes tamilnavarasam.com

# காந்தி

காந்தியை மறவாதே ! – நமதருங்
காந்தியை மறவாதே !.

சாந்தம் அகிம்சை
தன்னல மற்றசெய்கை
ஏந்தி மக்களுக்காக
யாண்டும் உழைத்த செம்மல் ! காந்தி

சட்ட மறுப்புச் செய்து
தடியடி உடலில் தாங்கிக்
கட்டுண்டு கிடந்த மக்கள்
கால்கை விலங்கொடித்த காந்தி

குண்டு மருந்து மின்றிக்
கூரிய வாளு மின்றிச்
சண்டை சிறிது மின்றி
விடுதலை வாங்கித் தந்த காந்தி

உதைபட்டுச் சிறைப்பட்டு
உண்ணு விரதமேற்று
வதைபட்ட மக்கள்மீள
விடுதலை வாங்கித் தந்த காந்தி

கோடரிக் காம்பு கோட்சே
கொலைசெய்த போதும் தோன்றல்
தேடிய தெல்லாம் நாடு
சிறப்புறும் வழியே ! வாழ்க ! காந்தி

RangaRakes tamilnavarasam.com

# பாரதி

பாரதிநாள் இன்றடா ?
பாட்டிசைத்து ஆடடா !

கற்றகல்வி காட்ட வென்று
கவிபுனைந்த தமிழ்மொழி
கண்டுகேட்டுப் பொருள் விளங்காக்
கசப்புக் கொண்ட நாட்களில்
சொற்றொடரில் இனிமை தந்தான்
சுப்ர மண்ய பாரதி ;
தூயன்வாழ்க ! வாழ்க ! வென்று
சொல்லிச் சொல்லி ஆடடா ! பாரதி

ஒருமனிதன் உணவேயின்றி
உயிர்துடிக்கக் கண்டிடில்
உருக்குலைப்போம் உலகந்தன்னை
ஒன்றுகூடும் என்றவன்
அருமைப் பாடல் தமிழகத்தில்
அச்சம் போக்கி வருகுது !
அண்டமும் கிழித்தெறியும்
ஆற்றல்நமக் கூட்டுது ! பாரதி

நாட்டை யாளும் உரிமை சொந்த
நாட்டினருக் கல்லவோ ?
நமது பாட்டன் சொத்தடா
நமது நாடு தமிழனே !
நாட்டில் வேறு ஆட்சிசெய்து
நம்மை யாள்வ தேதென
நாளும்பாடி அறிவளித்தோன்
நமது பாரதி! ஆடடா ! பாரதி

RangaRakes tamilnavarasam.com

வறுமைநோய் பிடித்து வீட்டில்
மனைவி மக்கள் வாட்டிட
வாட்டமோடு இந்தியத்தாய்
மனத்தில் காட்சி தந்திடச்
சிறுமை நீக்கிக் களிப்பினோடு
தேசத் தொண்டு செய்தவன்
சீர்த்தி இன்று மனத்தில் எண்ணில்
திரண்டுதோ ளுயருது ! பாரதி

கார்மயில்போல் தமிழர் இங்குக்
களித்திருந்த நாட்கள்போய்க்
கண்ணிருண்டு அடிமை வாழ்வில்
கதிகலங்கி நின்றிடத்
தார்மொழியால் உணர்வளித்துத்
தலைநிமிரச் செய்தவன்
தமிழ்க்கவிகள் வாழ்கவென்று
தலைநிமிர்த்தி ஆடடா ! பாரதி

RangaRakes tamilnavarasam.com

# மறைமலையடிகள்

கற்றறிந்த பெரும்புலவர் வடமொ ழிக்குக்
கால்வருடிக் கிடந்திட்ட மடமை கண்டு
நற்றமிழைத் தனித்தமிழை எழுதிப் பேசி
நல்லுணர்வை வளர்த்திட்டீர்! விழிப்பைச் சேர்த்தீர்!
பெற்றெடுத்த தமிழ்நாட்டின் அறத்தைப் பண்பை,
பெரும்புகழை நிலைநிறுத்தி வைத்தீர்! கண்கள்
பெற்றிழந்தார் போலானோம்; பிரிந்தோம் உம்மை!
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ? 1

அயல்நாட்டான் ஆட்சியிலும் அதற்குப் பின்னும்
அருந்தமிழால் கொழுத்திட்டோர் ஆள வந்தோர்
மயல்கொண்டார் வடமொழிமேல்; மறந்தார் கன்னி
வளத்தமிழைத் தாய்மொழியை; அன்னோ ருக்குக்
கயல்புலிவில் திறங்காட்டிப் பகையை வீழ்த்திக்
கனிதமிழை வாழ்வித்தீர்! பிரிந்தோம் உம்மை!
இயலிசைகூத் தின்உருவே! தமிழே! எங்கள்
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ?

ஆழ்ந்தகருத் துரையாலே மக்கள் நெஞ்சை
அள்ளினீர்; ஆன்றோரை விளக்கித் தந்தீர்;
சூழ்ந்தஇருள் திரைகிழித்தீர்; சோர்வே இன்றித்
தோன்றியதை அஞ்சாமல் உரைத்தீர்; நாட்டைப்
பாழ்செய்த சாதியினை வீழ்த்தச் சைவப்
பாட்டையே சிறந்ததென்றீர்; யாண்டு நூறு
வாழ்ந்திருக்க இயலுமென்றீர்; வழியு ரைத்தீர்;
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ? 3

RangaRakes tamilnavarasam.com

வானத்தை அழகுசெய்த நிலவு பின்னர்
மறைந்தோடிப் போவதுண்டு; வயலும் ஓர்நாள்
காளுருய் உருமாறி அழித லுண்டு;
கவின்செய்த விடிகாலை மறைத லுண்டு;
தேன்துளிர்த்த புதுமுல்லை உதிர்த லுண்டு;
கடலலைகள் கரைமோதிச் சிதறல் உண்டே!
ஆனாலும் தமிழ்ப்பெரியோய்! அடாதும் சாவே!
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ? 4

# திரு. வி. க.

தொழிலாளர் அன்னை ; பெண்கள்
உயர்விற்கே உழைக்குந் தோழி ;
செழுந்தமிழ்ப் பெரியார் ; தென்றல் ;
தீஞ்சுவைப் பேச்சின் தந்தை ;
விழிநிகர் திராவி டத்தின்
விடுதலை விழைந்த வீரர் ;
மொழியொப்பச் செயலைச் செய்த
திரு. வி. க. முதியோன் வாழ்க !

RangaRakes tamilnavarasam.com

# பேராசிரியர் சுந்தரனார்

தீந்தமிழ்ச் செல்வம்! திராவிடர் நன்னூல் 'மனோன்மணீயம்'
ஈந்து, தமிழின் சிறப்பினை ஈந்து, தமிழ்க்கிளையாம்
ஆந்திரம் கன்னடம் ஆளம் துளுவம் அவற்றிலெலாம்
வேந்தாம் தமிழென் றுரைத்தவர் நம்மரும் சுந்தரமே! 1

'உள்ளம் இனிக்கும்! இனிக்கும் உடலுயிர்! தேன்கலந்த
வள்ளுவன் பாடல் மறுவற ஓதி உணர்ந்தவர்கள்
கொள்ளார் தமிழில் புகுந்த மநுநூல்' எனஉரைத்த
வள்ளல் கவிக்கடல் சுந்தரம் நீள்புகழ் வாழியவே! 2

கன்னித் தமிழைத் தமிழின் வளத்தைப் படையெடுத்த
புன்மொழி ஆரியம் பேச்சற் றொழிந்தது; நந்தமிழே!
எந்நிலை ஏற்றும் இளமை குறையா திருக்குதென்று
சொன்னார் கவிக்கடல் சுந்தரம் நீள்புகழ் வாழியவே! 3

'நம்மின மூச்சும் உயிரும் உடலும் திராவிடமாம்!
இம்மியும் சோரோம்; கலங்கோம்; பெறுவோம்' எனவுரைக்கும்
செம்மலாம் அண்ணா அவர்கள் குறிக்கோள் செழிக்குமுன்னே
தம்மினம் வாழ நினைத்தவர் நீள்புகழ் வாழியவே! 4

தீந்தமிழ் வாழ்த்தித் திராவிடம் வாழ்த்தித் திராவிடத்தைச்
சூழ்ந்த பகையாம் வடவர் தொடர்பைத் துணிந்திடித்து
வேந்தர் மடியில் வளர்ந்த தமிழின் விருதுநாட்டி
மாய்ந்தார்நம் சுந்தரச் செம்மல்! அவர்புகழ் வாழியவே! 5

RangaRakes tamilnavarasam.com

# கவிமணி

'செவியேங்க, மனமேங்க, தீந்தமிழும் ஏங்க,
திருநாட்டார் உளமேங்க, கண்ணேங்க இந்தப்
புவிமறந்தாய் ; உயிர்நீத்தாய் ; ஆனாலும் உன்றன்
பொற்குவையாம் அழகுதமிழ்க் கவிதைமணிக் கொத்தைச்
செவிமறவா ; உளம்மறவா ; அழியாத சொத்தாம் !
சிந்தைக்கு நல்லுணவு கவிதையன்றி உண்டோ?
கவிமணியே ! நற்றமிழோய் ! திருநாகர் கோவில்
கண்மணியே ! உன்பாடல் ஒருநாளும் சாகா ! 1

' பாட்டிற்கிங் கொருபுலவன் பாரதியே ?' என்ற
பண்ணெழுப்பி வைத்தவாய் மண்ணுக்குள் அந்தோ !
கேட்டாலும் நினைத்தாலும் நெஞ்சுடைந்து போகும் !
கிடைக்காத பெருஞ்செல்வம் 'உமர்கயாம்' பாடல் !
தீட்டாத ஓவியத்தைச் சொல்லடுக்கு மையால்
தீட்டிநின்றாய் ; விருந்தளித்தாய் ! இனியெங்கே போவோம் ?
நாட்டிற்கோ உன்மறைவு பெரும்இழப்பு ; நாஞ்சில்
கவிமணியே ! உன்பாடல் ஒருநாளும் சாகா ! 2

சாக்காடு மறுமலர்ச்சி என்றாலும் கன்னித்
தமிழ்மகனே ! உன்பிரிவு உளத்துக்கோர் ஈட்டி !
பூக்காட்டுத் தமிழ்க்காவில் உள்ளநறுந் தேனைச்
சுவைகூட்டிப் புதுமுறையில் மக்கட்குத் தந்தாய் !
வேக்காட்டை யார்தணிப்பார் ? சீர்திருத்தப் புத்தன்
விளக்கத்தை இனியிங்கே யார்உரைக்கப் போவார் ?
பாக்காட்டுக் கவிமணியே ! தமிழர்பெருஞ் சொத்தே !
பரந்தமன விரிவுடையோய் ! சாகாதுன் பாட்டே ! 3

RangaRakes tamilnavarasam.com

# தமிழ்த் தாய்

ஓவியத்தில் மிளிரழகின்
உயிரெங்கள் தமிழ்த்தாய் !
காவியப்பூஞ் சோலைதரு
கனிஎங்கள் தமிழ்த்தாய்! 1

கற்சிலையின் வழியழகுக்
கலைஎங்கள் தமிழ்த்தாய் !
விற்பிடித்த காளைநெஞ்சின்
வீரம்எங்கள் தமிழ்த்தாய் ! 2

உள்ளமள்ளுந் தொகைப்பாட்டின்
உயிரெங்கள் தமிழ்த்தாய் !
வள்ளுவனை உலகளித்த
மணிவயிற்றாள் தமிழ்த்தாய் ! 3

சித்திரைமா இளந்தளிரின்
செவ்விதழாள் தமிழ்த்தாய் !
பத்தினிப்பெண் கண்ணகியைப்
பயந்தவளெந் தமிழ்த்தாய் ! 4

அன்புமலர் சூட்டியவள்
அடிபணிவாய் தமிழா !
துன்பமோடு நெஞ்சில்வீரம்
துளிர்த்தடிமை போமே ! 5

RangaRakes tamilnavarasam.com

# தமிழ் வாழ்க!

## எடுப்பு

தமிழைக் காப்போம் நாம்
தாயடிமை போமே!
தாயடிமை போமே! தமிழைக்

## மேல் எடுப்பு

பூமியினில் தனித்தமி ழாலே
பூரித்திடும் நம்மிரு தோளே!
நாமினிமேல் அஞ்சுதல் இலமே!
நாம்நமையே ஆண்டிடு வோமே!

ஏமம் நெஞ்சில் துள்ள
ஏற்றமடை வோமே!
ஏற்றமடை வோமே! தமிழைக்

## அமைதி

ஆரியத்தின் கலப்பத னாலே
அடங்கியதே தமிழ்புவி மேலே!
ஓர்ந்துநாம் எல்லோரும்
உழைப்போம் தமிழ்க்காக!
உழைப்போம் தமிழ்க்காக! தமிழைக்

தாய் சேயைக் காப்பது போலே
தாய் மொழியைக் காத்திடு வோமே !

ஏய்த்த காலம் போச்சே !
இனிமேல் செல்லாதே !
இனிமேல் செல்லாதே ! தமிழைக்

வான் தவழ் பேரொளி போலே
வாடாமொழி தமிழே! வாழ்க !

வாழி தமிழ்த் திருநாடு !
வாழி நலம் சூழ்ந்தே !
வாழி நலம் சூழ்ந்தே ! தமிழைக்

RangaRakes tamilnavarasam.com

# எங்கள் தமிழ்

**மாண்டு** **அடதாளம்**

தமிழெங்கள் உயிருட லாமே என்றும்
தலைதாழ்த்திக் கைகூப்பி வணங்குவம் நாமே;
அமிழ்தின் இனியசுவை தமிழெனில் பொய்யோ?
அழிவை நினைக்கவுயிர் ஒடுங்குதே அய்யோ!

வாய்விட்டுத் தாய்பேச நாம்கற்ற மழலை
வஞ்சியின் தோள்சேர்த்து நாம்கொஞ்சும் குதலை
செய்கிளை கேளொடு வாழ்வினில் என்றும்
தெளிவதும் கேட்பதும் மொழிவதும் தமிழே!

அடிமை மலைபிளக்கும் உளிஎங்கள் தமிழே!
ஆண்மைக்கும் வலிமைக்கும் உரமெங்கள் தமிழே!
மடமை இருள்கிழிக்கும் மதிஎங்கள் தமிழே!
வற்றாத தேனூற்றாம் அறிவிற்குத் தமிழே!

தமிழர்க்குத் தமிழெனில் இன்பம்! இன்பம்!
சழக்கர்க்கோ தமிழெனில் துன்பம்! துன்பம்!
தமிழர்க்குத் தமிழிசை இன்பம்! இன்பம்!
தமிழர்க்குத் தமிழ்மொழி உடலுயிர் என்றும்!

RangaRakes tamilnavarasam.com

# தமிழ் நாடு

என்னுயிர் நாடு என் தமிழ் நாடு
என்றவு டன்தோள் உயர்ந்திடும் பாடு!
அன்னையும் அன்னையும் அன்னையும் வாழ்ந்த
அழகிய நாடு! அறத்தமிழ் நாடு!
தன்னிக ரில்லாக் காவிரி நாடு!
தமிழ்மறை கண்ட தனித்தமிழ் நாடு!
முன்னவர் ஆய்ந்த கலைசெறி நாடு!
முத்து விளியா மறவரின் நாடு! 1

ஆர்கடல் முத்தும் அகிலும் நெல்லும்
அலைகடல் தாண்டி வழங்கிய நாடு!
வார்குழல் மாதர் கற்பணி பூண்டு
வாழைப் பழமொழி பயின்றதிந் நாடு!
ஓர்குழு வாக வேற்றுமை அற்றிங்(கு)
ஒன்றிநம் மக்கள் வாழ்ந்ததிந் நாடு!
கார்முகில் தவழும் கவின்மிகு நாடு!
கடம்புலிப் பொம்மன் கருவுற்ற நாடு! 2

பாரினில் தொன்மை வாய்ந்ததிந் நாடு!
பலபல துறையில் சிறந்ததிந் நாடு!
ஆரியர் நெடும்படை வென்றதிந் நாடு!
ஆடலும் பாடலும் வளர்த்ததிந் நாடு!
சீரிய பண்பு நிறைந்ததிந் நாடு!
செந்தமிழ் மொழிவளன் செறிந்ததிந் நாடு!
ஓரடி வெம்பட உயிர்விட்ட நாடு!
ஒடுங்கியே பூனைபோல் இருப்பது கேடு! 3



RangaRakes tamilnavarasam.com

காரியும் பாரியும் வழங்கிய நாடு !
கலம்பல செலுத்தி ஆண்டதிந் நாடு !
போர்ப்பறை கேட்டுப் பூரித்த நாடு !
புறமகம் தந்து பொலிந்ததிந் நாடு !
பாரதி தாசன் புரட்சிசெய் நாடு !
பகுத்தறி வற்றிங் கிருப்பது கேடு !
சேருவோம் தமிழர்கள் யாவரும் ஒன்றே !
தெருவெலாம் விடுதலை முழக்குவோம் இன்றே! 4

RangaRakes tamilnavarasam.com

# தாய் நாடு

அன்னை வயிற்றைக் கழித்து வெளிவந்த
அவ்வறை யுன்றன் தாய்நாடே!
சின்ன விழியினால் நோக்கிஉன் அன்னைக்குச்
செய்த சிறுநகை தாய்நாடே! 1

காலை யுதைக்கக் கவிழ்ந்து தலைதூக்கக்
கற்ற இடமுன்றன் தாய்நாடே!
ஆலை எருதென நீசுழல் தாழம்பாய்
ஆடிடு ஏணைஉன் தாய்நாடே! 2

வாரித் தழுவிக் கொஞ்சும் மொழிகேட்டு
வாயைக் குழைத்ததும் தாய்நாடே!
ஓரடி யூன்றிமற் றோரடி தூக்க
உதவிய கைகளுன் தாய் நாடே! 3

சிற்றில் சமைத்துச் சோறு கறிசெய்த
தெருவும் மணலுமுன் தாய்நாடே!
நெற்றி சுருக்கி அழுதிட உன்னன்னை
காட்டிய நிலவுமுன் தாய்நாடே! 4

பலகலை, பனுவல் பழுதற ஊட்டும்அப்
பள்ளியு முன்றன் தாய்நாடே!
கலகல வாணகை கருக்கிடும் இளமீசை
காளை நடையுமுன் தாய்நாடே! 5

RangaRakes tamilnavarasam.com

கள்ள விழியினால் மெல்லஉன் உள்ளத்தே
காதலைச் சேர்த்தவள் தாய்நாடே !
வெள்ளம் கலந்த வெள்ளமாய் நீகாதல்
வெளியுறு சோலையுன் தமிழ்நாடே ! 6

உலுர்கழை ஆக்கினாள் ஈரமிலாள் அந்த
ஓவியப் பேரெழில் தாய்நாடே !
அலுத்த மனத்திற் காறுதல் காட்டுவான்
அழகும் இசையும்உன் தாய்நாடே ! 7

நீசெய வேண்டிய சிற்சில உண்டடா
நின்னுயி ராம்தமிழ் நாட்டினிற்கே !
தீவளி நீர்நிலம் கூடி எதிர்த்தாலும்
செந்தமிழ் நாட்டிற்குத் தொண்டு செய்யே ! 8

RangaRakes tamilnavarasam.com

# தமிழர் ஆட்சி

தமிழர் நாட்டைத் தமிழ ராளத்
தக்க காலம் வந்தது
தைரியங்கொண் டேவிரைந்து
தலைநிமிர்ந்து நில்லடா! 1

விருந்தி லன்று தமிழிகழ்ந்த
விசயன் நா அறுத்திட
வீறுகொண் டெழுந்த சேரன்
வில்லொடிந்து போனதோ? 2

மறமழித்து அறம்வளர்த்து
மாண்பு பெற்ற தமிழர்நாம்!
மாட்சியோடு ஆட்சி செய்வோம்
மார்புயர்த்தி நில்லடா! 3

RangaRakes tamilnavarasam.com

# எழுத்தாளன்

வானிடைத் தோன்றும் வண்ணமெலாம் – அவன்
மண்ணிடைச் சொல்லால் சித்திரிப்பான் !
தானே தன்னை யாண்டிடுவான் ! – பிறர்
தன்னை யாள வெருண்டிடுவான் ! 1

காற்று நுழையா விடந்தனிலும் – அவன்
கருத்தை யோட்டிக் கதைசொல்வான் !
கூற்றுவ னேவந் தெதிர்த்திடினும் – கொண்ட
கொள்கை வழுவான் எழுத்தாளன் ! 2

கல்லையும் நம்மெதிர் பேசவைப்பான் ! – வீசும்
காற்றாய் உடற்கின்பம் தந்திடுவான் !
புல்லையும் பொன்னையும் ஒன்றாக்கிக் – கண்முன்
புதுமை செய்வான் எழுத்தாளன் ! 3

காட்டு விலங்கவன் சுற்றமென்பான் ! – கண்
காட்சிப் பொருளவன் பாசமென்பான் !
கூட்டி லதிகாலை பாட்டிசைக்கும் – சிறு
குருவிக் குலத்திற் கடிமை என்பான் ! 4

புணர்ச்சிப் புதுஇன்பம் போலறிவில் – என்றும்
பொங்கிடத் தன்னிதயம் வடித்தே
உணர்ச்சிக் கவிச்சவுக் கால்உலகைத் – தட்டி
ஒழுங்குடன் ஊக்கும் பாகனவன் ! 5

காலை மகிழ்வோடு பாட்டிசைக்கும் – சற்றும்
கவலை இல்லாவானம் பாடியவன் !
ஓலை எடுத்துக் கவிதைபொறித் – திந்த
ஊருக் குழைக்கும் பிள்ளையாண்டான் ! 6

RangaRakes tamilnavarasam.com

# கடல்

கண்டுகொண்டேன் நீலநிறக் கடலே! உன்றன்
கடுந்துயரம் வாய்விட்டுச் சொலவோ? காதல்
கொண்டவனைப் பிரிந்ததினால் வளைஇழந்தாய்;
குளுமைவிழி நீர்முத்தைச் சிந்துகின்றாய்;
அண்டைவீட்டுக் காரரிடம் குறையைச் சொல்லி
ஆறுதல்கொள் வாருண்டு; பேதை! நீயோ
பண்டந்தக் கள்வனிடம் கலந்து வாழ்ந்த
பழங்காலம் நினைக்கின்றாய்! கரையென் செய்யும்? 1

கங்குலிற்சற் றயர்ந்திருந்தால் கனவில் உன்றன்
காதலனைக் கண்டிடலாம்; தூக்கம் நீங்கி
மங்குகின்றாய்; அடிக்கடிநீ எழுந்து வந்து
மணற்பரப்பில் வழிபார்த்துத் திரும்புகின்றாய்;
பொங்குகின்றாய்; புரளுகின்றாய்; எழுந்து சீறிப்
பொழுதெல்லாம் ஓயாது கலங்குகின்றாய்;
இங்குன்னை 'நாணமிலாள்' என்று பெண்கள்
இடித்துரைப்பார்; பிரிவெண்ணார்; சொன்னேன்!
சொன்னேன்!! 2

சிறுமாற்றம் நம்மிருவர் இடையே உண்டு;
தெளிவற்று நீஇன்னும் வழிபார்க்கின்றாய்;
அறுதிசெய்து விட்டேன்நான்; கலங்கேன் என்றும்;
அவள்நினைவில் இன்பத்தைக் காண்பேன்! காண்பேன்!!
உறுதிசெய்து கொள்மனத்தில்! கலங்கல் கோழை
உள்ளத்தின் பாங்காகும்! மற்றும் யாவும்
மறைந்தொழியும் மின்னலைப்போல்! ஏங்கி ஏங்கிப்
பாழாகிப் போகாதே! மனது மாற்றே! 3

RangaRakes tamilnavarasam.com

# மணி

மணியதோ அடிக்குது!
மணிமொழி கேட்குது!
மகிழ்ச்சிகொண் டெழுவாய்! – தமிழ்மகனே! 1

துணிவது பெருகிடும்!
துயரினிக் கருகிடும்!
தூய நினைவுகொள் – தமிழ்மகனே! 2

தலைஉடல் கழுவிடு!
தமிழ்மறை வழிபடு!
தயக்கம் இனியேன்? – தமிழ்மகனே! 3

மலைநிகர் தோளினி
வளர்த்திடு பயிற்சியால்!
மாநிலச் செல்வமே – உடலுறுதி! 4

இனிமையாய்ப் பாடிடு!
இருவிழி மூடிடு!
இதயவொளி யங்குத் – தோணுதடா! 5

கனிவு சுரந்திடும்;
கருணை பிறந்திடும்;
கணகண வெனுமணி – ஓசையிலே! 6

நாட்டினை, உயிராம்
நம்தமிழ் மொழியினை
நாளும் மனத்தில்நினை – பரிவோடு! 7

RangaRakes tamilnavarasam.com

காட்டிடு செய்கையில்
கைத்தொழில் கலைபயில்!
கவலை இனிஇல்லை – உன்வாழ்வில்! 8

அச்சம் அழித்திடும்
அன்பு வளர்த்திடும்
அறிவுக்கலை கோயில் – மணியோசை! 9

இச்சை கழித்திடும்
இருளை ஒழித்திடும்
இனிமேல் பெருஞ்சுகம்! – தமிழ்மகனே! 10

கூற்றுவன் மாய்ந்தனன்!
கொடுமைகள் சாய்ந்தன!
குலம்உயர்வு தாழ்வெலாம் – மாய்ந்ததடா! 11

வேற்றுமை அற்றது;
விடுதலை உற்றது;
வீரத் தமிழனெனும் – பொதுநோக்கால்! 12

RangaRakes tamilnavarasam.com

# ஏது வேண்டும்?

மேற்றிசையில் செம்பரிதி மூழ்கும் நேரம்!
மெய்மறக்கத் தென்றலுராய்ந் தோடும் நேரம்!
ஆற்றோரம் தமிழ்ச்சுவையை உன்னி உன்னி
வண்டினம்போல் அதில்சொக்கிக் கிடந்தேன்; கண்முன்
மாற்றில்லாச் செம்பொன்னை உருக்கி வார்த்த
மழைக்கண்ணாள் இளநகையாள் வானில் வந்தாள்;
'காற்றாடு கின்றனையோ? கவிஞா! உன்னைக்
கண்டுபல நாளிருக்கும். நலமா?' என்றாள். 1

'' 'தோற்றமுண்டா? பேசிடுமா?' என்பார்க் கொன்று
சொல்லிடுவேன்: ஓடைகடல் நிலவு காற்று
நாற்றமலர் புல்பூண்டு கல்லும் வானும்
நல்லநல்ல கதைசொல்லும்! கேட்பார் கேட்பர்!
ஆற்றுக்கால், உயர்நன்செய், குறையாச் செல்வம்,
அழகிளமை, பெருமதிப்பு, வான வாழ்வு,
நாற்றிசையும் உன்ஆணை கேட்டு மக்கள்
நடுங்குகின்ற தோள்வலிமை, இன்சொல் மாதர், 2

தாமரைப்பூ, நிறைவாவி, அருகில் சோலை,
தனிவீடு, குளிர்காற்று, தன்னில் ஓடி
தேமாவின் பழச்சாறு, பலாச்சுளைத் தேன்,
தெவிட்டாத தமிழ்ப்பாட்டு, நெஞ்சில் என்றும்
ஏமஞ்சேர் நாட்டியப்பெண், மானின் கூட்டம்,
எதுவேண்டும்? கேள்நொடியில் தருவேன்'' என்றாள்
'பூமியில்நான் சலிக்காது கவிதை பாடிப்
புரட்சிசெய்ய வேண்டு'மென்றேன்; வாழ்த்தி னாளே! 3

RangaRakes tamilnavarasam.com

# எது இன்பம்?

மலைமீது தீப்போல மேல்வா னத்தே
மறைகின்ற செம்பரிதி இன்பம்! இன்பம்!!
பலநிறத்தைப் பாய்ச்சுகின்ற செக்கர் கீழ்வான்
படர்ந்துவரும் இளஇருளும் இன்பம்! இன்பம்!!
பொலுபொலென வானத்தே சிந்தி வைத்த
பொற்றுகளாம் உடுக்கூட்டம், ஒன்றி ரண்டு
விலையில்லா ஒளிபெருக்கும் வயிரக் கற்கள்
விண்ணிடையே கண்சிமிட்டல் இன்பம்! இன்பம்!! 1

மத்தளம்போல் முழங்குகின்ற ஓடை இன்பம்!
வண்ணானின் துணிவெளுக்கும் ஓசை இன்பம்!
கத்தரிக்காய்த் தோட்டத்தே நீர்இ றைக்கும்
கனிவுதரு பாட்டின்பம்! வண்டு மொய்க்கும்
கொத்தெருக்கின் நீலமலர், ஈச்சன் தூங்கும்
குருவிசெய்த புற்கூடு, வாழை ஆடும்
தத்தைஇணை, குளிர்நீழல் குளத்தில் மேதி
தலைமூழ்கி விளையாடல் இன்பம்! இன்பம்!! 2

பூக்களிலே பறந்துவிளை யாடும் பட்டான்,
பொதுக்கென்று நீர்பாயும் தவளைக் கூட்டம்,
நோக்கையிலே தலையிழுக்கும் நீர்வாழ் பாம்பு,
நொய்மணலின் மினுமினுப்பு, தென்றற் காற்று,
சாக்காட்டிற் கஞ்சாத வீரன் போலத்
தலைநிமிர்த்தி நடந்துவரும் காளை மாடு,
வாக்கினிமை காட்டுகின்ற குயிலும் மண்ணில்
வற்றாத இன்பமடா இன்ப மாமே! 3

RangaRakes tamilnavarasam.com

# சேரிக் கடை

வரப்புப் பாட்டை நெளிந்து சேரி
வழியைக் காட்டிக் கிடந்தது !
மரத்து நிழலில் நின்றேன் ; சிறுவன்
மண்ணைக் கும்ப லாக்கினான். 1

இலையும், காம்பும், கல்லும் தேடி
எடுத்து வைத்தான்; அடுக்கினான்;
விலையைக் கூறி அரிசி என்று
வெள்ளை மணலை அளந்தனன்! 2

இலையும், காம்பும், மரக்கறி இதோ
இலாபம் வேண்டாம் என்றனன்!
கலையின் அழகு சிறுவர் கட்டும்
கந்தல் இன்றிச் சூழ்ந்தனர்! 3

சுருட்டை கூந்தல் கறுத்த சிறுமி
சொக்கி பொருளின் விலைபேசி
உருவ மில்லா ஓட்டுக் காசை
ஒன்றி ரண்டாய் எண்ணினாள் ! 4

'நேர மாச்சு ஆண்டை பார்த்திந்
நேர மா?' என் றதட்டுவார்!
'தாரும் பொருளை' என்று கூறித்
தலைமு றுக்கி நின்றனள் ! 5

RangaRakes tamilnavarasam.com

சேரிக் கடையின் ஆட்டத் திடையும்
சிறுவர் கூட்டம் ஆண்டையின்
பேரைக் கேட்டுக் கருகி வாடிப்
பேச்சு மூச்சு அற்றதே! 6

ஆண்டை பண்ணை ஆட்கள் என்னும்
அச்சம் நீங்கு நாளினில்
ஈண்டு வறுமை அடிமை மாயும்!
மக்கள் வாழ்வு இன்பமே! 7

RangaRakes tamilnavarasam.com

# பிறந்த ஊர் திரும்பல்

பிறந்த வூரை நினைக்க நினைக்கப்
பீரிட் டெழுகு தின்பம்!
மறைந்த நினைவோ வான முகிலில்
மறைந்தொளிர் முழுமதியாம்! 1

நெஞ்சின் விரைவு அடடா! என்றன்
நினைவை மீறிப் பாயும்!
கொஞ்சும் குழவி முகம்போல், பிறந்த
குடிசைமறப் பாரில்லை! 2

வளைந்த பாம்புப் பாட்டை இல்லை;
வரிசை மரங்கள் நிழற்றக்
களைசேர் அகன்ற பாட்டை அங்குக்
கண்டேன்; இன்பம் கொண்டேன்! 3

கப்பிக் கற்கள் என்னைப் பார்த்துக்
'காலம்போல் எப்பொருளும்
இப்பு வியினில் மாறல் பழமை
ஏன்விழிப்போ?' என்னும்! 4

ஊரில் நுழையக் கண்கள் யாவும்
உற்றுஉற்றுப் பார்த்து
'யாரை யாநீர்?' என்று கேட்கும்!
யாதுரைப்பேன் பதில்நான்? 5

RangaRakes tamilnavarasam.com

ஒருவர் இருவர் சாயல் கண்டு
'ஊரிலிருந் தின்று
வருகி றார்ப்போல் இருக்கு' தென்றார்;
மகிழ்ச்சியில் தலையசைத்தேன்! 6

சின்னஞ் சிறுவர் உருவம் இன்று
சித்திரத்தின் எழிலாம்!
என்னைப் பெற்றார் சுற்றம் நேசர்
எனக்குத் தந்தார் திகைப்பை! 7

புதுமை காணக் கும்பல் கூடும்
பொடியர் களைப்போல
எதிரில் வாழ்நர், அண்டை வீட்டார்
என்னைக்கா ணச்சூழ்ந்தார்! 8

அடுக்க டுக்காய்க் கேள்வி கேட்டே
அரித்தெடுத்தார் என்னை!
விடையிறுத்தேன்; வாய்பிளந்தே
'விந்தை! விந்தை!' என்றார்! 9

கரம்பு வெளியில் பசுமை கண்டேன்!
காளை இன்று கிழவன்!
மரம டர்ந்த தோப்புக் குடிசை
வானைத் தாவுமாடம் 10

ஓடி யாடிக் குதித்த இடத்தின்
உணர்வு ஊறிற் றென்னில்!
ஓடி யாடிக் குதிக்க இன்று
ஒப்புவரோ நாட்டார்? 11

இருபஃ தாண்டு முன்னர் நாங்கள்
இணைந்து சென்று காதல்
பெருகப் பேசி நின்ற ஓடை
பேசு தின்னும் என்முன்! 12

RangaRakes tamilnavarasam.com

இன்ப வெறியில் சலச லத்தே
இன்னும் பாயு தோடை!
இன்று தனித்துப் பெருமூச் செறிந்தே
ஏங்கு கின்றேன் நானே! 13

மாறி மாறி அழகு பெற்று
வாழு தொவ்வோர் பொருளும்!
மாறி எனது மனது ஏனோ
மறக்கு தில்லை அவளை! 14

ஒவ்வோர் பொருளும் ஒவ்வோர் இடமும்
உரைக்கு தொவ்வோர் நிகழ்ச்சி!
அவ்வப் பொருள்கள் ஊட்டும் இன்பம்
அளிக்க வல்லார் யாரே? 15

RangaRakes tamilnavarasam.com

# வெட்கி நடந்தேன்

'வெளித்தாழ் இட்டு விளக்கை யணைத்துப்
படுத்தேன்; என்மனம் படுக்க வில்லை!
குளக்கரை நோக்கிக் குறுக்கு வழியாக
வந்தேன்; பூத்த மாமரம் என்னைச்
'சச்சர வொன்றைச் சற்றுக்கேள்' என்றது.

மேடை மீது மிடுக்காய் இருந்த
அரசும் வேம்பும் என்னிடம் நெருங்கி,
'மக்கள் எங்களை வணங்குதல் கண்டு
பொருமை கொண்டு பூத்த மாமரம்
வம்புக்கு நின்றது; முறையோ?' என்றன.

'மரத்தை வணங்கும் மக்கட் பிறப்பின்
வழிவந் தோயே! வழிவந் தோயே!
உயர்வும் தாழ்வும் ஒவ்வா வணக்கமும்
உண்டென் றொப்புவீர்! நானொப்ப மாட்டேன்!
கசக்கும் வேம்பும்' காசுக் குதவா

'அரசும் மக்கள் அடுதுயர் நீக்குமோ?
வேண்டும் பேற்றை விரைவில் அளிக்க
யாண்டிவை கற்றன? யாதுசெய் வல்லன?
அறிவோ இச்செயல்?' என்றது மாமரம்!
மறுமொழி கூற வழியில்லை;
வெட்கி நடந்தேன்; மிகநொந் தேனே!!



RangaRakes tamilnavarasam.com

# எரிச்சல்

வேலையில் செல்லவில்லை; — மனது
வேறெங்கும் செல்லவில்லை;
காலைப் பனிபோல — மனத்தைக்
கவிந்தெதோ வாட்டுதடா! 1

நூலை எடுத்தவுடன் — கண்கள்
நோக்கும்; சலிப்படையும்!
சாலை நடந்தாலும் — மனது
தாவுதில்லை யழகில்! 2

இன்னிசை கேட்டாலும் — மனத்தில்
இன்பம் எழும்பவில்லை!
புன்னகை வேல்விழியும் — மனத்தின்
புண்ணைக் கிளறுதடா! 3

ஓடை குடைவமென்றால் — மனத்தில்
ஊக்கம் குறையுதடா!
ஆடை அணிவமென்றால் — மனத்தில்
ஆசை பிறக்குதில்லை! 4

மந்தார வானத்தைப்போல் — மனது
மங்கிக் கவலுதடா!
சிந்தனைக் கெட்டாத — துயரம்
தேங்கிக் கருக்குதடா! 5

RangaRakes tamilnavarasam.com

தாவும் குழவிக் கையை - சீச்சீ
தட்டிக் கழிக்கு துள்ளம்!
நாவில் சுவைகாணேன் - எந்த
நல்லமு துண்டிடினும்!

சின்னஞ் சிறுமயக்கம் - மனத்தைத்
தின்னும் சிலநேரம்!
என்ன நினைத்தாலும் - அடிக்கடி
'இச்'சென் றிதழ்திறக்கும்!

நீடித் திருப்பதில்லை - இத்துயர்
நெஞ்சில் பலகாலம்!
கோடைவான் மின்னலென - ஒருநாள்
தோன்றும்; மறைந்துவிடும்!

காதலால் நேர்ந்ததில்லை; - வறுமைக்
கானலால் நேர்ந்ததில்லை;
ஏதென எண்ணியெண்ணி - இதன்பெயர்
'எரிச்சல்' என்றனரே!

RangaRakes tamilnavarasam.com

# ஏக்கம்

புன்னையின் வேரைத் தாவிப்
புரண்டிடும் அலைகள்; காய்த்த
தென்னையில் பெட்டை நாரை
தொடுவானத் திசையை நோக்கித்
தன்றலை நீட்டும்; சற்றுத்
தடங்கடல் பரந்து பார்க்கும்;
சென்றதன் இன்பச் சேவல்
வழியினைப் பார்க்கும்; ஏங்கும்! 1

தாழையின் அருகில் பூத்த
கழிநீலம் தன்னைக் காலை
வாழவைத் தகன்ற வண்டின்
கொடுமையை எண்ணும்; ஏங்கும்!
ஏழ்மையின் விளக்கம் சிற்றூர்
எழில்மிகு சிறுவர் கூட்டம்
சூழ்ந்தலை வண்டற் பாவை
துடைத்திடத் துடிக்கும்; ஏங்கும்! 2

அலையிலா நடுக்கடல்மேல்
ஆளனின் உருவை ஓடிச்
சிலைவிழி தேடும்; ஏதோ
செப்பிடும் இதழ்கள்; கஞ்சிக்
கலத்தினை இறக்கும் கைகள்;
கால்விரல் மண்ணைக் கிண்டும்;
அலையலை யாகத் துன்பம்
அரித்திட மனைவி ஏங்கும்! 3

RangaRakes tamilnavarasam.com

தாழ்வினை நீக்கி நாளும்
தன்குடி பாது காத்த
ஆழ்கடல் நோக்கிச் சென்ற
ஆளனோ பறிநி ரம்பா
ஏழ்மையை எண்ணி எண்ணிக்
குடிசையை நோக்கும்; ஏங்கும் !
தாழ்ந்திடும் பரிதி கண்டு
தவித்திடும்; ஏங்கும்; அந்தோ ! 4

தாழையின் மலரைக் கொய்ய
முட்புதர் தாண்ட வேண்டும்;
கோழையாய் இருந்தால் என்றும்
குறைதீர வழியே இல்லை;
ஏழைகாள்! உங்கட் கொன்றே
இயம்புவன்: உணர்வு பெற்றால்
சூழ்ந்திடும் உயர்வு தாழ்வு!
வறுமையும் தொலைந்து போமே !! 5

# சூறாவளி

மான மிழந்துலகில் வீழாது வாழ்கின்ற
ஈன மனிதரைக்கண் டேறுசினம் — ஞானஞ்சேர்
சூறா வளியாகிச் சோர்வின்றி மூடமனம்
பாரை யுடைக்கவந்தாள் பார். 1

சாதி பலவகுத்துச் சச்சரவு நாள்பெருக்கி
நீதியற்று வாழும் நிலைதன்னை — மேதினியில்
சூறா வளியாகிச் சுட்டெரிப்பாள் இன்றுலகை
வேறுலகம் செய்வாள் விரைந்து. 2

மூடப் பழக்கத்தில் மூழ்கிப் பலநாளாய்
ஓடும் சருகானோம் உண்மையிது — கேடுதவிர்
சூறா வளிநமக்குச் சொக்கும் புதுஉலகம்
ஏறவழி செய்வா ளினி. 3

அச்சப் படாதிருமின் அல்லற் படுமுலகீர்!
எச்சமும் போற்ற எழுந்திட்டாள் — மெச்சுந்
தமிழணங்கு சூறா வளியாகி நின்றே
அமிழ்தளிப்பாள் வாழி யவள். 4

நாடு நலங்கொழிக்க நந்தமிழர் சீர்திருந்தக்
கூடும் வகைபலவும் கூட்டிடுநம் — ஈடில்லாச்
சூறா வளிவாழ்க சூதெல்லாம் தீய்த்துவான்
ஏறும் பரிதியாய் ஈண்டு. 5

RangaRakes tamilnavarasam.com

# கொடிது! கொடிது!

கொடிது! கொடிது! கூற்றம் கொடிது!
கொடிதாம் அதனினும் அடுபசித் துன்பம்!
கொடிதே அதனினும் குணமிலாப் பெண்டிர்!
கொடிதே அதனினும் குடிசெயா மக்கள்!
அதனினும் கொடிதே அன்பிலாச் சுற்றம்!

அதனினும் கொடிதே அடிமையில் வாழ்தல்!
அதனினும் கொடிதே மனத்தில் அச்சம்!
அதனினும் கொடிதே அழுக்கா றுள்ளம்!
அதனினும் கொடிதே அறிவிலார் கேண்மை!
கொடிதே அதனினும் குறுமனப் பான்மை!

மானம் இழந்து மண்ணில் வாழ்தல்
அதனினும் கொடிதே அம்ம! அதனினும்
கொடிது பழந்தமிழ் நெடுமை மறத்தல்!
அதனினுங் கொடிதே அஞ்சா தென்றும்
தமிழ்ச்சேர் கலப்பைத் தாக்கா திருத்தல்!

அதனினும் அன்ப நும்முடன்
கூடிப் பிரிதல் கொடிது! கொடிதே!!

RangaRakes tamilnavarasam.com

# வணக்கம்

வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!! — எங்கள்
வளமார் திராவிடமே! மக்கள்
உளமார் திராவிடமே! 1

குணகடல் விந்தியம் குமரி எல்லையாய்ச்
சூழ்ந்த திராவிடமே! தூயவர்
வாழ்ந்த திராவிடமே! 2

அலைகடல் தாண்டி மிளகும் முத்தும்
அளித்த திராவிடமே! இன்பத்தில்
திளைத்த திராவிடமே! 3

கலைபல வளர்த்துக் கைத்தொழில் நிறைத்துக்
காத்த திராவிடமே! பசிப்பிணி
நீத்த திராவிடமே! 4

வடமலை நெரித்து மணிமுடி பெயர்த்து
வாழ்ந்த திராவிடமே! புலவரை
ஈந்த திராவிடமே! 5

உடல்வேல் பறித்துப் பகைவரைத் தாக்கி
உயர்ந்த திராவிடமே! மானத்தில்
சிறந்த திராவிடமே! 6

RangaRakes tamilnavarasam.com

# வாணிதாசன் கவிதைகள்

தொகுதி—2

பதிப்பாசிரியர்
அரங்க. நலங்கிள்ளி

வாணிதாசன் பதிப்பகம்
புரட்சி அகம்
சேலியமேடு அஞ்சல்
பாகூர் (வழி)
புதுச்சேரி மாநிலம்—607 402

RangaRakes tamilnavarasam.com

# உள்ளுறை

## I சமுதாயம்


1. வழி வகுத்தால் போதும்
2. தீமையோ?
3. வாயடங்க மாட்டேன்
4. கணக்குத் தீர்ப்போம்
5. பரவட்டும் தீயே!
6. ஆக்கம் சேர்ப்போம்!
7. தமிழா அஞ்சாதே!
8. சுட்டுப் பொசுக்குவாய்!
9. எத்தனை நாள் துணைக்கு நிற்கும்?
10. புதிய உலகம்
11. தொண்டு செய்
12. செயத்தக்க செய்
13. உனக்கேன் இல்லை அக்கவலை
14. வாழ்க்கை
15. பாவியற்றும் பயிற்சிபெற வேண்டும்
16. இதுவா ஆட்சி?
17. வறுமை.


## II காதல் நினைவுகள்


1. கன்னலடி! கைப்பதில்லை!
2. நீயும் நானும்


காதல் நினைவுகள் எனும் இப்பெருந்தலைப்பு நூலின் உள்ளே விடப் பட்டுள்ளது. எனவே கன்னலடிகைப்பதில்லை முதலாய பாடல்களை காதல்நினைவுகள் எனும் தலைப்பின் கீழ் படித்துணர்க.

RangaRakes tamilnavarasam.com

3. அவள் வேண்டும்!
4. எழுந்தருளாயோ!
5. என் ஐக்கு உரைப்பாயடி!
6. எவர் தடுக்கக் கூடும்?
7. காதல்
8. நிலவைக் கண்டேன்
9. நெடுந்தூரம்
10. அங்கே! அங்கே!!
11. ஓடோடிப் போனாய் நீ!
12. சொல்லேன்! சொல்லேன்!
13. இன்னும் அவள்மேல் நினைப்பா?
14. கவலை ஏனோ மனமே?
15. அங்கென்ன பார்க்கின்றாய்!
16. வாழ்க்கை

## III கையறு நிலை

1. கண்ணீர் சிந்துக! கண்களே!
2. பாவேந்தரோடு!
3. பார் இழந்த தந்தோ
4. யார் பொறுக்கக் கூடும்?
5. சற்றெறாதிங்கிப் போவீர்!
6. கொடிய கூற்றே!
7. யாருக்காக வாழ வேண்டும்?
8. மறைந்தாரே அண்ணா!
9. கவலை மாற்றுகவே!
10. நல்லோரும் இறப்பதுவோ?
11. பவுனாம்பாள் புகழ்பாடுவோமே!
12. கலையுலகப் பேரிழப்பு.

## IV எண்ணம்

1. வெண்கழுகுப் பேடை
2. விடைப் பாடல்கள்

RangaRakes tamilnavarasam.com

3. கணக்காயர்
4. தமிழ் நாடு வாழ்கவே!
5. என் வேலை!
6. என் நன்றி
7. ஒற்றுமையோடு வாழவேண்டும்
8. இனம் ஒத்தால் நாம் வாழ்வோம்
9. நினைத்துப் பார்
10. சொல்லுக காக்காய்
11. மாறிடுமா மச்சான்?

RangaRakes tamilnavarasam.com

# சமுதாயம்

## வழி வகுத்தால் போதும்

நான்பிறந்த இந்நாளில் நல்லன்பர் கூடி
நாட்டிற்கு நீர்கூறும் செய்தியுண்டோ என்றார்!
வான்பிறந்த வெய்யோனால் ஊன்பிறந்த துண்டாம்!
வளர்ந்துவரு உயிரினங்கள் கதிரியக்க ஆக்கம்!
தேன்பிறந்த செய்தியெலாம் பூக்கூட்டம் சென்று
செவியோடு வண்டிற்கே சொன்னதில்லை என்றும்!
கான்பிறந்து திரிகின்ற புள்ளினம்போல் இன்றிக்
கைகால்கள் முளைத்துள்ளேன்! கண்டபயன் என்னும்? 1

ஊருக்கே உழைப்பதுவும், ஊர்வாழும் மக்கள்
உயர்வுக்கே உழைப்பதுவும் நற்கவிஞர் வாழ்க்கை!
தேருக்கே அச்சாணி! திசைதிருப்ப முட்டுத்
தெருவெல்லாம் கொடுப்பதற்குத் திரண்டதோள் வேண்டும்!
காருக்கே யார்சொன்னார் கடல்நீரை மொண்டு
கழனியெலாம் வளமாக்க? நாம்வாழும் நாட்டில்
நேருக்கு நேர்நடக்கும் அறிவற்ற செய்கை
நெறிப்படுத்த என்பாடல் வழிவகுத்தால் போதும்! 2

அந்தியிலே கோயிலெலாம் மணியடிக்கக் கேட்பேன்;
ஆனாலும் எனதுள்ளம் அமைதிகொள்வதில்லை!
சந்தியிலே கூடுகின்ற கூட்டம்போல் இன்றித்
தமிழ்மக்கள் தாய்நாட்டின் நலம்பேண வேண்டும்!

RangaRakes tamilnavarasam.com

பந்தியிலே தலைவாழை இலையிட்டே உண்போர்
        பசிமீறக் கையேந்திக் கெஞ்சுகின்ற ஏழை
முந்தியிலே நிழலாடக் காண்கின்றேன்; இந்தப்
        போக்கெல்லாம் என்பாடல் மாற்றிவிட்டால் போதும்!

பாலுக்கே அழுங்குழவி பசிக்கேங்கு வோர்கள்
        பாயின்றி இடமின்றி நிழலுறங்கும் கூட்டம்
நூலுக்கே வழியின்றிக் கைத்தறியால் வாழ்வோர்
        நுணலைப்போல் கூச்சலிட்டால் பசிநீங்கிப் போமோ?
வேலுக்கே வேலெதிர்ப்பை விளைவிக்க வேண்டும்!
        விரைவினிலே மக்கட்கு நல்லுழைப்பைத் தூண்டத்
தோளுக்கே உணர்வூட்டப் பகுத்தறிவை ஊட்டத்
        தூயதமிழ் என்பாடல் வழிவகுத்தால் போதும்! 4

வீட்டினிலே வாழ்கின்ற தாய்மாரே! வாழ
        வினைசெய்யும் பெற்றோரே! குழந்தைகளே! என்றன்
பாட்டினிலே இனிப்பன்றி நான்பிறந்த இந்நாள்
        பகிர்ந்தளிக்க வேறொன்றும் என்னிடத்தில் இல்லை!
கூட்டினிலே அடைபட்ட சிறுத்தைபோல் இன்றிக்
        கொல்புலியாய் மாறிடுவீர்! கொடுமைக்கஞ் சாதீர்!
கேட்டினிலே வாழ்வதுவோ! மிகுவெட்கம்! வெட்கம்!
        கிளர்ந்தெழுவீர்! கிளர்ந்தெழுவீர்! இதுவேஎன் செய்தி!

ஆளுகின்ற நாற்காலி தமிழ்மக்கள் சொத்தாம்!
        ஆள்வோர்க்கே என்றென்றும் அதுவுரிமை ஆமோ?
மூளுகின்ற எதிர்ப்பிற்கோ கூச்சலுக்கோ அஞ்சி
        முற்போக்குத் திட்டத்தைத் தள்ளிப்போ டாதீர்!
தோளுக்கு மறவலிமை யூட்டுகின்ற அன்னைத்
        தொன்மொழியாம் தமிழ்காப்பீர்! நான்பிறந்த இந்த
நாளினிலே நான்வழங்கும் நற்செய்தி இஃதே!
        நலம்பெற்று வளம்பெற்றுத் தமிழ்மக்கள் வாழ்க! 6

2-7-73 அன்று வழங்கிய பிறந்த நாள் செய்தி.

RangaRakes tamilnavarasam.com

## தீமையோ?

வாழத்தான் நினைக்கின்றேன்
வாழுவகை இல்லை—புகழ்
சூழத்தான் நினைக்கின்றேன்
சுற்றமெனக் கில்லை—ஆன்ற
சுற்றமெனக் கில்லை 1

தாழை பூத்த கடற்கரையில்
தனிமை தந்தது இன்பம்—என்றும்
தனிமை தந்தது இன்பம்
ஏழை வாழ வழியுமில்லை
இடங்கொடுப்ப தில்லை—மக்கள்
இடங்கொடுப்ப தில்லை 2

கந்தையின்றிக் கையைப் போர்த்திக்
கடுங்குளிரில் மிகுபனியில் மழையிலே—புயல்
கடுங்குளிரில் மிகுபனியில் மழையிலே
இந்நாட்டு மக்கள் வாழ
ஏக்கம் தோன்றும் நெஞ்சிலே—கொடும்
ஏக்கம் தோன்றும் நெஞ்சிலே 3

வந்துமோதும் புரட்சியெண்ணம்
மறக்கவென்றால் ஆகுமோ—சற்று
பொறுக்கவென்றால் ஆகுமோ
செந்தமிழே! உன்னையன்றித்
தீமைசாய்க்கப் போகுமோ—இந்தத்
தீமைசாய்க்கப் போகுமோ? 4

RangaRakes tamilnavarasam.com

விழித்திருக்கும் வேளையும், நான்
        வினைமுடிக்கும் வேளையும்—வாழ
        வினைமுடிக்கும் வேளையும்
கழுத்திழுக்கக் குந்திக்குந்திக்
        கவிதைபாடும் வேளையும்—தமிழ்க்
        கவிதைபாடும் வேளையும் 5

பழுத்திருக்கும் மரத்தைநோக்கிப்
        பறந்துசெல்லும் புட்கள்போல்—நாளும்
        பறந்துசெல்லும் புட்கள்போல்
கொழுத்திருக்கும் செல்வர்இல்லம்
        குறுகியோடப் பாடுவேன்—பகிர்ந்து
        கொடுத்துதவப் பாடுவேன் 6

தேக்கிவைத்த பொருட்களெல்லாம்
        தெருக்கொருநாள் வந்திடும்—ஆம்
        தெருக்கொருநாள் வந்திடும்
ஆக்கம்வேண்டும் அறிவுவேண்டும்
        அன்புவேண்டும் நெஞ்சிலே—என்றும்
        அன்புவேண்டும் நெஞ்சிலே! 7

உண்டுவாழ்தல் உழைத்துவாழ்தல்
        உயிரினத்தின் கடமையாம்—வாழும்
        உயிரினத்தின் கடமையாம்
வண்டைப்போல ஈட்டிவைத்தால்
        மக்களெல்லாம் ஊமையோ?—தேன்
        வடித்தெடுப்பார் தீமையோ! 8

30-7-73

RangaRakes tamilnavarasam.com

## வாயடங்க மாட்டேன்

மழையடங்கி விட்டாலும் வயல்காட்டில் வாழும்
வரித்தவளை மணிக்குறளாம் வரிப்பாடல் கேட்கும்
குழையடங்கி விட்டாலும் குமரிப்பெண் காதில்
குருத்தோலை பனையோலை குளிர்நினைவை யூட்டும்!
இழையடங்கி விட்டாலும் மாமணிகள் தம்மை
ஏற்றோர்க்கே புகழ்சேர்க்கும் இஃதுலகின் உண்மை!
கழையடங்கி விட்டாலும் உள்ளிருந்தே பாடும்
களிவண்டைப் போலென்றும் வாயடங்க மாட்டேன்! 1

கடல்படிந்த கார்மேகம் காற்றோடு கூடிக்
களித்திருந்த காலத்தும் வாயடங்க வில்லை!
உடல் படிந்த நீலநிறக் குளம்ஏரி என்றும்
ஊமையாய் இருந்ததுவோ? கரைவாழும் தென்னை
மடல் படிந்த ஓலையெலாம் நமக்கென்ன வென்றே
வாய்மூடிக் கிடந்ததுண்டோ? மறுப்பாரும் உண்டோ?
கெடல்படிந்த இவ்வுலகை மாற்றாதோன் மூடன்!
கீரிநான் பாம்பிற்கு! வாயடங்க மாட்டேன்! 2

நானுண்டு; நான்கற்ற தமிழுண்டு; போதும்!
நல்லோர்கள் வல்லோர்கள் நற்றமிழை யாத்தோர்
தேனுண்டு நான்வாழ்வேன்; சீர்சிறப்பு வேண்டேன்!
தெருவெல்லாம் ஆறாகப் புரண்டாலும் நாய்கள்
தானுண்டு மகிழாதாம்! நக்கித்தான் பார்க்கும்!
சான்றோர்வாய் பொய்த்திடுமோ? ஏமாற வேண்டாம்!
வானுண்டு கதிர்காலும் வெண்மதியம்! நாளும்
மடச்செயலைக் கண்டென்றும் வாயடங்க மாட்டேன்! 3

RangaRakes tamilnavarasam.com

எனக்கெழுதும் நல்லெண்ணம் எனக்கினிமேல் இல்லை!
எழுதியதால் நான்கண்ட(து) ஏதேனும் உண்டோ?
உனக்கெழுதும் தமிழ்ப்பாடல் தமிழ்மகளே! கேட்போர்,
உலகியலை வாழ்கின்ற உயிரினத்தின் பண்பைத்
தனக்கெழுதும் பாடலெனக் கொள்வாரோ! அன்றித்
தனித்தமிழர் பண்பென்று தடம்புரண்டு போவாரோ!
மனக்கெழுதும் அமைதிப்பண் புத்துலகம் சேர்க்கும்
வாழ்விற்கு நான்என்றும் வாயடங்க மாட்டேன்! 4

பாடாமல் இருக்கத்தான் நினைக்கின்றேன்; என்றன்
பாசேறித் தமிழ்ஏறிப் போய்விட்ட நெஞ்சம்!
கூடாமல் இருந்திடுமோ வெள்ளம்கூ டாதோ
கொடுமைகளைப் பசியால்வாழ் ஏழைகளை எண்ணி
வாடாமல் வாழ்வதுவோ இந்நாட்டின் வாழ்க்கை?
மறத்தமிழா! இளம்புலியே! நல்வாழ்வு மண்ட
ஓடாமல் ஒளியாமல் உன்கருத்துக் கொவ்வா
உதிரிகளை உதைத்தெறிவாய்! நாமடைவோம் வாழ்வே! 5

## கணக்குத் தீர்ப்போம்

வான்பொய்த்த காலத்தும் பொய்யா ஆறு!
வளநன்செய் புன்செய்நெல் மலிந்த நாடு!
தேன்கொழிக்கும் நெடுமலைகள் மலையின் சாரல்
செறிந்தபலா மாவாழை குவிந்திருந்தும்
ஏனின்று மக்கட்குப் பசியைப் போக்க
இயலவில்லை? நம்குறையா? அரசின் போக்கா?
கூன்நிமிர்ந்த எழுகதிரைக் கண்டோம் வாழி!
கொடுமைக்கிங் கின்றோடே கணக்குத் தீர்ப்போம்! 1

பெயல்தேக்கி நீர்பாய்ச்சிக் காட்டை மேட்டைப்
பெருந்தோள்கள் வலியெடுக்க ஒவ்வோர் நாளும்
வயலாக்கி நெல்விளைப்போன் மனைவி மக்கள்
வயிற்றுக்குப் புல்லுணவு கிடைக்க வில்லை!
அயல்நோக்கி அழுகின்றார்! விளைப்போர் ஏங்க
அறுவடையைச் செய்கின்றார் வேற்றார் ஆவார்!
கயல்விழியே! புத்தாண்டைக் கண்டோம்! வாழி!
இன்றோடே நம்குறையின் கணக்குத் தீர்ப்போம்! 2

வற்றாத வளங்கொடுக்கும் கடலோ முப்பால்!
வருமழையைத் தடுத்தளிக்கும் மலையோ முப்பால்!
கொற்றத்தை நனிநடத்த வழிசொல் முப்பால்
கொண்டுள்ளோம்! என்றாலும் குறைகொண் டுள்ளோம்!
சுற்றத்தை வாழ்விக்கும் கதிரைக் கண்டோம்!
தொடுவான இருளினிமேல் தொலைந்தே போகும்!
பெற்றுவளர் தாய் நாட்டின் நலத்தை எண்ணாப்
பெரியோரை இன்றோடே கணக்குத் தீர்ப்போம்! 3

RangaRakes tamilnavarasam.com

கடல்கடந்து கலஞ்செலுத்திக் கடாரம் வென்ற
 கதையெல்லாம் கல்வெட்டுச் சொல்லக் கேட்டும்
உடல்சிறியர் நமைஏய்க்கப் பார்க்கின் றார்கள்!
 நாமெல்லாம் ஊமையென்ற நினைவு போலும்!
மடல்பெரிதே என்போர்க்கே மகிழம் பூவின்
 மணம்பெரிதை நினைவூட்டும் மறவர் கூட்டம்!
படர்இருளைக் கிழித்தெறியும் பரிதிவாழ்த்திப்
 பழமைக்கிங் கின்றேடே கணக்குத் தீர்ப்போம்! 4

வாளேந்தி அரசாண்ட முன்னாள் வேந்தர்
 மடியிருத்தித் தாய்மொழியை வளர்த்துக் காத்தார்!
தோளேந்தி வறுமையினைத் துடைத்த தாலே
 தொன்னூலைப் பெரும்புலவர் படைத்தார்! இன்றோ
கோளின்றிக் குறைமொழியைக் கேட்டே ஏற்றுக்
 குடிகெட்டோம்! எழுகதிரைக் கண்டோம் வாழி!
மீளாத கொடுந்துயரம் மீள வேண்டும்!
 விரைவாக இன்றேடே கணக்குத் தீர்ப்போம்! 5

தாய்நாடும் தாய்மொழியும் வாழ வேண்டும்!
 தலைநிமிர்ந்து மற்றவர்போல் நடக்க வேண்டும்!
காயாத வானத்தும் கதிரைச் சேர்க்கும்
 விஞ்ஞானக் கல்விவளம் கற்க வேண்டும்!
ஓயாது தாயகத்தின் உயர்வுக் காக
 உயிருள்ளோர் யாவருமே உழைக்க வேண்டும்!
வேய்மலையின் எழுகதிரைக் கண்டோம் வாழி!
 விரைவாகக் குறைமுடிக்கக் கணக்குத் தீர்ப்போம்! 6

---

17-12-66

RangaRakes tamilnavarasam.com

## பரவட்டும் தீயே!

கார்பொய்த்த காலத்தும் நீர்பொய்க்கா நாடு!
கல்துளைத்துக் கலைவளர்த்து நெல்விளைத்த நாடு!
கூர்பொய்த்த வேலெடுத்தும் பகைவெட்டிச் சாய்த்த
குன்றுநிகர் தோள்மறவர் வாழ்ந்ததிரு நாடு!
சீர்பொய்த்துப் போனதுவோ? அந்தந்தோ அந்தோ!
செந்தமிழர் நிலைஇதுவா? இந்நிலையை மாற்றப்
பேர்பொய்த்துப் போகாமுன் எழுந்தோடி வாரீர்!
பிற்போக்கு நிலைமாறப் பரவட்டும் தீயே! 1

முல்லைக்குத் தேர்ஈந்தான்; முன்பாடி வந்த
முத்தமிழ்ப்பா வாணர்க்குத் தன்னுட்டை ஈந்தான்
இல்லையென்ற சொல்லுக்கே இடமில்லை அந்நாள்
இன்மருந்தும் அயலவர்க்குப் பங்கிட்டே உண்டான்!
பல்வளமும் நிறைந்திருந்தும் தாயகமே! மக்கள்
பசிநோயால் வாடுவதோ? இந்நிலையை மாற்ற
எல்லோரும் புறப்படுவோம்! புத்துலகம் காண
எங்கெங்கும் பரவட்டும் பரவட்டும் தீயே! 2

படைபெருக்கி வளம்பெருக்கிப் பலதொழிலும் கண்டு
பண்போடு கலைவளர்த்து வெற்றிமுரசு சார்த்துக்
கடல்கடந்து புகழ்நட்டோம் முன்னாளில்! அந்தக்
கதையெல்லாம்வெறுங்கதையா?கடாரம்சொல்லாதா?
வடக்கினிலே படைதேக்கி வடஎல்லை தாண்டி
வந்தபகை இன்னும்முன் வராவண்ணம் ஈனக்
கொடும்பகையை முறியடிப்போம்! கோழைகளா மக்கள்?
கொழுந்துவிட்டுப் பரவட்டும் பரவட்டும் தீயே! 3

RangaRakes tamilnavarasam.com

அறநூலும் பொருள்நூலும் அள்ளியள்ளி ஆன்றோர்
அலைகடல்சூழ் உலகிற்கே அளித்துவந்த துண்டே!
மறத்தோளர் முடிமன்னர் வாழ்ந்திருந்த நாளில்
வாழ்ந்திருந்த வளமெண்ணில் மனம்கொதிக்குதந்தோ!
அறம்பிழைத்து வாழ்ந்ததில்லை! ஆனாலும் இன்றோ
அவையாவும் பழங்கதையாய் ஆக்கிவிட்டார் மக்கள்!
சிறந்தோங்க வழிசெய்வோம்! செயல்மறவர் தேவை!
தீயெங்கும் பரவட்டும்! பரவட்டும் தீயே! 4

வாழாத காலத்தில் நல்வாழ்வு வாழ்ந்தோம்!
வந்தவர்க்கிங் கிடங்கொடுத்தோம் விரிந்தமனப் பண்பாம்!
ஆழ்கடலில் முத்தெடுத்தோம்; அயல்நாட்டிற் கீந்தோம்!
அகில்தேக்குச் சந்தனமும் அளித்துதவி வந்தோம்!
ஈழத்தில் கொடிநட்டோம்; ஈழஉற வானோம்!
இன்றுள்ள நிலையென்ன? இதுதானா நேர்மை?
கோழையா நாமெல்லாம்? கொல்புலியின் போத்து!
கொழுந்துவிட்டுப் பரவட்டும் பரவட்டும் தீயே! 5

தென்னகமே! தாய்நாடே! தீந்தமிழர் வாழ்ந்த
திரைகடல்சூழ் பொன்னாடே! என்நாடே! வாழ்க!
முன்னோர்கள் தோள்வலியால் அறிவாற்ற லாலே
முத்தமிழே செழித்தோங்கி அரசோச்சி வந்தாய்!
இந்நாளில் இந்நிலையில் இறக்கிவைத்த கீழோர்
இருந்தென்ன? இறந்தென்ன? ஆன்றோர்கள் வாழ்ந்த
பொன்னான தமிழ்ச்சங்க காலத்தைக் காணப்
புதுமைத்தீ பரவட்டும் பரவட்டும் இன்றே! 6

12-12-'64

RangaRakes tamilnavarasam.com

## ஆக்கம் சேர்ப்போம்!

உண்ணுவதும் உறங்குவதும் பெரிய தொழிலாய்
வீர்ப்பேச்சுப் பேசிக்கா லங்கடத்த மாட்டோம்!
பெண்ணொருத்தி சிக்கனமாய்ச் சேர்த்த பொருளைப்
பிள்ளையன்றிப் பிறரடைய மனஞ்சகிப் பாளோ?
மண்ணரசி தமிழன்னை ஈன்றமக் கள்நாம்!
வழக்கப்படி நாமலவோ ஆளப் பிறந்தோர்?
கண்ணொளியாம் நம்தமிழர் நாடு நமக்கே
கண்ணிழந்து வாழ்வதினும் வீழ்வது மேலாம்! 1

தலைசாய்த்துக் கைகட்டி மானமிழந்து
தலைவணங்கிப் பிறர்க்கேவல் செய்ய மாட்டோம்!
மலைநாட்டுக் குறவரைப்போல் எங்கும் திரிவோம்
மண்கிளறிக் கிழங்குண்டு வாழ்ந்து வருவோம்
சிலைவலியால் இமயம்வரை வெற்றி பரப்பிச்
செந்தமிழைக் காத்தசேரன் சொந்த மக்கள்நாம்
அலைகடலின் வழிவந்து நம்மை விழியால்
அடிமைகொண்டாள் அன்னியப்பெண் அழிந்தோம்
மண்ணில். 2

பண்டைத்தமிழ் நாட்டுணர்வை நாளும் வளர்ப்போம்
பழமையினில் புதுமையெனும் மெருகைக் கொடுப்போம்
அண்டைஅய லார்நம்மைக் கண்டு நகைத்த
அந்தக்காலம் போனதின்று வந்தது நன்னாள்!
கெண்டைவிழிப் பெண்ணினத்திற் கின்னல் புரியும்
இழுக்கட்டுப் பாட்டைநல் அறிவால் தீய்ப்போம்
சண்டைசெய்யும் மேனாட்டு வீணர் நாமலோம்
சன்மார்க்க மெய்யுயிராய்ப் பூசனை செய்வோம்

RangaRakes tamilnavarasam.com

சீரழிந்த சிற்பமுதல் நாட்டி யக்கலை
சித்திரமும் கைத்தொழிலும் மெத்த வளர்ப்போம்
பார்மொழிகள் அத்தனையின் தேனைப் பிழிந்து
பலகவிதை சிறுகதைகள் தமிழில் குவிப்போம்
ஆர்விழியார் பெண்ணினத்தின் கற்பை நிறைப்போம்
அண்டமும் பிளக்கஇரு தோளை வளர்ப்போம்
நேர்வழியாம் சத்தியத்தின் நெறிதவறிடோம்
நீர்க்குமிழி யாய்உடலை நெஞ்சதில் காப்போம் 4

RangaRakes tamilnavarasam.com

## தமிழா அஞ்சாதே!

அஞ்சாதே தமிழா! நீ
அஞ்சாதே தமிழா!

தஞ்சமென ஒருநாளும் பிறர்க்கீழ்த்
தலை சாய்த்திடு வழக்கம்
நஞ்சினும் கொடிதென நெஞ்சத்தில் காத்தான்
நம் நாட்டுத் தமிழன்

மஞ்சு பொழிந்து உயிர்க் குணவாகி
மா நிலம் காத்திடுதே!
சஞ்சல மெதற்கு இயற்கையாம் அன்னை
தருவாள் உன் பசிக்கே!

கொஞ்சிடு மக்கள் மனைவி முகத்தில்
குலவிடு புன் முறுவல்.
வஞ்சகர் நெஞ்சைப் பிளந்திடு வண்மை
வாளெனப் பெற்று விட்டாய்!

கஞ்ச மலர்முகத் தமிழ்த்தாய் வாடக்
காணு திருப் பாயோ?
அஞ்ச விலைஇனித் தனித்தமிழ் நாடு
ஆளுகை உன்ன தடா!

நெஞ்சினில் வீரம் கையினில் வில்மீன்
நீள்புலிக் கொடி யுயர்த்தி
அஞ்சலி செய்வாய் தமிழா! தமிழர்
ஆவியின் சின்ன மதே!

RangaRakes tamilnavarasam.com

## சுட்டுப் பொசுக்குவாய்!

நச்சரவாம் அன்னிய நரகன் அழிந்தனன்
நாட்டிலே! தமிழ் நாட்டிலே!
அச்சம் அழிந்தது எண்ணெய்தலை தேய்த்தே
ஆடுவாய் நீர் ஆடுவாய்!

புத்தம் புதுக்கதராடை யுடுத்திநீ
பூவையே! தமிழ்ப் பாவையே!
தித்திப்பு காரம் தோசைமுதல் உண்டு
தெருட்டுவாய் அடிமை வெருட்டுவாய்!

எத்துணை ஆயிரம் நரகரெதிர்ப்பினும்
இல்லையே! பணித லில்லையே!
சத்திய பாமை நந்நாட்டுப் பெண்ணுமே!
தையலே தமிழ்த்தையலே!

வெற்றித் தீபாவளி வாழ்க வாழ்கவென்று
வெடிசுடு சீன வெடிசுடு
நற்றமிழ்ப் பெண்க ளடிமைத் தளையினை
நசுக்குவாய் சுட்டுப் பொசுக்குவாய்!

RangaRakes tamilnavarasam.com

## எத்தனை நாள் துணைக்கு நிற்கும்?

நாட்டுக்கு நலம்பயக்கும் நல்லறிவை இந்நாட்டுக்
குழந்தை கட்கே
ஊட்டுகின்ற கணக்காயர் தம்மக்கட் குணவூட்ட
வாய்தி றந்தார்
நீட்டுவதா துப்பாக்கி இப்போக்கிங் கெத்தனைநாள்
துணைக்கு நிற்கும்
பாட்டுக்கும் அறிவொளிக்கும் பணியாத எந்நாடும்
உருப்ப டாதே! 1

இந்நாட்டுக் குழந்தைகளை எதிர்காலப் போர்ப்படையை
ஆட்சித் தூணை
பொன்னாக்கித் தருவதுவும் புலியாக்கி விடுவதுவும்
யாரின் வேலை?
முன்னாளில் இன்றுள்ளோர் கையாண்ட முறைபறிபோர்
இவர்கள் செய்தார்கள்
பின்னென்ன முழுகியது துப்பாக்கி எத்தனை நாள்
துணைக்கு நிற்கும்? 2

கணக்காயர் மனம்வைத்தால் கடுங்கோலும் சீர்குலையும்
கரம்பூப் பூக்கும்;
பிணக்கென்ன செய்துவிட்டார்? பெரும் பசியின்
நிலைசொன்னார் இதுவா தப்பு?
குணக்கடலா பொங்கியது? குறைகேட்க இன்றுள்ளோர்
முனைந்தால் என்னாம்?
உணவுக்கு வழிசெய்யா எந்நாடும் எந்நாளும்
உருப்ப டாதே! 3

RangaRakes tamilnavarasam.com

## புதிய உலகம்

புதிய உலகம் செய்வாய்! தமிழா!
புதுமை வெறியூட் டெழுந்திரு! தயக்கமேன்?
விதிவிதி என்பது வீணர்சொல்! தள்ளு!
வீரமும் மானமும் உயிரெனக் கொள்ளு! 1

மண்வாழ் உயிரினுள் தாழ்வுயர் வேது?
வகுத்தபல் சாதி ஒருசிலர் சூது!
பெண்ணினம் தாய்மையாம் பழிக்காதே போற்று!
பெற்றதாய் நாடுன்றன் சொத்தெனச் சாற்று! 2

ஆற்றுப் பெருக்கெதிர்த் தேறிடு மீன்போல்
எதிர்த்தழி மூடப் பழக்கத்தை வாழ்வில்!
மாற்றிடு உலகினை மக்களின் அரசராய்!
மழைதரு செல்வம் உயிர்க்கெலாம் பொதுவாய்! 3

பிச்சை எடுப்பவர் இந்நாட்டி லில்லை!
பேச்சைத் தடுப்பவர் எவருமே இல்லை!
இச்சைப் படும்பொருள் இளங்கதிர்த் தென்றல்!
இனிய குயிலிசை மேற்றிசைச் செவ்வான்! 4

தமிழ்மது வெறியினில் ஆடுவார் மக்கள்!
கட்டாயத் தொழிற்கல்வி நாடுவார்! சந்தம்
கமழ்மணச் சோலையும் வாவியும் இன்பக்
காட்சிப் பொருளென்று தேடுவார்! 5

உச்சி இடிந்து பொசுக்கினும், மேரு
உலகம் வெடித்து விழுங்கினும் இனி
அச்ச மில்லை புதுநாட் டினிலே!
அடிமைச் சுமை இல்லை வாழ்வினிலே! 6

RangaRakes tamilnavarasam.com

## தொண்டு செய்

தாயென்று சொல்லுவாய்; தந்தையென் பாய்நீ
சந்தைக்குச் சென்ற துண்டோ?
தாயிற்சி றந்தது தாய்நா டென்றுநம்
தமிழர்கள் வாழ்ந்து வந்தார். 1

பெண்டென்று சொல்லுவாய்; பிள்ளைஎன் பாய்நீ
பேச்சிற்ச லிப்ப தில்லை
தொண்டுசெய் நம்தமிழ் நாடே சிறந்தது
துயர்சேர்க்கும் பெண்டு பிள்ளை. 2

கைப்பொருள் தேடி ஓடி அலைந்தனை!
காதற்ற ஊசி இல்லை
மெய்ப்பொருள்நீ தேடு! நாட்டின் விடுதலை
வேறொன்றும் வேண்டாம்! வேண்டாம்! 3

நாட்டிற்குச் செய்தது எத்துணை என்றுநீ
நாளும்நி னைத்த துண்டா?
காட்டிற்குச் செல்லும் கிழமையுற் றாயுன்
காளைப் பருவ மெங்கே? 4

பற்றைவிலக் கென்று சொல்லுவார் சொல்லுக!
பற்றிக்கொள் நாட்டுப் பற்றை!
உற்றதுயர் போக்க உழைத்திடு வாயடா!
உன்நாடுன் பாட்டன் சொத்தே! 5



RangaRakes tamilnavarasam.com

## செயத் தக்க செய்

இருள்திரையைக் கிழித்தெறிந்தான் கீழ்த்திசையில் பரிதி
ஈடற்ற திராவிடத்தின் தந்தைபெரி யார்போல்!
உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் இனியஞ்ச வேண்டாம்
ஊமைகளாய் நம்நாட்டார் திராவிடர்கள் பனியால்
கருகிவிட்ட மொட்டுகளாய் வாழ்ந்திருந்த காலம்
கலைந்தோடு கார்போலத் தொலைந்தோடிற் றின்றே
திருமிக்க திராவிடனே! நீநாட்டை ஆள்வாய்!
தைபிறக்க வழிபிறக்கும் செயத்தக்க செய் 1

கரும்பாலை சுற்றுகின்ற முதுகாளை போலக்
கடவுளென்ற மேற்பூச்சில் பொய்க்கதைகள் சொல்லி
இரும்பாக்கி னர்மனத்தை ஆறலைக்கும் கூட்டம்
இழிவுசெய்தார் பெண்குலத்தைக் கலைமொழியை வாழ்வை;
மருந்திரண்டு நான்கண்டேன்; திராவிடனே! சொல்வேன்
வாழ்வதற்கும் உன்நாட்டை நீஆள்வ தற்கும்
கரும்புமொழி யார்உயர்த்து; ஆரியத்தை நீக்கு!
தைபிறக்க வழிபிறக்கும்! கையாண்டு பாராய்! 2

குளம்கோயில் திறந்துவிட்டால் குலம்ஒழியு மென்றே
கொண்டுவந்தார் ஆளவந்தார் புதுச்சட்டம்; மக்கள்
உளம்மாறக் காணோமே! இதற்கென்ன செய்வார்
ஊறிவிட்ட ஆரியத்தை வேரோடு கல்ல
இளந்தமிழா! திராவிடனே! நீஎழுவாய் இன்னே!
இதுவன்றோ செயவேண்டும்; மற்றவைகள் வீணே!
வளமான தைபிறக்க வழிபிறக்கும் தம்பி!
மகிழ்வோடு எதுவரினும் செயத்தக்க செய்வாய் 3

RangaRakes tamilnavarasam.com

வயலெல்லாம் நெற்கதிர்கள் பாலேறிச் சாய்ந்து
வாராத தலைபோல மடிந்துபின்னிக் கிடக்கும்
துயரெல்லாம் மாய்ந்ததென எண்ணமிட்டாய் அந்தோ!
தொந்தியப்பர்க் கதுசொந்தம்; உனக்கென்ன உரிமை?
புயல்போலப் பெரும்புரட்சி செயவேண்டும் நாட்டில்
புதுவாழ்வை நீயடைய உன்நாட்டை ஆளத்
தயங்காதே! திராவிடனே! விரைந்தெழுவாய் இன்னே!
தைபிறக்க வழிபிறக்கும்! செயத்தக்க செய்யே! 4

## உனக்கேன் இல்லை அக்கவலை

விண்ணும் மண்ணும் விரிகடலும்
வெவ்வே றென்றே பனிதனை
எண்ணம் முதிர்ந்த இந்நாளில்
உனக்கேன் இல்லை அக்கவலை?
மண்ணின் விடுதலை பிறப்புரிமை!
மகனே எழுவாய்! போர்முரசும்
விண்ணும் அதிர அறைவாய்நீ!
விடுதலை! தாயகம் விடுதலையே! 1

அண்டை அயலில் வாழ்ந்திடுவோர்
அத்தனை பேரும் மானிடரே!
சண்டை சச்சர வில்லாது,
தாயக விடுதலை வேண்டாது,
மண்டே இட்டே ஒருநாடாய்
வாழ்தல் எங்கு நீகண்டாய்?
முண்டி எழுவாய்! போர்முரசம்
முழக்கு! தாயகம் விடுதலையே! 2

சொல்லைக் குண்டே தனிவரப்பு!
குளத்துக் குண்டே பெரியகரை!
எல்லைக் கோடு நாடெங்கும்
இருக்கக் கண்டும் என்செய்தாய்?
பல்லைக் காட்டி உனைஏய்க்கப்
பசப்பும் வார்த்தை ஒருநாடு
சொல்லைக் கேட்பாய்! போர்முரசம்
தூக்கு! தாயகம் விடுதலையே! 3

RangaRakes tamilnavarasam.com

தனித்து வாழ்ந்தால் தமிழ்வாழும்!
தரளம் பொன்னும் நமதாகும்!
இனித்த கலைகள் கைத்தொழில்கள்
எங்கும் நிறையும்! வாழ்வுயரும்!
குனித்த பார்வை இனிவேண்டாம்!
கொட்டி முழக்குப் போர்முரசம்!
மனித்தப் பிறப்பின் உயிர்மூச்சு
தாயக மண்ணின் விடுதலையே!

## வாழ்க்கை

நம்பிக்கை யின்பிறப்பே நல்வாழ்க்கை உண்மை!
நான்சொன்ன புதுமையில்லை; பலர்கண்ட ஆய்வாம்!
தும்பிக்கை யானைநாம் தொழுதெழுந்தால் நூலின்
தொல்வளனும் பெருஞ்சிறப்பும் தன்புலமை ஊற்றின்
தெம்பிழக்கச் செய்ததெது? நான்சொன்னால் நீங்கள்
திசைதிருப்ப ஏதேதோ சொல்லிடுவீர் என்மேல்!
வம்புக்கே வந்திடுவீர்! வந்தாலும் நானோ
மறப்புலியே என்றென்றும்! நீர்மறக்க வேண்டாம்! 1

என்மகளின் மாதரியின் அழகொளிரும் நீண்ட
எழில்மாட முன்றில்லில் ஏதேதோ எண்ணிச்
சின்ன இளம் சிறுகுருவிச் சிட்டிளையர் கூட்டச்
செந்தமிழைக் கேட்டிருந்தேன்; அகப்பொருளைக்கேட்டேன்!
முன்னவர்கள் அகப்புறத்தை நமக்களித்த மேலோர்
மூதறிவை நான்எண்ணி வியக்கின்ற நேரம்
பின்வந்தாள் என்பெயர்த்தி பொன்னரசிக் குட்டி
பேரிடியில் எனை அணைத்தாள்; இதுதானே வாழ்க்கை! 2

வாழைமடல் பார்த்திருந்தேன்; வாழைமரப் பூக்கள்
வரிசையைநான் பார்த்திருந்தேன்; அப்பூக்கள் காயின்
சூழலைநான் பார்த்திருந்தேன் கொல்லருலை வந்த
துளைதுளைக்கும் உளியங்கள் நான்கண்டேன்; வாழ்வின்
தாழ்நிலையைப் போக்குதற்கு யாரிங்கு நல்ல
தடைக்கல்லைப் பெயர்த்தவர்கள் சொல்லட்டும் கேட்போம்
ஏழையில்லை; செல்வரில்லை; என்கின்ற என்றன்
இக்கொள்கை நிலைநாட்டல் என்வாழ்க்கை நோக்காம்! 3

RangaRakes tamilnavarasam.com

நான்குறிஞ்சி நிலத்தினிலே பிறந்தவனும் இல்லை!
நல்லருவி பாய்ந்துவரும் நல்லருவிச் சாரல்
தேன்குறிஞ்சிப் பூவாடும் பொரிவண்டும் இல்லை!
தென்பொதிகைத் தமிழ்த்தென்றல் நான்இல்லை; இல்லை!
வான்குறிஞ்சி முழுநிலவின் மையத்தைத் தேடி
வருகின்ற வாலறிவோ எனக்கில்லை கண்டீர்!
மான்குறிஞ்சி பாலையிலே நான்கண்ட துண்டு!
வாழ்க்கையெனில் இன்பதுன்பம்! நம்பிக்கை வேண்டும்! 4

ஏடெடுத்தே எழுதத்தான் நினைக்கின்றேன்; என்றன்
எழுத்தினால்நல் சீர்பெற்றுத் திருப்புகழை பெற்றுப்
பாடெடுத்தே வருகின்ற பல்லோர்கள் என்றன்
பனிமலையின் குளிர்அருவி நலன்வாழ்த்தும் என்றன்
நாடெடுத்த எனதாசான் பாவேந்தன் தந்த
நற்கவிதை தனித்தமிழில் நாவூறும் செந்தேன்!
கூடெடுத்தே நோய்நொடியை இந்நாட்டில் வாழ்வோர்
குறைமுடிக்க நினைக்கின்றேன்! அதுவேஎன் வாழ்க்கை! 5

RangaRakes tamilnavarasam.com

## பாவியற்றும் பயிற்சிபெற வேண்டும்

சிட்டிணைகள் முன்றிலிலே தாவ—வீட்டுச்
சிறுகன்று தாய்நினைந்து கூவத்—தேடிக்
கட்டிளைஞன் தென்னகத்தான்
கைகுவித்து வணக்கமென்றான்; நின்றான்!
கனியைத் தந்தான்! 1

'தமிழருவி' ஏடெடுத்துப் பார்த்தேன்—பண்டைத்
தமிழ்வாழ்வை எண்ணியெண்ணி வேர்த்தேன்—இன்று
தமிழிளைஞர் முனைந்துவிடில்
தமிழ்நாடும் தாய்மொழியும் வாழும்
யாவும் சூழும்! 2

நல்லதமிழ் நூலோத வேண்டும்—அதில்
நன்மைபல கற்றாய வேண்டும்—தமிழ்ப்
பல்கலையைப் பலநாட்டில்
பரப்புதற்குத் தமிழ்இளைஞர் யாண்டும்
முயலல் வேண்டும் 3

முன்னவர்கள் வாழ்வெண்ண வேண்டும்—வீசி
முன்நடந்து செயல்முடிக்க வேண்டும்—இளந்
தென்னவர்கள் துள்ளியெழின்
பின்னவர்கள் போய்ஒளிவார் காடே!
அடைவோம் வீடே! 4

பாவியற்றும் பயிற்சிபெற வேண்டும்—எழில்
பார்த்தெழுதும் பயிற்சிபெற வேண்டும்—தமிழ்க்

காநுழைந்து தேனெடுத்துக்
கடல்கடந்தும் யாவருக்கும் தருவோம்!
பெருமை பெறுவோம்! 5

பாட்டிசைக்கப் பயிற்சிபெற வேண்டும்—ஈப்போல்
பாடுபட்டு வளம்சேர்க்க வேண்டும்—கொடும்
காட்டெருமைக் கஞ்சாது
நாட்டுவளம் பொதுசெய்தே உண்போம்!
யாவரும் உண்போம்! 6

மற்றவர்போல் வளர்ச்சிபெற வேண்டும்—எனில்
வகைவகையாய்ப் படித்துயர வேண்டும்—விண்
சுற்றிவரப் பணைநொறுக்கத்
தொழில்நுணுக்கம் விஞ்ஞானம் வேண்டும்
கற்க வேண்டும்! 7

"தமிழருவி" தருவளத்தினாலே—புவி
தழைத்துநனி செழித்ததுமுன்னாளே—செந்
தமிழ்க்கலையும் தமிழினமும்
தமிழருவி தருவளத்தி னூடே
வாழ்க நீடே! 8

---

20—10—68

RangaRakes tamilnavarasam.com

## இதுவா ஆட்சி?

கெட்டுநொந்து வாழ்ந்திருந்தார் ஆட்சி ஏற்றார்;
கேடில்லை நாட்டிற்கென் றெண்ண மிட்டோம்,
விட்டேறும் வெள்ளையனே மேலாம் என்று
மெய்ப்பிக்கத் துணிந்திட்டார் ஆளவந்தார்;
பட்டினியில் வாடுகின்ற ஏழைக்காகப்
பரிந்தன்று பலபேசி எதிர்த்துநின்றார்
பட்டினியென் றாலின்றே ஆளவந்தார்
பார்க்கின்றார் வேறெங்கோ! இதுவா ஆட்சி? 1

பிறர்க்கின்னா செய்யாமல் நாங்கள் நாட்டை
ஆண்டிடுவோம் என்றன்று பேசி வந்தார்
பிறர்க்கின்னா; நமக்கென்ன? என்று நாட்டைப்
பெற்றவுடன் நினைக்கின்றார்; இதுவா ஆட்சி?
பொறுப்பேற்றார் தமிழ்நாட்டில்; தமிழுக் காகப்
பொன்முடியை எதிர்பார்த்தோம்; எங்கள் நெஞ்சில்
வெறுப்பேற்றிக் காதறுந்த செருப்பாம் இந்தி
மேலென்று கொண்டுவந்தார்; இதுவா ஆட்சி? 2

பேச்சுரிமை எழுத்துரிமைக் காக அந்நாள்
பெருங்கிளர்ச்சி செய்துவந்தார் ஆள வந்தார்
பேச்செழுத்து நாடகத்திற் கிவர்கள் இன்று
பெரும்பூட்டுப் போடுகின்றார்; இதுவா ஆட்சி?
வீச்சுக்கும் தடியடிக்கும் ஆள வந்தார்
மிகுபொறுமை காட்டிநின்றார்; உரிமைக் காகக்
கூச்சலென்றால் தொழில்நிறுத்தக் கூட்டம் என்றால்
குண்டுகள்பா ழாக்குகின்றார் இதுவா ஆட்சி? 3

RangaRakes tamilnavarasam.com

சிற்றூரில் வாழ்கின்ற உழவர்க் காகத்
தெருவெல்லாம் பள்ளிசெய்வோம் என்றார் ஆள்வோர்;
சிற்றூரை விழிப்பூட்டும் கணக்கா யர்க்குப்
பசியென்றால் சீறுகின்றார் ஆள வந்தோர்;
உற்றபசி இங்கொருவர்க் குண்டென் றாலோ
உருக்குலைப்போம் கொடுமையினை என்றார் ஆள்வோர்
நற்றமிழர் உயிர்வாட்ட உணவை ஒவ்வோர்
நாடோறும் குறைக்கின்றார்; இதுவா ஆட்சி? 4

RangaRakes tamilnavarasam.com

## வறுமை

வறுமையைப் பாடென்றான் வந்தொருவன்! அந்த
வந்தவனோ வளர்தாடி நரைமீசைக் காரன்!
சிறுமையை நான்போக்க வாழ்கின்றேன்; என்றன்
செயலினிலே சிறுகடுப்பும் நான்கண்ட தில்லை;
மறுமைக்கே வாழ்கின்றேன்; மனையறத்தில் ஈன்ற
மக்களின்மேல் பற்றில்லை; பரிவில்லை என்றான்;
பொறுமைக்கே எல்லையுண்டாம் வாய்மூடி நின்றேன்!
புல்லுருவி யால்நாடு புதுமைகண்ட துண்டோ? 1

மண்மண்டி மனமுருளிரின் ஒளிமண்டிச் சேர்த்த
வாழ்க்கைதான் வறியோரின் இன்றுள்ள வாழ்க்கை!
புண்மண்டி வாழ்வதல்லால் போக்கிடந்தான் உண்டோ?
புத்துலகம் புதுவாழ்வு புதுநோக்கம் என்றே
விண்மண்டி வருகின்ற இளந்தென்றல் போல
வெல்லத்தைத் தடவுவதே இன்றுள்ள ஆட்சி!
கண்மண்டிக் காரிருள்வாழ் கல்லாத மக்கள்
கதிர்ஒளியில் களிப்பினிலே வாழ்வதுதான் வாழ்க்கை! 2

செல்வந்தர் பெருந்திருட்டே இன்றுள்ள நாட்டின்
சிறுமைக்கும் வறுமைக்கும் அடிப்படையாம்! ஆன்ற
செல்வந்தர் பலதுறையில் தூயதமிழ் பாடித்
துறைதோறும் துறைதோறும் தொகுத்துரைத்தும் என்றும்
மல்வந்தார் எழுச்சிபெற்றால் வறுமை யறக் கூடும்!
வழியிதுதான்! மாற்றுவழி தென்படவே இல்லை!
பல்வந்தார் குழந்தைகளின் பண்பாக்க வல்ல
படிப்புணர்த்தும் கணக்காயர் வறுமைக்கும் மாற்றாம்! 3

RangaRakes tamilnavarasam.com

காஇனிக்கப் பாடுகின்ற குயிலினத்தைப் போலக்
கசிந்துருகிக் கைப்பொருளைக் கவர்கின்ற ஈனை
மாஇனிக்க மாப்பிசைந்து வழங்குகின்ற எத்தன்
வாழ்கின்றான்; வறுமையற்று வளம்செழிக்கப் போமோ?
பாஇனிக்கப் பாடுகின்றான் பாவல்லோன்; அந்தப்
பைந்தமிழன் வறுமையினை எவன்கண்டு கொண்டான்?
நாஇனிக்கப் பொதுமேடை ஒலிபெருக்கி முன்னர்
நான்என்பான்; நம்பிக்கை வைத்தெடுத்துப் போவான்! 4

பிறப்பினிலே தாழ்ந்தஉயிர் உயர்ந்தஉயிர் இல்லை!
பின்வந்த சரக்கிதுவாம்; அறிவற்று ஏற்றோம்!
பிறப்பினிலே வறுமைவந்தே உடன்தொடர்ந்த தில்லை!
பின்வந்த சரக்கிதுவாம், திருடர்களின் செய்கை!
பிறப்பினிலே உயிரினங்கள் யாவையுமே ஒன்றாம்!
பேச்சில்லை வறுமைக்கே கொடுவாளைத் தூக்கே!
இறப்பினிலே யார்வந்தார்? எதைஎதையோ கண்டார்!
எடுவாளை தயங்காதே வறுமைக்கு மாற்றே! 5

வெட்டரிவாள் கையெடுத்தால் வேற்றுமைஇங் குண்டோ?
வீரத்தைக் காட்டாமல் வீழ்வதுவோ வாழ்வு?
கட்டரிவாள் எடுத்துத்தான் நன்செய்நெல் அறுத்தே
களத்தினையே கண்டவன்நீ மறந்தாயோ! வறுமை
முட்டரிவாள் தேக்கியவன் என்றும்நம் நாட்டின்
வறுமையைத் தேக்கியவன் வாழவிடு வாயோ?
சுட்டரிவாள் எத்தர்கள்! தூக்கிமண் பூத்த
குளத்தினிலே துவைத்திடுவாய் வறுமைக்கு மாற்றே!

RangaRakes tamilnavarasam.com

## கன்னலடி! கைப்பதில்லை!

வெந்துபூத்த அந்திசாயும்
படரிருள் நேரம்—அவன்
வந்திருந்து காத்திருந்தான்
குளக்கரை யோரம்! 1

பட்டிமகன் கட்டிவெல்லம்
எட்டி இருந்தான்!—விழி
விட்டுவிட்டுத் தூதனுப்பிக்
கிட்டி யமைத்தான்! 2

மெல்லவந்தான் சொல்லளந்தான்
பல்லைக் காட்டினான்!—மலர்க்
கொல்லையிலே வண்டுமொய்க்கக்
குளிர்ந்து நோக்கினான்! 3

மைக்குழலில் பூத்தமுல்லை
மலரைச் சூட்டினான்!—வளைக்
கையிழுத்து மெய்யணைத்துக்
கன்னம் கிள்ளினான்! 4

மேலாடை காற்றலைக்க
வெட்கிக் குனிந்தேன்!—அவன்
பாலாடை நூலாடை
பற்றி இழுத்தான்! 5

RangaRakes tamilnavarasam.com

அங்குமிங்கு மாகஎட்டிப்
பார்த்துச் சிரித்தான்!—வளச்
செங்குமுதத் தேன்மலரின்
மொட்டு விரித்தான்! 6

இங்கிருப்போர் அங்கிருப்போர்
என்ன நினைப்பார்?—வெயில்
மங்கவில்லை சங்கையில்லை
என்று வெறுப்பார்! 7

முன்னிலவு பொன்னரிவாள்
முளைத்ததே என்றேன்!—அவன்
கன்னலடி கைப்பதில்லை
கைவிடேன் என்றான்! 8

25—9—71

கவிஞர்க்குக் காதலி ஒருத்தி இருந்தாள். அவள் கவிஞரை விட்டு விலகிச் சென்றுவிட்டாள். அக்காலத்தே அவளை நினைத்துப் பாடிய பாடல்கள் இவை!

RangaRakes tamilnavarasam.com

## நீயும் நானும்

சாந்துக் கல்லடி நீயெனக்கு!—நல்ல
சந்தனக் கட்டை நானுனக்கு!
தீந்த மிழடி நீயெனக்கு!—இன்பத்
திருக்குறளடி நானுனக்கு! 1

முல்லைக் கொடியடி நீயெனக்கு!—ஏற
முளைத்த மரமடி நானுனக்கு!
அல்லிப் பூவடி நீயெனக்கு—தேன்
அள்ளும் வண்டடி நானுனக்கு 2

குட்டைப் புதுமலர் நீயெனக்கு!—பாசிக்
குளத்து நீரடி நானுனக்கு!
வட்ட நிலவடி நீயெனக்கு!—நீல்
வானப் பரப்படி நீயெனக்கு!— 3

மாந்தளிர்த் தோப்பு நீயெனக்கு!—இசை
வரிக்குயிலடி நானுனக்கு!
தாமரை மொட்டடி நீயெனக்கு!—வானத்
தங்கப் பரிதி நானுனக்கு! 4

ஆடும் மயிலடி நீயெனக்கு—வான்
அடர்ந்த முகிலடி நானுனக்கு!
ஓடும் காவிரி நீயெனக்கு!—முத்தம்
உமிழும் கடலடி நானுனக்கு! 5

குத்து விளக்கடி நீயெனக்கு!—நெய்க்
கொழுந்துச் சுடரடி நானுனக்கு!
தித்திக்கும் பாட்டடி நீயெனக்கு!—பொருட்
செறிவின் சுவையடி நானுனக்கே! 6

8—2—64

RangaRakes tamilnavarasam.com

## அவள் வேண்டும்!

அவள் வேண்டும்! அவள் வேண்டும்!
அவளே வேண்டும்!
பவளஇதழ் தவளநகைப் பசப்புக்காரி!
பெருங் குறும்புக்காரி! 1

முழுநிலவோ முகந்தானோ தாமரையோ
முகத்தில் பூத்த—செங்
கழுநீரோ கயல்தானோ கூர்விழியோ?
கற்கண்டோ செஞ்சொல்? 2

மான்தானோ! மயில்தானோ! மடப்பிடியோ!
வானில் பூத்த—ஒளித்
தேன்நிலவோ! தென்றலிளம் பூங்காற்றோ!
சிரிப்புக் காரி! 3

வெட்டி வெட்டிக் கண்சிமிட்டும் நெட்டுக் காரியோ!
வெண்ணிலவில் குங்குமம்சேர் பொட்டுக் காரியோ!
செட்டுக்காரியோ! தமிழ்மெட்டுக் காரியோ! நெஞ்சைத்
தொட்டுத் தொட்டுப் போய்மறையும் துடுக்குக்காரியோ? 4

தொட்டெடுக்க எட்டிப் பாயும் குட்டைக் கயலோ!
தோகை மயிலோ! பழத்தோப்புக் குயிலோ!
கட்டிக் கரும்போ! சுவைக்கன்னற் றமிழோ!
கனியமோ! நடை ஒயிலமோ! 5

---

4—10—'71

## எழுந்தருளாயோ!

வானிருள் மாய்ந்தது! மாய்ந்தது மடமை!
    மங்கின மீனினம்! வந்தது குளிர்கால்!
தேன்மலர் அவிழ்ந்தது! பிறந்தது தெளிவு!
    திசையெலாம் வெள்ளொளி! வருங்கதிர் வாழ்த்து!
மான்விழி மங்கையே! இன்னுமா உறக்கம்?
    வாழ்வளி உதயசூரியன்வரக் காணக்
கூன்பிறை நெற்றியைத் தலையணை விலக்கிக்
    குலமகளே! பள்ளி எழுந்தரு ளாயே!

தாவிய ஒளியிடைக் கீழ்த்திசை விடிமீன்
    தகுமணை முல்லைபோல் அலர்ந்ததே! கொழுந்திச்
சேவலின் கூவின சிறகினை அடித்தே!
    சிறுசிறு சிட்டுகள் சிலம்பின முன்றில்!
மேவிய பள்ளியில் மலரணை உனது
    மதிமுகம் விலக்காது இன்னுமா உறக்கம்?
கோவியல் ஒளிசெயும் எழுகதிர் வாழ்த்தக்
    கொடியிடையே பள்ளி எழுந்தரு ளாயே!

கன்றுகள் இயம்பின! இயம்பின நாரை!
    கிளையினில் புள்ளினம் இசைப்பதைக் கேளாய்!
பிள்ளைகள் விழித்தனர்! விழித்தது மனையும்!
    பெரியவர் தாழினை விலக்கினர் முகப்பில்!
தெள்ளிய உணர்வளி உதயசூரியனைச்
    செந்தமிழ் பாடிநீ வாழ்த்திடா தின்னும்
பள்ளியில் கிடப்பதோ பவர்நகை யாரோ?
    பால்நிலவே! பள்ளி எழுந்தரு ளாயே!

கன்றுகள் தாய்மடி நினைத்தன எழுந்தே!
காளைகள் உதறின குளிருடல் தெளிந்தே!
குன்றிடை முழங்கின வைகறை முரசம்!
மங்கையர் நீர்க்குடம் ஏந்தியே நடந்தார்!
இன்றுள பசிப்பிணி வறுமையைக் களைய
எழுந்தது விண்ணிடை உதயசூரியனும்!
ஒன்றிய பள்ளியில் இன்னுமா உறக்கம்?
ஒண்டொடியே! பள்ளி எழுந்தருளாயே! 4

அண்டையில் ஆய்மகள் தயிரினைக் கடைந்தாள்!
அவ்வொலி செவிப்புகா தின்னுமா உறக்கம்?
வண்டலை இடும்ஊர் ஆற்றிடைப் பெண்கள்
மலர்விழி சிவந்திட மூழ்கியே வந்தார்!
கொண்டலைக் கிழித்துமே கொடுமழை விலக்கிக்
குரைகடல் உதயசூரியன்எழுந் ததுவே!
கெண்டைகள் வெட்கிடு செவ்வரி விழியாய்!
கிளிமொழியே! பள்ளி எழுந்தருளாயே! 5

காக்கைகள் கரைந்தன! கரைந்ததே இருளும்!
கடிமலர்க் காவினில் கூவின குயில்கள்!
மேக்கினில் இருளும் மறைந்தது விரைந்தே!
விரிமலர் வண்டும் இசைத்தன கேளாய்!
சேக்கையில் வைகறை இன்னுமா உறக்கம்?
செங்கதிர் உதயசூரியன்வரக் காண
வாக்கினை அருளி மலரொடு வழுத்த
மறமகளே! பள்ளி எழுந்தருளாயே! 6

---

1—12—66

RangaRakes tamilnavarasam.com

## என் ஐக்கு உரைப்பாயடி!

மாதுளை ஏந்தியே மங்கை நடந்துவந்தாள்
மாதுளை கண்டு வருந்தினன்—யாதோசொல்
கொள்முதல் என்றான் குளிர்விழியைத் தூதனுப்பிக்
கொள்முதல் என்றாள் குனிந்து! 1

தையால்! எனவிளித்தான்; தாழ்விலக்கி நின்றேன் நான்!
கையால் அணைத்துச்செங் காய்க் கோவைக்—கொய்யாக்
கனியும் சுவைத்தான்! கால்வாய்க் குளிர்நீர்
இனிமை அளித்தான் இரா! 2

சந்தனத்திற் கேங்கித் தவித்திருக்கத் தோழியே!
சந்தனத்தைப் பூசமனம் தாங்குமோ?—சந்தனந்தம்
என்னை அலைக்காமுன் என்னை அறியாமுன்
என்னைக் குரைப்பா யடி! 3

## எவர் தடுக்கக் கூடும்?

பூத்திருக்கும் தேக்குமரம் போலவே—அவள்
காத்திருந்தாள் வேலியின் பின் ஞாலே!
சேர்த்தணைத்துக் கண்ணைப் பொத்தி நின்றான்!
அவளை வென்றான் 1

அணைத்தகையைக் கிள்ளிக் கிள்ளி
அங்கு மிங்கு மாகத் துள்ளிப்
பணைத்தோளை வடுருவிப் பார்த்தாள்!
முகம் வேர்த்தாள்! 2

சிட்டிணையைச் சுட்டிச் சுட்டிச்
செடிகொடியைக் கிட்டிக் கிட்டித்
தொட்டிழுத்தான் பட்டப்பகல் நேரம்
வேலி யோரம்! 3

அவள்பார்ப்பாள் இவள்பார்ப்பாள் வேண்டாம்!
அடுக்கடுக்காய்க் கட்டுக்கதை உண்டாம்!
பவளவாய் உனக்கன்றி யார்க்காம்!
உரிமைப் போர்க்காம்! 4

மண் கலக்கும் விண் கலக்கும் தென்றல்—இருவர்
மனங்கலந்து போனபின் மன்றல்!
என் கலந்து போனபின் என்னும்?
பிறர் பின்னும்! 5

அவர் தடுப்பார் இவர் தடுப்பார் என்றே—வீட்டுள்
அடங்கியிருந்த நாளெல்லாம் சென்றே
எவர் தடுக்க இனிக்கூடும்? வாழ்வோம்!
இன்பம் சூழ்வோம்! 6

---

30—10—71

RangaRakes tamilnavarasam.com

## காதல்

காதல்! காதல்! காதல்! காதல்!—எங்கும்
காதல் பெருவாழ்வே! வாழ்க!
மோதும் கடல்சூழ் உலகினில் எங்கும்
முதிர்ந்த பெருவாழ்வே!—காதல்
முதிர்ந்த பெருவாழ்வே! 1

பெண் :

தென்றல் மலர்தழுவும் நேரம்—மேற்கில்
செவ்வொளி வான் தழுவும் நேரம்
குன்றம் எதிர்ஒலிக்கக் கேட்டேன்—தோப்பில்
குயிலினம் அழைக்கக் கேட்டேன்! 2

ஆண் :

வண்டு மலர்தழுவப் பார்த்தேன்—கிளை
மான்கள் இணைந்து துள்ளப் பார்த்தேன்
கொண்டல் மலைதழுவப் பார்த்தேன்—ஓடை
கொட்டு முழவிசைக்கக் கேட்டேன்! 3

பெண் :

ஆறு கடல்தழுவக் கண்டேன்—கடல்
அலைகள் கரைதழுவக் கண்டேன்
வேறு வேறான உயிர் ஒன்றாய்—நெஞ்சில்
வேரூன்றிப் போவதுதான் காதல்! 4

RangaRakes tamilnavarasam.com

ஆண் :

கிள்ளை இணைந்து கத்தக் கேட்டேன்—சிட்டு
கிளையில் இணைந்திருக்கக் கண்டேன்
கொள்ளை கொள்ளை காதல் இன்பம்!—உன்றன்
குளிர்விழிக் கீடோ பேரின்பம்?

இருவரும் :

எழுத்துப் புணர்ச்சியினைப் போலே—நாம்
இரண்டற ஒன்றிவிட்ட தாலே
இழுக்கின்றி வாழ்வோம் புகழோடே!—நாம்
என்றென்றும் வாழ்வோம் மகிழ்வோடே!

---

1—2—65

RangaRakes tamilnavarasam.com

## நிலவைக் கண்டேன்

**ஆண் :**

நிலவைக் கண்டேன்
நிலவைக் கண்டேன்
நிலவைக் கண்டேனே—பால்
நிலவைக் கண்டேனே! 1

**பெண் :**

நிலவுக் கொளிதரு
கதிரைக் கண்டேன்
கதிரைக் கண்டேனே—செங்
கதிரைக் கண்டேனே! 2

**ஆண் :**

நிலவைக் கண்டேன்
நிலவைக் கண்டேன்
நிலவைக் கண்டேனே—என்
நெஞ்சில் கொண்டேனே! 3

**பெண் :**

நிலவுக் கொளிதரு
கதிரைக் கண்டேன்
கதிரைக் கண்டேனே—நான்
காதல் கொண்டேனே! 4

RangaRakes tamilnavarasam.com

ஆண் :

வில்லைக் கண்டேன்
வேலைக் கண்டேன்
சேலைக் கண்டேனே—செந்
தமிழைக் கண்டேனே! 5

பெண் :

தோளைக் கண்டேன்
வாளைக் கண்டேன்
ஆளைக் கண்டேனே—ஆண்
அழகைக் கொண்டேனே! 6

ஆண் :

பிடியைக் கண்டேன்
நடையைக் கண்டேன்
பின்னல் கண்டேனே—வான்
மின்னல் கொண்டேனே! 7

பெண் :

பிடியை வீழ்த்தும்
புலியைக் கண்டேன்
மலையைக் கண்டேனே—வான்
வலியைக் கண்டேனே! 8

ஆண் :

மானைக் கண்டேன்
தேனைக் கண்டேன்
மங்கை கண்டேனே—இச்
செங்கை கொண்டேனே! 9

RangaRakes tamilnavarasam.com

இருவரும் :

இன்பப் பெருநாள்
அன்புத் திருநாள்
வாழ்வின் முதல் நாளே—வாழ்கநம்
வாழ்வின் முதல் நாளே!

---

2—2—'65

RangaRakes tamilnavarasam.com

## நெடுந்தூரம்

வட்ட முழுநிலவே! அமிழ்தே!
மாமதிப் பெண்ணரசே!
எட்டி உனைத்தாவ வொண்ணு
தெங்கோநீ பூத்துவிட்டாய்!
கட்டிக் கரும்பவளும் உனைப்போலென்
கருத்தில் கலந்துவிட்டாள்!
எட்டித் தழுவமென்றால் அவள்பூத்த
இடமோ நெடுந்தூரம்! 1

தேன்மொய்க்கும் வண்டினங்காள்! அழகொளிர்
சேயிழையார் விழிகாள்!
நான்மொய்க்க எண்ணவொண்ணுத் தேனடை
நன்மலை பூத்துவிட்டீர்!
கான்மொய்க்கப் பாட்டயரும் குயிலாளென்
கருத்தில் கலந்துவிட்டாள்!
ஊன்மொய்க்கத் தழுவமென்றால் அவள்பூத்த
ஊரோ நெடுந்தூரம்! 2

வான்தவழ் மாமுகிலே! அழகே!
மலர்க்கூந்தல் நல்லொளியே!
நான்உனை நண்ணவொண்ணு மலைஉச்சி
நடுவில்நீ நண்ணிவிட்டாய்!
மான்விழிப் பெண்ணவளும் உனைப்போலென்
மனதில் கலந்துவிட்டாள்!
ஊனில் தழுவமென்றால் அவள்பூத்த
ஊரோ நெடுந்தூரம்! 3

RangaRakes tamilnavarasam.com

பொங்கு கடல்விளைவே! பவழமே
    பூவையர் செவ்வுதடே!
தங்கி உனைத்தழுவ வொண்ணாத்
    தடங்கடல் பூத்துவிட்டாய்!
மங்கை நல்லாளவளும் உனைப்போல்என்
    மனத்தில் கலந்துவிட்டாள்!
செங்கை அணைவமென்றால் அவள்பூத்த
    திசையோ நெடுந்தூரம்! 4

எட்டா திருந்தாலும் வண்கடல்
    எங்கோ மறைந்தாலும்
விட்டு விடுவேனோ? எனதுயிர்
    மேவிய பெண்ணலவோ?
கட்டுக் கடங்காத என்தமிழ்க்
    காதல் பெருவலியால்
மட்டார் குழலாளை வாழ்வை
    அடைவேன்! அடைவேனே! 5

RangaRakes tamilnavarasam.com

## அங்கே! அங்கே!!

மாரியெங்கே? மண்ணெங்கே?
வருவழியோ நெடுந்தூரம்!
வழிநில்லா தோடிவரும்!
அங்கே! அங்கே!!
ஏரியெங்கே? கொக்கெங்கே?
இடைவழியோ நெடுந்தூரம்!
இறகடித்துப் பறந்துவரும்
அங்கே! அங்கே!! 1

மடல்எங்கே? வண்டெங்கே?
வருவழியோ நெடுந்தூரம்!
மறவாமல் ஓடிவரும்
அங்கே அங்கே!!
கடல்எங்கே? ஆறெங்கே?
கடக்கும்வழி நெடுந்தூரம்!
கரைகடந்தே ஓடிவரும்
அங்கே! அங்கே!! 2

அலையெங்கே? கடலெங்கே?
அளக்கவொண்ணு நெடுந்தூரம்!
ஆனாலும் ஓடிவரும்
அங்கே! அங்கே!!
நிலவெங்கே? கடலெங்கே?
நெடுந்தூரம்! என்றாலும்
நீளொளிக்கை நீட்டிவரும்
அங்கே! அங்கே!! 3

RangaRakes tamilnavarasam.com

தீயெங்கே? வேய்எங்கே?
தெரியாமல் இருந்தாலும்
தேய்வினிலே தோன்றிவிடும்
அங்கே! அங்கே!!
நீஎங்கே? நான்எங்கே?
நெடுந்தூரம்? என்றாலும்
நினைப்பெல்லாம் வட்டமிடும்
அங்கே! அங்கே!!

---

1—11—71

## ஓடோடிப் போனாய் நீ!

ஏரிக் கரையினிலே மாலை
எரிந்துவீழ் பொன்னொளியில்
கூர்விழி காட்டிக் காட்டி—உள்ளம்
கொண்டதை மறந்தாயோ? 1

சேரிப் பரத்தைஎன் தெய்வம்
என்றுநான் செப்பிய தீந்தமிழை
ஊரறியச் செய்தாய்! பின்னேன்
ஓடோடிப் போனாய்நீ? பெண்மை 2

எழுத நினைக்கின்றேன் காதல்
இன்ப நிகழ்ச்சிகளை!—நன்செய்
உழுத வயல்முளைக்கும் கோரையை
உழவர் வளர்ப்பாரோ? 3

அழுது தொலைவதல்லால்—எனதன்பை
ஆரிடம் சொல்லி வைப்பேன்?
கழுதையே ஆனாலும் அதற்கொரு
கட்டுத் தறியுமுண்டாம்! 4

வெள்ளத்தைக் கண்டோடும்—இருப்பில்லா
நொள்ளைக் கொக்கானாய்! தமிழ்
உள்ளத்தைக் கண்டிருந்தும்—எதற்காக
ஓடோடிப் போனாய்நீ? 5

RangaRakes tamilnavarasam.com

கள்ளத் தொடர்புடையோர்—என்றும்
காதற் கரையறியார்!—வெட்டுப்
பள்ளத்தைக் கண்டோடும் மழைநீர்ப்
பண்போ காதலடி? 6

காதல் சிறப்புணராக் கயவர்கள்
கண்டபடி சொல்லுவார்! உலகில்
சாதலும் வாழ்வதும்—பிறர்க்காகத்
தாழ்வதும் காதலடி! 7

ஈதலும் காதலடி! இசைபட
இருத்தலும் காதலடி! எண்ணியெண்ணி
நோதலும் காதலடி! அதன்திறம்
நுவலத்தான் கூடுவதோ? 8

---

24—10—71

RangaRakes tamilnavarasam.com

## சொல்லேன்! சொல்லேன்!

காதலிப்பது காசுக்கா?—அன்றிக்
கண்ணழகுக்கா? உலகில்
காதலுக்கு வகையேதும்
கண்டிருந்தால் நீயெனக்குச்
சொல்லேன்! சொல்லேன்! 1

மோதுகின்ற கடலலையும்—கரையில்
மூன்தாழ்ந்த புன்னைகளும்
ஏதுக்குக் கெக்கலிக்கும்?
இடைநிலையைக் கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்! 2

பழுத்திருக்கும் கோவைக்கும்—வானில்
பறந்திருக்கும் கிள்ளைக்கும்
வழித்துணையாய் வந்தவர் யார்?
வந்தவரைக் கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்! 3

கரைமோதும் கடலுக்கும்—வானில்
கதிர்பரப்பும் நிலவுக்கும்
வரைவுபேச வந்தவர் யார்?
வந்தவரைக் கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்! 4

பூத்திருக்கும் பூக்களுக்கும்—புள்ளிப்
பொறிவண்டுக் கூட்டத்திற்கும்
காத்திருக்கச் சொன்னதியார்?
கண்டிருந்தால் நீயெனக்குச்
சொல்லேன்! சொல்லேன்! 5



RangaRakes tamilnavarasam.com

தொடுவானப் பரிதிக்கும்—காலைத்
துள்ளிவரு வெள்ளிக்கும்
விடிகாலைத் தூதனுப்பி
விட்டவர் யார்? கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்! 6

வீசுகுளிர் நீர்நிலையில்—என்றும்
மேவாத பூவண்டும்
ஏசலினால் பூசலினால்
இணைபிரிந்தோர் எங்குண்டாம்?
சொல்லேன்! சொல்லேன்! 7

முன்னழகைப் பின்னழகை—அன்றி
முகத்தழகை வேறழகை
என்னழகைக் கண்டுகாதல் கொண்டேன்!
ஏன் தயங்குகின்றாய் நீ?
சொல்லேன்! சொல்லேன்! 8

எங்கிருந்தோ எப்படியோ வந்தாய்!
இணைந்திருந்தாய் சிலகாலம்!
மங்குபக லாகிவிட்டாய்! இன்றே
மறந்திடுமோ காதலுள்ளம்?
சொல்லேன்? சொல்லேன்! 9

25—10—71

RangaRakes tamilnavarasam.com

## இன்னும் அவன்மேல் நினைப்பா?

பொன்னைப் போலத் தாழை
பூத்துச் சிரிக்கக் கண்டும்
இன்னும் பாடா திருந்தால்—புலவா!
ஏசும் இந்த உலகம்! 1

நீலக் கடல்மேல் தாழ்ந்து
நீண்ட புன்னை பூத்தும்
சாலப் பாடா திருந்தால்—புலவா!
தமிழ்நா டுன்னை ஏசும்! 2

கழியில் நீலம் பூக்கக்
கண்டால் ஏக்கம் உண்டோ?
இழிவாய்ப் பேசும் உலகம்!—புலவா!
இன்னும் அவள்மேல் நினைப்பா! 3

கட்டு மரத்தைக் கட்டிக்
கடலை எதிர்த்தல் வாழ்க்கை!
விட்டுத் தள்ளிப் போடு!—புலவா!
மேன்மைத் தமிழைப் பாடு! 4

கடலில் கலக்கும் ஆற்றில்
கடன்மீன் ஏறிப் போதல்
நடக்கும் செய்கை! அவளும்—புலவா!
நடந்தாள்; விட்டுத் தள்ளு! 5

தென்னம் பாளை வெடிக்கச்
சிறுவர் நண்டைப் பிடிக்க
இன்னும் பாடா திருந்தால்—புலவா!
ஏசும் இந்த உலகம்! 6

RangaRakes tamilnavarasam.com

தென்றல் வீச உன்றன்
சிரிப்பை ஏனோ காணோம்?
இன்னும் அவள்மேல் நினைப்பா?—புலவா
ஏகும் இந்த உலகம்! 7

பாடும் அலையைக் கண்டுநீ
பாடா திருத்தல் நன்றோ?
ஏடா! உலகம் ஏகும்!—புலவா!
இன்னும் அவள்மேல் நினைப்பா? 8

போனால் என்ன முழுகிப்
போச்சாம்! உதறித் தள்ளு!
ஈனப் பெண்கள் செய்கை!—புலவா!
இன்னும் அவள்மேல் நினைப்பா? 9

இன்னும் அவள்மேல் நினைப்பா?
இதுவும் ஆண்மைச் சிறப்பா?
கன்னற் றமிழில் பாடு!—புலவா!
கவலை மாற்று மருந்தாம்! 10

---

7—10—71

RangaRakes tamilnavarasam.com

## கவலை ஏனோ மனமே?

வானை முட்டும் மலைமேல்!
வந்து தழுவும் முகிலும்!
மானைநோக்கும் பிணையும்!
மனமே கவலை ஏனோ? 1

ஓடை பூத்த அல்லி
உன்னைக் கண்டே சிரிக்கும்!
பேடைக் குயில் துணை கூவும்!
பின்ஏன் கவலை மனமே? 2

தேனை உண்ட வண்டும்
தீந்தமிழ் இசைக்கும் யாண்டும்!
வானத் தழகே அழகு!
மனமே கவலை ஏனோ? 3

மணத்தை வாரித் தென்றல்
வந்து வந்துனை அணைக்கும்!
கணக்கில் லாத இன்பம்!
கவலை ஏனோ மனமே? 4

ஆட்டுக் குட்டி தாயின்
அருகில் துள்ளி ஓடும்!
காட்டில் வழியா இல்லை!
கவலை ஏனோ மனமே? 5

கயல்கள் பாயும் குளத்தில்!
காளை முழக்கும் கார்போல்!
வயல்கள் பச்சைக் காடே!
மனமே கவலை ஏனோ? 6

RangaRakes tamilnavarasam.com

வாழை கோதும் கிள்ளை!
மாவைக் கோதும் தத்தை!
சூழும் இன்பம் இங்கே!
தொல்லை ஏனோ மனமே? 7

அலைகடல் பாயும் நெய்தல்
அடர்நிழற் புன்னைக் கிளைகள்
கலையா இன்பம் ஊட்டும்!
கவலை ஏனோ மனமே? 8

உண்ண உண்ணக் குறையா
மீனை உண்ணக் கொடுக்கும்
கண்ணைக் கவரும் கடலும்!
கவலை ஏனோ மனமே? 6

செம்மை பூத்த பாலைச்
செடிகள் மஞ்சள் பூக்கும்!
இம்மை இன்பம் இங்கே!
ஏனோ கவலை மனமே? 10

RangaRakes tamilnavarasam.com

## அங்கென்ன பார்க்கின்றாய்!

அங்கென்ன பார்க்கின்றாய்?—அத்தான்!
அங்கென்ன பார்க்கின்றாய்?
இங்கென்னைப் பார்க்காமல்
எங்கெங்கோ எண்ணிநீ!—(அங்கென்ன) 1

திங்கள் முகமென்றும்
செவ்வல்லிப் பூவென்றும்
செப்பிய பேச்செங்கே?—உன்
சிரித்த முகமெங்கே? 2

பொங்கும் இளமையில்
பூரித்த என்னெழில்
மங்கும் நிலவொளியோ?—இன்று
வற்றிய தேனடையோ? 3

காணி நிலம்வீடு
பட்டாடை கைப்பொருள்
காட்டென்று கேட்டேனா?—அன்றி
ஆணிப்பொன் மாமணி
அட்டிகை தோட்டுக்கும்
ஆசையும் பட்டேனா? 4

பைந்தமிழ்ப் பாமாலைச்
சிந்துவெண் பாவிற்கும்
பஞ்சம் மிகுந்ததுவோ?—அன்று
தந்தைதாய் நீயென்று
சிந்தையில் எண்ணினேன்
தக்க பயனிதுவோ? 5

4—10—71

RangaRakes tamilnavarasam.com

## வாழ்க்கை

காதலிப்பது கவலைப் படுவது
கலந்த அடிப்படைச் சேர்க்கை!
கண்டவர் புகழ்ந்திடு வாழ்க்கை!
தீதும் நன்மையும் சிரிப்பதும் அழுவதும்
தீண்டா ஊனுயிர் எங்கே?
தெரிந்தால் காட்டுக இங்கே! 1

செடியும் கொடியும் சிரிப்பதின் காய்ப்பதின்
செய்தியை வண்டிடம் கேட்பாய்!
திரைகடல் நெடுங்கரை பார்ப்பாய்!
படிமிசைப் பிறந்த பறவையும் விலங்கும்
பற்றுப் பிணிப்பில் வாழும்!
பலநாள் இடைநாள் வீழும்! 2

சிரித்த வானும் சிலநாள் அழுதிடும்
திங்களும் ஒருநாள் மறையும்!
தென்றலும் நடுநாள் குறையும்!
கரைத்த நீலக் கார்வான் உடுக்கள்
காலையில் மங்கிப் போகும்!
கதிர்வரக் கண்டால் சாகும்! 3

கானும் மலையும் காணும் பொருளும்
காட்டும் வாழ்க்கைக் களிப்பை!
கடைநாள் சாவின் இளிப்பை!
ஊனில் கலந்தாய் உயிரில் கலந்தாய்
ஒதுங்கிப் போனாய் நன்றோ?
ஓயா தழுகிறேன் இன்றோ? 4

1—11—71

# கையறு நிலை

## கண்ணீர் சிந்துக! கண்களே!

கண்ணீர் சிந்துக கண்களே!
கண்ணீர் சிந்துக கண்களே! 1

அண்ணல் பாரதிதாசன் இறந்தார்
அந்தோ! அந்தோ! அந்தோ! மறைந்தார்! 2

மண்ணில் மறைந்தார்! மனத்தில் நிறைந்தார்!
மக்கள் கவிஞர் இறந்தார்! பிரிந்தார்!
புண்ணில் பாய்ந்த புதுவேல் நமக்கே!
புகலிடம் இல்லை புத்துல கிற்கே! 3

காலைக் கதிரவன் என்றும் இருக்கும்!
கடிமணப் பூக்கள் என்றும் சிரிக்கும்!
மாலைச் செக்கர் என்றும் மயக்கும்!
மலைவீழ் அருவி என்றும் முழக்கும்! 4

வட்ட நிலவு வளரும் தேயும்!
வரிக்குயில் என்றும் பாடும்; ஓயும்!
குட்டைத் தாமரை மலரும்; காயும்!
குளிர்மரத் தோப்பு தளிரும்; காயும்! 5

கார்முகில் தவழாக் குறிஞ்சியு முண்டோ?
கருவண் டிசைக்கா முல்லையு முண்டோ?
வார்புனல் அலைக்கா மருதமு முண்டோ?
மறிகடல் முழக்கா நெய்தலு முண்டோ? 6

அழகின் சிரிப்போ அழியா ஓவியம்!
ஆசான் பிரிவென் அழுகைக் காவியம்!
பழகு தமிழுக் கினியார் பிறப்பார்?
பைந்தமிழ் வளத்தை இனியார் நிறைப்பார்? 7

23—4—64

RangaRakes tamilnavarasam.com

## பாவேந்தரோடு!

பாவேந்த ரோடென்றும் அருகிருக்கும் பேற்றைப்
பல்லாண்டு பெற்றவன்நான்! பலநூலைக் கற்றேன்!
பூவேந்து செந்தேனின் புதுச்சுவையை ஒக்கும்
புரட்சிமிகு பாடலெலாம் அவர்பாடக் கேட்டேன்!
மாவேந்து பழச்சாறே அவர்யாத்த பாடல்!
மறுமலர்ச்சி மனமலர்ச்சி மொழிமலர்ச்சி கூட்டும்!
காவேந்து பேரெழிலாம் கவியரசர் உள்ளம்
கனிந்துவந்த கவிதையெலாம் எனை ஊக்கக் கண்டேன்! 1

இளவயதில் அவரிடத்தில் நான்பயின்று வந்தேன்!
இனியமுகம், பாடத்தை எடுத்தியம்பும் ஆற்றல்
வளமுடையார்; வகையுடையார்! அவரிடத்தில் கற்றோர்
மாத்தமிழன் வளமுடையார்; பற்றுடையார்; அஞ்சா
உளமுடையார்; செயலுடையார் உயர்நோக்க முடையார்!
ஒண்டமிழின் முன்னேற்ற நோக்குடையார் ஆவர்!
களமுடைய எதிர்க்கின்ற போர்மறவன் என்றன்
கவியரசர்! பகைகண்டு கலங்கியதே இல்லை! 2

பாப்புனையும் நற்றொழிலை அவரிடத்தில் கற்றேன்!
படித்துணரும் நற்செயலை அவரிடத்தில் கண்டேன்!
யாப்பணியைத் தொன்னூலை அவர்விளக்கக் கேட்டேன்!
யாரினிமேல் அவர்போல எனையூக்க வல்லார்?
காப்பணியாய் எனக்கிருந்தார்; நற்கவிதை யாக்கும்
கலைச்செறிவை நனிவிளக்கி எனைஎழுதச் செய்தார்;
பாப்பாவின் இனமெல்லாம் பாடுகின்ற ஆன்ற
பரம்பரையை, நற்கவிஞர் பாசறையைக் கண்டார்! 3

RangaRakes tamilnavarasam.com

காடெடுத்த பல்லவர்கள் நற்றொண்டை நாட்டின்
கடல் புரளும் சீர்ப்புதுவை பெற்றெடுத்த செம்மல்
ஏடெடுத்தால் பாப்பிறக்கும்; இனியதமிழ் பிறக்கும்?
எவரிடத்தும் பேச்செடுத்தால் இருபொருளும் பிறக்கும்!
மாடெடுத்து நகைசெய்வோர் மலைக்கின்ற வண்ணம்
வகைவகையாய்த் தமிழ்முத்து மணிமாலை யாக்கிப்
பீடெடுத்த தமிழ்த்தாயின் முடிசூட்டிச் சென்ற
பெரும் புலவர்; பாவேந்தர்; எனதாசான் வாழ்க! 4

பன்னூறு திருமணத்தில் அவைத்தலைமை ஏற்பார்!
படர்ந்துவரு நிழல்போல அவரோடு செல்வேன்!
தொன்னூலின் பொருள்விளக்கிச் சுவைவிளக்கி இல்லம்
தொடங்குகின்ற மணமக்கள் நல்வாழ்விற் கான
பொன்னூறு தீந்தமிழால் புதுக் கருத்தைச் சொல்வார்!
புதுக்கிள்ளை போல்நானும் இரண்டொன்று சொல்வேன்!
மன்னூறு விருந்தினிலும் அருகமர்த்திக் கொண்டு
வயிறார உண்ணென்று வாயாரச் சொல்வார்! 5

பலாமொய்க்கும் ஈப்போல அவரிருக்க வந்து
பல்லோர்கள் சூழ்ந்திடுவர்; நீண்டகடல் ஓர
நிலாச்சோற்றை உண்பதுபோல் அவர்வாயின் பேச்சை
நெடுநேரம் கேட்டிருப்பர்; சிரித்துமகிழ்ந் திருப்பர்!
புலாலுணவே அவர்விருப்பம்! அவரோடே சேர்ந்து
புசித்தின்பம் கண்டதனால் புல்லுணவை மறுத்தேன்!
உலாவுவார் கடலோரம் அதிகாலை மாலை!
ஒப்பில்லாக் கனகசுப்புக் கவியரசர் வாழ்க! 6

கானெழுந்த மலைக்காட்டு நீரருவி! நன்கு
கனிந்திருக்கும் குண்டுபலா! மாவாழை! உச்சித்
தேனெழுந்த செஞ்சொல்லார்! பூக்காட்டுத் தும்பி!
செந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த சீர்த்திமிகு செல்வர்!

RangaRakes tamilnavarasam.com

வானெழுந்த ஞாயிறவர்! அவரொளியைப் பெற்று
மறிகடல்சூழ் உலகத்தில் தொடுவானில் தோன்றும்
கூனெழுந்த நிலவுநான்! எனதாசான் நீண்ட
குமரிமுனைத் தமிழ்க்கடலே! கடலோரம் நானே! 7

---

1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்கும் டிசம்பர் திங்களுக்கும் இடையே எழுதப்பட்டது.

RangaRakes tamilnavarasam.com

## பார் இழந்த தந்தோ!

அலைமோதும் பெருங்கடலே! கடற்கரையின் ஓரம்
அசைந்தாடும் தாழைகளே! பசும்புன்னைக் காடே!
வலைகாயும் மணற்பரப்பே! வாடுலர்த்தும் பெண்கள்
மலர்பூத்த நீள்கழியே! அந்தந்தோ அந்தோ!
கலைவளர்த்த எனதாசான்! தமிழ்வளர்த்த ஆசான்!
கண்மூடிப் போனாரே! கவிஉலகம் என்ஆம்?
நிலைகுலைந்த தென்னகத்துத் தாயகத்து மக்கள்
நெஞ்சிற்கு வேல்! வேல்! வேல்! தீக்கொழுந்து! வேலே! 1

குளம்பூத்த தாமரைகாள்! குளக்கரையின் ஓரம்
குனிந்திருக்கும் குருகினங்காள்! கரும்போடு செந்நெல்
வளம்பூத்த நல்நஞ்சை மடைபாயும் சேல்காள்!
மணிப்புறவே! பசுங்கிள்ளாய்! மாங்குயில்காள்! செந்தேன்
இளம்பூத்த தமிழ்மொழியைத் தாயகத்தைத் தட்டி
எழுப்பிவந்தார் எனதாசான்! உலகத்து மக்கள்
உளம்பூத்த பாவேந்தர்! பகைவீழ்த்தும் போர்வாள்!
உயிர்துறந்தார்! அந்தந்தோ! அந்தந்தோ! அந்தோ! 2

கார்தவழும் மலைக்காடே! மலைக்காட்டுச் சாரல்
கசிந்துவரும் மெல்லருவி! கண்கவரும் முல்லாய்!
ஏர்தவழும் பசுங்காடே! பசுங்காட்டுப் பூவில்
இருந்திசைக்கும் வண்டினங்காள்! எழுந்தோடும் மான்கள்!

சீர் தழுவும் தனித்தமிழை எனதுயிரை ஊனைச்
செப்பனிட்டார்; உலகறிந்தார் பரம்பரையைத் தந்தார்;
பார் தழுவச் சென்றாரே பாவேந்தர் ஆசான்!
பாரதிதா சனைஇந்தப் பாரிழந்த தந்தோ! 3

கொந்தளிக்கும் பெருங்கடல்போல் கொந்தளிக்கும் நெஞ்சைக்
குடம்குடமாய் நீர்கொட்டிக் குமுறியழும் கண்ணை
எந்தெந்த வகையினிலோ திருப்பமுயன் றாலும்
இருசெவியில் ஒலிக்கின்ற செந்தமிழை யாப்பை
வந்துவந்து மனத்திரையில் நிற்கின்ற ஆசான்
மலர்விழியை மணிமார்பை மறந்திருக்கப் போமோ?
செந்தமிழ்க்கும் செந்தமிழர் நல்வாழ்விற் கிங்கார்
திசைகாட்டத் தென்னகத்தில் இனிப்பிறப்பார்? அந்தோ! 4

23—4—64

RangaRakes tamilnavarasam.com

## யார் பொறுக்கக் கூடும்?

வான்பூத்துக் கீழ்த்திசையில் பொற்றுகளைச் சிந்தி
வந்தகதிர் அந்தியிலே மறைந்திடுதல் உண்மை!
தேன்பூத்து மணம்பரப்பி வண்டுகளின் பாடல்
செவிமடுத்த பூக்களெலாம் இற்றுவிழல் உண்மை!
ஊன்பூத்த தமிழுணர்வும் உளம்பூத்த அன்பும்
ஒண்டமிழில் நனிபூத்த இலக்கணமேம் பாடும்
கான்பூத்த அருவியொக்கும் திருக்குமர சுவாமி
கண்கலுழ எமைப்பிரிந்தாய்! யார்பொறுக்கக் கூடும்? 1

வெண்ணிலவு நாடோறும் வளர்ந்தொளியைப் பாய்ச்சி
விண்வானில் அரசோச்சி மறைந்தொழிதல் உண்மை!
மண்ணிலவு நீளாறு மலைபிறந்து வந்தே
மக்களின் உயிரோம்பிக் கடல்மறைதல் உண்மை!
தண்ணிலவு மனத்தோயே! திருக்குமர சுவாமி
தமிழ்மொழியே! தமிழ்மொழியின் இலக்கணமே!
உன்றன்
பண்ணிலவு சொற்களின்றும் காதொலிக்கு தந்தோ!
பகற்கொள்ளை உன்பிரிவு! யார்பொறுக்கக் கூடும்? 2

கார்தேக்கி வைத்திருக்கும் கண்மாயின் வாய்க்கால்
கரைபுரண்ட நீரெல்லாம் வறண்டவயல் பாய்ச்சி
ஏர்தேக்கி நிலம்உழுது நெல்விளைக்கும் நன்செய்
என்றென்றும் எழிலோடே இருந்ததில்லை; உண்மை!
சீர்தேக்கி வைத்திருக்கும் தமிழ்த்தாயின் மூத்த
திருக்குமர சுவாமியே இலக்கணத்துச் செம்மால்!
தேர்தேக்கி விட்டாயே தேரோட்ட நாளில்!
செயலற்றுக் கலங்குகின்றோம்! யார்பொறுக்கக் கூடும்? 3

RangaRakes tamilnavarasam.com

வளம்வாழும் மலைச்சாரல் மழைவற்றிப் போக
மாத்தியின் கொடுமைமிகும் நாடறிந்த உண்மை!
குளம்வாழும் தாமரைகள் நீர்வற்றிப் போகக்
குணம்கெட்டு மனம்கெட்டு உயிர்க்கெடுதல் உண்மை!
களம்வாழும் வீரனைப்போல் தமிழ்மொழியைக் காத்தாய்!
காய்மறைக்கும் இலைநீக்கும் இலக்கணத்தின் வெற்றி
உளம்வாழும் பெரும்புலமை இனியெவர்க்கே கிட்டும்?
உனைப்பிரித்தான் கொடுங்கூற்றம் யார்பொறுக்கக்
கூடும்? 4

---

20—6—64

புதுவை இலக்கணச்செம்மல் திரு. குமாரசுவாமி செட்டியார் நீத்தார் நினைவு மலருக்கு எழுதிய கையறு நிலைப் பாடல்

RangaRakes tamilnavarasam.com

## சற்றொதுங்கிப் போவீர்!

கீழ்வெளுக்கத் தொடுவானில் முளைத்துவரும் வெள்ளி
கிளை அசையப் புதர் அலைய இசையெழுப்பும் புட்காள்!
யாழ்வெளுக்க இசைவெளுக்கும் பூமொய்க்கும் வண்டே!
யான்வெளுத்துப்போனசெய்தி அறிந்ததுண்டோ நீவிர்!
தாழ்வெளுத்த எனதாசான் கனகசுப்பு ரத்தினம்
தலைசாய்ந்து போனதுவே! இயற்கைதரு இன்ப
வாழ்வெளுத்துப் போனேன்நான்! தனித்திருக்க வேண்டும்!
மன்றாடிக் கேட்கின்றேன்! சற்றொதுங்கிப் போவீர்! 1

மனம்நொந்த எனக்கென்றும் வயற்காடும் வானும்
மறிகடலும் எனதாசான் கவியரசர் பாட்டும்
இனம்தந்த எனதன்னை இனியதமிழ்ப் பேச்சும்
எனை ஊக்கி வந்ததுண்டே! உண்மைபே ருண்மை!
சினம்கொண்ட கொடுங்கூற்றம் உயிர்பறித்தான் எங்கள்
செந்தமிழைப் பாவேந்தை! சற்றொதுங்கிப் போவீர்!
தினம்நொந்து சாகின்றேன்! என்னைப்போல் கன்றிச்
செந்தமிழ்த்தாய் சாகின்றாள்! சாகவிட மாட்டேன்! 2

எனதாசான் எனதாசான் எனதாசான் என்றே
இன்றுலகில் பலபேர்கள் மார்தட்டிச் சொல்வார்!
எனதாசான் எனதாசான் எனதாசான் என்றே
இன்றுலகில் மார்தட்ட இருவர்களே உள்ளோம்!
எனதாசான் எனப்புதுவைச் சிவம்சொல்லல் உண்மை!
எனதாசான் எனஉலகம் என்றென்றும் சொல்லும்!
மனம்நொந்த இந்நிலையில் தனித்திருக்க வேண்டும்!
வாய்திறவா தெனைவிட்டே சற்றொதுங்கிப் போவீர்! 3



RangaRakes tamilnavarasam.com

மன்றாடும் மணிப்புறவே என் இன்பப் பெயர்த்தி!
வார்த்தெடுத்த பொற்சிலையே என் இன்பப் பெயரா
கன்றொத்த இளங்குமரா பெருங்கிள்ளிப் பையா!
கனிமொழியே! இளங்குழந்தாய்! ஆசைமனை யாட்டி!
என்றென்றும் தமிழுக்கே வாழ்ந்திருந்த மேலோன்
எனதாசான் தமிழ்ப்புரட்சிக் கவிமன்னர் செத்தார்!
இன்றுலகம் கலங்குதந்தோ! தமிழ்கலங்கு தந்தோ!
தனித்திருக்க எனைவிடுவீர்! சற்றொதுங்கிப் போவீர்! 4

---

23—4—64

RangaRakes tamilnavarasam.com

## கொடிய கூற்றே!

கொடிய கூற்றே! கொடிய கூற்றே!
அடிமுதல் அறியாக் கொடிய கூற்றே!
வயது முதிர்ந்தும் புதிய வலிவொடு
மாணவர் அறிவுற மாணவர் பயிற்றும்
கணக்காயர் தம்முள் பிணக்கை அகற்றித்
தமிழா சிரியர் தாய்மார் கழகம்
அயரா துழைத்தே அமைத்த மேலோன்!
சென்னை மாநகர் தன்னில் சிறப்புறு
மாணவர் மன்றம் வளர்த்த செம்மல்!
சித்திரைத் திங்கள் செழுநிழல் போல
இத்தரை உலகிற் கிருந்த முதியோன்!
ஆடல் பாடல் அழகிய ஓவிய
போட்டி அமைத்தே புன்றலைச் சிறாரின்
கலையை அறிவைக் கல்விமேம் பாட்டை
நிலைக்கச் செய்யும் நெறிமுறை வகுத்தோன்!
தாத்தா! மயிலை சிவமுத்துத் தாத்தா!
நீத்தார் உலகை நீத்தார் அந்தோ!
அந்நாள் இந்திக்கு இட்ட தீயை
இந்நாள் கொடுங்கூற் றிட்டது போலும்!
வித்தைச் சமைத்து விருந்தூட் டியதுபோல்
அறனில் கூற்றம் அறிவற் றதுவே!
தமிழ்க்கினி யாரே தடியொடு நிற்பவர்?
புலவர்க் கினியார்? தீந்தமிழ்ப்
புலியிழந் ததுமன் போர்மற வனையே!

RangaRakes tamilnavarasam.com

## யாருக்காக வாழவேண்டும்?

யாருக்காக நான் வாழவேண்டும்?—இவ்வுலகில்
எவருக்காக நான் வாழவேண்டும்? 1

ஊருக்காக வாழ்ந்திருந்தேன்; கண்டபயன்?—இன்றுநான்
உப்புப் பானை ஆகிவிட்டேன்! இல்லை
உளுத்த மூங்கில் ஆகிவிட்டேன்! 2

காரைப் போல நான்கொடுத்தேன்—நன்செய்
கழனி போல நான்கொடுத்தேன்—இந்தப்
பாருக் காக நான்உழைத்தேன்—இந்தப்
பாட்டுக் காக எவன் கொடுத்தான்! 3

பெண்டு பிள்ளை என்றே எண்ணிப்
பெரிய பாடு நானே பட்டேன்!
மண்டை தேய்ந்த திந்த என்றன்
வயிற்றுக்குச் சோறுயார் கொடுத்தார்? 4

கொடுப்பார் யாரோ என்று நான்
குந்திக் குந்தி அழுதேன்—எப் ஜீயார்
கொடுப்பார் என்று சொன்னார்............... 5

---

பாட்டு முடியவில்லை குறையாக விட்டு விட்டார்.

## மறைந்தாரே அண்ணா!

வான்தோன்றி வளிதோன்றி என்றென்றும் மங்கா
வட்டமிடும் எரிமலையாம் உடுக்கூட்டம் தோன்றிக்
கான்தோன்றி மலைதோன்றிக் கார்முகில்கள் தோன்றிக்
கல்தோன்றி மண்தோன்றிக் கடலலைகள் தோன்றித்
தேன்தோன்றித் தேன்கசக்கச் செந்தமிழ்த்தாய் தோன்றித்
தென்னகத்தின் வாரிசுகள் பலபுலவர் தோன்றி
நான்தோன்றிக் கண்டறிந்த நல்லறிஞர் அண்ணா
நற்றமிழ்த்தாய் மூத்தமகன்! மறைந்தாரே அந்தோ! 1

தத்துகின்ற மடையெல்லாம் முத்தினங்கள் தோயத்
தாமரையும் செந்நெல்லும் வாழைபலா மாவும்
கத்துகின்ற புள்ளினத்தைக் கைதட்டிக் கூவக்
கற்றோரும் மற்றோரும் களித்திருந்த நாள்போய்
தொத்துகின்ற பசிநோய்க்கே மருத்துவனாய் வந்து
தூயதமிழ் நாடெங்கும் படிஅரிசி தந்தார்!
கொத்துகின்ற பாம்பின்வாய் உயிர்பிழைக்கக் கூடும்!
கூற்றின்வாய் யார்பிழைப்பார்? மறைந்தாரே அண்ணா! 2

குன்றுதவழ் கார்முகில்போல் குளிர்மைதவழ் முன்றில்
குடியிருந்த ஏழையெல்லாம் கொடுநெருப்புத் தீயின்
வென்றிதவழ் போழ்தினிலே மனம்வெந்தார் அண்ணா!
வேகாத வீடமைத்தார்; மேதை! மா மேதை!
சென்றுதவழ் கடலலைகள் சீர்த்தமிகு சென்னைக்
கடற்கரையின் திசையடைந்தார்! உலகத்தார் உள்ளம்
இன்றுதவழ்ந்(து) எரிகிறதே! தீதீதீ எங்கும்!
எம் மண்ணா! உலகண்ணா! மறைந்தாரே அந்தோ! 3

RangaRakes tamilnavarasam.com

வான் பார்த்து வயல்உழுது மழைபார்த்து வித்தி
வரகுதினை கம்பெள்ளும் புன்செயிலே காணாத்
தேன்பார்த்து நிற்கின்ற முடவனைப்போல் பார்க்கும்
செந்தமிழ்த்தாய் ஏழைமகன்; நல்லுழவன் வாழக்
கூன்பார்த்து நிலத்துவரிக் குறைபார்த்துப் போக்கிக்
குடிசையெலாம் களிபொங்கும் குளிர்மையினை எங்கும்
தான்பார்த்து மகிழுமுன்னர் முதலமைச்சர் அண்ணா
தலைசாய்த்துப் போனாரே! கண் அழுத தந்தோ! 4

முன்னகமும் புறங்கண்டும் முதுபுலவர் வாழ்ந்தும்
முடிமன்னர் வழிவந்தும் முக்கடலும் சூழ்ந்தும்
என்னகமும் என்னண்ணா அகமுலகம் போற்றும்
இசைபரப்பி என்றென்றும் வாழ்ந்திருக்கும் கன்னித்
தென்னகமே! திருநாடே! உன்றன்நல் வாழ்வின்
திசைதிருப்பம் ''தமிழ்நாடு'' பெயர்சூட்டி வைத்தார்!
உன்னகத்தில் குடிகொண்டார்! உன்மகனை மூத்த
ஒருமகனை உலகிழந்து வாடுதந்தோ! அந்தோ! 5

புன்னையிலே பொன்பூக்கள்! அப்பூக்கள் மொய்க்கும்
பொறிவண்டைத் தாலாட்டும் கடலலைகள் பாயும்
சென்னையிலே; அந்தந்தோ! நான்கண்ட காட்சி!
தீந்தமிழ்த்தாய் அழுகின்றாள்! மக்களழு கின்றார்!
தென்னையிலே வாழையிலே சிறகடித்துப் பாயும்
செம்மூக்குக் கிளிப்பிள்ளை புல்பூண்டு மாவும்
எந்நிலையோ! என்கண்கள் அழுததேகண் துஞ்சா!
எங்கெங்கும் எம்மண்ணா எனும்அழுகை! அந்தோ! 6

---

16—2—69

## கவலை மாற்றுகவே!

காரினம் மறைந்த கடல்நிற வானமும்
நீரினைச் சொரிந்து நிறைத்திடக் கண்டனம்!
கங்குல் மாய்ந்த கதிர்ஒளி காலையில்
பொங்கு நீள்கடல் புறப்படக் கண்டனம்!
திங்கள் வானில் மறையினும் செவ்வொளி
மங்கு மாலையில் வந்திடக் கண்டனம்!
வற்றி மாய்ந்த குளத்துத் தாமரை
உற்ற நீர்த்தலை உயரக் கண்டனம்!
குளிரில் ஒடுங்கிய குன்ற மாங்குயில்
தளிரைக் கோதி இசைத்திடக் கண்டனம்!
காய்கள் உதிர்த்த காட்டு மரமெலாம்
காய்த்துப் பூத்துக் கனிதரக் கண்டனம்!
ஈன்ற அன்னை இறந்திடில் மீண்டுமே
தோன்றல் உண்டோ? சொல்லுநர் யாவரே?
அன்னை அன்னையே! பொன்னம்மாள் அன்னையே!
பொன்னை மானுமோர் பூசிய பொன்முலாம்?
மண்ணில் தோன்றிய யாவையும் மண்ணினில்
திண்ணம் மாய்வது! மாய்வது திண்ணமே!
இன்றோ நேற்றோ இறப்பதும் பிறப்பதும்!
என்றும் நடக்கும் இயற்கை நிகழ்ச்சியே!
அண்ணல் வில்லாள அன்பரே!
கண்ணீர் நிறுத்திக் கவலைமாற் றுகவே!

---

1—8—66

தில்லை வில்லாளன் அன்னையார் பொன்னம்மாளின் நீத்தார் நினைவு நாளின்போது பாடிய ஆறுதல்மொழி.

RangaRakes tamilnavarasam.com

## நல்லோரும் இறப்பதுவோ?

காரடைப்பே உற்றதனால் கண்கவரும்
பொய்கைகளும் களத்து மேடும்
நீரடைப்பே கண்டதுவாய்; வான்விரிந்த
வெய்யோனே நிலம்எரிக்க
ஊரடைப்பே உடலடைப்பே உளமடைப்பே
கொண்டிங்கு உழலும் நேரம்
மாரடைப்பே குடியரசுத் தலைவர்உசேன்
வாழ்வடைக்க வந்த தந்தோ! 1

கண்ணனை இளமூங்கில் துளைத்தெடுத்த
குழலிருந்து காற்றெழுப்பும்
பண்ணாவார்; கார்தவழும் மலைச்சாரல்
பழமாவார்; பசுந்தேன் ஆவார்!
மண்ணாவார் பொறுமையிலே; நல்லறிவில்
மலையாவார்; வாழ்வளிக்கும்
கண்ணனை தாய்நாட்டின் பாரதத்தின்
குடியரசுத் தலைவர் காணீர்! 2

வேய்போன்ற நற்பணிவு, பேச்சினிமை,
வெகுளாமை, விரிந்த உள்ளம்,
சேய்போன்ற இன்சிரிப்பு, செயல்திறமை,
நல்லறிவு சேர்ந்த செம்மல்!
தாய்போன்ற அன்புள்ளம் பாரதத்தின்
குடியரசுத் தந்தை ஜாகிர்
மாய்ந்தாரே! மழையில்லாப் பயிரைப்போல்
மக்களெல்லாம் வாடு தந்தோ 3

RangaRakes tamilnavarasam.com

நாய்பெற்ற சீலையைப்போல் மக்களெல்லாம்
பாரதத்தில் நலியக் கண்டு
தாய்பெற்ற பிள்ளையெலாம் கல்வியென்னும்
நல்லறிவு தழைத்தால் அன்றி
வேய்பெற்ற முத்தாகார் எனவெண்ணிப்
பல்கலையின் விளக்காய் நின்று
காய்பெற்ற பாரதத்தைக் கனிபெற்ற
பாரதமாய்க் கண்டார் ஜாகிர்! 4

என்மதமே பொன்மதமாம்! வாழும்மற்
றெம்மதமும் இழிந்த தென்றே
தன்மதமே நிலைநாட்டிப் பாரதத்தை
இரண்டாகத் தகர்த்த போது
புன்மதமே பிரிவினையின் புற்றுநோயாம்
எனச்சொல்லிப் புழுங்கி நொந்து
நன்மதமே எம்மதமும் மக்களொன்றே
என ஜாகிர் நவின்றார் அன்றே! ௫

முகமதியர் தாய்தந்தை ஆசிரியர்
வழிநின்று முனைந்து கற்று
முகமதியர் வழிநின்று பிறைவணங்கி
சாந்தியெனும் மூத்த அண்ணல்
மிகுமதியார் உரைகேட்டுத் தாயகத்தின்
பிறப்படிமை விலங்கொடித்த
வெகுமதியார் மதங்களெலாம் ஒன்றென்னும்
புதுமதியார் வீரர் ஏறே! 6

தனம்கருதிச் செயல்முடிக்கும் தேனீக்கள்
செல்வந்தர் தம்போல் இன்றி
வனம்கருதிக் குகையிருந்து மூச்சடக்கும்
துறவியர்கள் வாழ்க்கை இன்றி

RangaRakes tamilnavarasam.com

இனம்கருதித் தாயகத்தின் இல்லறத்தின்
மேலான எழுச்சி எண்ணி
மனம்கருதிச் செயல்முடிக்கும் குடியரசுத்
தலைவர்நம் மகான்உசேனே!

கல்வியெனும் கடல்கடக்கக் கடல்கடந்து
பிறநாட்டில் கல்வி கற்று
வல்வியெனும் மேனாட்டார் அரசொடுக்கி
அடிமையெனும் வாழ்வைப் போக்கிச்
செல்வியெனும் பாரதத்தாய் திருமுடியைச்
செப்பனிட்ட செம்மல் காந்தி
நல்வழியில் குடியரசை நடத்தியவர்
ஜாகிர் உசேன் நல்லோர் ஆவார். 8

இலகுதமிழ் முதலமைச்சர் நல்லறிஞர்
அமரரண்ணா இனிய நண்பர்!
கலகலத்த பேச்சுடையார்! கற்றறிந்த
மாமேதை! கலையின் ஊற்று!
நிலையுணர்ந்து மொழியுணர்ந்து நாடுணர்ந்து
சான்றோர்கள் நெறியைச் சேர்த்தார்!
உலகத்தமிழ் மாநாட்டில் சென்னையிலே
தலைவருசேன் உரைகேட் டோமே! 9

பன்றிகள்போல் பிறந்தாலும் வாழ்ந்தாலும்
நாட்டிற்குப் பயனே இல்லை!
ஒன்றுபிறந் தால்போதும் மகமதியர்
எண்ணிக்கை உயர்வைப் பார்த்தா
அன்றுநாம் பாரதத்தின் குடியரசுத்
தலைமைதந்தோம்? அதுவே அன்னோர்
பொன்றுபுகழ்க் கேபொருந்தும்; புதுப்பரிதி!
வாயாரப் போற்று வோமே! 10

எல்லோரும் எந்நாட்டும் என்றேனும்
ஒருநாளில் இறப்ப துண்டாம்!
நல்லோரும் இறப்பதுவோ? கொடுங்கூற்றுக்
கிதனாலே நன்மை என்ன?
பொல்லாத உலகமிதாம்! இவ்வுலகில்
வாழ்நாளில் புதுமை கண்ட
நல்லோர்கள் செத்தாலும் வாழ்ந்திருப்பர்!
அவர்வழியில் நடப்போம் நாமே! 11

10—5—69

## பவுனாப்பாள் புகழ்பாடுவோமே!

வான்பூக்கும் பொன்னொளியை; மழைபூக்க நல்ல
வயல்பூக்கும் நெற்கதிர்கள், வற்றாத வாவி
தேன்பூக்கும் தாமரைகள்; தென்னைமரத் தோப்பில்
செழும்பாளை மலர்பூக்கக் கலியாணம் பூண்டி
வான்பூக்கும் மீனினம்போல் முல்லைமலர் பூக்கும்
வளமனையில் பெண்பிள்ளை செவ்விதழ்கள் பூக்க
ஊன்பூக்கச் செய்கின்ற பொற்பேழை ஒன்றும்
உடன்பூத்து வந்ததுவாம்; மகள்தந்த செல்வம்!

பொன்பெற்ற, நன்றிக்கே ஈன்றெடுத்த மேலோர்
புதுப்பெயராம் பவுனாம்பாள் என்கின்ற பேரை
அந்நாளில் சூட்டிவைத்தே ஆகமகிழ லானார்;
அழகுக்கே முனிசாமி அழகுசெய்தார் பின்னர்!
பொன்னான வாழ்விற்கும் புதுமனைக்கும் ஏற்ற
பொற்புடைய மனையரசி இன்றில்லை; உண்மை!
அன்னாரின் நெறிஎண்ணிச் செயலெண்ணி ஆளன்,
அவர்பிள்ளை மூவருமே வழிபடுதல் மேன்மை! 2

பால்வழியும் வட்டமுகம், முத்துப்பல் செவ்வாய்!
பரிவோடு கருத்தூட்டும் பண்பான செஞ்சொல்!
சேல்வழியும் கடைக்கண்கள், பிறைநெற்றி மீது
செம்பொட்குத் திருமகளின் திருவுருவைக் காட்டும்!
கால்வழியும் நீரொத்த கலங்கமிளா உள்ளம்
கைப்பொருளை அளவறிந்து செலவுசெய்யும் மாண்பு!
மால்வழியும் பவுனாம்பாள் மறைவுகொடுந் துன்பம்!
மனமார அவர்புகழை வாழ்த்துதலே இன்பம்! ௩

RangaRakes tamilnavarasam.com

ஊரினிலே பலகையுண்டாம்! நீள்உலக்கை உண்டாம்!
உதவாத்தக் கையுண்டாம்! பலசெய்கை உண்டாம்!
வாரிவாரிக் கொடுத்துதவும் பவுனம்பாள் கையே!
வாய்இனிக்கச் சமைத்ததுவும் பவுனம்பாள் கையே!
ஊரிலுள்ள உறவுக்கும் உற்றோர்இல் லோர்க்கும்
உடனுதவி செய்ததுவும் பவுனம்பாள் கையே!
மாரியைப்போல் எப்பயனும் கருதாமல் என்றும்
மனம்சோரா தளித்தகையும் பவுனம்பாள் கையே! 4

தற்காத்துத் தன்னினத்தின் தகைமையினைக் காத்துத்
தன்னாளன் நலம்காத்துச் செயல்காத்து நின்று
பொற்பறிவு நற்புதல்வர் ஒருமூவர் ஈன்று
பொருள்சேர்த்துப் புகழ்சேர்த்து மனைமாட்சி கண்டு
விற்புருவ மருமக்கள் பெயரர்களோடு
மிக்குபுகழ் நிலைநாட்டப் புவனம்பாள் என்னும்
கற்பரசி இன்றில்லை கண்கலங்கு தந்தோ!
கவலைக்கு மாமருந்தாம் அவர்புகழை எண்ணல்! 5

இருளான ராய்வாழும் கணக்கற்ற கோடி
ஏழைகளின் பிறப்பிடமாம் நாம்வாழும் நாடு!
பொருளாள ராய்இருப்போர் கைநீளா தென்றும்!
புன்சிரிப்புப் புவனம்பாள் இதில்விலக்குக் கண்டீர்!
அருளாளர்; ஏழைகளின் அன்பாளர்; நாட்டின்
ஆக்கத்திற் குழைக்கின்ற தொழிலாள மக்கள்
மருள்நீக்கி வாழ்வளிக்கப் பலதொழிலைக் கண்ட
மாமணியாம் பவுனம்பாள் புகழ்வாழ்க நீடே! 6

வானத்து முழுநிலவாய் மனைதவழ்ந்த பெண்ணாள்!
வருவிருந்து வழிபார்த்து மனங்குளிரும் கண்ணாள்!
கானத்துக் குயிலிசைபோல் கனிவுமிகும் சொல்லாள்!
கைராசி, செயல்ராசி, பொருள்ராசி மற்றும்

RangaRakes tamilnavarasam.com

தாமொத்துக் கணவருடன் மனைநடத்து கின்ற
தனிராசி, மகராசி என்கின்ற வான
மீனொத்த எண்ணரிய நற்குணங்கள் கொண்ட
வீட்டரசி பவுனும்பாள் புகழ்வாழ்க நீடே! 7

இளமையிலே இல்லறத்தில் இணைந்திருக்கும் ஆளன்
ஏதேதோ கற்பனையில் சிறகடித்தல் உண்டாம்!
வளமையிலே வாழ்வாங்கு வாழ்ந்திருக்க வேண்டி
வற்றாத பொருள்தேடச் செயல்படுதல் உண்டாம்!
உளமொத்த இல்லாளின் தூண்டுதலி னாலே
ஒளிசிறக்கும் விளக்கைப்போல் மனைசிறக்கக் கூடும்!
தளைசீரும் அடிதொடையும் யாப்பணியும் கூட்டித்
தமிழ்ப்பெண்ணுள் பவுனும்பாள் புகழ்பாடு வோமே! 8

பிறந்தகத்துக் கொளிசேர்ப்பார் ஒன்றிரண்டு பெண்கள்!
பெற்றோரைச் சுற்றத்தைத் தோழியரை வீட்டை
மறந்துவந்து மணமேற்றுத் தனைக்கொண்ட ஆளன்
வாழ்விற்கே ஒளிசேர்ப்பார் ஒன்றிரண்டு பெண்கள்!
அறந்தவறா மனத்தோடே மனைமாட்சி காட்டி
அவ்விரண்டு வீட்டிற்கும் ஒளிசேர்த்தார் இங்கே
மறைந்தவராம் பவுனும்பாள்; மாசில்லா வீணை!
வாழ்ந்தமுறை எண்ணியெண்ணி மனமாறு வோமே! 9

விண்மீது பொன்னரிவாள் போல்பிறந்த திங்கள்
விரிவானில் மறைந்தொருநாள் பிறப்பதுவும் உண்டாம்!
மண்மீது பிறக்கின்ற உயிரினங்கள் எல்லாம்
மறைந்தொருநாள் பிறப்பதுதான் மண்ணுலக வாழ்க்கை!
கண்மீது வாழ்கின்ற இமைபோல இல்லம்
காத்திருந்த பவுனும்பாள் நமைவிட்டுச் சென்றார்!
புண்மீது தீக்கொண்ட நெஞ்சுடையீர்! தீர்ந்து
போனசெயல் எண்ணாமல் மனம்மாறு வீரே! 10

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு: புதுவை, சிங்கப்பூர் ஜவுளி ஸ்டோர் பவுனம்பாள் ரோலிங் மில்ஸ் உரிமையாளர் திரு N. முனிசாமி முதலியார் மனைவி பவுனம்பாள் அம்மாள் 2-2-73-இல் உயிர் நீத்தார்-நீத்தார் நினைவு நிகழ்ச்சிக்குப் பாட்டெழுதித் தரவேண்டும் எனப் பேராசிரியர் திரு. N. சிவப்பிரகாசம், M.A. வேண்டினார். அதற்கிணங்க எழுதி, கொடுக்கப்பட்டவை இவை. நிகழ்ச்சிக்குப் பிறகு மேற் படியார் தலைமையில் தொழிலாளர்கள் பேரணியாக வந்து பழங்களும் பட்டாடைகளும் பரிசு தந்து பாராட்டிச் சென்றனர்.

## கலையுலகப் பேரிழப்பு

வீட்டகத்து நல்லொளியைப் பிறப்பிக்க வேண்டி
வெவ்வேறு நோக்கோடு கலையழகி னோடு
நாட்டகத்தை மக்கட்கு நனிதந்த மேலோன்
நடிகமணி நம்.டி.கே. சண்முகமாம் ஔவை!
கூட்டகத்தை விட்டெங்கோ புள்பறந்த தைப்போல்
கூற்றுவனின் கொடுமைக்கே ஆளாகி நமக்
காட்டகத்தை அடைந்தனனே! உளம்தாங்கப் போமோ?
கலையுலகப் பேரிழப்பு! கண்கலங்கு தந்தோ!

6—3—73

# எண்ணம்

## வெண்கழுகுப்பேடை

கழைஉதிர்த்த நெல்அருந்திக் கானமயில் கூவும்!
காட்டெருமை கன்றருகில் அசைபோடும்; நீண்ட
தழைஉதிர்த்த மரக்கிளையில் பேடைச்செம் போத்து
தனித்திருக்கும் சேவலிடம் தாவிப்போய்க் குந்தும்!
மழைஉதிர்த்த கற்பாறைப் பள்ளத்து நீரை
மானினங்கள் கால்மடித்து வாலாட்டி உண்ணும்!
இழை உதிர்த்த மணியொத்த கொன்றைமலர்ச் சாரல்
இடுக்கினிலே அடைகாக்கும் வெண்கழுகுப் பேடை! 1

கருங்கண்கள், வெள்ளிறகு, பிளந்தவாய் மூக்கு,
கன்னியர்கள் குளிக்கின்ற நிறமஞ்சள் நெற்றி
பெருங்கால்கள், உளியொத்த சிறியவிரல், காட்டுப்
பேரீந்தின் முள்போன்ற நகக்கூர்மை எல்லாம்
ஒருங்கமைந்த வெண்கழுகுப் பேடையோ நித்தம்
ஊன்உணவு குஞ்சுக்குத் தேடிவந்தே ஊட்டும்!
அருங்குடும்பத் தாய்மாரின் பண்பெல்லாம் இந்த
அடர்காட்டு மலைக்கழுகுக் கார்உணர்த்தி வைத்தார்? 2

கண்பறிக்கும் இடிமின்னல் காற்றோடு சேர்ந்தே
களிறொத்த கார்முகில்கள் பேரிரைச்சல் போடும்!
விண்பறித்து எழுந்ததென மேல்வானில் மோதும்!
வெளியெல்லாம் சுழல்காற்று! விலங்கினங்கள் ஓடும்!
மண்பறிக்க வந்ததென மழைவானில் கொட்டி
வாட்டிற்றே! உயிர்இனங்கள் பசியால்வா டிற்றே!
எண்ணியெண்ணி ஏங்கிற்றே வெண்கழுகுப் பேடை
இரையின்றி வாய்திறக்கும் குஞ்சுகளைக் கண்டே! 3

RangaRakes tamilnavarasam.com

வான்வெளுக்கத் தாய்ப்பறவை மலைச்சாரல் எங்கும்
வட்டமிட்டு வட்டமிட்டு நெடுநேரம் சுற்றி
ஊன்தேடித் திரிந்ததுவே! ஊன்பொதிந்த சின்ன
உயிரொன்றும் கிடைக்கவில்லை! என் செய்யும் பேடை!
கான்தேடி வயல்தேடிக் கடல் பரப்பும் தேடிக்
கண்ட பயன் களைப்பொன்றே! கூடுதிரும் பிற்றே!
ஊனுக்கு வாய்திறக்கும் குஞ்சுகளைக் கண்டே
ஒருநொடியில் தன்னுடலைக் கிழித்துமூக் காலே! 4

குஞ்சுகளுக் கருகினிலே தாய்ப்பறவை சென்று
கொட்டுகின்ற குருதியினைக் குஞ்சுகளுக்(கு) ஊட்டும்
பஞ்சொத்த பார்ப்புகளோ பசியாறு மட்டும்
பருகிற்றுத் தாயுடலின் செங்குருதி யாவும்!
அஞ்சவில்லை! அசையவில்லை! தாயன்பே அன்பாம்!
அருகினிலே தள்ளாடி அசைந்தசைந்து சென்றே
மஞ்சள்வாய்க் குஞ்சுகட்கு வயிறூர ஊட்டி
மகிழ்ச்சியிலே வெண்கழுகு மாண்டதுவே அந்தோ! 5

வெண்கழுகைப் போன்றவரே நற்கவிஞர் கூட்டம்!
விளையாட்டாய்ச் சொல்லவில்லை! உண்மை! முழுஉண்மை!
புண்பட்ட உள்ளந்தான் பிறர்புண்ணைக் காணும்!
புரியாத சிக்கலெலாம் புரிந்தமனம் நீக்கும்!
கண்ணுக்குத் தெரியாமல் அழுதழுது சோர்ந்த
கவிஞர்தாம் கண்கலுழும் கவிபுனையக் கூடும்!
மண்ணுள்ளோர் சிரிப்பதற்கும் வாழ்வதற்கும் இந்த
மாக்கவிஞர் இல்லையெனில் நாடுசுடு காடே! 6



RangaRakes tamilnavarasam.com

## விடைப் பாடல்கள்

வினா: 1

வெளிச்ச விளம்பர வேட்கை தணியக்
களித்ததோர் பூம்புகாரிக் காட்சி விழாவினில்
காக்கைகள் கூடிக் கரைந்ததைக் கேட்டதும்
ஆக்கம் அடக்கம் அடடா எவனென
எண்ணிக் கிடந்தேன்! இதுபோ லுணர்வுகள்
திண்ணமாய்த் தங்களுக் கேற்பட் டிருக்குமே?

விடை:

என்னை விழாவிற் கழைத்தனர்; என்னுடல் நோய்
பின்னுக் கிழுக்கநான் பேசா திருந்துவிட்டேன்;
வானத்து மாமழை வற்றினும் வற்றாமல்
கானம் கடந்து கழைமாயும் நீர்கூட்டி
நன்செய் விளைத்து நறும்புன்செய் பாலூட்டித்
தஞ்சைப் பெருநாட் டின் தாயாகி விஞ்சு
புகழ்சேர்த்த பொன்னிப் புதுப்பெண் ஒளிசேர்
முகமாகும் பூம்புகார் மூதூர்! அம்மூதூர்
மறைந்த குறைநீக்க வந்த அரசு
நிறைந்த மனத்தால் நினைவூட்டக் கண்டோமே!
சீர்த்தி மிகுந்த செயலிதுவாம்! வாழ்ந்திடுவோம்!
கார்த்திகைத் திங்கள் கடுங்கோடை ஆனாலும்
காக்கைகள் என்றும் கரையும்! அக்காக்கைகள்
போக்கைத் திருத்தல் புலிக்கொம்பைத் தேடுவதே!

RangaRakes tamilnavarasam.com

வினா: 2

சங்க இலக்கியச் சாயலை இன்று நான்
தங்கள் கவிதையில் தான்காணு கின்றேன்;
முறையாய்த் தமிழை முயன்று படித்து
நிறையாய்க் கவிதைகள் நெய்திடும் தங்களைத்
தண்டமிழ் நாடு தகுதிக் கிணங்கிடக்
கொண்டாட வில்லையே! குற்றமீ தன்றோ?

விடை :

தமிழ் படித்த குற்றம்; தலைதாழ்த்தாக் குற்றம்!
அமிழ்தாம் தமிழிருக்க என்றும் அலையேனே!

வினா : 3

என்று மிருக்கும் இயல்புடைப் பாக்களை
இன்றிங் களித்தீர்! இயம்புதும் நன்றி!
எனினும் ஒருபெருங் காவிய நூலைக்
கனியாய்ப் படைத்துக் களிக்கத் தரவிலை!
இந்தக் குறையை இதயச் சுமைதனை
முந்தி இறக்க முனைவதும் என்றோ?

விடை :

அடுப்பில் கொதிக்கும் அரிசியை எல்லாம்
எடுத்து நசுக்கி இறக்குவார் எங்குண்டாம்?
ஒன்றிரண் டாலே உணர்வர்; உலகியல்!
நன்றெனக் கண்டிட நாநூறு வேண்டும்?
எனினும் உமதுள வேட்கையைப் போக்க
இனிநான் எழுத எழுச்சி பெறுவேனே!

வினா: 4

தாழும் நிலையைத் தகர்த்துமே நம்முடன்
வாழுங் கவிஞர் வரிசையில் தங்களின்

RangaRakes tamilnavarasam.com

நெஞ்சங் கவர்ந்த நிறைகவி வாணரைக்
கொஞ்சம் விளக்கமாய்க் கூற முடியுமா?

**விடை :**

வாழுங் கவிஞர் வரிசையில் யாவரும்
சூழும் தொடர்பிற் குரியவ ராவார்;
எனினும் தமிழின் இயல்புணர்ந் தோர்கள்
இனிக்கும் கரும்பாய் இருப்பர் மனத்திலே!

**வினா : 5**

தாசனும் வாணியும் தண்டமிழ்ச் சொற்களா?
வாசனை போலே வடமொழி என்றால்
இதனை விரும்பியே ஏற்றதும் ஏனோ?
முதற்பெயர் ஏதோ மொழிந்திட வேண்டும்

**விடை :**

வாணியும் தாசனும் சுத்த வடசொல்லே!
ஏணியைப் போலெனை ஏற்றிவிட் டோர்கள்
அளித்த புனைபெயர்; அந்நாள் முதற்றே
நிலைத்து வருதல் நெடுநாள் பழக்கம்!
அரங்கன் இயற்பெயர்; அப்பெயர் இந்நாள்
கரைந்தது கண்டோம்! பெயரில் கவலைஏன்?

**வினா : 6**

செய்யுள் இலக்கணம் சிந்தையில் தேக்கிடார்
பெய்யும் தமிழ்ச்சொல் பெருங்கவி என்பர்!
கவிதைக் கிலக்கணம் கற்பெனும் கொள்கை
புவியில் புதுமை புனைவார்க் கில்லையிவண்
மாசில் கவித்துறை மாண்பைக் கெடுத்திடும்
வேசிக் கவிதை விளைதலும் நன்றோ?

RangaRakes tamilnavarasam.com

விடை :

சளத்திடைக் கண்ட பதரும் மணியும்
விளக்குமே இந்த வினவின் விடையை!
விலைமகள் என்றும் குலமகள் ஆகாள்!
அலைகடல் போன்றதே ஆன்றோர் படைப்பு!

வினா :

*கழகம் தொடங்கிய காலம் முதலே
கழகப் பணியில் கலந்தவர் தாங்கள்!
பதவிப் பழத்தைப் பறித்ததும் ஆள்வோர்
முதலில் உமது முகத்தை மறந்ததேன்,
வெற்று முழக்க விளம்பர உத்திகள்
கற்றிலை என்றே கழகம் மறந்ததோ?

விடை :

வெற்று முழக்க விளம்பர உத்திகள்
கற்றது மில்லை; நான் கற்கவும் மாட்டேன்!
மறந்தால் கழகம் மறந்து போகட்டும்
இறவாக் கவிதை இனிதெனக்(கு) என்றுமே!

வினா :8

நேரடி யாக நெடுநாள் பழகிய
பாரதி தாசனார் பண்பு நலன்களை
எங்களுக் கெல்லாம் இயம்பிடத் தக்கவர்
தங்களை விட்டால் தமிழகத் தாருளார்?
சிங்கத் தமிழன் சிறப்பினைச் செய்யுளில்
இங்கித மாக எடுத்துத் தருகவே!

விடை :

பாரதி தாசனார் பண்பு நலன்களை
ஊருக்கு ரைக்க ஒருவாயா போதும்?

---

* தி.மு.க.

RangaRakes tamilnavarasam.com

கரும்புச் சொலவோ! தொகைப்பாட் டவரே!
மருந்து மடமைக்கு! மாத்தமிழ் வீரன்!
தமிழ்மலர்க் காட்டிடைத் தங்கிய வண்டாம்!
அமிழ்தின் இனிய தமிழ்ப்பா அருவியே!

வினா : 9

தங்கள் நினைவில் தமிழென நின்றிடும்
சங்கக் கவிஞர் சத்து நிகழ்ச்சியில்
ஒன்றிரண் டிங்கே உரைத்திடக் கூடுமா?
இன்றவை தங்களை இன்புறச் செய்யுமா?

விடை :

என்றன் நினைவில் இருக்கும் நிகழ்ச்சியில்
ஒன்று இரண்டா உரைக்க? எனினும்
இளமைத் துடுக்கும் இனியோர் பலரின்
வளமார் உறவும் மறக்கவா முடியும்?

வினா : 10

கழகக் கலைஞர் கருணா நிதியார்
அழகாய்ப் புனைத லனைத்தும் கவியா?
கருணா நிதியைக் கவியெனத் தாங்கள்
ஒருமுறை யேனும் உரைத்ததும் உண்டோ?

விடை :

அலைகடல் சூழ்ந்தநல் அன்பர் பலரும்
உலகக் கவியென ஊக்கிய பின்னும்
கழகக் கலைஞர் கருணா நிதியார்
அழகாய்ப் புனையும் கவிதை அனைத்தும்
நிலையா தெனும்நும் நினைப்பை எழில்சேர்
கலைமதி என்றே கருதக்கூ டாதோ!

RangaRakes tamilnavarasam.com

வினா : 11

எதற்கும் தொடக்கம் இருக்கும்! நினைவில்
முதன்முதல் தாங்கள் முயன்றியங்கு எழுதிய
பாடல் வரியைப் படிக்க இனிக்குமே!
ஆடகம் ஒத்திடும் அக்கவி கூறுக!

விடை :

என்றன் முதற்பா "தமிழன்" எனுமிதழ்
ஒன்றில் அனுப்ப உடன்வந் ததுவே!
அதன்ஆ சிரியர்என் பாடலை ஆய்ந்தே
புதுமை புதுமையே பாரதிப் பாடலே
என்றெனை உவக்கி எழுதப் புகழ்ந்தனர்!
அன்றுநான் பாடிய பாடலோ "பாரதிதான்
இன்றடா பாட்டிசைத்துப் பாடடா" என்பதாகும்!
குன்றின் எழுத்தாய்க் குடிகொண்ட தென்னுள்ளே!

வினா : 12

தொட்டில் மொழியும் துணையாய்ப் பிரெஞ்சுடன்
பட்டம் பெறவே படித்ததாய்க் கேள்வி!
அறிந்த மொழியில் அயல்மொழிப் பாக்கள்
அறிஞரும் ஏற்றிட ஆக்கிய துண்டாநீர்?

விடை :

தாய்மொழி யோடு பிரஞ்சுமே தக்கோரின்
வாய்வழிக் கேட்டுநான் மாசறக் கற்றேன்!
அயல்மொழிப் பாக்கள் அறிவேன்நான்; பாக்கள்
செயல்முறை காணேன்; பின்செய்ததும் இல்லையே!

வினா: 13

பண்டை இலக்கியப் பாக்களில் தாங்களே
கண்டெனக் கொண்ட கருத்து வரியெது?

RangaRakes tamilnavarasam.com

விடை:

"யாதாமால் ஊராமால்" என்கின்ற வள்ளுவரை
ஓதாத நாளெல்லாம் நாளாமோ என்பதுவே!

வினா 14

ஆக்கம் கவிதையில் ஆகுக என்றுமே
ஊக்கிய துண்டா உவந்து துணைவியார்?

விடை :

என் மனைவி சிற்றூர்; எழுதத் தெரியாதாள்!
பொன்னைப் பொருளை அறிவாள்; புகழறியாள்!
அன்னாளின் ஊக்கம் எனக் கூக்கம் ஆகிடுமா?
பின்னாள் செயலெதுவோ? பேச்செடுக்க வேண்டாம்!

வினா :15

திறம்மலி தீந்தமிழ்ப் பாவல! தங்கள்
பிறந்தநாள் செய்தியைப் பேசிட வேண்டுவம்!

விடை :

என்றன் அருமை இளவழுதி நற்கவிஞர்
இன்றும் பிறந்தநாள்; நுப் எண்ணம் என்னென்றார்!
சென்றது சென்றதுவே; என்றும் திரும்பாது!
தன்றே இனிப்புரிக! நற்றமிழைத் தாய்மொழியை
ஊன்உடல்போல் ஓம்பி உலக மொழிக்கெல்லாம்
தேன்வழங்கச் செய்க! திருநாட்டு மக்கள்
பகுத்துண்டு வாழ்க! பகைநீக்கி வாழ்க!
தொகுத்துரைக்கும் நூலின் துணைகொள்க! என்றென்றும்
ஒன்றிரண்டு பெற்றே உயர்குடியின் நற்பெயரை
என்றும் நிறுத்தல் இனிது!

## 22—7—73

புதுமைக் கவிஞரேறு, பாவலர்மணி வாணிதாசனாரின் 59 ஆம் ஆண்டு தொடக்க நாள் அன்று கவிஞர் க.பொ. இளம்வழுதி கேட்ட வினாப் பாடல்களுக்குக் கவிஞர் அளித்த விடைப் பாடல்கள்,

RangaRakes tamilnavarasam.com

## கணக்காயர்

எவரெவரோ பெற்றெடுத்த
பிள்ளையெலாம் தன்பிள்ளை
என்றே எண்ணி
சுவரிடையில் மரநிழலில்
துயருற்ற வாழ்க்கையிலும்
தோய்ந்த அன்பால்
அவரவர்க்கே ஏற்றாற்போல்
அறிவூட்டி நெறிகாட்டி
ஆன்ற மக்கள்
கவர்கல்வி அளிக்கின்றார்
கணக்காயர் பெருவள்ளல்
கவலையற்றே!

குளம்பூத்த தாமரை போல்
குதித்தாடும் பிள்ளைகளின்
குறும்பைப் போக்கி
உளம்பூத்த இருளகற்றி
ஒழுக்கத்தை நல்லறிவை
ஊட்டி யூட்டி
களம்பூத்த அறுவடையைக்
காண்கின்ற உழவன் போல்
காலம் தோறும்
வளம்பூத்த குடிமக்கள்
கணக்காயர் வழங்குகின்றார்
வாழ்க நீடே!

RangaRakes tamilnavarasam.com

மண் திறந்து மாடோட்டி
வயலுழுது விதைவித்தி
வளமை சேர்த்தோர்
விண் திறந்து நிலவுலகில்
விரிகடலில் மலைமுகட்டில்
வெற்றி கண்டோர்
எண் திறந்து வைத்தவர் யார்
எனச்சிறிதே நாமெல்லாம்
எண்ணிப் பார்த்தால்
கண் திறந்து வைத்தவர்கள்
கணக்காயர் எனக் காண்போம்
வாழ்க நீடே! 3

தன்னாட்டைப் பின்னாளில்
தகுதி மிகு நன்னாடாய்
இயக்கப் போகும்
பொன்னாட்டை வழிநடத்தும்
பொறிவல்லோர் நல்லமைச்சர்
புலவர் மற்றோர்
எந்நாட்டிற்கும் அளித்தோர்
எவரென்று நாய்சிறிதே
எண்ணிப் பார்த்தால்
மின்னோட்டம் போல் பெருகச்
செயல்வல்லோர் கணக்காயர்
மேலோர் ஆமே!

---

15—8—73

## தமிழ்நாடு வாழ்கவே!

வாழ்க! வாழ்கவே!
மங்காப் பெரும்புகழ்
எங்கள் தமிழ்நாடே!
வாழ்க வாழ்கவே—என்றென்றும்
வாழ்க வாழ்கவே! 1

ஆழ்கடல் முப்பால் வேங்கடம் வடக்கே
அரணைசெய் எங்கள் அன்னையர் நாடே! (வாழ்க) 2

மலைபடு வளனும் வயல்படு வளனும்
வற்றாப் பெரும்புகழ் உற்றதமிழ் நாடே!
அலைபடு பெருங்கடல் அக்கரை நாடும்
அருங்கலை வாரி வழங்கிய வள்ளல்நீ! 3

உதய சூரியனும் பொதிகைத் தென்றலும்
உன்புகழ் பாடல் என்னென் றுரைப்பேன்!
இதயம் களிகொள அன்னையர் வாழ்த்த
ஏற்றினர் அரசு கட்டிலேற் றினரே! 4

முன்னாள் ஆண்டோர் உன்னை எதற்கோ
சென்னை என்றழைத்தார்! செய்ந்நன்றி கொன்றார்!
இந்நாள் அரசுஎம் அண்ணா அரசு
பொன்முடி சூட்டினார்! அண்ணா போற்றியே! 5

இந்நாள் "தமிழ்நாடே"! பொன்னாள்! பொன்னாள்!
எமதரும் அண்ணா தமிழக முதல்வன்
செந்நாப் புலவன் வள்ளுவன் வழியில்
செந்தமிழ் அரசைச் செலுத்துவன் வாழியே! 6

16—1—69

RangaRakes tamilnavarasam.com

## என்வேலை!

திருவிளக்கே! தமிழ்மகளே! தித்திக்கும் தேனே!
சீர்த்திமிகு தென்னவர்கள் மடிவளர்ந்த செல்வி!
உருமாறாப் பேரழகி! கன்னிஇளம் பெண்ணே!
உன்னினத்து மொழிக்கெல்லாம் உயிர்தந்த தாயே!
பெருங்கடலும் நீள்வானும் வான்கவிந்த மண்ணும்
பிறந்தவுடன் பிறந்துவந்த குளிர்காற்றும் தீயும்
ஒருங்கிணைந்த புதுப்பொலிவே! தமிழ்த்தாயே! போற்றி!
உனைப்பாடல் என்வேலை! பிறிதுவிரும் பேனே! 1

முகங்காட்டும் முத்தமிழே! முத்தமிழின் சாரை
முதிர்ந்தமலைத் தேனடையில் இல்லையெனக் கண்டேன்!
அகம்புறமும் ஒளிவீசும் உன் அழியா மேனி!
அழகுவிழிக் குளிர்வீச்சின் தொகைஎட்டுத் தொகையே!
பகைஓட்டும் வேல்பரணி! தாமரையாம் தாளில்
பாட்டிசைக்கும் சிலம்புமணி மேகலை முப்பாலும்
வகைவகையாய்ப் பூண்டவளே! தமிழ்த்தாயே! உன்னை
வாழ்த்துவதே என்வேலை! பிறிதுவிரும் பேனே! 2

தென்னகத்துத் தமிழ்மக்கள பல்லோர்கள் வாயைத்
திறவாத ஊமைகளாய்ச் செயலிழந்து போனார்!
முன்னகத்து நல்வாழ்வைப் புறப்பண்பை இன்று
முறைப்படுத்திச் செயல்படுத்த முனைந்து விட்டார்
கண்டேன்!
பின்னகத்துப் பகைநுழைவு பலபார்த்த துண்டே!
பேடிகளை வீழ்த்துதற்குக் கூர்வாளா தேவை?
என்னகத்துக் குடிகொண்ட செந்தமிழே! தாயே!
என்வேலை உனைவாழ்த்தல்! பிறிதுவிரும் பேனே! 3

RangaRakes tamilnavarasam.com

உன்பகைவர் என்பகைவர்! உண்மை! முழு உண்மை!
உயிர்போகும் நேரத்தும் இதைமறக்க மாட்டேன்!
உன் அன்பர் என் அன்பர்! உண்மை! முழு உண்மை!
உற்றபொருள் இல்லையெனினும் உடலுதவி செய்வேன்!
எந்நாளும் உனைவெற்றி கண்டபகை இல்லை!
இடைபுகுந்த வடமொழியும் பிறமொழியும் கூறும்!
தென்னவளே! தீந்தமிழே! என்னுயிரே! உன்றன்
சீர்பாடல் என்வேலை! பிறிதுவிரும் பேனே! 4

---

25—11—64

RangaRakes tamilnavarasam.com

## என் நன்றி!

கடலே முழக்கும் ஓர்பால்; நீள் தாழைப்பூப் பூத்துக்
கழிமுழக்கும் ஓர்பால்; முட் காட்டோர நன்செய்
இடமுழக்கும் கால்வாய்கள்; இருகொம்பால் முட்டி
இடிமுழக்கும் காரெருமை நீள்வாலைத் தூக்கி;
அடம்பிடிக்கும் குழவியைப்போல் அதிகாலை நேரம்
அணியணியாய் முழக்கும்நற் றொழிற்பேட்டைச் சங்கம்;
உடல்உயிரும் தமிழ்முழக்கும் சான்றோர்வாழ் புதுவை;
ஒண்புகழை நனிமுழக்கும் என்தமிழ்ப்பாப் பாடல்! 1

அலைஇசைக்கக் கேட்டிருக்கும் புதுவைநகர் மன்றம்
அமர்ந்திருக்கும் அமைச்சர்களே! பெரியோரே! சாரல்
மலையிசைக்கும் அருவியெனக் குளிர்மையினைச் சேர்க்கும்
மணிவயிற்றுத் தாய்மாரே! தமிழகத்தைக் காக்கச்
சிலைஇசைக்கும் படிக்கிளம்பும் இளஞாயி றொத்த
சீரியநல் மறவோரே செந்தமிழர் அன்னார்
கலைஇசைக்கும் தேன்றமிழ்ச்சொல் நல்இளைஞர்! செஞ்சொற்
கவிபாடி வாணிதாசன் கைகூப்பி னேனே! 2

பன்னாளின் நன்னினைவாம் சீர்ப்புதுவை மண்ணில்
பாவேந்தர் சிலையெடுக்க வேண்டுமெனும் வேட்கை!
சின்னாளின் முன்புதுவை செயலாற்றும் அரசு
சிறப்படைந்து போனசெயல் நாமெல்லாம் கண்டோம்!
நன்னாளின் நாள்புதுவை நம்மரசு வாழ்க!
நாமெல்லாம் முழுநிலவின் கடலலைபோல் ஆனோம்!
இந்நாளின் நம்புதுவைத் தமிழ்ச்சங்கம் வாணிக்(கு)
எடுத்ததுவாம் பாராட்டு! மிகுநன்றி! வாழ்த்தே! 3

RangaRakes tamilnavarasam.com

நாடாண்ட அரசின்றோ மறந்திருந்தால் என்னாம்?
நாவற்றாத் தமிழ்பாடி நயந்தோருக் கெல்லாம்
காடாண்ட யானைமுதல் பொற்கலங்கள் ஈந்த
காவலர்கள் இலை;அதனால் கவிவாழ்க்கை இல்லை!
வீடாண்ட தாய்மாரும் பெரியோரும் சேர்ந்தே
மேன்மைமிகு நற்புதுவைத் தமிழ்ச்சங்கம் கண்டு
மேடாண்ட புரவலர்போல் ஆண்டாண்டு தோறும்
மிகுசிறப்பு கற்றோர்க்குச் செய்கின்றார்; வாழ்க! 4

எழுத்தசைசீர் அணியாப்பு நனிகற்ற பின்னர்
இன்கவிதை பாடுவதே மேலோர்கள் செய்கை!
பழுத்திருக்கும் நற்புலமை பண்பட்ட இந்தப்
பார்புகழும் புதுவைக்குத் தனிச்சொத்தாம் கண்டீர்!
கழுதைக்கும் குதிரைக்கும் காட்டிடையில் வாழும்
கருங்குயிற்கும் குரல்ஒன்றோ? மனம்போன போக்கில்
எழுதுகின்ற எழுத்தெல்லாம் கவிதையென்று சொல்லி
இன்றுசிலர் எழுதுகின்றார்; தமிழ்வாழப் போமோ? 5

சிட்டாடு முன்றில்லில் தெருத்திண்ணை யோரம்
சிறுபிள்ளை விளையாடச் சிரிப்புவரும் நெஞ்சில்!
பட்டாடை உரல்சுற்றிப் பார்த்திருந்தால் என்னாம்?
வட்டாடுகின்றார்கள் அரங்கினிலே ஆட
மரபொன்று வேண்டாவா? சிலபேர்கள் சீட்டுக்
சட்டாடுகின்றார்கள் துருப்பெதற்குத் தேவை!
தூயதமிழ் பாடுதற்கும் யாப்பணிகள் வேண்டும்!

சாய்வாழ வற்றாத சதுப்புநிலம் வேண்டும்!
தாமரைகள் வாழ்வதற்குக் குளம் நிரம்ப வேண்டும்!
காய்வாழக் கனிவாழ மரம்வாழ வேண்டும்!
கார்வாழ மலைவாழக் கடல்வாழ வேண்டும்!

RangaRakes tamilnavarasam.com

சேய்வாழ ஈன்றெடுத்த தாய்வாழ வேண்டும்!
சீர்ப்புதுவைத் தமிழ்ச்சங்கம் சிறப்புற்று வாழ
வாய்வாழ வாழ்த்துகின்றேன்; என்னருமை மக்காள்
மறவாதீர் தமிழ்ச்சங்கம் உம்முடைய சொத்தே! 7

பாட்டெழுதும் பாவலர்க்கு நானொன்று சொல்வேன்!
பரிசெண்ணிப் புகழெண்ணி எந்நாளும் எந்த
நாட்டினிலும் பிறர்க்குழைப்போன் தோன்றியதே இல்லை!
நாம்நமக்கே பாடுகின்றோம் நல்லதையே எண்ணி!
கூட்டில்லாக் குயிலெதற்குக் கிளையிருந்து பாடும்?
குளிர்தென்றல் ஏன்வீசும்? பூஎதற்குப் பூக்கும்?
வீட்டரசி தாயைப்போல் தமிழ்ச்சங்கம் உண்டு!
மேலோர்கள் இருக்கின்றார்! வேறென்ன வேண்டும்? 8

என்னருமை இளங்கவிகாள்! பிறநூல் கற்பீர்!
இனியதமிழ் வளர்த்திடுவீர்! கெஞ்சிக் கேட்பேன்!
முன்னிருந்த தமிழ் மரபை அணியை யாப்பை
முறையோடு கற்றிடுவீர்! தமிழின் வாழ்வைப்
பின்னிருந்து குலைக்காதீர்! கட்டுச் சோறு
பெரிதென்று நினைத்திடுவீர்! வழுச் சொல் வேண்டாம்!
இன்றிருந்து புதுப்பொலிவைப் புதிய நோக்கால்
எழில்முடியைத் தமிழ்மொழிக்குச் சூட்டு வீரே! 9

பாட்டென்றால் அதுநாட்டைத் திருத்த வேண்டும்!
பண்பென்றால் அதுநெஞ்சில் பதிய வேண்டும்!
கூட்டென்றால் அதில் வலிமை கூட வேண்டும்!
கொள்கையெனில் அதில்நல்ல குறிக்கோள் வேண்டும்!
காட்டென்றால் உள்ளத்தைக் கற்றோர் போலக்
கைப்பொருளை யுந்திறந்து காட்டல் வேண்டும்!
நாட்டென்றால் நற்புகழை நாட்டு கின்ற
நமதுதமிழ் அரசைப்போல் நாட்ட வேண்டும்! 10

RangaRakes tamilnavarasam.com

ஒண்டிவந்து வாழ்ந்திருக்க நினைத்தான்; வந்தான்
உயர்கவிஞன் பாரதியும்! அவனைப் போல
முண்டிவந்து வாழ்ந்தார்கள் புதுவை மண்ணில்;
மூண்டதுவே புரட்சித்தீ! அந்நாள் தொட்டுக்
கண்டுவந்த செயலிதுவாம்! அதற்குச் சான்று
கவின்புதுவைத் தமிழ்ச்சங்கம்! மறக்க வேண்டாம்!
பண்டுவந்த பெரும்புலவர் தழைக்க வேண்டும்!
பாராளத் தமிழ்த்தாயை வளர்ப்போம்; நாமே!! 11

தமிழ் வளர்ந்தால் நாம் வளர்வோம்; நம்மைப்போல
தடங்கடல்சூழ் மற்றோரும் வாழ்வர்! கன்னித்
தமிழ் வளர்ந்தால் யாதும்ஊர் கேளிர் யாரும்;
தமிழ் நோக்காம்; பூங்குன்றன் நோக்காம்! அன்னைத்
தமிழ் வளர்ந்தால் செயல்வளரும்; கடல்சூழ் நாட்டுத்
தக்கோரின் உளம்வளரும்! இல்லத் துள்ளே
தமிழ்வாழ்க வாழ்கவென வாழ்த்து வோமே! 12

என்றென்றும் இலக்கணத்தை இலக்கியத்தை
இயன்றவரை கற்றோர்பால் கேட்டுக் கேட்டு
நன்றென்றும் அலவென்றும் அறிவால் ஆய்ந்தே
நல்லோர்கள் கற்றறிந்தார்; அஃதே போலக்
குன்றென்றும் குளமென்றும் எண்ணி டாமல்
குலம்தழைக்க வந்தபெரும் குகைச்செல் வத்தை
நின்றென்றும் நீகாப்பாய்! தமிழா! உன்றன்
நெஞ்சுள்ளும் தமிழ்ப்பாட்டாம்! காப்பாய் நீடே!! 13

தற்காலம் தமிழ்நாட்டை ஆளுகின்ற ஆட்சி
தமிழரசு; தமிழ்ஆட்சி மொழியென்றே வாயால்
சொற்சிலம்பம் செயக்கேட்டோம்; பெருமகிழ்ச்சி நன்றி!
துறைதோறும் துறைதோறும் பிறமொழியைக் கற்றோர்



RangaRakes tamilnavarasam.com

மற்சிலம்பம் செய்கின்றார்; தமிழ்மொழியா வாழும்?
வாயில்லா ஊமன்போல் வாழ்கின்றார் மக்கள்!
பொற்புடைய தமிழ்மக்காள்! மரபுடைய நல்ல
புதுத்தமிழை வளர்த்திடுவீர்! வாழ்ந்திடுவீர் நீடே! 14

இன்றாளும் அரசியலால் எப்பயனும் கிட்டா!
இவர்க்காக வா, தமிழை இரவெல்லாம் கற்றோம்?
குன்றெதிர்க்கும் நம்பாடல்! குரைகடலும் ஓர்நாள்
கூறுவதைக் கேட்பார்கள்; குறிப்புணர்ந்து கொள்வார்!
என்றென்றும் நாம்இறந்து போனாலும் செஞ்சொல்
இனியகவி சாவாது; நாம்சாவ மாட்டோம்!
நன்றறிந்தும் இலக்கியத்தின் நயனறிந்து கொண்டும்
வழங்காத நாட்டிற்கே நாம்வழங்கு வோமே! 15

பிற்காலம் நமைஎண்ணும் பெரியோர்கள் ஆய்வைப்
பேசுகின்ற நல்வாய்ப்பை இளைஞரிடம் சேர்ப்போம்;
முற்காலம் நற்காலம்; ஆன்றவிந்த சான்றோர்
முதுபுகழும் இலக்கியமும் அழிந்தொழிந்த துண்டோ?
கற்காலம் கண்டவனே! தமிழ் மகனே! உன்றன்
கைகாலின் உழைப்பலவோ இன்றுள்ள நாடு!
பொற்காலம் மறைந்தாலும் இன்றுள்ள நாட்டின்
புதுக்காலம் இனித்தேவை உன்கடமை யாமே! 16

மன்றிருந்து சிறப்பிக்க வந்துள் ளோர்க்கும்
வரிசையாய் அங்கிங்கே காற்றுக்காக
நின்றிருந்து சிறப்பிக்க வந்துள் ளோர்க்கும்
நெறிசெலுத்தும் புதுவைமா நிலத்தை மேலாய்
இன்றிருந்தே ஆள்கின்ற அமைச்சர் கட்கும்
இனியதமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்க்கும்
அன்றிருந்தே இன்றுவரை எனைவாழ் விக்கும்
அருந்தமிழ்க்கும் என்நன்றி! வணக்கம்! வாழ்த்தே! 17

RangaRakes tamilnavarasam.com

வேறு

வாழ்க புதுவைத் தமிழ்ச்சங்கம் பல்லாண்டு
வாழ்க வளமுடன் வாழியவே! 18
வாழ்க தமிழ்மொழி! வாழ்க நல்லோர்கள்!
வாழிய புதுவை மாநிலமே!

---

6—5—73

6—5—73 அன்று புதுவை நகர மன்றத்தில் நடைபெற்ற புதுவைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் முதல்வர் திரு M.O.H பாரூக் அவர்களால் "பாவலர் மணி" என்றுபட்டம் சூட்டிப் பட்டயம் வழங்கிய போது பாடிய நன்றிக் கவிதை.

RangaRakes tamilnavarasam.com

## ஒற்றுமையோடு வாழ வேண்டும்

ஒற்றுமையோடு வாழவேண்டும்—தமிழ்இனம்
ஒற்றுமையோடு வாழவேண்டும் 1

மற்றவர் நமைஆள வாய்பொத்திக் கிடப்பதே
ஒற்றுமை எனச்சொன்னால் பொருளல்ல உன்னிப்பார்! 2

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் பிறந்தவர்
கலைகள் பலவளர்த்தே மற்றவர்க்(கு) அளித்தவர்
அல்லும் பகலும் தாய்நாட் டாக்கத்திற் குழைத்தவர்
அடிமையாய் இருப்பதோ? மற்றவர் ஆள்வதோ? 3

மலைவளம் வயல்வளம் மறிகடல் பொருள்வளம்
வழங்கிப் பிறநாட்டார் வாழநாம் வாழ்ந்தவர்
கலைவளம் தொழில்வளம் கற்பனைக் கவிவளம்
கடல்தாண்டித் தந்தவர்! எந்நிலை வந்தவர்? 4

RangaRakes tamilnavarasam.com

## இனம் ஒத்தால் நாம் வாழ்வோம்

இந்தநிலை நாட்டில் வந்ததெதனால் என்றே
எண்ணிப் பார்த்த துண்டோ?—தம்பி—நீ!
எண்ணிப் பார்த்த துண்டோ? 1

சொந்தநா டிருக்கையில் அந்தஇலங்கை சென்று
தோலும் எலும்புமாய் மீளும் திராவிடர் 2

ஊருக் குழைத்துழைத்தே ஓடாகி மீண்டுநம்
ஊருக்கு வருவதோ நாம்பெற்ற அரசாட்சி
யாருக்கும் பொறுப்பில்லை; நம்வாழ்வை நம்நாட்டை
யார்எண்ணப் போகுர்கள்? இனம்ஒத்தால்
நாம்வாழ்வோம் 3

## நினைத்துப் பார்

கற்ருேரும் மற்ருேரும் கண்டு களித்திருக்கப்
பெற்ருேம் தமிழர் பெருவாழ்வு—மற்ருேர்
கலந்தார்; அதனுல் பிரிந்தோம்; அழிந்தோம்;
நிலையடைய வேண்டும் நினை!

## சொல்லுக காக்காய்!

காக்காய் காக்காய்! கரிய காக்காய்!
நீயும் உன்றன் இன்பப் பேடையும்
வடதிசை சென்று இமயம் பார்த்துத்
தென்திசை நோக்கித் திரும்புங் காலை
கோட்டை கொத்தளம் கோபுரம் நிறைந்த

தில்லி யருகே செல்லுக விரைந்தே
தென்னாட் டாரியன் செருக்கில் மிதந்து
மன்னவன் தானென மனப்பால் குடித்து
நின்றுகொண் டிருப்பான் நீள்நிலை மாடியில்!
அன்னவன் அருகில் அண்டங் காக்காய்!

இந்தியை எதிர்க்கத் திராவிட இளைஞர்
வந்துகொண் டிருக்கிறார்; வந்துகொண் டிருக்கிறார்;
வடமலை நோக்கி வந்துகொண் டிருக்கிறார்!
முன்னாள் குட்டுவன் முடியை நெரித்ததை
மறந்தா யாயினும் மறந்திடப் போமோ?

திராவிட நாட்டில் இந்தியை அன்று
திணிக்க நினைத்துத் திணறிய திணறல்?
திராவிட நாட்டில் இந்தியை மீண்டும்
திணிக்க வேண்டாம்; திணிப்பா யாயின்
நீயும் உன்றன் அரசியல் நண்பரும்

அல்லல் உறுவீர்! என்றே
சொல்லுக காக்காய்! சொல்லுக நீயே!

RangaRakes tamilnavarasam.com

# வாணிதாசன் கவிதைகள்

தொகுதி — 3


பதிப்பாசிரியர்

அரங்க. நலங்கிள்ளி, எம்.ஏ.



வாணிதாசன் பதிப்பகம்

சேலியமேடு 607 402

புதுவை மாநிலம்



RangaRakes tamilnavarasam.com

# உள்ளே


I நினைத்துப் பார்க்கின் ... vii

II வேட்கை

வளமிகு வாழ்வுக்கு இலக்கியம் சமைப்போம் ... 1
பாடுபடும் தொழிலாளி—கவிஞர் ... 10
ஒக்கும் பிறப்பு ஒவ்வாச் சிறப்பு ... 15
இன்பக் குடும்பம் ... 20
கருத்துடை வேண்டும் ... 23

III இசைக்குரியார்

அறிஞர் அண்ணா வாழியரே ... 25
நமதண்ணா வாழியரே ... 27
ஞாயிறு நம் அண்ணா ... 29
சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா ... 31
காக்கும் கரம் ... 33
அமைச்செனப்படுவது நினதே ... 35
புலவராற்றுப் படை ... 36
நாவலர் போற்றும் காவலன் ... 38
மாலை வாங்கி வாயேன் ... 39
அண்ணா அறுபது ... 41
விஞ்சு புகழில் விளங்கக் காண்பாரே ... 44
கலைஞர் நாற்பத்தாறு ... 46
அஞ்சுகத்தாய் மகன் வாழ்க ... 53
என் பாடல் போல வாழ்க ... 55
இன்னும் பன்னூறாண்டிரும் ... 56
தாத்தா எனத் தமிழ் பாடுவேனே ... 56
சொற்பொழிவு மலை ... 57
சிதம்பரனாரே பிள்ளை ... 59


RangaRakes tamilnavarasam.com

## IV கதைப்பாட்டு


இதுதான் மருத்துவம் ... 61
உலகப் பாடம் ... 65
கைதி ... 70
பிறைமதி ... 73


## V வாழ்த்து


மலைத்தேன் ... 77
சீர்பெற வேண்டும் செழித்தே ... 78
குளிரிளநீர்ச் சுவைப்பாட்டு ... 79
தங்கப் பாடல் ... 80
தமிழ் வீசும் கதிர் ... 81
நல்வாழ்வைத் தூண்டும் கவிகள் ... 81
தந்தை பெயர் நாட்டுக ... 82
எண்ணத் தூண்டும் ஏடு ... 83
இன்றே போல் வாழ்க ... 84
தூய தமிழ்போல் வாழ்க ... 86
புது மகிழ்வில் வாழ்க ... 88


## VI பல்சுவை


பொன் மாலை ... 89
என்றன் வீடு ... 91
குயில் ... 94
கலங்கவில்லை ... 97
நான் கண்ட கவிஞர் ... 99
சீர்ப் புதுவை ... 101
சௌமிய ஆண்டுச் செய்தி ... 102


## V I பிற்சேர்க்கை


செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை ... 105


RangaRakes tamilnavarasam.com

# வேட்கை

## வளமிகு வாழ்வுக்கு இலக்கியம் சமைப்போம்!

வான்வழங்கும் செம்பரிதி தைவருதல் கண்டோம்!
வளம்மிகுந்த தைக்கண்டோம்! வானொலியில் இன்று
தேன்வழங்கும் கவிபரங்கத் தலைமையினை ஏற்கும்
செந்தமிழர் தொகைப்பாட்டே! இலக்குவனார் ஐயா!
ஆன்வழங்கும் வளத்தோடு வயல்வழங்கும் நெல்லும்
அணியணியாய்ப் பெற்றுள்ள காவிரிசூழ் நாட்டீர்!
கான்வழங்கும் வண்டிசைபோல் கவிபாடு வோரே!
கைகூப்பி வாணிதாசன் வணங்குகின்றேன் ஏற்பீர் 1

இல்லறத்தை நல்லறமாய்ச் செய்திடுதல் வாழ்க்கை!
இட்டுண்டு பசிபோக்க இயங்கிடுதல் வாழ்க்கை!
நல்லறத்தைப் பெருக்கிடவே உழைத்திடுதல் வாழ்க்கை!
நாட்டினிலே முதலாளி தொழிலாளி என்ற
கொல்லறத்தைப் பொடியாக்கி வளமைமிகு வாழ்வின்
குறிக்கோளே மக்களினக் குறிக்கோளாய் எண்ணும்
வல்லறமே இன்றுள்ள மக்களின வாழ்க்கை!
வளர்த்திடுவோம் புதுநோக்கில் இலக்கியத்தை நாமே! 2

மக்களிடை நிலவுகின்ற செயல் நன்மை தீமை
மறிகடல்மேல் எழுதிங்கள் நீளருவி மேற்குச்
செக்கரிடை மலைச்சாரல், திரிகின்ற வேங்கை
தீந்தமிழை இசைக்கின்ற குயிலினங்கள் நீண்ட

RangaRakes tamilnavarasam.com

எக்கரிடைக் கரையுடைத்தே பாய்கின்ற ஆற்றின்
இருமருங்கும் பழத்தோப்பு பார்த்துணர்ந்த உள்ளம்
சிக்கலிடை வீழாமல் கலைநயத்தைக் கூட்டித்
திரண்டெழுந்த சொற்பொருளே இலக்கியமென் போமே! 3

கன்னியைப்போல் கற்போர்க்குக் கனவெழுப்ப வேண்டும்!
குடிமனையின் இல்லாள்போல் இன்பதுன்பம் தாங்கி
முன்னாளும் நிகழ்நாளும் முறைப்படுத்த வேண்டும்!
முகம்கோணாத் தாயைப்போல் எதிர்கால ஆக்கம்
தன்னையே குறிக்கோளாய்க் கலையழகைக் கூட்டித்
தாய்நாட்டைத் தகுமுறையை உணர்த்திடுதல் வேண்டும்
பொன்னான வளமைமிகு வாழ்விற்கே சேர்க்கும்
புதுமைமிகு கவிதைகளே இலக்கியமென் போமே! 4

பன்னாளில் தீமூளா வெற்றடுப்பின் மீது
படுத்திருந்த பூனைகண்டு மனைமக்கள் கண்டு
முன்னாளில் மொழிகற்ற பெரும்புலவர் எல்லாம்
முடிமன்னர் கொடைபாடிப் போர்முரசம் பாடிச்
சின்னாளில் குறைகின்ற பொருள்பரிசு பெற்றே
தெருக்கோடி வணிகர்போல் வாழ்ந்துவர லானார்!
இந்நாளில் அவையெல்லாம் வளவாழ்வுக் கேலா!
எழுச்சிமிகு மனமாற்றம் வளர்ந்துவரு காலம்! 5

ஆண்டவனின் புகழ்பாடி அவன்நாடு பாடி
ஆக்கிவைத்த இலக்கியங்கள் அக்காலச் சொத்து!
மூண்டெழுந்த கடற்கோளால் முழுமையற்றுப் போக
முன்னோர்கள் சிலவற்றைத் தொகுத்துவைத்துப் போனார்!
மாண்டவனின் மனையாளாம் கண்ணகியை ஆன்ற
மாதவியை மேகலையும் சிலம்புமெடுத் தோதும்!
ஆண்டவனின் புகழ்பாடி நாயன்மார் ஆழ்வார்
அன்புநெறி இலக்கியத்தைச் சமைத்தார்கள் பின்னர்! 6

RangaRakes tamilnavarasam.com

கல்லையும்நற் செம்பையுமே கசிந்துருகிப் பாடிக்
களித்திருந்தார் அன்றிருந்தோர்; சூழ்நிலைமைக் கேற்பப்
பல்தெரிய முன்காட்டிப் பசிகாட்டி ஏங்கும்
பஞ்சையனும் பாரதத்தின் முடிசூடா மன்னன்!
எல்லோரும் அரசாளும் வாய்ப்புடையோர் இதுதான்
இன்றுள்ள குடியரசின் பெருஞ்சிறப்பாம்! இங்கே
இல்லோரும் உள்ளோரும் இலையென்று காட்டும்
ஏற்றமிகு இலக்கியத்தை நாடடைய வேண்டும்! 7

பிறநாட்டான் நம்நாட்டில் பிழைப்புக்கு வந்து
பிரித்தாளும் சூழ்ச்சியால் நம்நாட்டை வென்று
மறநாட்டின் வளமெல்லாம் அவன்நாட்டில் தேக்கி
வறுமையைப் பரிசாக நமக்களித்துப் போனான்!
சிறைப்பட்ட நம்நாடு விடுதலையைக் காணச்
செந்தமிழால் பாரதியார் இலக்கியத்தைச் செய்தார்!
கறைபட்ட நம்நாடு விடுதலையைப் பெற்றுக்
கால்நூறு நல்லாண்டு காண்கின்றோம் வாழ்க! 8

நன்மைபல நம்நாடு விடுதலைக்குப் பின்னர்
நாடோறும் பல்துறையில் அடைந்துவரல் உண்மை!
நன்மைபல அடைந்துவரும் பிறநாடும் நாமும்
நானூறு காதவழி இடைவெளியில் உள்ளோம்!
தொன்மைபல எண்ணிஎண்ணி இதுபோதும் என்றே
தொடைநடுங்கி போல்வாழ்தல் அறிவாற்றல் ஆமோ?
வன்மைபல மேற்கொண்டே உழைப்பதற்குத் தூண்டும்
வளமான புதுநோக்க இலக்கியங்கள் தேவை! 9

பாவேந்தர் நாட்டிடையில் நிலவுகின்ற ஒவ்வாப்
பழமையெனும் சாதிமதம் கைம்மைநிலை ஏய்த்தல்
நாவேந்தர் போலெதிர்த்தே நாட்டுநிலை காட்டி
நல்லதமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தைச் செய்தார்!

RangaRakes tamilnavarasam.com

மூவேந்தர் காலத்து முதற்கொண்டே இன்றும்
முடக்கொள்கை முளைக்காமல் வேரற்ற துண்டோ?
பூவேந்தர் இந்நாட்டு மக்களினம் நல்ல
புதுவாழ்வு வாழ்வதற்கே இலக்கியங்கள் தேவை! 10

காலமெனும் சுழற்காற்று கடல்சூழ்ந்த நாட்டைக்
கலகலக்கச் செய்வதையும் பின்னதையே மாற்றிப்
பாலூட்டி வளர்ப்பதையும் கண்டுவரு கின்றோம்!
பகுத்தறிவே சுழற்காற்று முன்னேற்றப் பாட்டை!
நூலறிவு பண்பாட்டின் நுழைவாயில்! அந்த
நுழைவாயில் கண்டுடனே பெருவாயில் என்னும்
கோலறிவு என்கின்ற கொடுமைமிகு ஆட்சிக்
குறைகூறும் இலக்கியத்தைச் சமைக்கமற வோமே! 11

ஆண்டுக்கிங் கொவ்வொன்று பிள்ளைகளைப் பெற்றே
அறிவற்றே நலமற்றே அழிகின்ற தாய்மார்
மூண்டுவரும் மக்களினப் பெருக்கத்தைக் கண்டே
மூதறிவு பெறச்செய்யும்; ஆணினத்தைத் தூண்டி
ஈண்டுள்ள பசிநோயை வறுமைமிகு வாழ்வை
இடித்துரைத்து மனமாற்றம் அறிவாக்கம் கொள்ள
வேண்டுகின்ற இலக்கியமே இனிநமக்குத் தேவை!
வெற்றுவேட்டால் பயன் என்னாம்? சிந்திக்க வேண்டும்! 12

கார்தவழும் நீள்வானில் காற்றுமழை மின்னல்
கடந்தேறி விண்கலத்தால் எதிர்நீந்திச் சென்று
சீர்தவழும் வெண்ணிலவில் காலூன்றி ஆய்வு
செய்கின்ற காலமிது! நம்நாட்டில் ஓர்பால்
வேர்தவழும் மரநீழல் அசையாமல் குந்தி
வெறும்பேச்சுப் பேசுபவர்; உழைக்காத சோம்பர்;
கூர்தவழும் அறிவாற்றல் அடையவழி செய்யும்
கொள்கைநிறை இலக்கியமே இனிச்சமைக்க வேண்டும்! 13

RangaRakes tamilnavarasam.com

வான்பூத்த மீனினம்போல் எண்ணிலடங் காத
வளமெல்லாம் மக்கட்கே இனிநாட்டில் தேவை!
கான்பூத்த மலர்உண்ட வண்டினங்கள் போலக்
கவிபாடிக் கிடப்பதுவா நற்கவிகள் நோக்கம்?
கூன்பூத்த செயலறிவு நேர்க்கோட்டைப் போலக்
கொள்கையிலே பற்றோடு நிலைத்திருக்கச் செய்யும்
தேன்பூத்த சொற்பொருளால் யாப்பணியின் கூட்டால்
திசைமாற்றும் பொதுநோக்க இலக்கியம்ப டைப்போம்! 14

வாழ்கின்ற மக்கட்கு வளமைமிகு வாழ்வு
வந்தடைய வேண்டுமென்றே இன்றுள்ள ஆட்சி
சூழ்கின்ற அறிவின்மை கொடுவறுமைத் துன்பம்
தொலைப்பதற்குத் தொழிற்புரட்சி செய்கிறது! மக்கள்
ஆழ்கின்ற ஒத்துழைப்பைத் தரவில்லை என்றால்
அரசென்ன செய்தாலும் பலனென்ன கிட்டும்?
தாழ்கின்ற மனப்பான்மை மாற்றுகின்ற ஆன்ற
சாவாத இலக்கியத்தைச் சமைத்தளிப்போம் நாமே! 15

நிலைத்திருக்க வேண்டுமென்றே புலவோர்கள் என்றும்
நினைத்தெண்ணி இலக்கியத்தைச்சமைத்ததில்லை நாட்டில்!
நிலைத்திருக்கும் பொதுக்கருத்தை நினைவூட்டு கின்ற
நெஞ்சள்ளும் பாடல்கள் என்றென்றும் வாழும்!
உலைத்துருத்திக் கொல்லர்கள் உருவாக்கு கின்ற
ஒப்பில்லாப் போர்ப்படைபோல் உலகத்தை மாற்றும்
கலைவளத்தை நமக்களிக்கும் சாவாத சீர்த்திக்
கவிதைகளை நாம்படைத்தே இன்பமடை வோமே! 16

முன்னாளின் இலக்கியங்கள் நமக்குநனி உண்டாம்!
முடிமன்னர் காலத்து வாழ்க்கைக்கு நன்றாம்!
இந்நாளோ நாம்நமையே ஆளுகின்ற நாளாம்!
இன்றுள்ள சூழ்நிலைக்கு நாம்மாற வேண்டும்!

RangaRakes tamilnavarasam.com

பொன்னான வளமைமிகு வாழ்வுக்குத் தாவப்
புதுக்கருத்தைப் பகுத்தறிவை மரபுவழி நின்றே
என்னருமைக் கவிஞர்காள்! குமுகாய மாற்ற
எழுச்சிமிகு இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 17

நமையீன்ற தாய்நாட்டின் நானிலத்தி னூடே
நல்லியற்கை தருகின்ற நிலவளங்கள் உண்டே!
சுமைதாங்கி போல்பழத்தைத் தாங்குகின்ற தோப்பும்
தொங்குகின்ற தேனடையும் பரந்தவயற் காடும்
உமக்காக இருக்கின்றோம் எனச்சொல்லக் கேட்டும்
ஓய்ந்தொதுங்கி வாழ்கின்ற மக்களினம் உய்ய
அமைவாகச் சிந்திக்க அறிவூக்கம் கொள்ள
அழகுதமிழ் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 18

எத்தொழிலும் இழிவில்லை இவ்வுலகில்! வேலை
ஏதேனும் செய்யாமல் இருப்பவரே பேதை!
கைத்தொழிலைக் கற்றுக்கொள்! இழிவில்லை! என்றும்
கவலை இலை! வளமைமிகு, நல்வாழ்வு கூடும்!
சுத்திஎடுத் துழைப்பதுதான் ஒருசிலர்க்கே நாட்டில்
சொந்தமென நினைக்கின்ற கடுகுள்ளம் வேண்டாம்
தித்திக்கும் சொற்பாவால் கலைவண்ணப் பண்பால்
திருத்துகின்ற இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 19

வளமான வாழ்வுக்குப் பலபொருள்கள் தேவை!
மரச்சாமான் நூலாடை மண்சட்டி பானை
குளம்குட்டை குட்டையிலே தூய்மைசெய்தே ஆடை
கொடுப்பவர்கள் கொத்தர்கள் முடித்திருத்து வோர்கள்
உளத்தாலே மனிதஇனம்; தொழில்செய்வ தாலே
உயர்வில்லை தாழ்வில்லை என்கின்ற எண்ணம்
கிளைத்திடவே செய்வதுதான் இன்றுள்ள தொண்டு!
கேடகற்றும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 20

RangaRakes tamilnavarasam.com

நல்வாழ்வு பெறுவதற்கே நல்லறிவு தேவை!
நல்லறிவு பெறுவதற்கே கற்றிடுதல் வேண்டும்!
பல்கலையில் பயிலுகின்ற மாணவர்கள் கூட்டம்
படிப்பைவிட்டுப் பிறசெயலில் பங்கேற்க வேண்டாம்!
வல்லோராய் வாழ்ந்தால் வளமைமிகும் வாழ்வும்!
மறவாதீர்! மறவாதீர்! எனவூக்கு கின்ற
சொல்லரிய மரபுவழி யாப்புவழி நின்றே
தூயதமிழ் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 21

இக்காலம் அறிவியலின் ஏற்றமிகு காலம்!
எழுகின்ற புதுமையினை எடுத்துணர்த்தும் காலம்!
மக்காக வாழ்வதுவோ நம்நாட்டு மக்கள்?
மற்றவர்கள் மதிப்பாரோ? நுண்ணறிவு தேவை!
செக்காட்டு வார்போலத் திரிவதையே விட்டுச்
சிந்தித்தே அறிவியலின் நுணுக்கத்தைக் கண்டே
முக்காட்டைக் கிழித்தெறியும் உணர்வூட்டு கின்ற
முத்தமிழில் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 22

பிறநாட்டைப் போல்நாமும் வளமைமிகு வாழ்வைப்
பெறவேண்டில் நம்நாட்டில் வாழ்கின்ற மக்கள்
மறவாமல் ஒரு செயலை மனம்கொள்ள வேண்டும்!
வளமான வாழ்வுக்கே அயராவு ழைப்புக்
குறையாமல் செய்திங்குக் குடியோம்பல் வேண்டும்!
குறிக்கோளை என்றென்றும் மக்களிடைத் தூண்டும்
நிறைவான பொருள்பொதிந்த நெஞ்சள்ளும் பாட்டால்
நிலைத்திருக்கும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம்
வாரீர்! 23

பூக்களிலே தேன்தேடும் பொறிவண்டைப் போலப்
பொற்கிண்ணப் பூப்பூத்த பூசணியின் பாத்தி
வாக்கினிலே காய்த்திட்ட வெள்ளரியின் கோட்டை
வாய்த்திருக்கும் அணிலைப்போல் அயராது நாளும்

RangaRakes tamilnavarasam.com

நோக்கோடு தொழில்துறையில் உழைத்திருக்கத் தூண்டும்
நுண்மாண்பை நுழைபுலத்தை வளர்க்கின்ற ஆன்ற
பூக்காட்டுச் செந்தமிழால் சுவையின்பம் ஊட்டும்
புதுப்போக்கில் இலக்கியத்தைச் சமைத்திடுவோம்
வாரீர்! 24

பாராண்ட முடிமன்னர் மன்னவரின் கீழே
பணிபுரிந்த படைமறவர் அவரேவ லாளர்
சீராண்ட பெருஞ்செல்வர் தொழிலாளர் கூட்டம்
திண்டாடி வாழ்ந்திருந்த திக்கற்ற ஏழை
ஊராளத் துணைபுரியும் அறிவமைச்சர் பெண்கள்
உயிரினங்கள் கைக்குழந்தை பசிநோயில் ஒன்றாம்!
காராண்ட உலகத்தில் பகுத்துண்ணும் பண்பைக்
கற்பிக்கும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 25

உண்டியின்றேல் உயிரில்லை; உடற்றசையும் இல்லை;
உலகத்தோர் பன்னெடுநாள் கண்டுவரும் உண்மை!
மண்டிவரும் வளமெல்லாம் ஒருசிலர்க்கா சொந்தம்?
வளமைமிகு வாழ்வுக்குப் பகுத்துண்ணும் பண்பைக்
கொண்டிடுதல் நூலோர்கள் தொகுத்தவற்றுள் எல்லாம்
குடியோம்பும் செயலுக்கே தலையென்று சொன்னார்
பண்டிருந்த ஆன்றோரின் பரிந்துரையை ஏற்றுப்
பயன்நல்கும் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 26

போதுமென்ற மனமேநல் பொன்செய்யும் என்று
புகன்றார்கள்; மகப்பேற்றுக் கதுபொருந்தும் இந்நாள்
போதுமென்றே ஒன்றிரண்டு நூல்களையே கற்றால்
புலமைவந்து சேர்ந்திடுமோ? அறிவாக்கம் உண்டோ?
போதுமென்ற மனம்பெற்றால் வளவாழ்வுக் கேற்ற
பொருள்மிகுதி ஏற்படுமோ? பிறநாட்டார் போலத்
தோதோடு நாம்வாழ, பிறர்துணைக்குப் போகப்
போதுமென்ற மனம்வேண்டாம்! அயராது ழைப்போம்! 27

RangaRakes tamilnavarasam.com

மனஅமைதி அடைவதற்குப் போதுமென்ற உள்ளம்
வளரட்டும்; வரவேற்போம்; நாம்துறவி அல்லோம்!
இனஅமைதி செழித்திருக்கப் பிறர்நம்மை என்றும்
ஏய்க்காமல் விழித்திருக்கப் போதுமென்ற உள்ள
நினைவுக்கு நீள்உழைப்பை மறந்திருக்க வேண்டாம்!
நெறியோடு நம்நாடு பிறநாட்டைப் போலப்
பணம்பெருக்கிப் படைபெருக்கிப் பண்பூக்கம் கொள்ளப்
பாட்டிசைத்தே இலக்கியத்தைச் சமைத்திடுவோம்
வாரீர்! 28

நம்நாட்டின் விடுதலையை நாமடைந்து இன்று
நாலைந்தும் அய்தாண்டும் நாம்கடந்து விட்டோம்!
நம்நாட்டின் நில்வளமும் தொழில்வளமும் மற்றும்
நல்லறிவு நுணுக்கமதும் அயராஉ ழைப்பும்
அம்மட்டோ! பகுத்துண்ணும் செயல்சிறிதும் பெற்றோம்!
அதுபோதும் அதுபோதும் என்றிருந்து விட்டால்
பொம்மைகளின் திருமணம்போல் குடியாட்சி மாறும்!
புதுநோக்கில் இலக்கியத்தைச் சமைத்திடுவோம் வாரீர்! 29

வளமிகுநம் வாழ்விற்கு நாமடைந்த வெற்றி
வளமைமிகு பெருவெற்றி எனும்கனவு வேண்டாம்!
களம்கண்ட நம்தலைவர் விடுதலைப்போர் வீரர்
கனவுகண்ட வளமெல்லாம் கைக்கெட்ட வேண்டும்!
உளமார அயராதிங் குழைத்துழைத்து நாளும்
ஒளிமயமாம் வளமிகுநல் வாழ்வடைய என்றும்
இளைப்பாற எண்ணாமல் இனியதமிழ்ப் பாடல்
இலக்கியத்தைச் சமைத்திடுவோம்; இன்பமடை வோமே!30

*(இக்கவிதை திருச்சி வானொலியில் 14-1-'73 அன்று பொங்கற் கவியரங்கத்தில் பாடப்பட்டது.)*

RangaRakes tamilnavarasam.com

## பாடுபடும் தொழிலாளி—கவிஞர்

வான்தாவும் நீள்தாழை உச்சி நீண்ட
மலர்தாவும்; மறிகடலின் கரையோ ரத்தில்
கூன்தாவும் புன்னையிலே வெண்பூ பூக்கும்;
குளிர்தாவும் நீளலைகள் முழக்கம் செய்யும்
தேன்தாவும் கழியெல்லாம் நீலம் பூக்கும்;
சீர்தாவும் கடலூரில் வந்து சூழ்ந்த
கான்தாவும் குயிலினங்காள்! கவிஞர் ஏறே!
களிதாவும் பெற்றோரே! தாய்க்கு லத்தீர்! 1

செந்தமிழால், கவிபாடித் தாய கத்தின்
சீர்சிறக்கச் செய்வதற்கே தென்னார்க் காடு
தந்தளித்த மாநாட்டில் பங்கு கொள்ளும்
தமிழ்ப்பெரியீர்! இளையோரே! உடன்பி றப்பே!
வந்துள்ள மாணவர்காள்! மங்கை நல்லீர்!
மாநாட்டுக் குழைப்போரே! உங்கட் கின்று
செந்தமிழால் எண்சீரால் கவிதை யாத்துத்
திருவிருத்த என்வணக்கம் செப்பி னேனே! 2

அலைகுடையும் கரைபோல மெல்ல மெல்ல
அருகிருந்து சிந்தித்துத் திட்ட மிட்டு
மலைகுடையும் கற்றச்சர் வாழைப் பிஞ்சாம்
வடித்தெடுத்த உளியெடுத்துத் தட்டித் தட்டிச்
சிலைகுடையும் செயல்பெரிதாம்; ஆனால் கன்னிச்
செந்தமிழால் பாப்புனைவோர் ஏடெ டுத்தால்
தலைகுடையும்; கண்குடையும்; பாட்டுத் தோன்றும்
தாதையிவர் கலையுலகத் தாதை யாமே! 3

எண்ணத்தை மற்றவர்கள் கண்முன் காட்ட
ஏடெழுதி ஓவியத்தில் அங்கு மிங்கும்
வண்ணத்தைச் சேர்த்துவைத்தால் போதும்; நீண்ட
வான்தாவும் கோபுரத்தின் மீது நல்ல

RangaRakes tamilnavarasam.com

சுண்ணத்தை அப்பியப்பிக் காட்ட எண்ணும்
தோற்றத்தை நனியமைக்கக் கூடும்; பாட்டு
வண்ணத்தை யாத்திடுவோன் எங்கும் என்றும்
பிறக்கின்றான்; வளர்வதில்லை; மங்கா உண்மை 4

மன்றிருந்து வட்டாடு வாரைப் போல
வரிப்பந்தை உதைக்கின்ற மக்கள் போல
நின்றிருந்து பூப்பந்தைத் தட்டித் தட்டி
நிலம்வீழ்த்திக் கணக்கெண்ணி நிற்பார் போல
அன்றிருந்தே இன்றுவரை பாக்கள் யாத்தோர்
அரங்கிருந்து வட்டாடி யோரே ஆவர்!
''இன்றிருந்து நாளைவா'' என்றே சொல்லும்
இன்கவிக்கும் யாப்பணிகள் என்றும் வேண்டும்! 5

கூன்நிலவு பிறைநெற்றிக் கன்னிப் பெண்கள்
குளிர்நிலவைப் போன்றிருந்தும் காட்ட கத்துத்
தேன்நிலவுச் சொல்லின்றேல் ஆடை இன்றேல்
சிலம்பின்றேல் அணிமணிகள் இன்றேல் என்னாம்?
கான்நிலவு போன்றதுவே பாட்டில் நல்ல
கற்பனையும் யாப்பணியும் இல்லை என்றால்!
வான்நிலவு புயற்காற்றால் இன்பம் உண்டோ?
மலர்த்தென்றல் நற்கவிதைப் பாட்டென் போமே! 6

கார்முட்டும் மலைத்தொடரில் கல்லில் தோன்றிக்
கடல்முட்டும் நிலப்பரப்பில் வற்றா தோடி
நீர்முட்டும் கால்வழியே நன்செய் புன்செய்
நிலமுட்டும் பேராறே ஆன்றோர் செஞ்சொல்
சீர்முட்டும் பாட்டாகும்; ஆன்றோர் பாடல்
திசைமுட்டும் புகழ்பரப்பும் என்றும் வாழும்!
வேர்முட்டும் பலாவாழை மாவும் கூட்டும்
மிகுசுவையும் கவிச்சுவைக்கு மிக்கப் போமோ? 7

RangaRakes tamilnavarasam.com

முறையாக இலக்கணத்தைக் கற்க வேண்டும்,
முன்னூலும் பின்னூலும் ஓத வேண்டும்;
மறையாக இருக்கின்ற நன்னு ணுக்க
வழிமுறையை ஆன்றோர்வாய்க் கேட்க வேண்டும்;
குறையாக அமைந்திடுமோ பாடும் பாடல்
குளிர்பொன்னி வளம்சேர்க்கும்; மக்கள் நெஞ்சம்
கறையாக வழிசெய்யா; கத்து கின்ற
கடல்போன்ற பெருவளத்தைச் செய்யும் நீடே! 8

ஓடாத ஆறுண்டோ? விண்ணில் என்றும்
உலவாத காற்றுண்டோ? செங்காய் கோத
நாடாத கிளியுண்டோ? ஈன்ற அன்னை
நடுந்தெருவில் அடித்தாலும்! கூவி ஓடித்
தேடாத சிறுபிள்ளை உண்டோ? தாயின்
திருவினிலே கவிபாடும் ஆற்றல் பெற்றார்
பாடாத மனம்படைத்து வாழ்வ துண்டோ?
பாவலர்காள்! பாடிடுவோம்! என்றும் வாழ்வே! 9

தெருவுற்ற குப்பையினைக் கோழிக் குஞ்சு
சிறகடித்துச் சீய்த்துண்ணல் உண்மை! மற்றும்
மருவுற்ற நன்மலர்கள் நாற்றம் வீசி
வண்டினத்தை மருங்கேற்றுக் கொள்ளல் உண்மை!
கருவுற்ற உயிரினங்கள் ஈனல் உண்மை;
கார்பெற்ற நீள்வானம் பெய்தல் உண்மை!
திருவுற்ற பாவலர்கள் என்றும் பாடிச்
செந்தமிழைக் காப்பதுண்மை! பாடு வோமே! 10

முன்னோர்கள் நமக்களித்த காவி யங்கள்
முத்துவிளை கடல்போல இன்றும் உண்டாம்!
அன்னோர்கள் வறுமையிலும் பாடிப் பாடி
அகமகிழ்ந்தார்; அதுதானே அன்னோர் நோக்கம்!

RangaRakes tamilnavarasam.com

பின்னோர்கள் விதிவிலக்கா? இல்லை! இல்லை!
பிறந்ததுவே பாப்பாடப் பின்னென் கண்டார்?
முன்னோர்கள் பின்னோர்கள் போல நாமும்
மூச்சுள்ள வரைபாடி வாழு வோமே! 11

செய்மொழியை நமையீன்ற காலை அன்னைத்
திருத்தமுற வாயூறச் சொல்லித் தந்த
தாய்மொழியைத் தமிழ்மொழியை முன்னர்க் கற்றுச்
சார்ந்துள்ள பிறமொழியைப் பின்னர்க் கற்று
வாய்மொழியைத் தமிழ்மறையை ஆன்றோர் விள்ள
மனமேற்றுப் பொருள்நாடி வாழ்க்கை நாடி
காய்மொழியை நனிவிலக்கிக் கங்குல் நீக்கும்
கவின்நிலவாய் என்றென்றும் வாழ்வோம் நாமே! 12

பழுத்திருக்கும் மரந்தேறிப் பரந்து சென்று
பசிஆறிப் பாட்டிசைக்கும் புட்கள் போல
விழித்திருக்கும் நேரமெலாம் பாட்டைப்பாடி
மெய்மறந்து வாழ்ந்திருப்போர் கவிஞர் எந்தச்
சுழித்திருக்கும் ஆற்றினிலும் எதிர்த்து நீந்தத்
துணிந்தவர்கள்! அஞ்சாதோர்! கொடுமை கண்டால்
பழித்திருப்போர்! பகைத்திருப்போர்! பிறருக்காகப்
பாடுபடும் தொழிலாளி கவிஞர் ஆமே! 13

இருட்டறையில் இருப்போர்க்கும்
எரிவிளக்கில் படிப்போர்க்கும்
எங்குள் ளோர்க்கும்

தெருட்டுகின்ற நல்லறிவைச்
செந்நெறியைச் செந்தமிழால்
செவியுள் ஊட்டிக்

RangaRakes tamilnavarasam.com

14

குருட்டுணர்வைப் போக்கிடுவோர்
கொடுமையினைச் சாடிடுவோர்
கொள்கை வீரர்

மருட்டலுக்கே அஞ்சாதார்
மாக்கவிஞர்! அவர்வாழ
வாழும் நாடே! 14

*(தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்க்கவிஞர் மன்றத்தினர் தமது முதல் மாநாட்டைக் கடலூர் வள்ளலார் அரங்கில் 9-1-'71இல் நடத்தியபோது கவிஞர் தலைமையேற்றுப் பாடிய தலைமைக் கவிதை இது.)*

RangaRakes tamilnavarasam.com

# ஒக்கும் பிறப்பு-ஒவ்வாச் சிறப்பு

குறிஞ்சி :

வான்எழுந்த பிள்ளைமதி
மலைஎழுந்த நீளருவி!
மலர்பூஞ் சாரல்

தேன்எழுந்த வட்டஇறால்
செழுமுகிலின் கருநிலவு!
திகழும் உச்சி

கூன்எழுந்த மலைத்தொடரில்
குரல்கொடுக்கும் மழைக்களிறு
கொல்லும் வேங்கை

ஊன்எழுந்த பிறப்பொக்கும்!
ஒவ்வாத சிறப்பென்றே
உணருவோமே! 1

முல்லை :

புரிமுற்றி நீண்டிருக்கும்
புதுக்கயிறு போற்கொடிகள்
பூத்துத் தாவி

உரிமுற்றிக் கவைக்கிளைகள்
உயர்ந்திருக்கும் மரமேறும்
ஒளிசேர் முல்லை

வரிமுற்றிக் காண்குயிலும்
வண்புறவும் பசுங்கிளியும்
வாய்த்த மூச்சு

சரிமுற்றி இருந்தாலும்
தகுசெயலின் சிறப்பென்றாய்ச்
சாற்றப் போமோ? 2

RangaRakes tamilnavarasam.com

மருதம் :

கரைதேக்கி வான்தந்த
காா்தேக்கி மதகிடையில்
கால்கள் தேக்கி

நுரைதேக்கி வருநீரால்
நுகம்தேக்கி வயலினிலே
நுணலை தாவ

வரைதேக்கி நீள்கரும்பு
மணிச்செஞ்நெல் வளர்கின்ற
வாழ்க்கை ஒக்கும்!

உரைதேக்கிப் பயனளிக்கும்
ஒப்புயர்வில் ஒவ்வொன்றின்
உயர்வு வேறே! 3

நெய்தல் :

நெடுவான நிறம்பெற்று
நீளலைகள் கரைமோத
நீண்ட தாழை

மடுவான நீள்கழியின்
வயல்பூக்கும் வெள்ளுப்பும்
வளரும் மீனும்

தொடுவான நெய்தலிலே
தோன்றினவே! பிறப்பொக்கும்!
தூய நன்மை

படுவான உலகத்தில்
பயனளிக்கும் நிலைவேறு;
பண்பும் வேறே! 4

RangaRakes tamilnavarasam.com

பாலை :

சீர்பழுத்த காதலியின்
சிலம்பொலியை அல்லுபகல்
சிந்தை எண்ணி

நீர்பழுத்த குளக்கரையில்
நின்றிருந்தே உறவாடி
நிலைத்த இன்பப்

பேர்பழுத்த குழந்தைகளின்
பிறப்பொக்கும்! சிறப்பொவ்வா
பிறப்பின் மேன்மை

ஊர்பழுத்த சிறப்பன்றி
ஊன்பழுத்த சிறப்பென்றே
உள்ளு வாரோ? 5

மலையிடையில் பிறந்துஉயிர்
மக்களினம் செடிகொடிகள்
மரங்கள் யாவும்

அலையிடையில் பிறந்தனவும்
அடர்வான நீள்விசும்பில்
அமைந்த யாவும்

நிலையிடையில் பிறப்பொக்கும்
நீள்சிறப்பில் ஒவ்வாதாம்
நெடுநாள் உண்மை!

தலையிடையில் மனிதஇனம்
தம்செயலின் சிறப்பின்றித்
தழைத்தி டாதே! 6



RangaRakes tamilnavarasam.com

கடல்சூழ்ந்த உலகத்தில்
கல்தோன்றி மண்தோன்றாக்
காலம் தொட்டே

உடல்சூழ்ந்த மனிதஇனம்
உயிர்சூழ்ந்த பிறப்பொக்கும்!
உண்மை! உண்மை!

அடல்சூழ்ந்த வெற்றியினை
அடைந்தோர்கள் பலருண்டாம்
ஆனால் என்றும்

மடல்சூழ்ந்த மண்ணுலகில்
மாப்புகழை அழியாமல்
வளர்த்தார் வேறே! 7

மொழிவகுத்தோர் முன்னோர்கள்
முழுகின்ற ஒலியெல்லாம்
முறையே செய்து

வழிவகுத்தார்; ஒலிக்கேற்ற
வரிவடிவை அமைத்திட்டார்
மக்கள்; ஆனால்

பழிவகுத்தார் சில்லோர்கள்
பண்பில்லாக் கீழ்மக்கள்;
படைப்பில் ஒன்றே!

விழிவகுத்தார் துறைதோறும்
மேன்மைபெறு வாழ்விற்கே
மேலோர் ஆமே! 8

## 19

பிறப்பினிலே சாதிபல
பிறப்பித்து வாழ்ந்தாலும்
பிறந்து பின்னர்

இறப்பினிலே வீழாமல்
எவரிருந்தார் எந்நாட்டில்
என்று கேட்டால்

சிறப்பினிலே வாழ்கின்றார்
செத்தாரும்; அஃதில்லார்
சீர்த்தி என்னாம்?

மறப்பினிலே வாழாமல்
வாழ்வாங்கு வாழ்ந்திருக்கும்
வழிகாண் போமே! 9

பள்ளத்துள் நீர்நிலைக்கும்
பாருலகில் மனிதரெனப்
பல்லோர் கண்டோம்

உள்ளத்துள் நிலைத்திருப்போர்
ஓரிருவர் அன்றிமண்ணில்
உண்டோ? சொல்வீர்!

கள்ளத்துள் தூயநெறிக்
கருத்தேற நன் மருந்தைக்
கவியால் தந்த

வள்ளத்துள் தேன்பாய்ச்சும்
வள்ளுவனார் வாழ்கவென
வாழ்த்து வோமே! 10

RangaRakes tamilnavarasam.com

# இன்பக் குடும்பம்

மனைவி :

ஆசைக்கு ஒன்று ஆஸ்திக்கு ஒன்று
அதுவே போதும் மச்சான்!—இரண்டு
அதுவே போதும் மச்சான்!
காசே இல்லாத கஷ்டக் குடும்பம்
கருத்தினில் நிறுத்து மச்சான்!—இதை நீ
கருத்தினில் நிறுத்து மச்சான்! 1

கணவன் :

குளத்தில் மூழ்கிக் கோயிலைச் சுற்றிக்
கும்பிடு போட்டாலும்—செல்லாத்தா!—நித்தம்
கும்பிடு போட்டாலும்
உளத்துக் கவலை மாற்றும் குழந்தை
ஒருசிலர்க் கில்லையடி!—செல்லாத்தா!—ஏனோ
ஒருசிலர்க் கில்லையடி! 2

மனைவி :

குழந்தை இல்லாட்டிக் குடும்பத்தில் மகிழ்ச்சி
குறைந்தா போகும்? மச்சான்!—எந்நாளும்
குறைந்தா போகும்? மச்சான்!
குழந்தை மிகுந்தா குடும்பத்தில் இன்பம்
குறைந்து போகும் மச்சான்!—வறுமை
நிறைந்து போகும் மச்சான்! 3

RangaRakes tamilnavarasam.com

கணவன் :

நம்பிள்ளை நமைப்போல வளர்ந்து நிற்பான்
நமக்கேன் கவலையடி?—செல்லாத்தா—அதைப்பற்றி
நமக்கேன் கவலையடி?
பட்டுப் போகாமல் பழையது கொடுப்போம்!
பால்பழம் வேண்டாமடி!—செல்லாத்தா!—நமக்குப்
பால்பழம் வேண்டாமடி! 4

மனைவி :

பிள்ளை குட்டி பெருத்த நாட்டில்
பிழைப்புக்கு வழியேது? மச்சான்!—மக்கள்
பிழைப்புக்கு வழியேது?
வெள்ளம் போலப் பிள்ளை பெருத்தால்
விளைவுக்கு நிலமேது? மச்சான்—நாட்டில்
வீட்டிற்கு மனைஏது? 5

அடுபசித் துன்பம் மடமை வறுமை
அளிப்பதே பல குழந்தை மச்சான்!—கவலை
அளிப்பதே பலகுழந்தை!
குடும்பக் கட்டுப் பாட்டு நிலையம்
குழந்தைத் துயர்ஒழிக்கும்!—மச்சான்—அங்குச்
சென்றால்
குடும்பத் துயர்ஒழியும்! 6

கணவன் :

பெண்ணே! கண்ணே! பெருமனை யாட்டி!
பேச்சிற் கினியவளே!—செல்லாத்தா!—அறிவுப்
பேச்சிற் கினியவளே!
உண்மை உணர்ந்தேன் அறிந்தேன் தெளிந்தேன்
உனக்கென்ன வேண்டுமடி?—செல்லாத்தா!—கேள்நீ
உனக்கென்ன வேண்டுமடி? 7

RangaRakes tamilnavarasam.com

மனைவி :

மக்கள் இரண்டு பெற்றால் போதும்!
மகிழ்ச்சியில் வாழ்ந்திடலாம்!—மச்சான்!—நாம்
மகிழ்ச்சியில் வாழ்ந்திடலாம்!
மக்கள் குறைந்தால் வறுமை குறையும்!
வாழ்வின் வளம்பெருகும்!—மச்சான்!— நாட்டில்
வாழ்வின் வளம் பெருகும்! 8

இருவரும் :

இன்பக் குடும்பம் இரண்டொரு குழந்தை
இருக்கும் குடும்பம் என்போம்!—வளத்தைப்
பெருக்கும் குடும்பம் என்போம்!
அன்பும் அறனும் அறிவும் நிறைக்கும்
ஆன்ற குடும்பம் என்போம்!— புகழை
ஈன்ற குடும்பம் என்போம்! 9

RangaRakes tamilnavarasam.com

# கருத்தடை வேண்டும்

பெருத்த மக்கள் இந்திய நாட்டின்
பெருநோய் ஆனாரே! — முத்தம்மா! — கொல்லும்
கொடுநோய் ஆனாரே!
கருத்தடை செய்வதே பொருத்தம் நாட்டின்
கவலை நீங்கிடுமே! — முத்தம்மா!
கவலை நீங்கிடுமே! 1

இந்த நாட்டில் பிறக்கும் குழந்தை
எண்ணிக்கை கூறட்டுமா? — முத்தம்மா!
எண்ணிக்கை கூறட்டுமா?
இந்த நாட்டின் பிறப்பு இறப்பின்
ஏற்றம் சொல்லட்டுமா? — முத்தம்மா!
ஏற்றம் சொல்லட்டுமா? 2

ஒவ்வொரு நாளும் சேலத்து மக்கள்
ஊருள் பிறக்கின்றார்! — இந்திய
ஊருள் பிறக்கின்றார்!
ஒவ்வொரு பத்து நாளும் சென்னை
ஊரார் பிறக்கின்றார்! — முத்தம்மா!
ஊரார் பிறக்கின்றார்! 3

பத்தாண்டுக்குள் பதினைந்து கோடி
மக்கள் பெருகிவிட்டார்! — முத்தம்மா!
மக்கள் பெருகிவிட்டார்!
செத்தவர் குறைவு பிறப்பவர் மிகுதி
செய்யும் வழியாதாம்? — முத்தம்மா!
செய்யும் வழியாதாம்? 4

RangaRakes tamilnavarasam.com

ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி பிள்ளைகள்
அடுக்கடுக்காய்ப் பிறந்தால்—முத்தம்மா!
அடுக்கடுக்காய்ப் பிறந்தால்
வேண்டும் உணவும் வீடும் கிடைக்குமோ?
வேலை கிடைத்திடுமோ?—முத்தம்மா!
வேலை கிடைத்திடுமோ? 5

ஆலைகள், கற்கச் சாலைகள் கட்டியென்?
ஆக்கம் பலபுரிந்தென்?—முத்தம்மா
ஆக்கம் பலபுரிந்தென்?
மேலைய நாட்டினில் மக்கள் குறைவினால்
மேன்மையாய் வாழுகின்றார்!—முத்தம்மா! 6
மேன்மையாய் வாழுகின்றார்!

பிள்ளை பலபெற்ற தாயின் உடல்நலம்
பேணுதல் எப்படியாம்?—நற்றாயைக்
காணுதல் எப்படியாம்?
வெள்ளக் கொடுமையே பிள்ளைப்பெரு வெள்ளம்
வேறென்ன சொல்வதுவாம்?—முத்தம்மா!
வேறென்ன சொல்வதுவாம்? 7

அளவாய்க் குழந்தைகள் பெற்ற குடும்பத்தில்
அறிவு வளம்பெருகும்!—குழந்தை
அழகு வளம் பெருகும்!
பிளவு பொறாமை நோய்நொடி யாவும்
பேரற்று அழிந்துவிடும்!— பொருள்பல
சீருற்று ஓங்கிவிடும்! 8

நம்முடை இந்திய நாடோ வறுமை
நாடென் றறியாயோ?—முத்தம்மா!
நாடென் றறியாயோ?
செம்மையாய் வாழக் கருத்தடை வேண்டும்!
சிந்தித்துப் பாராயோ?—முத்தம்மா!
சிந்தித்துப் பாராயோ? 9

RangaRakes tamilnavarasam.com

# இசைக்குரியார்

## அறிஞர் அண்ணா வாழியரே!

வானைப் போன்ற அறிவாற்றல்
வாய்த்தோன்! அருங்குணம் வாய்த்தோனாம்!
தேனைப் பாய்ச்சும் செஞ்சொல்லான்!
தெருண்டவர் வியக்கும் பேச்சழகன்!
ஊனை உயிரை நல்லுணர்வை
ஊக்கும் தென்றற் பூங்காற்று!
ஆணே றழகன் எம்அண்ணா!
அறிஞர் அண்ணா வாழியரே! 1

இருளைப் போக்க உலகினிலே
எழுந்த தொடுவான் இளம்பரிதி!
உருளும் இடியென முழங்கிடுவோன்!
ஊருக் குழைக்கும் பாட்டாளி!
வெருளும் நுகத்துக் காளைகளை
மெல்ல அடக்கும் நல்லுழவன்!
அருளும் குணத்தோன் எம்அண்ணா
அறிஞர் அண்ணா வாழியரே! 2

மக்கள் போற்றும் இளவேனில்!
மாணவர் கற்கும் தொகைப்பாடல்!
சுக்குத் திப்பிலி மிளகென்னும்
துயரைப் போக்கும் மாமருந்து!

RangaRakes tamilnavarasam.com

திக்குப் புகழ்சேர் திராவிடத்தின்
　　தீரன்! விடுதலைப் போர்த்தலைவன்!
மக்கள் தலைவன் எம்அண்ணா!
　　அறிஞர் அண்ணா வாழியரே! 3

ஏழை செல்வன் இல்லாத
　　இன்பத் திராவிட நாடடைய
வாழ்வை இளமை முதற்கொண்டே
　　வகுத்தோன்! தம்பியர் தொகுத்தோனாம்
சூழும் கடலூர் திராவிடத்துத்
　　துணைவன்! விடுதலைப் படைத்தலைவன்!
வாழ்க அண்ணா! எம் அண்ணா!
　　அறிஞர் அண்ணா வாழியரே!! 4



இக்கவிதை 1964ஆம் ஆண்டு நவம்பருக்கு முன் எழுதப்பட்டது.

RangaRakes tamilnavarasam.com

# நமதண்ணா வாழியரே!

சீர்மேவு காஞ்சித் திருமகன் அண்ணா செழுந்தமிழைப்
பார்மேவு மக்கள் மனத்தில் விளக்கிப் பசுமரம்சேர்
கூர்மேவு ஆணியெனக் கூறும் திறத்தோன்! குளிர்விழியோன்!
நீர்மேவு நீள்கடல் போல நிலைத்தண்ணா வாழியரே! 1

தேன்மிகு செஞ்சொல் திறத்தால் திசைமாறும் செந்தமிழர்
கூன்மிகு நெஞ்சைக் கொடுமை அரசைக் குடிகெடுக்கத்
தான்வளர் நாட்டில் தலைநிமிர் இந்தியைத் தட்டியோட்ட
வான்எழு ஞாயிறு வந்தான் நமதண்ணா வாழியரே! 2

மக்கள் துயருறும் மடமை அரசியல் மாய்ப்பதுவே
மக்கள் பிறவியை வாய்த்தவர் கைக்கொள் அறச்செயலாம்!
மக்கள் அறிவை வளத்தை அரசைத் திருத்திடுவோன்
மக்கள் தலைவன்நம் அண்ணா மலைபோல வாழியரே! 3

சூழும் அலைகடல் முப்புறம் சூழ்ந்திடு தென்னகத்து
வாழ்வை அரசை வளஞ்செய் மலையிடை வந்துதித்த
ஆழ்கடல் ஞாயிறாம் அண்ணா தமிழர் தனித்தலைவன்
ஏழெட்(டு) அகவையை எட்டினன் வாழியர்! வாழியரே! 4

உலையில் கொதிக்கும் உணவாம் அரிசிநல் காய்கறிகள்
விலையை எதிர்த்துச் சிறையில் இருந்தே வெளிவந்தோன்!
கலையை வளர்த்தே தமிழை வளர்க்கும் கருத்துடையோன்:
மலையில் பிறந்த மருந்தாம் எமதண்ணா வாழியரே! 5

சந்தில் மறைந்தும் பசுத்தோல் அணிந்தும் தமிழ்ஒழிக்கப்
பொந்துப் புலியாம் புகவரும் இந்திப் புணர்மொழியை
எந்தத் திசையில் வரினும் எதிர்த்துச் சிறைபுகுந்து
வந்தவர் அண்ணா! அறிஞர்! வளத்துடன் வாழியரே! 6

RangaRakes tamilnavarasam.com

மக்கள் மனத்துள் படிந்த பழமையாம் மாசுகளைச்
செக்கச் சிவந்தநற் செந்தேன் மொழியால் செவியுறுத்திச்
சிக்கல் அவிழ்க்கும் நமதண்ணா வாழியர்! நாலிரண்டு
திக்கில் புகழைப் பரப்பிச் சிறப்புடன் வாழியரே! 7

என்றும் அரசியல் ஏற்றம் அடைந்தால் இனிமைமிகும்!
நன்றே அரசியல் நாட்டிட வேண்டும் நலம்பெருகும்!
என்றே அமைச்சை அரசை அணுகி அறிவுரையாம்
பொன்றும் கருத்தைப் புகலும் அண்ணா வாழியரே! 8

உறங்கும் புலியாம் தமிழகம் வாழும் உடன்பிறப்பைக்
கறங்கும் முரசெனக் கற்றவர் கல்லார் மனம்பதிய
அறங்களைக் கூறி அரசியல் கூறி அறிவுறுத்தும்
திறஞ்சேர் முதலமைச்(சு) அண்ணா புகழுடன் வாழியரே! 9

முப்பால் முழுதும் படிக்கத் தமிழர் முனைந்துவிடில்
தப்பா(து) அறமும் அரசும் வளமும் தழைத்திருக்கும்!
எப்பார் உலகும் இனிக்கும் திருக்குறள் வள்ளுவரை
ஒப்பார் அறிஞர் நமதண்ணா ஒப்பாராம் வாழியரே! 10

புன்னகத் தீஞ்சொல் புதுமை எழுத்தால் புதுக்கருத்தை
நன்னிலை மக்கள் அடைந்திட நாடு வளம்கொழிக்கத்
தென்னக வால்டேர் அறிஞராம் அண்ணாநல் கீர்த்தியுடன்
இந்நாள் அய்ம்பதும் ஆறும் அடைந்தனர் வாழியரே! 11

மக்கள் பிறவியில் வாழ்ந்த கறுப்பர் வளமையெலாம்
திக்குத் தெரியாத் திசையினர் உண்டு திளைத்திருக்க
மக்கள் அடிமையை மாய்த்தவர் மாப்புகழ் லிங்கனும்தென்
மக்கள் உளம்நிறை லிங்கனும் எம்அண்ணா வாழியரே! 12

ஏழைப் பெருங்குடி மக்கள் உழைப்பை இருட்டடித்துப்
பேழை நிரப்பும் பெருந்தனக் காரர் பிழைதிருத்தி
வாழ வழியை வகுக்கும் தமிழர் முதலமைச்சர்!
வாழிய அண்ணா! அவர்வழித் தம்பிகள் வாழியரே! 13

---

*இக்கவிதை 1964 ஆம் ஆண்டு நவம்பருக்குமுன் எழுதப் பட்டது.*

RangaRakes tamilnavarasam.com

# ஞாயிறு நம் அண்ணா!

வானேறி மலைதாவி மலைமுகட்டில் தோயும்
மறிகடலின் மறுபிறப்பாம் காரினங்கள்; நீண்ட
கூனேறிக் கொம்பொடிந்த குறுங்கழுத்து யானை
குன்றத்து மழைகண்டே குரல்கொடுக்கும்; சாரல்
மானேறிப் பிணைஅழைக்கும்; மலராடும் தென்றல்;
வளர்புன்னைக் குறிஞ்சியிலே வாழுகின்ற மக்கள்
தேனேறிச் சொட்டுகின்ற செஞ்சொல்லும் வாழ்வும்
செழிக்கவரு ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 1

கொடிபடர்ந்த கிளைதாழ்த்தி மறியூட்டும்; ஆயன்
குழல்ஓசை கேட்டருகில் குதித்துவரும் குட்டி;
மடிபடர்ந்த காம்பிருந்தே வடித்தெடுத்த பாலின்
மணம்வீசும்; வரகுதினை மணம்வீசும்; முல்லை
அடிபடர்ந்த ஆய்ச்சியர்கள் அசைந்துநடை போட
அயலொதுங்கும் பெண்புறவு; முன்னாளின் இன்பம்!
மிடிபடர்ந்த நிலைமாற்ற நல்வாழ்வைக் கூட்ட
விண்ணெழுந்த ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 2

குளத்தினிலே குட்டையிலே தாமரைகள் பூக்கும்;
கூத்தடிக்கும் சிறுவர்போல் மீனினங்கள் துள்ளும்;
களத்தினிலே பிணைஅடிக்கக் கார்முழக்கம் கேட்கும்;
கன்னியர்கள் காளையர்கள் கலைபயிலும் மன்றம்
உளத்தினிலே மகிழ்வூட்டும்; உணவுக்கா பஞ்சம்?
ஒப்பில்லா அவ்வாழ்வா இந்நாளின் வாழ்வு?
வளத்தினிலே வாழ்வடைய வழிகாட்ட வந்த
வானெழுந்த ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 3

RangaRakes tamilnavarasam.com

கடலோடு தொடுவானம் கலந்திருக்கும்; நெய்தற்
கன்னியரும் காளையரும் மணல்மேட்டில் தாழை
மடலோடு மடல்சாய்க்க வரும்அலைகள் தாவும்;
வரிநண்டு வளையோடும்; புன்னைமலர் சிந்தும்;
திடலோடு கட்டுமரம் சிறுதோணி வற்றாக்
கடல்வளத்தின் சீர்பாடும்; இதுமுன்னாள் செம்மை!
குடலோடு குடலொட்டும் கொடுவாழ்வைப் போக்கும்
குன்றெழுந்த ஞாயிறுநம் அண்ணாவே வாழ்க! 4

விண்பூத்த மீனினமும் பூந்தென்றல், சோலை
வேய்பூத்த நீள்மலையும் மலைமுகட்டும் வானும்
கண்பூத்த விரிகடலும் எழுந்தெழுந்தே நீண்ட
கரைமோதும் வெள்ளலையும், திங்கள்ஒளி வீசும்!
பண்பூத்த என்கவிதை ஞாயிறொளி வாழ்வாம்!
பணக்காரர் பாட்டாளி பகுத்துண்டு வாழ
மண்பூத்த ஞாயிறுநம் நல்லறிஞர் அண்ணா!
பாலாற்று மணல்போல வாழ்கபல ஆண்டே! 5

இந்நாட்டில் வாழ்ந்திடுவோர், எழுத்தறிந்த மேலோர்,
இனியமொழி அருகிருந்தோ தொலைவிருந்தோ கேட்டோர்,
தன்னாட்டிற் கேஉழைக்கும் தற்பெருமை இல்லாத்
தனித்தலைவன், குணக்குன்று, காஞ்சிதந்த செம்மல்
தென்னாட்டு ஞாயிறெனச் செவிகுளிரச் சொல்வார்!
செந்தமிழ்போல் நமதண்ணா வாழ்கபல ஆண்டே!
எந்நாட்டுக் காரிருளும் ஒளிசெய்ய வந்த
இளம்பரிதி நமதண்ணா எனவாழ்த்து வோமே! 6

5—9—66

# சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா!

கடல்மல்லைத் திருநாட்டுக் காஞ்சிதந்த செம்மல்!
கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பேற்றும் நீண்ட
மடற்றாழை மலர்மணந்து வருந்தென்றற் காற்று!
வளர்புன்னைப் பூவிருந்து வண்டெழுப்பும் பாடல்!
இடமகன்ற தமிழகத்தின் இருள்போக்கி வானில்
எழுந்தசுடர்! மாற்றாரும் எண்ணியெண்ணி ஏங்க
நடமாடும் அறிவூற்று! தமிழகத்தில் வாய்த்த
நல்லமைச்சர் சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா! 1

அலைபிறந்த முத்தாரம்! அழகுமணிக் கோவை!
அடர்தென்னை மரத்தோப்பு! சுவைஇளநீர்க் காய்கள்!
மலைபிறந்த நீள்அருவி! மயிலாடு பாறை!
வள்ளுவனார் உலகளித்த குறட்பாக்கள்! நீண்ட
குலைபிறந்த செவ்வாழை! குளிர்ந்தமலர் ஓடை!
குழலோசை! தமிழ்நாட்டுக் கொடுமைக்கு வேட்டு!
கலைபிறந்த தமிழகத்தின் அரசுக்கு வாய்த்த
கதிர்க்கோமான் சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா! 2

முகம்தந்த இளஞ்சிரிப்பு! மூதறிஞர் நெற்றி!
முனிவில்லா ஒளிக்கண்கள்! முற்போக்கின் எண்ணம்!
அகம்தந்த தமிழ்ச்சுவையே அடுக்குமொழிப் பேச்சாம்!
அன்புள்ளம் அறச்செயலே அவர்வாழ்வின் நோக்கம்!
பகைதந்த ஏச்செல்லாம் பதறாமல் ஏற்கும்
பண்பாளர்! அன்பாலே பகைவெல்லும் தீரர்!
வகைதந்த அறிவாலே தமிழகத்தை ஆளும்
வழிகாட்டி! சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா! 3

RangaRakes tamilnavarasam.com

கற்றவர்கள் வியக்கின்ற தனித்தமிழ்மா மேதை!
கலையுலகில் எழுத்துலகில் தனிப்பாதை கண்டோர்!
மற்றவர்கள் துயர்காணின் மனங்கலங்கும் சான்றோர்!
வாய்இனிக்கச் சுவைகுன்றாச் சொல்லாளர் அண்ணா!
வற்றாத பேராறும் வளம்கொழிக்கும் நன்செய்
மலைக்காடும் நனிநிறைந்த தமிழகத்தை ஆளப்
பெற்றெடுத்தோர் பெயர்வாழ்க! தமிழ்மக்கள் வாழ்க!
பெரும்புகழில் நமதண்ணா வாழ்கபல ஆண்டே!' 4

22—8—67

RangaRakes tamilnavarasam.com

# காக்கும் கரம்!

செஞ்சொற் றமிழால் சிறுமை களையும் சிறுகதையில்
நெஞ்சினை அள்ளும் நிகழ்ச்சியைப் பின்னி நெறிமுறையே
வஞ்சியர் காளையர் வாழ்வினைச் செம்மை வழிப்படுத்தும்
விஞ்சையைக் காக்கும் கரமெங்கள் அண்ணா வியன்கரமே! 1

செம்பொன் உருக்கிச் சிலைசெய்யும் கொல்லர் திறன்மிகவே
அன்பைப் பெருக்கி அறிவைப் பெருக்கி அடர்ந்தபகைத்
துன்பம் விலக்கும் வழியை விளக்கித் துடிப்புமிகு
தம்பியர் காக்கும் கரமெங்கள் அண்ணா தனிக்கரமே! 2

குளத்தினைக் காக்கும் கரையினைப் போலக் குடிமுறையின்
வளத்தினைக் காக்க வழிமுறை காட்ட வருபகையின்
களத்தினை வெல்லக் கலைபயில் சாலையின் கட்டிளைஞர்
உளத்தினைக் காக்கும் கரமெங்கள் அண்ணா ஒளிக்கரமே! 3

பாட்டால் உலகப் பசியை விரட்டும் பணப்பெருக்கம்
ஈட்டி அளிக்கும் ஏழைக் குடும்பம் இனிபமுகம்
காட்டக் களிக்கும் உழைப்பால் கவலைகொள் கன்னியர்மேம்
பாட்டினைக் காக்கும் கரமெங்கள் அண்ணா பணிக்கரமே! 4

மங்கும் உலகின் இருளைக் கிழித்திட வானெழுந்து
பொங்கு கடல்மிசைப் புத்தொளி வீசும் புதுநிலவாய்
எங்கும் தமிழை எதிலும் தமிழை இழையவிட்டே
மங்காது காக்கும் கரமெங்கள் அண்ணா மலர்க்கரமே! 5

அல்லும் பகலும் உழைத்து வயிற்றுக் கரிசியின்றித்
தொல்லை அடைந்தோர் மனமும் வயிறும் குளிர்ந்திடவே
கொள்ளை விளைவைக் கொடுத்துத் தமிழர் குடியரசை
எல்லெனக் காக்கும் கரமெங்கள் அண்ணா எழிற்கரமே! 6




RangaRakes tamilnavarasam.com

காட்டைப் பிடித்த கரும்புகைத் தீயெனக் கால்நிறுத்தா
ஓட்டைக் குடிசை எரிந்திடக் கண்டே உளங்கலங்கி
நாட்டின் பெருங்குடி ஏழை விழியில் நகைமிளிர
வீட்டினைக் காக்கும் கரமெங்கள் அண்ணா விறற்கரமே! 7

பண்டைய வாழ்வும் வளமும் மிகுந்த பழந்தமிழோ
தொண்டியைப் போலத் தொலைந்ததை எண்ணித் துடிதுடித்தே
அண்டையர் நாண அருந்தமிழ் பேணி அரசியலில்
வண்டமிழ் காக்கும் கரமெங்கள் அண்ணா மழைக்கரமே! 8

வாக்கினைக் கேட்டு மனஇருள் ஓட்டி வருந்தமிழர்
வாக்கினைக் கேட்டு வழங்கி அரசின் மணிமுடியைத்
தூக்கினர்; சூட்டினர்; துள்ளினர்; தூய்மைத் தமிழரசைக்
காக்கும் கரமெங்கள் அண்ணாதுரையின் நெடுங் கரமே! 9

28—8—'67



RangaRakes tamilnavarasam.com

# அமைச்செனப்படுவது நினதே

இவரியா ரென்குவை யாயின், இவரே
தொண்டைநன் னாட்டின் துறைதொறும் கலங்கள்
நிறைத்துப் பொருளை நிறைத்துப் புகழைத்
தமிழக மிருந்தே தடங்கடல் தாண்டி
உலகுக் களித்த ஒப்பிலாப் பல்லவர்
ஆண்ட காஞ்சி அளித்த அண்ணா!
தென்னக முதல்வர்! என்னகத் தலைவர்!
உலகம் வியக்கும் ஒப்பிலா அறிஞர்!
பிறர்வாய் அடக்கும் பேச்சிற் பெரும்புலி!
வள்ளுவர் குறளின் உள்ளுறை பெரும்பொருள்!
தம்பியர் கண்ட தானைத் தலைவர்!
வரியைக் குறைத்து வறுமை குறைத்து
நெறியோ டாண்ட நீள்புகழ் மன்னர்
வளர்த்த சங்கத் தமிழின் மாண்பை
உலகத் தமிழர்க்(கு) குணர்த்திய செம்மல்!
இனியர் எளியர் எவர்க்கும் என்றும்!
செங்நெல் வயலும் செழுமலைக் காடும்
புன்னை மணக்கும் நெய்தற் பொருளும்
தன்னகம் கொண்ட தமிழக அரசை
உலகம் புரக்கும் ஞாயிறை ஒப்பக்
காக்கும் அண்ணா அமைச்சர் வாழியர்!
இதுநாள் ஆண்ட அமைச்சருள் எல்லாம்
அமைச்செனப் படுவது நினதே அத்தை!
பூவிரி நீள்கரை வற்றாக்
காவிரி போலக் காக்கநம் அரசே!

*திணை* : பாடாண்    *துறை* ; இயன்மொழிவாழ்த்து.

2—2—'68

RangaRakes    tamilnavarasam.com

# புலவராற்றுப்படை

கடலிடை எழுகதிர்த் திங்கட் காட்சி
மலையிடை ஒழுகும் அருவி வழங்கும்!
செங்கண் கருங்குயில் சிறகடி பட்டே
பொன்னுதிர் வதுபோல் பூக்கள் உதிரும்!
பூக்கொய் தோகையர் புதரிடை மயில்கள்!
கழையாடு கூத்தன் கல்லாக் கடுவன்!
முட்பலா தூக்கி முன்வரு மந்தி
முழவினை ஆர்க்கும் கூத்த முதியவள்!
மான்பயில் சாரல் மலைவழி தாண்டி
ஊணுக் காக ஒவ்வொரு நாளும்
பழுமரம் தேடும் பறவையைப் போலக்
கண்டதும் கேட்டதும் கற்றதும் எண்ணி
மண்டிய இருள்சூழ் மலர்தலை உலகில்
எண்ணி யெண்ணி இரவும் பகலும்
செஞ்சொல் உவமை சீர்தளை கூட்டிப்
பாப்புனைந் தளிக்கும் பைந்தமிழ்ப் புலவ!
அடர்கிளை இருந்தே ஆயன் இசைக்கப்
படர்புலம் மேயும் பால்மடிப் புனிற்றா
நல்கிய பாலும் நற்புளி மோரும்
ஆய்மகள் தருவள்! அருந்திய பின்னர்
மாமரச் சாலை வயல்வெளி கடந்தால்
தாமரைக் குளமும் தாங்கலும் காண்பாய்!
ஊருக் குழைக்கும் உழவர் குடியின்
சீரும் சிறப்பும் சென்றால் புரியும்!
ஏழைகள் எனினும் இன்முகம் காட்டி
வாழை விரிப்பர் வந்தோர் உண்ண!
விண்மீன் பூத்த விரிவான் போலத்
தண்ணீர் பூத்த தாமரைக் குளத்து
யானை முன்கை மானும் வராலும்
சேலும் செந்நெல் அரிசியும் கலந்த

RangaRakes tamilnavarasam.com

பைஞ்சோ றளிப்பர்! பசியா றியபின்,
பொழுது விடியப் புட்போல் எழுந்து
தொழுது ஞாயிறைத் தொடர்க வழியை!
கடலலை தந்த சுவைக்கால் நண்டைத்
தொடரும் சிறாரும் தோணியும் காண்பாய்!
நீலக் கடல்மேல் நிமிரும் பரிதிக்
கோலத் தூடே நாவாய் கொணர்ந்த
கட்டு மரமும் கடல்தரு பொருளும்
கொட்டிக் குவித்த குரைகடற் கரையில்
கழியிடைப் பூத்த நெய்தல் விழியால்
எள்ளி நகைக்கும் இளம்பெண் ஒக்கும்!
புன்னை பூக்க முத்து சிரிக்கும்
சென்னைப் பட்டிணம் செல்க! ஆங்கே
தமிழக அரசைத் தாயக அரசை
அமிழ்தெனும் தம்பியர் அரசவை இருக்க
முதலமைச் சாகி முறைசெயும் மேலோன்
கச்சி யோனே! காட்சிக் கெளியன்!
இளைஞர் உளத்திடை எழுதா ஓவியம்!
கிளைஞர்க் கென்றும் கிளைப்பூங் காற்று!
வெஞ்சின மில்லான்! செஞ்சொல் மொழியான்!
அறிவியல் அறிஞன்! அரசியல் அறிஞன்
நெறிமுறை வழுவா நேர்மை யாளன்!
கறைஇலாத் திங்கள்! காய்கதிர் ஞாயிறே!
என்றும் யாண்டும் எவர்க்கும் இனியன்!
நன்றல தறியான்! நற்றமிழ் மேதை!
நிறைகடல் பாயும் நீளாறு போல
முறைவேண்டு வோர்க்கும் குறைவேண்டு வோர்க்கும்
வேண்டியார் வேண்டி யாங்கு விளைக்கும்
ஆண்டகை அறிஞர் அண்ணா!
மூண்ட குறைபல முடிப்பன் செலினே!

1—8—'68

RangaRakes tamilnavarasam.com

# நாவலர் போற்றும் காவலன்

பாடுக புலவீர்! பாடுக நீடே!
நாடர சாளும் நம்முதல் அமைச்சை!
கத்து கடலும் கடலலை அருகில்
சிற்றுளி செதுக்கிய சிற்பச் சிறப்பும்
நனிசிறந் ததுவே நற்றமிழ்க் கச்சி!
கச்சி யோனே மெச்சும் அண்ணா!
உச்சி மாமலை ஆடும் மழைபோல்
தமிழக மடமை வறுமை தவிர்க்கும்
அமிழ்தினைப் போன்றோன் அறிஞர் அண்ணா!
மிடிமைக் கரிசி குடிமைக் கிருப்பு
நெடியோன் குன்ற நீள்பூம் புகாரைச்
சென்னையில் கவினுற இந்நாள் தேக்கித்
தென்னவர் சீர்த்தியை உலகுக் களித்தோன்!
வரிகூட் டாது மக்கள் அரசின்
உரிமை ஒழுங்கை விரிவு செய்தோன்!
விளைபொருள் படிப்படி ஏறிய விலையைக்
களைந்து வாழ்க்கைக் கொடுமையைக் களைந்தோன்!
அன்னை மொழியாம் கன்னித் தமிழை
இந்நாள் அரியணை அஞ்சா தேற்றியோன்!
நாட்டில் உழைக்கும் நலிமிகு ஏழைப்
பாட்டாளி மக்கள் பசிநோய்ப் பகைஞன்!
பெண்ணிற் பெருந்தகை அண்ணியர் இராணி
மனையின் விளக்காம் வாணுதல் கணவன்!
திங்கள் செந்தமிழ்த் தென்றல் மலர்போல்
எங்கள் முதலமைச்(சு) அண்ணா இனியன்
நாவலர் போற்றும் காவலன்!
பாவலர் பாப்போல் வாழ்கபல் லாண்டே!

2—8—'68

RangaRakes tamilnavarasam.com

# மாலைவாங்கி வாயேன்!

மலையாடும் மாமயிலே! காஞ்சி அண்ணா
மனங்கவர்ந்து போனதினால் மையல் கொண்டேன்!
அலையாடும் சென்னைநகர் முதல மைச்சே!
அழுதழுது பசப்பேறி உணவும் இன்றிக்
கலையாடும் மலைச்சாரல் தவழு கின்ற
கார்கூந்தல் நின்னயந்தாள் என்றே சொல்க!
விலையாடும் மருதநிலச் செந்நெல் புன்செய்
விளைபொருள்கள் விருப்பம்போல் உண்ண லாமே! 1

மண்பூத்த மாமலரில் தங்கித் தங்கி
வாய்மடுத்த மதுமயக்கம் மண்டைக் கேறப்
பண்பூத்த அறுகால வண்டே! இந்தப்
பாராளும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா
விண்பூத்த ஒளிச்சுடரைக் கண்டிங் கோர்பெண்
மேனியெலாம் பசப்பேற உறக்கம் இன்றிக்
கண்பூத்தாள்: நின்னயந்தாள் என்றே சொல்க!
கார்முல்லை மலர்க்காட்டில் களிக்க லாமே! 2

குளத்தினிலே சிறகடித்து மூழ்கி மூழ்கிக்
குறுங்கெண்டைச் சேலுண்ணும் செங்கால் நாராய்!
உளத்தினிலே காதலெனும் தீயை ஏற்றி
ஊராளச் சென்றுவிட்டார் அறிஞர் அண்ணா!
வளத்தினிலே எக்குறையும் இல்லை! ஆனால்
வாழ்வில்லை எனக்கூறி வருக! மன்றல்
களத்தினிலே உன்னிணைக்கே ஏற்ற நல்ல
கண்கவரும் மணிதருவேன்! கவலை போக்கே! 3

RangaRakes tamilnavarasam.com

கானகத்தில் பழங்கோதித் தளிரைக் கோதிக்
கண்சிவந்த கருங்குயிலே! கன்னியர்க்குத்
தேனகத்தில் பாய்ச்சுகின்ற அறிஞர் அண்ணா
திசைநோக்கிச் சென்றிடுக! விடியற் காலை
வானகத்தில் திங்களைப்போல் அழகு மாறி
நின்னயந்தாள் வாழுகின்றாள் என்று சொல்க!
நானகத்தில் வழிபடுவோன் அறிஞர் அண்ணா
நயந்திடுவான்; நற்செய்தி கொண்டு வாயேன்! 4

மாலையிட்ட பைங்கழுத்த செங்கண் கிள்ளாய்!
மனக்குறையை நீயன்றிப் பின்யார் கேட்பார்?
காலையிட்ட செங்கதிரோன் அறிஞர் அண்ணா
கண்பட்டேன்; நிலைகெட்டேன்; காதல் கொண்டேன்;
ஆலையிட்ட கரும்பானேன்! அணுகிச் சென்றே
ஆட்கொள்ள வேண்டுதிநீ! மறுக்க மாட்டார்!
மாலையிட்ட மணநாளுக் கேற்ற நல்ல
மலர்மாலை எனக்கொன்று வாங்கி வாயேன்! 5

10—8—'68



RangaRakes tamilnavarasam.com

# அண்ணா அறுபது

உலகில் பிறந்தே உயிர்வாழ்வோர் தம்முள்
விலையில் விரிசுடரே அண்ணா—மலையிடையில்
தோன்றிய மாமருந்தாய்த் தோன்றித் தமிழகத்தின்
சான்றோனாய் வாழ்ந்தான் தனித்து! 1

தனித்துத் தமிழகத்தின் தாழ்மையைப் போக்க
இனித்த தமிழ்பேசி என்றும்—மனித்தப்
பிறப்புப் பெருவாழ்வு பெற்றிடவே அண்ணா
அறத்தொடு செய்தான் அரசு! 2

அரசில் தமிழரசை நல்லரசாய் ஆக்கி
முரசறைந்து வாழ்த்தினான் மூத்த உரைசால்
நமதண்ணா நல்லறிஞன் பேரறிஞன் அண்ணா!
அமைதியின் தோற்றம் அறி! 3

அறிந்தார் அறியார் அறிவரே அண்ணா
நெறிநின் றொழுகிய நேர்மை!—வெறிகமழ்
பூஞ்சோலை உள்ளே புகுந்து வருகின்ற
காஞ்சி இளந்தென்றற் காற்று! 4

தென்றல் இனிமைநற் றேனினிமை வாய்ப்பேச்சில்
மன்றில் இனிக்கும் நமதண்ணா—முன்றில்
இளநகை இன்சொல் எவரெவர்க்கும் கூட்டும்
உளத்தோன் உயர்ந்தவனாம் காண்! 5

காண அறிவுமிகு கற்றோர்கள் நற்சிலையை
ஓணம் கலக்கும் கடல் ஓரம்—பேணிப்பின்
போற்றிப் புகழ்நட்ட பொற்பறிவன் அண்ணாவை
ஏற்றிப் புகழ்வோம் இனி! 6

RangaRakes tamilnavarasam.com

இனியாரே அண்ணாவை இவ்வுலகில் காண்பார்?
தனித்தலைவன் தக்கோர்கள் போற்றும்—மனித்த
இனம்சிறக்க வாழ்ந்தோன் இனியன் தமிழர்
மனம்சிறக்க வந்த மழை! 7

மழைமோது நீள்குன்ற மாடத்துக் காஞ்சி
உழைபாய் மலர்க்காட்டின் ஊடே—கழையிடையின்
பின்னே எழுந்து வளரும் இளம்பரிதி
முன்காட்டும் அண்ணன் முகம்! 8

முகம்மறக்கப் போமோநம் மூதறிஞர் அண்ணா
அகம்நிறைந்து போன அறிஞன்—உகம்போற்றும்
அண்ணா வழிநடப்போம் அண்ணன் நமக்கெல்லாம்
விண்ணொளி வெய்யோனே யாம்! 9

ஆங்குறள்போல் தோற்றம்நல் ஆழ்ந்த பொருட்செறிவு
தாங்கி வருஞ்சொல் தமிழ்மறையே—ஓங்கு
புகழ்வளர்த்த அண்ணாவோ பூத்துக் குலுங்கும்
அகழ்வாரைத் தாங்கும் நிலம்! 10

தாங்கும் நிலமாகித் தம்பியரைத் தாங்கிவான்
ஓங்கல் இடைவந்த ஒண்சுடரே!—தீங்கின்றித்
தாய்மொழியைத் தாய்நாட்டைத் தக்கார் புடைசூழ
வாய்மை அரசாண்ட மன்! 11

மன்னர் மடிவளர்ந்த மாத்தமிழின் மேன்மையினைப்
பின்னர் வளர்த்த பெரியோனாம்—தென்னாட்டில்
ஏழை பணக்காரன் இல்லாப் பெருவாழ்வு
வாழ வழிவகுத்த வன்! 12


வன்செயலே வேண்டாதான் மக்கள் மனமென்னும்
நன்செய் விளைவித்த நல்லுழவன்—புன்செய்
இறையிலி செய்தோன் எமதண்ணா வாழ்வின்
மறைவால் மனம்வாடு தே! 13

RangaRakes tamilnavarasam.com

வாடும் மனத்துள் மறையாத் திருவிளக்கு
நீடு புகழண்ணா நேர்மையோன்—நாடு
செழிக்கவந்த செஞ்சொல் மறவன் பகைநா
அழிக்கவந்த அன்புச் சுடர்! 14

சுடர்விளக் கேற்றியே தூய தமிழர்
படர்இருளைப் போக்கும் பரிதி—மடமை
விளைவால் மிகுந்தபல் வெவ்வேறு சாதிக்
களையைக் களைந்தவன் காண்! 15

*(கடலூர் நகர மண்டபத்தில் இலக்கிய வட்டச் சார்பில் 2—11—'69 அன்று அண்ணா அவர்களின் வீர வணக்க விழாவில் பாடப் பட்ட கவிதை இது).*



RangaRakes tamilnavarasam.com

# விஞ்சு புகழில் விளங்கக் காண்பாரே!


இவரியா ரென்குவை யாயின், இவரே
தொண்டை நன்னாட்டின் துறைதொறும் கலங்கள்
ஆடி அசைந்து பாடிடு கடல்மேல்
அணியணி யாக அண்டிடு படகில்
வந்து குவியும் மணிபொன் செந்நெல்
முத்து தந்தம் முதிர்மலைத் தேக்கு
நிறைத்துப் பொருளை நிறைத்துப் புகழைத்
தமிழக மிருந்தே தடங்கடல் தாண்டி
உலகுக் களித்த ஒப்பிலாப் பல்லவர்
ஆண்ட காஞ்சி அளித்த அண்ணா!
தென்னகம் ஆண்ட முன்னாள் முதல்வர்!
உலகம் வியக்கும் ஒப்பிலா அறிஞர்!
பிறர்வாய் அடக்கும் பேச்சிற் பெரும்புலி!
வள்ளுவர் குறளின் உள்ளுறை உவமம்!
சங்க இலக்கியத் தீந்தமிழ்ச் சாறு!
குறுந்தொகை மெய்ப்பொருள் கூட்டும் தென்றல்!
தம்பியர் கண்ட தானைத் தலைவர்!
வரியைக் குறைத்து வறுமை குறைத்து
நெறியோ டாண்ட நீள்புகழ் மன்னர்!
வளர்த்த சங்கத் தமிழின் மாண்பை
உலகத் தமிழர்க் குணர்த்திய செம்மல்!
இனியர் எளியர் எவர்க்கும் என்றும்
பணிவுடன் இன்சொல் பகரும் மேதை!
வான்தொடு மலையும் மலையின் சாரல்
மானை வீழ்த்த வாங்கிய சிலையின்
கால்வழிச் செந்தேன் பாயப் பழுக்கும்
கனிமரத் தோப்பும் கதிர்முனை சாய்ந்த
செந்நெல் வயலும் செழுமலர்க் காடும்
புன்னை மணக்கும் நெய்தற் பொருளும்
தன்னகம் கொண்ட தமிழக அரசை

RangaRakes tamilnavarasam.com

உலகம் புரக்கும் பரிதியை ஒப்ப
முன்னாள் காத்த முதல்வர்! அண்ணா!
அமைச்செனப் பட்டது நினதே அத்தை!
தமிழகம் வாழும் தம்பியர் மக்கள்
நெஞ்சம் திறப்போர் நின்னுரு
விஞ்சு புகழில் விளங்கக்காண் பாரே!

திணை : *பாடாண்* துறை : *இயன்மொழிவாழ்த்து*

1—8—'72



RangaRakes tamilnavarasam.com

# கலைஞர் நாற்பத்தாறு

சீரார் திருக்குவளைக் கண்மணியே! செந்தமிழர்
ஊராள வந்த ஒளிக்கதிரே! — பேரார்
கருணா நிதியே! கலைஞனே! மூன்று
முரசொடு வாழ்க முனைந்து! 1

கத்து கடல்சூழ் கவின்சேர் திருக்குவளை
முத்துவேல் தந்த முதலமைச்சே! — புத்தம்
புதுமை அரசைத் தமிழரசைப் போற்றி
முதுகுரவர் வாழ்த்த முனை! 2

அஞ்சுகத்தாய் பெற்ற அறிவார் முதலமைச்சே!
செஞ்சொற் கலைஞ! திருநாடு—விஞ்சும்நல்
அஞ்சாமை கேள்வி அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமல் வாழ்க இனிது! 3

துள்ளித் திரிகின்ற காலம் துரைத்தனத்தார்
பள்ளிப் படிப்பின்மேல் பற்றொதுக்கி—உள்ளத்தில்
தாயகத்தின் மேன்மை தனைக்கொண்டாய்! வாழியவே!
காய்கதிர்நீ என்றென்றும் காண்! 4

ஏரோட்டு நல்லுழவர் ஏனல் விளைக்கின்ற
ஈரோட்டுப் பள்ளி இருந்தாய்ந்து—சீர்நட்ட
அண்ணா வழிவந்த ஆன்ற முதலமைச்சே!
பண்ணோடு வாழ்க படர்ந்து 5

அண்ணா வழிவந்த ஆரூர் எழுகதிரே!
பண்ணாகும் செந்தமிழ்போல் பாராண்டு—மண்ணில்
இளமையோ டின்றுபோல் என்றென்றும் நாட்டில்
வளமை பெருக்கியே வாழ்! 6

RangaRakes tamilnavarasam.com

புத்தம் புதுமை பொலிகின்ற நற்புதுவைச்
சொத்தாய் உனக்களித்த சொத்துண்டாம்!—பித்தாய்!
அதுபழமை கண்டிருந்த புன்னாள் அறிவேன்!
புதுப்புகழில் வாழ்க பொலிந்து! 7

கல்லக் குடியில் கருத்தில்லார் கண்திறக்க
மல்லாடி வெற்றி மலைந்தோனே!—சொல்லாலே
கேட்போர்ப் பிணிக்கும் கிளைஞ! பழந்தமிழ்ப்
பாட்டாய்ப் பயன்விளைத்து வாழ்! 8

கல்லடியும் பட்டாய்! கருத்தில்லார் வாய்வந்த
சொல்லடியும் பட்டாய்! திருக்குவளை—நல்லாய்!
கலைஞனே! காக்கும் முதலமைச்சே! என்றும்
கலைபோல் வாழ்க கனிந்து! 9

கதையெழுதி மக்கள் கறையகல நல்ல
விதைவித்தி வாழும் விறலோன்!—புதைசேற்றைத்
தன்னடிமை யாக்கும் தமிழர் முதலமைச்சன்!
என்றென்றும் வாழ்க இனிது! 10

தோட்டப் புறம்புகுந்து தூய தமிழ்மொழியை
வீட்டிருந்தே ஓட்ட விரைந்துவந்த—கூட்டுமொழி
இந்திக்குச் செந்தீயை இட்ட கலைஞனை நாம்
வந்திப்போம்! வாழ்க மகிழ்ந்து! 11

நாட்டில் நிலைத்திருந்த நாற்சாதி நீள்கொடுமை
கேட்டும்கே ளாதிருந்த கீழோரின்—வீட்டில்
விளக்கேற்றி வைத்தாய்! விரிவுரை தந்தாய்!
வளம்பெற்று வாழ்க மகிழ்ந்து! 12

நாட்டு மலர்தவழும் நற்காற்றே! நற்றமிழர்
பாட்டுப் பயிலும்நற் பாவலனே!—ஊட்டி
வளர்த்த தமிழகத்தை வாழ்வித்தாய்! வாழ்க!
உளத்தில் நிறைந்தாய் உணர்! 13

RangaRakes tamilnavarasam.com

கூத்தளித்துக் கொள்கைக் குறிவிளக்கி என்றென்றும்
நாத்தழும் பேறியசொல் நாவளித்துச்—சீர்த்த
மதிவிளக்கி இங்குள்ளோர் வாழ்க்கை வளத்தைப்
புதுப்பித்தாய்! வாழ்க பொலிந்து! 14

பெண்டுபிள்ளை நோயுறினும் பெற்றெடுத்த தாய் நாட்டின்
தொண்டு பெரிதெண்ணும் தூயோனே!—மண்டு
தமிழ்ப்பகையை வீழ்த்துநம் தாயின் மொழியே
அமிழ்தினும் மேலாம் அறி! 15

மற்போருக் கஞ்சான் வாழும் திருநாட்டில்
சொற்போருக் கஞ்சான் திருக்குவளை—விற்போர்
மறவன் கருணா நிதியாம்! வளமை
நிறைவோடு வாழ்க நிலைத்து! 16

இந்த உடலும் இதனின் இடையென்றும்
வந்தியக்கும் மூச்சும் வளமார்நம்—சொந்தத்
திருநாட்டை வாழ்விக்கச் செய்வதுவாம்! வாழி!
கருணா நிதியே கடன்! 17

உளம்நிறைந்த செந்தமிழர், ஒல்லும் வளத்தை
இளங்கோ இசைத்த சிலம்பைக்—களங்கமறக்
கற்றதனால் அன்றோ, கருணா நிதிவாழி!
பெற்றெடுத்தாய் பூம்புகார்ப் பேறு! 18

சென்னைத் துறைமுகத்துச் சீரில்லாப் புற்றரையில்
முன்னை அரசாண்ட மூவேந்தர்—அன்னைத்
திருநாட்டை ஆக்கித் திசைக்கறிவு தந்தோன்
கருணா நிதிவாழி காண்! 19

அண்ணாவின் தம்பியரில் ஆன்ற முதல்தம்பி!
கண்ணே! கருணா நிதியே! இம்—மண்ணாள்
முதலமைச்சே! வாழிநீ! முத்தமிழ் தீமை
எதுவரினும் அஞ்சா தெதிர்! 20

RangaRakes tamilnavarasam.com

ஓடிப் பொருள்குவிக்கும் ஊர்தியெலாம் ஆட்சிக்குத்
தேடிப் பொருள்குவிக்கச் செய்தவன்யார்?—வாடி
வதங்கிய மக்கள் வயிறு நிறைய
உதவும் கலைஞரென ஓது! 21

புன்செய்ப் புலத்தின் இறையிலி செய்தோன்; என்
நெஞ்சில் நிலைத்த மறவனாம்!—கொஞ்சு
தமிழ்கூறு நம்அண்ணாச் சான்றோனின் தம்பி
அமிழ்தின் இனியவ னாம்! 22

மண்ணாள் முதலமைச்சன் வாய்திறந்தால் போதுமென
எண்ணிக் கிடப்போரை எண்ணுவதோ?—கண்ணின்
மணியாம் கருணா நிதிஎன்போன் காக்கும்
அணியாவான் நாட்டிற் கவன்! 23

நொதுமல் பகையென்று நோக்காது நாட்டில்
பொதுமை முறைசெய்யும் பொறுப்பன்—இதுநாள்
அரசாள் முதலமைச்சன்! ஆன்ற கலைஞன்!
உரைசாலப் பெற்றான் உணர்! 24

பாடிப் பிழைக்கும் பறவையாம் பாவலர்க்குக்
கூடிப் பிழைக்கக் கொடுப்போனாம்?—ஈடில்
கலைஞன் கருணா நிதியே அமைச்சன்!
பலபெற்று வாழ்க படர்ந்து! 25

கல்லார்க்கும் கற்றோர்க்கும் காயும் கதிர்போல
எல்லார்க்கும் ஈயும் இயல்புடையோன்!—வல்ல
எனக்கேனோ என்னும் இயல்புடையார் வாழ்க்கை
மனக்கவலை மாற்றும் மருந்து! 26

வெள்ளத்தால் பாழ்பட்ட வேற்று நிலத்தார்க்கும்
வள்ளல்போல் வாரி வழங்குவோன்!—வெள்ளம்
குறையாக் குளிர்பொன்னி ஆற்றோன் கலைஞன்
நறைபோல் இனியனாம் நாடு! 27

4

RangaRakes tamilnavarasam.com

தழைவற்றிப் பொய்கைத் தடம்வற்றி நாட்டில்
மழைவற்றி வாழ்கின்ற போழ்தும்—கழைச்சுவை
கண்டெடுத்து நல்கும் கருணா நிதியமைச்சன்
உண்டென் றறிவே உணர்! 28

முன்னேற்ற நற்கழகம் இந்நாள் முடிந்ததென
பின்னே முணுமுணுத்த பேதைகளை—இந்நாள்
தலைதாழ்த்தி வாயடைக்க வந்த தமிழ்மகனே
கலைஞன் முதலமைச்சன் காண்! 29

கட்டி வளர்த்துக் கருத்தில்லார் கைகோத்தே
இட்டு வரும்நல் இயல்புடையோன்—மட்டில்
அகழ்வாரைத் தாங்கும் அறிவுடையோன் என்றும்
புகழோடு வாழ்க பொலிந்து! 30

வேற்றார் நமையடுத்த மாநிலத்து மேலோர்கள்
போற்றிப் புகழும்நற் பொற்புடையோன்—மாற்றார்
மதிக்கும் முதலமைச்சன் மங்காத் தமிழுக்(கு)
உதித்த சுடர்என்(று) உணர்! 31

காட்சிக் கெளியான்; கடுஞ்சொல்லே கற்றறியான்:
வீழ்ச்சி அறியாத மேலோனே!—தாழ்ச்சித்
தளைவெட்டி வீழ்த்தித் தமிழகத்தைக் காக்கும்
உளத்தோன் கலைஞன் உணர்! 32

இன்றுள்ள மாணவர்கள் இன்பத் திருநாட்டை
நன்றே நடத்தும் நடைபயிலப்—பொன்றா!
வழிகாட்டும் எங்கள் வளமார் கலைஞன்
விழிநாட்டிற் கென்றே விளம்பு! 33

தமிழை அரசேற்றித் தக்கோர் வியக்க
நமதரசை ஆளுகின்ற நல்லோன்—நமையெலாம்
ஈன்ற தமிழ்த்தாய் உலகிற்கே ஈன்றளித்த
ஆன்றவிந்த நற்கலைஞன் ஆம்! 34

RangaRakes tamilnavarasam.com

முரசறைந்து வாழ்த்தி முறைசெய்து காத்தே
அரசாண்டு வாழ்ந்தோர் அரசர்—உரைசால்
கருணா நிதியே! கலைஞனே! வாழும்
தரைபோல வாழ்க தழைத்து! 35

பார்வாழும் மக்கள் பசிநோய் மருத்துவன்
ஊர்வாழ் அமைச்சன் ஒருவன்காண்—சீரார்
கலைஞன் கருணா நிதியே! என் நெஞ்சில்
நிலைத்திருப்போன் வாழ்க நிலைத்து! 36

கண்ணின் மணியைக் கருணா நிதியைஎம்
அண்ணா வழிவந்த ஆண்மகனைப்—பெண்ணரசி
அஞ்சுகத்தாய் பெற்றாள் அவள்வாழ்க! வாழியவே
செஞ்சொற் கலைஞன் சிறந்து! 37

முத்துவேல் தந்த முனைமழுங்காக் கூர்வேலாம்
இத்தரையான் எங்கள் முதலமைச்சன்—பத்தரை
மாற்றுப் பசும்பொன்னாம்! மக்கள் உளமெல்லாம்
வீற்றிருப்போன் வாழ்க மிகுந்து! 38

அண்ணாவின் பின்னால் அரசியலில் என்றென்றும்
புண்ணும் புரையும் புகுமென்றார்—கண்ணிலெலாம்
மண்வாரிக் கொட்டி வளமார் திருநாட்டை
விண்கதிர்போல் செய்தான் விளம்பு! 39

நாட்டில் முரசொலித்து நற்றமிழர் வாழ்கின்ற
வீட்டுத் திருமகனாய் வீற்றிருப்போன்—ஈட்டு
நனிபுகழ்சேர் நல்லோன் கருணா நிதியே!
பனிமலைபோல் வாழ்க இப் பார்! 40

வள்ளுவனை ஈன்ற வளமார் தமிழ்நாட்டுப்
பிள்ளைகளில் அண்ணா பெரும்புகழோன்—உள்ளம்
இனிக்க அரசாளும் எங்கள் கலைஞன்
தனிப்பிறவி என்றிங்கே சாற்று! 41

RangaRakes tamilnavarasam.com

நாமணக்கும் செஞ்சொல்லான் நல்லோர் வியக்கின்ற
தேமணக்கும் சங்கச் செழுந்தமிழ்ப்பா—மாமணக்கும்
பூமணத்தை வாரிவரும் புத்தம் புதுத்தென்றல்
காமணக்கும் முக்கனியாம் காண்! 42

பொன்னி வளநாட்டின் பொற்புடையோன் என்றென்றும்
கன்னித் தமிழ்மொழியின் காப்பாளன்—மின்னி
இடிக்கும் மழையே கலைஞன்! இனியன்!
குடிகாக்கும் செம்மலெனக் கூறு! 43

புன்னைப் பெருங்கானல் பூத்தவழ்ந்த தென்றலாம்
அன்னைத் தமிழரசி அன்புமகன்—இந்நாள்
கலைஞனாய் வந்தோன் கருணா நிதியே!
நிலைபெற்று வாழ்க நிலைத்து! 44

பூதத்தத் தேன்சொரியும் பொன்னி வளநாட்டின்
காதத்தும் வேங்கைக் கடும்புலிகாண்—ஓதுதமிழ்
மாய்க்க நினைப்போர்க்கு! வல்லோர்க்கும் நல்லோர்க்கும்
வாய்த்த மலையருவி வாழ்த்து! 45

நாற்பத்தா றாண்டு நலம்போல என்றென்றும்
மேற்போர்த்த வானின் விரிசுடராய்ப்—பாற்குடத்துப்
பேர்பெற்ற வாணிப் பெரும்புலவன் வெண்பாப்போல்
சீர்பெற்று வாழ்க சிறந்து! 46

* * * *

பாட்டெழுதி வாழ்க்கைப் பசிப்பிணியை ஓட்டாத
நாட்டில்வாழ் எம்போன்ற நற்கவிஞர்—வீட்டின்
வறுமையை மாய்க்கக் கருணா நிதியாம்!
பொறுமனமே சற்றே பொறு!

*கலைஞர் கவிதை மலருக்காக 2—11—'69*
*அன்று எழுதப்பட்ட கவிதை இது.*

RangaRakes tamilnavarasam.com

# அஞ்சுகத்தாய் மகன் வாழ்க!

விண்பூத்த இளம்பரிதி கலைஞர் ஏறு!
தமிழகத்தின் முதலமைச்சர்! வீசு தென்றல்!
பண்பூத்த சொல்லழகர்! நாட்டில் வாழும்
பாட்டாளிப் பெருமக்கள் தோழர்! தஞ்சை
மண்பூத்த திருக்குவளை மைந்தர்! மக்கள்
மனம்பூத்த நற்கருணா நிதியார்! நாட்டில்
புண்பூத்த நிலைமாற்றும் அரசை ஓம்பிப்
புகழோடு பல்லாண்டு வாழ்க நீடே! 1

உண்ணீரின் குறைதீர்த்தார்; சிற்றூர், பேரூர்
உழைப்பாளிப் பசிதீர்த்தார்; ஏழை மக்கள்
கண்ணீரின் குறைதீர்த்தார்; பரிசுச் சீட்டால்
காசில்லாக் குறைதீர்த்தார்; வானம் பொய்க்கத்
தண்ணீரின் குறைகண்டு வறட்சி கண்டு
தத்தளித்த காலத்தும் ஈன்றெடுத்த
பெண்ணீர்மைத் தாயன்பால் மக்கள் காத்துப்
பேரரசை நடத்துகின்றார் வாழ்க நீடே! 2

நின்றுகுடி செய்திருந்த மனைஇல் லார்க்கு
நிலமளித்தார்; வீடளித்தார்; அயலூர் எங்கும்
சென்றுவரு பேருந்தின் கட்ட ணத்துச்
செலவைநனி குறைத்துவைத்தார்; கண்கள் காண
இன்றெங்கும் திருக்குறளை எழுதி வைத்தார்;
இவரரசு நல்லரசாம் என்றே மக்கள்
மன்றெங்கும் முழங்குகிறார்; அமைச்சர் வாழ்க!
அஞ்சுகத்தாய் மகன்வாழ்க! கலைஞர் வாழ்க! 3

RangaRakes tamilnavarasam.com

ஆலைகளைத் திறந்துவைத்தார்; நீண்ட கூவ
ஆற்றினையும் மணக்க வைத்தார்; கற்கும் பள்ளிச்
சாலைகளின் புகுமுகத்தைத் திறதுந் வைத்தார்;
தமிழ்ப்புலவர் வாழ்வளித்தார்; மறந்தார் என்னை!
மாலையிலே காற்றாடும் பேரூர் சென்னை
மறிகடலின் கரையழகைத் திறந்து வைத்தார்;
வேலையிலே ஓய்வுபெற்றோர் தமக்கும் நல்கி
மேன்மையினைத் தமிழரசுக் களித்தார்; வாழி! 4

சொல்லடியும் கல்லடியும் பட்டார்; உண்மை!
தொண்டர்க்கிங் கிவையெல்லாம் பரிசா? சொல்வீர்!
வில்லடியும் வாளடியும் வாங்கி வாங்கி
விடுதலைக்கே வாழ்ந்தஇனம் தமிழர் என்போம்!
கல்லடியும் கசையடியும் தமிழைக் காக்கக்
கண்டவர்தான் நம்கருணா நிதியார்; வாழ்க!
எல்லையிலாப் பேரின்பம் கலைஞர் கண்ட
எம்கல்லக் குடிப்பெயரே! அமைச்சர் வாழ்க! 5

அண்ணாவின் புகழ்மணக்கும் கலைஞர் தம்பி
ஆளரசு நல்லரசு! ஏழை மக்கள்
கண்ணான தமிழரசு! பன்னூ றாண்டு
கழகத்தின் காப்போடு நிலைத்து நின்று
பண்ணான புகழ்பரப்பி மக்கள் காத்துப்
பார்புகழ நம்கருணா நிதியார் என்றும்
அண்ணாவின் வழிபற்றித் தமிழ கத்தின்
அரசாள வேண்டுமென வாழ்த்து வோமே! 6

6—2—'70

RangaRakes tamilnavarasam.com

# என் பாடல் போல வாழ்க!

தமிழாய்ந்த தமிழ்ப்புலவர் அறிஞர் அண்ணா
  தந்தவழி வந்தவனே! முதல மைச்சே!
அமிழ்தொக்கும் பேச்சாளா! ஆன்ற விந்த
  அடக்கத்தின் பெருவிளைவே! கலைஞர் ஏறே!
கமழ்தென்றல் பூங்காற்றே! முத்து வேலர்
  கைதவழ்ந்த நல்யாழே! நாற்பத் தேழில்
சுமைஅரசை ஏற்றாய்நீ! துவண்டி டாமல்
  துயர்துடைத்தாய்! ஏழைகளின் துணைவன் நீயே! 1

அழுத்தமுடன் தான்கண்ட அரிய செய்கை
  அறிந்தவனே உலகத்துள் அறிஞன் ஆவான்!
எழுத்தாளன் பேச்சாளன் என்று பல்லோர்
  இருந்தார்கள்; இருந்தாலும் என்ன கண்டோம்?
குழுத்தலைவன் குளிர்நிலவு கொள்கைச் செம்மல்
  தமிழகத்தின் முதலமைச்சன் குளிர்நீர் ஓடை!
எழுத்தறிந்த என்பாடல் போல நாட்டில்
  ஏற்றமுடன் என்றென்றும் வாழ்க நீடே! 2

9—6—'70

RangaRakes tamilnavarasam.com

## இன்னும் பன்னூறாண்டிரும்!

வானக் கடல்மேல் வரும்ஓட ஞாயிறென
ஆனா துழைத்தே அறநெறியைப்—பேணும்சீர்
சென்னைத் தமிழ்நெறிச் செம்மல் சிவமுத்தே!
இன்னும் பன்னூறாண் டிரும்! 1

நாட்டுக் குழந்தைகள் நாடாள்வோர் என்றெண்ணிப்
பாட்டாலும் மாணவர்பண் பாட்டாலும்—காட்டும்சீர்
சென்னைத் தமிழ்நெறிக் காவல! தீந்தமிழ்போல்
இன்னும்பன் னூறாண் டிரும்! 2

தமிழுக்கே எந்நாளும் தண்டூன்றும் மேலோய்!
அமிழ்தூறும் செஞ்சொல் அறிஞ! இமைபோன்ற
கன்னித் தமிழ்நெறிக் காவல! வாழ்த்துகின்றேன்!
இன்னும்பன் னூறாண் டிரும்! 3

15—1—'65

## தாத்தா எனத்தமிழ் பாடுவனே!

தாத்தா! மயிலை சிவமுத்துத் தாத்தா! எனதுதமிழ்த்
தாத்தா! வயதிலும் கைத்தடி யூன்றித் தமிழ்க்குழைக்கும்
தாத்தா! வலிவும் வயதும் புகழும் தமிழ்ச்சிறுவர்
தாத்தாவிற் கேஎன்றும் தாத்தா எனத்தமிழ் பாடுவனே!

RangaRakes tamilnavarasam.com

# சொற்பொழிவு மலை

வான்பிறந்த செங்கதிரும் மழையும் காற்றும்
மண்பிறக்கச் செய்தவுடன் உலகில் எங்கும்
ஊன்பிறக்க உடல்பிறக்க உடலின் ஊடே
உயிர்பிறக்கப் பிறந்துவந்த தமிழர் நாவில்
தேன்பிறக்கப் பிறந்ததுவாம் தமிழும் அந்தச்
செந்தமிழே மறைமலையாம்! நீல வானில்
கூன்பிறக்கும் நிலவினிமை மறைம லைத்தீஞ்
சொற்பொழிவு மலையென்றே கூறு வோமே! 1

சொற்கேட்டால் காதினிக்கும்; சொல்லில் தோய்ந்த
தூயபொருள் மாசகற்றும்; நாவில் என்றும்
கற்கண்டைக் கண்டதுபோல்இனிக்கும்; நெஞ்சில்
களிப்பேற்றி நெறிமுறையை விளக்கிக் காட்டும்;
நற்றொண்டைச் செய்யநமைத் தூண்டும்; தூய
நலக்கவிதை வளம்சேர்க்கும்; அறிவைச் சேர்க்கும்;
மற்றொருவர் இனிப்பிறப்ப துண்டோ பேச?
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே! 2

இனித்தமிழும் தழைத்திடுமோ? தனித்து நின்றே
இயங்கிடுமோ? எனப்பல்லோர் இளித்த போது
தனித்தமிழில் பலநூலும் பேச்சும் தேக்கித்
தந்தவர்யார்? மறைமலைபோல் எவரிங் குண்டாம்?
குனித்திருந்த தமிழ்மொழியும்; இடைபு குந்த
குறைமொழியும் வாழ்நாளில் விலக்கித் தள்ளி
மனித்த இனம் தலைநிமிரச் செய்த மாண்பு
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே! 3

RangaRakes tamilnavarasam.com

வடமொழியும் தென்மொழியும் வந்து சேர்ந்த
ஆங்கிலமும் மாசறவே கற்றுத் தேர்ந்து
தொடர்மொழியின் நிலைவிளக்கித் தமிழர் வாழ்வின்
தொன்மையினைச் சொல்வளத்தைச் சமயப் பண்பைச்
சுடர்மொழியால் இருள்போக்கிக் கவிதைப் பேச்சால்
துறைதோறும் துறைதோறும் விளக்கிக் காட்டி
மடமொழியார்க் கறிவூட்டி வந்த எங்கள்
மறைமலையார் சொற்பொழிவு மலைஎன் போமே! 4

உள்ளத்தைத் துறப்பதுவே துறவின் மாட்சி!
உடையில்லாத் துறவியெலாம் போலி யாவார்!
பள்ளத்துக் கார்எருமை பூவை மாந்திப்
பகலெல்லாம் பால்சொரியும் வயல்கள் சூழ்ந்த
தெள்ளுதமிழ் நாட்டகத்தே இல்லி ருந்த
சீர்பெற்ற துறவியர்கள் பல்லோர் போல
வள்ளுவரைப் பின்பற்றி இல்லி ருந்த
மறைமலையின் சொற்பொழிவு மலையென் போமே! 5

20—3—'68

# சிதம்பரனாரே பிள்ளை!

வான்தழுவும் பனிபடர்ந்த வெள்ளிமலை வளர்ந்துநீண்டு
வடக்கில் நிற்கும்!
கூன்தழுவும் நீளாறு வற்றாது குளிர்மைதேக்கிக் குதித்துப்
பாயும்!
மான்தழுவும் கன்னியர்கள் மறத்தோளர் வாழ்ந்திருந்த
வளமார் எங்கள்
தேன்தழுவும் தாய்நாட்டை அயல்நாட்டார் சூழ்ச்சியினால்
சிதைத்தார் முன்னாள்! 1

பிள்ளையென்றால் உலகத்தில் தாய்வயிற்றை விட்டகன்று
பிறப்போர் எல்லாம்
பிள்ளைகளா? வ. உ. சி. ஒருவனைநான் என்றென்றும்
பிள்ளை என்பேன்!
கள்ளத்தை அறியாதோன்! பன்மொழியைக் கற்றுணர்ந்தோன்
கடல்போல வற்றா
உள்ளத்தில் தாய்நாட்டின் பற்றொன்றே என்றென்றும்
ஊறிப் போனோன்! 2

அல்லுடைத்த செஞ்சுடர்போல் இந்தியத்தாய் அடிமைநிலை
அற்றுப் போகச்
சொல்லுடைத்து வழக்காடித் துயர்கண்ட இடமெல்லாம்
துணையாய் நின்று
நெல்லுடைத்த அரிசியென உண்மைநெறி பன்னாளும்
நிலைக்கச் செய்தோன்
கல்லுடைத்தான் சிறையினிலே தாய்நாட்டின் கால்விலங்கைக்
களைவதற்கே! 3

RangaRakes tamilnavarasam.com

மனைதுறந்து வளமைபல வழங்குகின்ற செயல்துறந்து
மனைவி மக்கள்
துணைதுறந்து துயர்துறந்து தோள்கொடுத்து நிற்கின்ற
சுற்றத் தோர்கள்
இணைதுறந்து தனைஈன்ற தாயகத்தின் விடுதலையின்
ஏற்றத் திற்கே
தனைத்துறந்து கலம்விட்டோன்; செக்கிழுத்தோன் சிதம்பரனார்
தமிழ்மே லோனே! 4

அடலேறு சிதம்பரனார் அவனன்றோ இந்நாளில்
ஆன்றோர் போற்றும்
உடலுயிரில் என்றென்றும் ஊறிப்போன தாயகத்தின்
உயர்ந்த பிள்ளை!
கடலிடையில் கலம்விட்டான்; கடுஞ்சிறையும் கசையடியும்
கண்டான்; செக்கை
நடமாடு மாட்டைப்போல் இழுத்திழுத்து நலிந்தான்; தாய்
நாட்டிற் கென்றே! 5

முன்னாளில் தான்பிறந்த தாய்நாட்டின் கால்விலங்கை
முறிப்ப தற்கே
தென்னாட்டுத் திலகராய்ச் சிதம்பரனார் வ. உ. சி
திகழ்ந்தார்; அன்னோர்
முன்பாட்டின் நல்விளைவே நாம்பெற்ற விடுதலையாம்!
மூத்தோன் வாழ்த்திப்
பொன்போலக் காத்திடுவோம்; புதுப்பொலிவில் வாழ்ந்திடுவோம்
புகழ்சேர்ப் போமே! 6

8—9—'72

RangaRakes tamilnavarasam.com

# கதைப்பாட்டு

## இதுதான் மருத்துவம்

''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'' —குறள்

உலகோர் ஏற்றும் உயர்ந்த பண்பு
கலகலப் பான கனிந்த பேச்சு
பலநூல் ஆய்ந்த பரந்த அறிவு
நகைமுகம் ஒளிவிழி நரைமுடித் தூய்மை
அனைத்தும் ஒருங்கே அமைந்த பெரியார்
மருத்துவ மனையை மாண்புடன் நடத்தி
மக்கட் பணியே வாழ்வென வாழ்ந்து
வந்தார்; அவரை வாழ்த்தார் இல்லை!

நோயைக் கேட்பார்; நோய்முதல் ஆய்வார்;
ஏற்ற மருந்துடன் இன்சொல் சேர்ப்பார்;
''கைவளம் உடையோர்; கையால் அள்ளிக்
கடுகே தரினும் கடுநோய் பறக்கும்''
என்று மக்கள் இன்றும் புகழ்வர்!

தென்னை நிழற்ற புன்னை மணக்க
சிறுசிறு பூச்செடி சிந்தை பறிக்க
ஆற்றங் கரையின் அருகில் அமைந்த
மருத்துவ மனைக்கு வந்தார் ஒருவர்
மருத்துவர் வந்த மனிதனை அழைத்து
செய்தி என்ன செப்புவீர் என்றார்
வந்தவர் சொந்த மகனைக் காட்டி

RangaRakes tamilnavarasam.com

"பைத்தியம்! பைத்தியம்! பைத்தியம்! என்மகன்
இவன்நோய் தீர்ந்தால் என்னுயிர் நிலைக்கும்
படித்தவன்! பட்டம் பெற்றவன் அந்தோ!
கொடிக்கிவன் ஒருவனே! குறையைத் தீர்ப்பீர்"
என்று மருத்துவர் இருகை பிடித்தார்
ஒன்றும் இல்லா இடக்கை காதில்
ஒற்றி ஒற்றிக் குரலை உயர்த்தி
"ஈடக் ஈடக் ஈடக் டக்கென"
பைத்தியம் சிரித்துப் பாட லானான்
பைத்தியம் பார்ப்பவர் உளங்கவர் அழகன்!
பட்ட தாரி பன்மொழிப் புலவன்
பார்ப்போர் முன்னர்ப் பலமொழி பேசி
"ஈடக்" பாட்டை இயம்பி இயம்பி
எழுந்து சிரிப்பான்! இருவிழி தூக்கி
முறைப்பான், சிரிப்பான், முணறி அழுவான்
தாளம் சேர்த்துத் "தைதை" யென்றே
ஆடுவான்; பாடுவான்; அழுவான்; சிரிப்பான்!

மருத்துவர் வந்த பைத்திய மகனைப்
பரிவுடன் அழைத்தார்; பார்வையால் சிரித்தார்;
பேசிப் பார்த்தார்; பின்புற அறைக்குக்
கூட்டிப் போனார்; மருந்துகள் கொடுத்தார்;
பைத்திய மகனைப் பலநாள் தன்னிடம்
விட்டு வைக்க வேண்டும் என்றே
கூட்டி வந்த தந்தைக்குக் கூறினார்!

"எத்தனை ஆண்டுகள் என்மகன் உம்மிடம்
இருப்பினும் கலங்கேன்; என்மகன் பைத்தியம்
ஒழிந்தால் போதும்; ஒரேஒரு மகனிவன்"
என்று மருத்துவர் இருவிழி நோக்கி
"தீருமா பைத்தியம்?; தீருமா"? என்றே
திரும்பத் திரும்பக் கெஞ்சிக் கேட்டார்!

RangaRakes tamilnavarasam.com

மருத்துவர் சிரித்து மணிஒலிப் பதுபோல்
''நம்புவோம் வாழ்வோம்! நன்மொழி! என்றார்!

பைத்திய மகனைப் பார்க்க அடிக்கடி
மருத்துவ மனைக்கு வருவார் தந்தை!
ஆண்டு மூன்றும் அகன்றன இடையில்!

பைத்திய மகனோ பைத்தியம் நீங்கிப்
படுத்துக் கொண்டே பலநூல் எடுத்துப்
படித்துக் கொண்டே இருக்கப் பார்த்தும்
அடிக்கடி இடக்கை அழகிய மணிப்பொறி
கண்ணில் ஒற்றிக் காதில் ஒற்றிப்
பார்த்துப் பார்த்துப் பலபல தன்னுள்
பேசிப் பேசி மகிழக் கண்டு
மருத்துவர் அருகில் வந்தார் தந்தை!

மகன்நோய் தீர்ந்த மகிழ்ச்சிப் பெருக்கில்
இருக்கும் தந்தைக் கின்முகம் காட்டி
''பைத்தியம் தீர்ந்தது; பையன் வாழ
வழிஒன் றுளது; மறுக்க வேண்டாம்''
என்று மருத்துவர் இயம்பத் தொடங்கினார்

படித்த மகனின் பைத்தியம் எதனால்
என்று பலநாள் எண்ணி எண்ணி
ஆய்ந்தேன்; காரணம் அறிந்தேன் விரைவில்,
கல்லூரி வாழ்வில் காதல் முளைக்க
அடிக்கடி பழகி அவனும் அவளும்
காதல் வாழ்வில் களித்து மகிழ்ந்தனர்
பிரிந்தனர்; பின்னர் பெரியோர் கலந்து
திருமண வாய்ப்பைத் தேடுவோ மென்றனர்
இடையில் அவளுக்கு இருமல் ஈளை!
வந்தது கண்டாள்; வாடினாள் கன்னி!
தன்நோய் தன்னரும் காதலர்க் கானால்
என்னா வதுவென எண்ணி மனத்துள்

RangaRakes tamilnavarasam.com

காதலர்க் கொருநாள் கடித மெழுதி
மாங்குயில் கூவும் மாமரக் காவிற்கு
வருக வென்றாள்; வரவேற் றழுதாள்!
திருமண வாழ்வு சிதைந்ததென் றுரைத்து
மறக்கச் சொல்லி வணங்கிக் கெஞ்சினாள்!
மணிப்பொறி எடுத்துன் மகன்கைக் கொடுத்தாள்!
என்இத யம்போல் என்றும் ஒலிக்கும்
காதற் பரிசிது கைக்கொள் என்றாள்!
பிரிந்தனர் இருவரும் பேரிடி தலையில்
விழுந்தவர் போல வீடுவந் தடைந்தனர்
காதல் பரிசு கைமணிப் பொறியைக்
கண்ணெனக் காத்தான் கடத்தினான் நாளை
கைமணிப் பொறியும் களவு போனதுவே!

களவு போன கைமணிப் பொறியைத்
தேடினேன் தேடினேன்; பலநாள் தேடினேன்
கண்டு பிடித்துக் கொண்டு கொடுத்தேன்.
அறிவைப் பெற்றான் அகமகிழ் வடைந்தான்
இதுதான் மருத்துவம்! இதுதான் மருத்துவம்!
மகனின் வாழ்வு வளம்பெற வேண்டில்
காதலி இன்றும் கன்னிப் பெண்ணாய்
உன்மகன் நினைத்தே உயிர்வாழ் கின்றாள்
இருமல் ஈளை இல்லா தொழிந்தது
திருமகள் போன்ற அருமகள் அவளை
மணம்செய் என்றார் மருத்துவர்!
குணம்பெற்று மகனும் குடிசெய் தனனே!

RangaRakes tamilnavarasam.com

# உலகப் பாடம்

வானை முட்டும் மாமலை உச்சி
தேனடை தொங்கும்! தேனடை உடைத்த
கோலின் வழியே குளிர்தேன் பாயும்!
குரங்குக் குட்டிகள் குந்திக் குடிக்கும்!
வண்டுகள் பாடும்! மான்வெருண் டோடும்!
அருவி முழக்கம் அடர்ந்த சாரல்
பூத்துக் குலுங்கிப் புதுமணம் பரப்பும்!
மலையடி வார மாநகர் ஒன்றில்
வாழ்ந்து வந்தார் மலைக்குகைச் சாமி!

காவி உடையும் கருமைச் சாந்தும்
பாதக் குறடும் பாய்புலித் தோலும்
பொன்பூண் இட்ட புதுமணி மாலையும்
அணிந்தே ஆண்டுக் கொருமுறை ஒருநாள்
மலைக்குகை விட்டு மாநகர் நோக்கி
வந்து மக்கட்கு வழங்குவார் வாழ்த்தே
அந்நாள் நன்னாள் அவ்வூர்த் திருநாள்!
ஒழுக்கம் விளக்குவார் உயர் அறம் விளக்குவார்
அடங்கா மனத்தை அடக்கும் இயல்பினை
விளக்குவார்! வேத விளக்கம் விளக்குவார்!
வெண்ணீறு அளித்தே விலக்குவார் நோயை
கன்னியர் தாய்மார் காளைகள் முதியோர்
வந்தே அவரடி வணங்கித் தொழுவார்!
கண்ணில் ஒற்றிக் கைதொழு திருப்பர்!
குறைசொலக் கேட்பார்; குறையினை மாற்றும்
மறைமொழி உரைப்பார் மலர்முகம் காட்டி
நரகத் தொல்லை நனிபல விளக்கி



RangaRakes tamilnavarasam.com

மாநகர் மக்கள் மனக்கண் முன்னர்
திரைப்படம் போலத் தெளிய விளக்குவார்
ஒழுக்க உயர்வின் உரைபல நிகழ்த்துவார்!
மலைக்குகைச் சாமி மற்ற நாளெலாம்
கண்முன் தோன்றார் கடுந்தவம் இருப்பார்!
மாநகர் மக்கள் வாயெலாம் அந்த
மலைக்குகைச் சாமியை வாழ்கென வாழ்த்தும்!
மலைப்படி ஏறி மலைக்குகை சென்று
வணங்கும் மக்கள் கூட்டம் வரவரப்
பெருகி மலையின் பெருமை வளர்ந்ததே!
அவரிடம் பயின்ற அடிமலைச் சாமி
காளை வயதினர்! கருஞ்சிகைத் தாடி
கோல உருவினர்; குழைந்த சொல்லினர்
மாநகர் ஒவ்வொரு நாளும் வந்தே
''அறம்பல செய்மின்! ஆண்டவன் நினைமின்!
இறந்தால் கிடைப்பதோ இருபே ருலகம்
ஒன்று மோட்சம் உயர்ந்தவர்க் கதுவே!
நரகம் பிறிது நமக்கவை வேண்டாம்!
அல்லது செய்வோர் அங்கே புகுவர்
செக்கில் அடடா! செந்தீ வாயில்
அட்டைக் குழியில் அடுபாம் பிடையில்
இன்னல் பட்டே இருப்பார் நரகில்!''
என்று பலப்பல எடுத்து விளக்கிச்
சென்று மனைதொறும் சிற்றுரை நிகழ்த்தி
வருவார் மக்களின் மனமெலாம் மாற்றுவார்;
மலைக்குகைச் சாமி மாண்பை விளக்குவார்
திருக்குறள் விளக்குவார் செந்தமிழ் விளக்குவார்
சிறு சிறு கதையால் சிரிப்பை ஊட்டித்
தெய்வ வழியின் தெளிவு காட்டி
அறவழி நடக்க அடிக்கடி உரைப்பார்!

மாநகர் மக்கள் மனம்இடம் கொண்ட
அடிமலைச் சாமியின் அறிவுரை மதியாக்

RangaRakes tamilnavarasam.com

கொடியன் ஒருவன் அவ்வூர்க் குடிமகன்
கொலைபல செய்வோன் கொள்ளை அடிப்போன்
மலையில் மறைவோன் மாநகர் மக்கள்
வீட்டில் புகுவோன் விளைச்சலைக் கவர்வோன்
சிறைக்குச் செல்வோன் சிறிதும் கலங்கான்
மூடன் முரடன் மூதறி வில்லான்
அவ்வூர் மக்கள் அவனைக் கண்டால்
அஞ்சுவார் அடங்குவார் அறுவடை எலிபோல்!
புலியினும் கொடியன்! புனைபெயர் மலைப்புலி!

ஒருநாள் அந்த ஊரின் கோடியில்
மரங்கள் அடர்ந்த மரக்கிளை தாழ்ந்த
குளத்தில் தாமரை குறுநகை புரியும்!
கன்றை ஈன்ற கருமை நாகு
குளத்தில் மூழ்கிக் கொம்பை உயர்த்தும்!
மாநகர்ச் சிறுவர் மரக்கிளை ஏறித்
திடுமெனப் பாய்ந்து சிறுகுளம் அதிரக்
குளித்து மணலைக் கொண்டு மகிழ்ந்தனர்!
மலைப்புலி வந்து மரநிழல் அமர்ந்தான்!
சிறுவரின் ஆடலில் திளைத்து மகிழ்ந்தான்!

அடிமலைச் சாமி அவ்வழி வந்தார்
மலைப்புலி கண்டார் மனநிலை கண்டார்
இதுவே நல்ல வேளை என் றெண்ணி
இன்முகம் காட்டி இளநகை பூத்து
மலைப்புலி அருகே வந்து சிரித்தே
''அன்ப! மலைப்புலி அருந்தமிழ் மகனே!
பன்முறை உனக்குப் பலப்பல சொல்லி
அல்லவை விட்டே நல்லவை செய்ய
அறிவுரை பலநாள் ஆற்றினேன்; மறந்தாய்;
மீண்டும் உனது மேன்மையை வேண்டி
ஆண்டவ னிடம்நீ அடைக்கலம் புகுவாய்!
பொய்கொலை திருட்டுப் புன்செயல் மறப்பாய்!

RangaRakes tamilnavarasam.com

அறவழி நிற்பாய்! அடைவாய் மோட்சம்!
அல்லவை செய்வோர் அடைவார் நரகம்!
நரகம் கொடிது! நரகம் கொடிதென
அடிமலைச் சாமி அறவுரை நல்க
மாநகர்க் காவலர் மலைப்புலி தேடி
கைது செய்து கடுஞ்சிறை அடைக்க
வருவது கண்டான்; மலைப்புலி மலைத்தான்!
காற்றின் விரைந்தான் கார்தவழ் மலைத்தொடர்
சாரல் ஓடித் தலைமறை வானான்!
தொடர்ந்து செல்லத் துணிவிலாக் காவலர்
நின்றார்; திகைத்தார்; நெடுமூச் செறிந்தார்!
செய்வ தறியாது திரும்பினர் இல்லம்

ஆண்டுகள் இருபதும் அகன்றன இடையில்

ஒருநாள் மலைப்புலி உயர்மலைச் சாரல்
ஓடையைத் தாண்டினான்; உருண்டது பாறை
மண்டை உடைந்தது: மாண்டான் மலைப்புலி
காலத் தூதர் கடுகி வந்தனர்;
அவனுயிர் கொண்டு நரகம் அடைந்தனர்

எரியில் இட்ட எண்ணெய்க் கொப்பரை
நீண்டு நிமிர்ந்த நெருப்புத் தூண்கள்
இடிக்கிப் பொறிகள் இரும்புச் செக்கு
கருந்தேள் செந்தேள் கலந்த பள்ளம்
பாம்புப் புற்று! பாய்புலிக் கூட்டம்
வேழம் வெறிநாய் வேற்படை வீரர்
நிறைந்த நரகில் நின்றான் மலைப்புலி
மூலையில் செக்கில் மூச்சுத் திணறி
அடிமலைச் சாமி அழுவதைக் கண்டான்
அருகில் சென்றான் "அடிமலைச் சாமி!
உமக்கா நரகம்? உமக்கா நரகம்?
ஒழுக்க சீலரே உமக்கா நரகம்?
கொடுமை! கொடுமை!" என்றான் மலைப்புலி!

RangaRakes tamilnavarasam.com

69

அடிமலைச் சாமி அவன்வாய் பொத்தி
“மலைக்குகைச் சாமியும் வந்துளார் நரகம்!
வாய்திற வாதே மறைவோம்” என்றார்
தலையைத் தாழ்த்தி மலைப்புலி
உலகப் பாடம் உய்த்துணர்ந் தானே!





RangaRakes tamilnavarasam.com

# கைதி

மலைகள் முப்புறம்! மறிகடல் ஓர்பால்!
குலைமுதிர் வாழை கொடிபடர் தென்னை
செந்நெல் கரும்பு செழுங்கழை சோளம்
இந்நல் வளனும் இயைந்த பேரூர்
எங்கோ மூலையில் இருண்ட நாட்டில்
தங்கம் மண்ணில் மறைந்திருப் பதைப்போல்
மலையின் சாரலில் வளர்ந்து வந்ததே!

அந்த நாட்டு மக்கள் ஆமைகள்!
வளத்தைப் பெருக்க வறுமையை ஓட்ட
அறியும் அறிவே அறியா திருந்தனர்!
ஏய்த்துப் பிழைக்கும் நரியர்கள் எங்கும்
இருந்ததைப் போல இருந்தனர் அங்கும்!
அவர்களில் வலியோன் சுவர்கள் எழுப்பிக்
கோட்டை அமைத்துக் காட்டைத் திருத்தி
நாட்டின் அரசன் நானென் றிருந்தான்!
ஊமை மக்கள் உயர்அறிவு இல்லார்
அடங்கி ஒடுங்கி அவன்வழி நின்றே
உழைத்தனர்; அரசன் உண்ணக் கொடுத்தனர்!
கோட்டைச் செலவும் கொடிபடைச் செலவும்
நாட்டில் அதிகம்! நலிந்தனர் மக்கள்!
வரிமேல் வரியும் வளர்ந்ததே நாளும்!
நரிகள் கொழுத்தன! நாட்டில் வறுமை
நிறைந்ததே! ஆனால் அரசன் செலவோ
குறைந்ததே இல்லை! 'கொடுங்கள்! கொடுங்கள்!
பொன்னைக் கொடுங்கள்! பொன்னா லான
பொருளைக் கொடுங்கள்! பொன்னைத் திருப்பிக்
கொடுப்பேன் உண்மை! கொடுப்பேன் உண்மை!'

RangaRakes tamilnavarasam.com

என்றே அரசன் எங்கும் சென்றே
மக்கள் முன்னர் வாய்திறந் துரைத்தான்!
அரசன் சொல்லில் அடக்கம் இருந்தது!
மக்கள் வாழ்வில் வறுமை வளர்ந்தது!
'மழையும் இல்லை! வளர்பயிர் இல்லை!
உழைத்தவர் பொருளை உண்டு திளைத்தோர்
அரசன் தயவை அண்ட வேண்டிக்
கொடுத்தனர் சிலபேர்! குறிக்கோள் இன்றியா
கொடுத்தனர் என்றே கூறினான் ஒருவன்!
'நாட்டின் நிலைமை நன்கறி யாத
மடையன்! மட்டி! மலைப்புற மிருந்தே
வரும்பகை அறியான்! வாயாடி!' என்றே
இடித்தே அவனை எல்லோரும் இகழ்ந்தனர்!
'எண்ணிப் பார்க்கும் இயல்பினன் அவனை
மண்ணில் விட்டால் வருமே விழிப்பு!
விழிப்பு வான்வரு விடிவெள்ளி யாகும்!
விடிந்தால் இருளோ வெற்றிகொள் ளாது!
பின்னும் இவனோ முன்னர்த் தேடிய
குழந்தையைக் கொன்ற கொலையாளி!' என்றனர்!
'சிறையே இவனைத் திருத்தும் சீரிடம்'
என்றனர் சில்லோர்! அரசன் எதிரில்
ஊரை ஏய்த்தே உழைப்பை ஏய்த்தே
உண்டு களிக்கும் உழையாக் கூட்டம்
பாரை ஆளும் அரசின் பாவைகள்
'சிறைஇங் கில்லை; சிறையில் தள்ளித்
திருத்த நினைத்தால் திருந்தான் இவனும்!
தலையை வெட்டித் தள்ளுதல் மேலாம்'
என்றனர்! அரசனும் 'அதுசரி' என்றான்;
தலையை வெட்டும் தகுபொறி வாங்க
அண்டை நாட்டிற் கனுப்பினான் ஆளை!
பொறியை வாங்கப் போனவன் வந்து
விலையைக் கூறினான்! விழித்தான் அரசன்!
'வீண்பொருள் செலவேன்? வெளிச்சிறை வைப்போம்!

RangaRakes tamilnavarasam.com

கைதியை மறவர் காத்து வருவர்'
என்றனர்! அரசனும் ஏற்றுக் கொண்டான்!

ஆண்டுகள் சென்றன! அமைதியாய்க் கைதி
உண்டு கொழுத்தே ஊரின் நடுவில்
இருந்த வேலிச் சிறையில் இருந்தான்!
கைதியைக் காக்கும் செலவு வரவரப்
பெருகி வந்தது! பெரும்பொருள் அழிந்தது!
செய்வ தறியாது திகைத்தான் அரசன்!
அமைச்சன் ஒருவன் அரசனை அண்டிக்
'கைதியைக் காக்கும் 'காவ லாளை
நீக்கினால் கைதி நில்லாது ஓடுவான்'
என்றனன்! அரசனும் ஏற்றான் முடிவை!

வேலிச் சிறைக்குள் வெகுநாள் சென்றும்
கைதி ஓடக் கண்டார் இல்லை!
உணவுக் காக ஒவ்வொரு நாளும்
வந்தே உணவை வாங்கி உண்டு
வேலிச் சிறைக்கு விரைவான் கைதி!
கைதிக்குத் தப்பும் கருத்தே இல்லை!
அரசன் ஒருநாள் கைதியை அழைத்து
'விடுதலை அளித்தேன் வெளிச்செல்' என்றான்!
கைதி தலைமேல் கையைக் கூப்பி
'வேண்டாம் விடுதலை! வேண்டாம் விடுதலை!-
உணவும் உடையும் ஊரில் யாரே
தருவார் எனக்குத் தப்பித்துப் போனால்?
ஆனால் அரசே! அடியே னுக்குத்
திங்கள் தோறும் சிறுபொருள் கொடுத்தால்
இங்கில் லாமல் ஓடுவேன்' என்றான்!

திங்கள் தோறும் சிறுபொருள் அரசன்
கொடுத்தே வந்தான்! கொலைகாரக் கைதி
அமைதி யாக அண்டை
நாட்டில் வாழ்ந்து நாள்கடத் தினனே!

RangaRakes tamilnavarasam.com

# பிறை மதி

## இயல் 1

பொன்னொளி மலைஇ டுக்கில்
புகுந்தது; நடுங்கித் தாவிக்
கன்னல்போல் பருத்த நாணற்
காட்டினுள் இடைபு குந்து
முன்னுள்ள பலாம ரத்தில்
மோதிற்று: சாரல் எங்கும்
பொன்மயம்! அந்தி வானம்
புறப்பாட்டுக்(கு) எடுத்துக் காட்டே! 1

காடெலாம் பூவின் தேக்கம்!
கழையெலாம் சிட்டின் கூச்சல்!
ஓடையின் அருகில் தாழ்ந்தே
உயர்ந்திட்ட மரத்தின் மீது
பேடையைப் பிரிந்த ஆணின்
பெருவிளி உருக்கும் நெஞ்சை;
கூடெலாம் அடடா காதல்
கொட்டங்கள் குடைந்து பாயும்! 2

மலையிடைப் பிறந்து பூத்த
மலரிடைக் கலந்து பச்சை
இலைசெடி கிளைகள் தாவி
இன்பத்தின் பெருக்கால் தென்றல்
அலைந்தது; வாரி வாரி
அளித்தது பூநாற் றத்தைக்;
கலைந்தோடி வானில் மேகம்
புதுப்புது அழகைக் காட்டும் 3

RangaRakes tamilnavarasam.com

கலையின் செறிவாம் பசுங்காடு
கான மாலை வழக்கம்போல்
மலையின் அடுத்த நீள்சரிவில்
வந்தான் வீர பாண்டியனும்;
தலையை நிமிர்த்தி அந்திதரும்
அழகைக் கண்ணால் சரிபார்த்து
விலையில் இயற்கைப் பெருஞ்சுவையை
விழியால் உண்டு கிடந்தனனே! 4

குயிலின் இசையும் குளிர்காற்றும்
கொள்ளை கொள்ளும் பூங்குளமும்
அயலி லிருந்து துணிபிடித்தே
அழைக்கும் காட்டு முட்செடியும்
பெயலை அணைக்கும் வழிமலையும்
பின்னித் தாழ்ந்த நீள்கொடியும்
மயலை ஊட்டப் பாண்டியனும்
வாய்விட் டடடா! என்றனனே! 5

எங்கோ காட்டுப் புதரொன்றில்
இருந்து தமிழன் இசையூற்றைப்
பங்கு கொள்ளக் குயிலொன்று
பாடிக் கூவி அழைத்ததுவாம்!
மங்கும் ஒளியும் மணக்காற்றும்
மன்னர் மகனைப் பாண்டியனைத்
தங்க விட்டு விடவில்லை!
தமிழுக் கடங்கார் எவருண்டாம்? 6

வேறு

சாரல் அருகில் தழைத்த மரமல்லி
வேரில் உதிர்ந்த மலர்மேலே—சீர்பெற்ற
தோகை மயில்கள் அகவும்—துறையெல்லாம்
வாகை குரலை எழுப்புமே—ஆகம்
படிந்த சிறுமயிலைப் பக்கம் விலக்கி
மடிந்தவால் தூக்கும் மயில்!

RangaRakes tamilnavarasam.com

### வேறு

கோட்டைப்பொன் எல்லாம் குளிர்நிலப் பட்டின்மேல்
மாட்டி வைத்த தைப்போல் மயிற்றோகை—ஈட்டி
முனைபோல் சிறுகொண்டை முள்பெற்ற கால்கள்
பனைவேர் எனப்படு மே!

### வேறு

அருகில் தோன்றும் அரண்மனை மணியும்
அந்தி அந்தியென்று அலறிக் களைத்தது!
மயிலும் பறந்தது; மயிலைத் தாவி
மனமும் பறந்தது: மலைக்கா டெங்கும்
குயிலைத் தாவும் குறவன் போலத்
தேடித் தேடிச் சென்றான் பாண்டியன்!
அங்கொரு பாறைமேல் தங்கி ஏரியில்
மாமயில் ஆடிற்று; வளர்எழில் ஆடிற்று!
எப்படி யேனும் இந்த மயிலை
மடக்கிப் பிடித்து மார்போ டணைத்து
அரண்மனைக் கெடுத்துப்போய் வளர்க்க
நினைத்தான்
பூனைபோல் புதரில் மறைந்து மறைந்து
மயிலாடும் பாறை மறைவில் தங்கி
பாய்ந்து பிடித்தான் படரும் மயிலை!
அய்யோ என்றொரு அலரல்; மாமயில்
கையும் காலும் பெற்றதைக் கண்டான்;
வீர நெஞ்சம் வெலவெலத் ததுவே!
மெய்யெலாம் நடுங்க மேலெலாம் வியர்க்க
பொய்மயில் தமிழவேள் பொன்மயில் பிறைமதி
என்ப துணர்ந்தே எரிசுட் டவன் போல்
பொறுத்தருள் என்னைப் பொறுத்தருள் தவற்றை
என்றுகை கூப்பினான் இளமன் னனுமே!

RangaRakes tamilnavarasam.com

மக்கள் பிழைத்தால் மன்னன் திருத்துவான்
மன்னன் என்பான் மன்னுயிர் ஓம்புவான்
மன்னன் பிழைத்தால் மன்னுயிர் என்னாம்?
என்றாள் பிறைமதி! இருவிழி நீலம்
கடையில் ஒதுங்கி அவள்கண் கண்டு
நடையைக் காட்டிக் காட்டி நகர்ந்ததுவே!
வெட்கினான் வீர பாண்டியன்; தன்னிடப்
பக்கத் திருந்த உடைவாள் பறித்துத்
திருத்தெனை இந்தா திருத்தெனக் கொடுத்தான்!
வாளை வாங்கினாள்; மலர்விழி தூக்கி
ஏற இறங்க இளவலைப் பார்த்தாள்!
போற்றி வீர! குற்றம் திருத்தக்
கொடுத்தாய் இவ்வாளை குற்றம் எனதாம்!...

*(கவிஞர் "பிறைமதி" என்ற பெயரில் காவியம் ஒன்று எழுத நினைத்துத் தொடங்கினார். ஆனால் மரணத்தை வெல்ல இயலா நிலையில் காவியம் முடிவு பெறாமல் நின்று விட்டது)*

RangaRakes tamilnavarasam.com

## வாழ்த்து

### மலைத்தேன்!

காவேரி நாதன் எழுதும் கவிதைநற்
பாவேறி வந்த படிகண்டேன்!— மாவேறிக்
கோதும் குயிற்பிள்ளை கூட்டும் இளம்பாடல்
காதிற் கினிய கவி! 1

இளநீர் இயல்மிகு காவேரி நாதன்
'இளையர் கவிதை'யாம் ஏட்டின் விளைவே
''மலைத்தேன்'' வரக்கண்டேன்! சற்றே மலைத்தேன்!
மலைத்தேன் மலைத்தேனே யாம்! 2

காவேரி நாதன் கவிபாடி இன்னும்நற்
பாவேறும் சீர்கள் பயிலுகவே!— நாவேறும்
நற்றமிழ்போல் வாழ்க! நலம்பெறுக! என்றென்றும்
பொற்பறிவில் வாழ்க பொலிந்து! 3

30-6-70

*மலேசிய நாட்டுப் பொந்தியான் ஜோகூர் காவேரிநாதன் எழுதிய இளையர் கவிதை மலைத் தேனுக்கு வழங்கிய அணிந்துரைக் கவிதை இது.*

RangaRakes tamilnavarasam.com

# சீர்பெற வேண்டும் செழித்தே!

பள்ளரும் மள்ளரும்
வெள்ளப் பெருக்கினைப்
பார்த்து மகிழ்ந்துகை
கோர்த்துக் குதித்துமே
பாடிக் களிப்பதே சந்தாம்!—கொட்டி
ஆடி இசைப்பதே சிந்தாம்! 1

தெள்ளு தமிழினில்
உள்ளம் பறித்திடும்
முந்தைத் தமிழ்மொழிச்
சிந்து வகையெலாம்
கன்னித் தமிழ்மகள் சொத்தாம்!—இசைப்
பொன்னித் துறைமுக முத்தாம்! 2

எண்ணத் துடிப்பினில்
வண்ணக் கலப்பினில்
பாவலர் சண்முக
சுந்தரம் பாடிய
உளங்கவர் தீந்தமிழ்ச் சிந்தும்—தெங்(கு)
இளநீர்ச் சுவைதர முந்தும்! 3

கோவலர் தீங்குழல்
பாவலர் சு. மா. ச.
கூவு குயிலிசை
மேவு தமிழ்மொழிச்
சிந்து வளர்ந்து தழைத்தே—மீண்டும்
சீர்பெற வேண்டும் நிலைத்தே! 4

25-9-'71

# குளிரிளநீர்ச் சுவைப்பாட்டு!

வானெழுந்த செங்கதிரோன் தொடுவான மீதும்
மாவாழை தென்னைபலா மரஞ்செடிகள் மீதும்
தேனெழுந்த பூமீதும் பொன்னொளியைப் பாய்ச்சும்!
சிறுகாலை வண்டிசைக்கும் என்றமிழை! வாழ்வை!
ஊனெழுந்த உணர்வோடு கா. வேழ வேந்தன்
உடனெழுந்த பைம்பாடல் இவ்வண்ணத் தோகை
கானெழுந்த கூட்டருவி! கனிபிழிந்த சாறாம்!
கவிஞர்சீர் மேன்மேலும் சிறக்கட்டும் நீடே! 1

வண்டுநிறை மலர்ப்பொய்கை; மலர்ப்பொய்கை யோரம்
வளர்ந்திருக்கும் மரந்தழுவி மலர்ந்திருக்கும் முல்லை!
கண்டுநிறை மகிழ்வடையும் கண்கொள்ளாக் காட்சி
களிப்பூட்டும் தீந்தமிழை என்னுயிராம் வாழ்வைக்
கொண்டுநிறை திருநூலாம் இவ்வண்ணத் தோகை
குளிர்இளநீர்ச் சுவைப்பாட்டைக் கா. வேழ வேந்தன்
மண்டுநிறை நிலைநாட்ட இனிமேலும் பாடி
வளமுட்டிப் பல்லாண்டு வாழட்டும் நீடே! 2

*1971 ஆம் ஆண்டு நவம்பருக்கும் டிசம்பருக்கும் இடையில் எழுதப்பட்டது.*

RangaRakes tamilnavarasam.com

# தங்கப் பாடல்

புதுநோக்குப் புத்தெண்ணம் என்றே கூச்சல்
போடுகின்ற யாப்பறியாக் கூட்டம் கண்டேன்!
எதுநோக்கு வாழ்விற்குத் தேவை என்ன?
என்கின்ற நல்லெண்ணம் இல்லை இங்கே!
பொதுநோக்கு வேண்டுமெனக் கூறு கின்றார்!
புறப்பாடல் அகப்பாடல் கல்லார் ஆன்ற
மதுநோக்குத் தீந்தமிழாம் தங்கப் பாவால்
மறுமலர்ச்சிக் கவிகண்டேன், மகிழ்ச்சி கண்டேன்! 1

நான்கிழவன்; எனதன்பர் தங்கப் பாவோ
நல்லதமிழ்ப் பேரறிஞர்; கொள்கை வீரர்!
வான்கிழவன் வெய்யோன்போல் தமிழ கத்தின்
வளமைக்குப் பாடட்டும்; அவரின் பாடல்
ஊன்கிழவன் உணர்வுக்கு வலிவேற் றட்டும்!
ஊரேய்க்கும் கோழைகட்கு வழிகாட் டட்டும்!
கூன்கிழவன்; இந்நாட்டுப் பாட்டி மார்கள்
கொல்புலியாய் மாறட்டும் அவர்பாட் டாலே! 2

'பாடுகின்றேன்' என்கின்ற பாடல் கண்டேன்;
பைந்தமிழின் சுவைகண்டேன்! இந்த நாட்டில்
தேடுகின்றேன் நல்வாழ்வை என்று சொல்லும்
திருடனைத்தான் காண்கின்றேன்; அந்தோ! நாட்டில்
வாடுகின்றேன் என்கின்ற மக்கள் வாழ்வின்
வழிவகுக்கும் நற்பாடல் தங்கப் பாடல்!
சூடுகின்றேன் வாழ்த்துமுடி! பன்னூல் மேலும்
தோன்றட்டும்! தங்கப்பா! வாழ்க நீடே! 3

2-3-'74

RangaRakes tamilnavarasam.com

# தமிழ் வீசும் கதிர்

வானில் ஒளியைப் பகல்வீசும் செங்கதிரும்!
கூனல் பிறையோ குளிர்நிலவில்—தேனில்
இனிக்கும் சுவையை இரவுபகல் அள்ளித்
தனித்தமிழில் வீசும் கதிர்! 1

தென்மொழியைத் தீந்தமிழைத் தென்னாட்டு நல்வாழ்வை
முன்னேறச் செய்யும் முழுமூச்சாய்—இந்நாளில்
வையத் திருள்போக்கி வந்த பகைநொறுக்கச்
செய்யும் கதிரே சிறந்து! 2

அண்டை அயலில் பிறமொழியில் ஆய்ந்தெடுத்துக்
கொண்ட புதுமையெலாம் கூறாக்கி—வண்டல்
இடும்பொன்னி வைகைபோல் என்றென்றும் வாரிக்
கொடுக்கும் கதிர்வாழ்க வே! 3

# நல்வாழ்வைத் தூண்டும் கவிகள்!

எண்ணச் சிறகுகள் என்கின்ற நூல்கண்டேன்
பண்ணின் சுவைசேர் பழம்பாடல்—மண்ணில்
சுவைசேர்க்கும் நல்வாழ்வைத் தூண்டும் கவிகள்
புவிபோல வாழ்க பொலிந்து! 1

தித்திக்கும் பாடல் செழுந்தமிழின் நல்லூற்று
பத்தெட்டுப் பாட்டின் படர்சாயல்—முத்துவிளை
தென்னாடு போலச் சிறந்தோங்கி நூற்கவிஞர்
எந்நாளும் வாழ்க இனிது! 2

நல்ல தமிழ்வளர்தல் நாட்டிடையில் இக்கவிகள்
சொல்லும் திறத்தால் துணிந்திடலாம்—பல்வளத்தில்
வாழ்க பழந்தமிழைப் போற்றி வளவாழ்வில்
சூழ்க தொகைப் பாடல் போல்! 3



RangaRakes tamilnavarasam.com

# தந்தை பெயர் நாட்டுக!

சீர்மிகுத்த தென்னகத்தே வாழ்ந்திருக்கும் செம்மல்
கூர்மிகுத்த நல்லறிஞர் மாமயிலை முத்து
பேர்மிகுத்த முத்தெழிலன் பிள்ளைகளுக் கென்றே
வார்த்தளிக்கும் நல்லபாப்பா பாச்சுவைத்தேன் தேனே! 1

தாய்மடியை விட்டிறங்கிச் சார்ந்திருக்கும் பள்ளி
போய்மடியை நீங்கிடும்நல் புத்தம்புதுக் கல்வி
தாய்மடியைச் சூழ்ந்திருக்கும் கன்றுகளைப் போல
வாய்மடுக்கும் நல்லபாப்பா வாய்மணக்கும் பாட்டே! 2

முத்தெழிலன் முத்துமுத்தாய் இன்னும்பல நூல்கள்
புத்தெழில்சேர் பூவுலகில் பூநிறைந்த தேன்போல்
சத்தெனவே தந்துதவித் தந்தைபெயர் நாட்டி
இத்தரையில் நற்புகழில் வாழியர்பல் லாண்டே! 3

RangaRakes tamilnavarasam.com

# எண்ணத் தூண்டும் ஏடு!

திங்கள் செஞ்சுடர் போன்றுமே உலகின்
கங்குல் போக்கிடும் சண்பகம் காண்போம்!
இங்கு வாழ்ந்திடும் தென்னவர் எவர்க்கும்
பங்கை நல்கிடும்! பைந்தமிழ் வாழ்த்தே! 1

அண்ணன் தம்பிகள் அன்பினை மறந்தோர்
திண்ணைத் தூங்கிகள் செந்தமிழ் மறந்தோர்
கண்ணை நற்றமிழ் காட்டியே மலர்த்தி
எண்ணத் தூண்டிடும் சண்பகம் ஏடே! 2

வாழ்ந்தோர் வாழ்ந்திட நல்வழி செய்யும்!
தாழ்ந்தோர் தாழ்ந்ததன் காரணம் விளக்கும்!
வீழ்ந்தோர்க் கென்றுமே மென்விரல் கொடுக்கும்!
ஆழ்ந்தே சண்பகம் நல்கிடும் அறிவே! 3

குறிஞ்சி நீள்மலைக் குன்றிடைப் பிறந்தே
நிறைந்த மாமலர்ச் சண்பகம் நெடுநாள்
மறைந்த மாத்தமிழ் நன்மணம் பரப்பிச்
சிறந்து வாழ்ந்திடச் செப்புவம் வாழ்த்தே! 4

வாழி தென்னவர்! வாழிய வாழ்கவே!
வாழி தாயகம்! வாழிய வாழ்கவே!
வாழி தாய்மொழி! வாழிய வாழ்கவே!
வாழி சண்பகம்! வாழிய வாழ்கவே! 5

RangaRakes tamilnavarasam.com

# இன்றே போல் வாழ்க

வான்முட்டும் மலைமுகட்டில் மழைக்கூட்டக் காற்றலைக்கும்!
கூன்முட்டும் புகைச்சுருள்போல் குளிர்வானப் பரப்பெல்லாம்

கார்மேகம் தவழ்ந்தோடிக் கதிர்மறைத்துக் கொண்டிருக்கும்!
வேரிடையில் முள்போர்த்து வெடித்திருக்கும் பலாச்சுளையை

மந்திக்கு வாய்நிறைய வழங்கியுணும் ஆண்குரங்கு
செந்தேனை வாய்மடுத்த சிறுகுரங்குக் குட்டியெலாம்

கழையேறிக் கூத்தாடக் கலைபயிலும் தோகைமயில்!
விழைவேறி மதம்பெருக்கும் வெண்தேக்கு நிறைகாட்டில்

பிடிதழுவும் வெண்கோட்டுக் கருங்களிறு கண்டங்கே
இடைதழுவும் மானினங்கள் இயற்கைதரு நல்லின்பம்!

கனிநிறைந்த தமிழகத்தில் நல்லோர்வாழ் தென்னகத்தில்
கனிநிறைந்த நீள்தோப்பு! கயல்புரளும் நீள்வயல்கள்!

மண்ணிடையில் வளம்தேக்க வளைந்துவரும் நீளாறும்
பெண்ணையெனும் பெண்ணைதென் ஆர்க்காடு பெற்றுளதாம்!

தென்னார்க்கா டென்கின்ற கீர்த்திமிகு மாவட்டம்
பொன்னாலும் விளைவாலும் புலவர்நாப் புகழாலும்

நல்லோரை வல்லோரை நலஞ்சேர்க்கும் அறிஞர்களை
எல்லையின்றித் தந்தளித்தே இனப்பெருக்கம் கண்டதுவாம்!

வள்ளியோரில் காரியெனும் மாவள்ளல் பெருங்கொடையை
விள்ளுவதே இயலாதாம்! விரிவான மழைத்துளியாம்!

நற்கபிலர் பாடிவைத்தார்! நாம்மறக்கப் போவதுண்டோ?
பொற்பார்தென் னார்க்காடு புகழ்மிகுந்த நற்குடியில்

செய்யாத்துச் சீர்விண்ணும் பாளையத்தில் செழுமையொடு
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த சீனுவாசச்

RangaRakes tamilnavarasam.com

செல்வந்தர் திருக்குமரன் சந்திரகா சச்செம்மல்!
வல்லோர்கள் புகழ்கின்ற மனங்குளிரும் பேச்சாளன்!

தொடுவானை முத்தமிட்டுத் தொடர்ந்துவந்து நீள்புன்னை
அடிதழுவும் நீலநிற அலைகடலாம்! அவ்வலையின்

பாட்டோசை கேட்டிருக்கும் பனைமரத்து நீள்நாரை
மேட்டோரம் பூத்திருக்கும் வெண்டாழை மலரைத்தன்

இணையென்றே நினைத்தேங்கி இறகடித்துப் பறந்துவரும்!
துணைபிரியார் வாழ்நெய்தல் துறைசேர்ந்த கடலூரில்

வண்ணாரப் பாளையத்து மாதவனார் திருச்செல்வி
பெண்ணரசி சூடாம ணியென்னும் பேரெழிலைக்

கலைபயிலும் குழந்தைகளைக் கனிமொழியால் நாடோறும்
விலையில்லா நற்கல்வி விருந்தூட்டும் விரிநிலவை

பெண்ணழகைக் கண்ணழகைப் பேச்சழகை நீலநிற
விண்ணழகை மாமலையில் விரியுமலர்ப் பூவழகை

மின்விளைத்து வளம்விளைக்கும் மிகுபுகழ்சேர் நெய்வேலி
மன்றல்செய் அழகொளிரும் திருமணமா மண்டபத்தில்.

தமிழரசை நடத்துகின்ற அமைச்சரிலே தகுதிமிகு
நமதமைச்சர் தென்னார்க்காட் டமைச்சராம் திருஇராமச்

சந்திரனார் தலைமையிலே தமிழறிஞர் பலர்வாழ்த்த
வந்திருப்போர் மனங்குளிர மணமக்கள் வாழ்கவென

மாலையிட்டு மணமுடித்தான்; வாமனைக்கு மாலையிட்டான்;
சேலையிட்டுத் திருச்செல்வி நம்சூடா மணிமொழியும்

என்றென்றும் இன்றேபோல் இணைந்திருந்து குடியோம்பி
நன்றாற்றிப் புகழ்வளர்த்து நல்லறிவுப் புதல்வர்கள்

ஒன்றிரண்டு பெற்றெடுத்தே உடல்வளத்தில் செல்வத்தில்
இன்றேபோல் வாழ்க இனிது.

20-8-'72

RangaRakes tamilnavarasam.com

# தூய தமிழ் போல் வாழ்க!

வான நிறம்போல் மறிகடல்போல் இருகண்கள்
போன இடமெங்கும் புதுப்புனலாம்! அப்புனலை

இட்டுச்செல் கால்வாய் இடை இடையில் சேமையிலை
பட்டிச் சிவிறியெனப் பார்ப்போர் மனங்குளிரத்

தென்றற் சிறுகாற்றைச் செடிகொடிகள் மேலெங்கும்
அன்றலர்ந்த பூமணத்தை அண்டி வருவோர்க்கு

மன்றல் புரியும் மணமக்கள் வீட்டார்போல்
சென்ற விடமெல்லாம் செய்துகொண்டே யிருக்கும்!

வயலெல்லாம் செங்நெல்! வரப்பெல்லாம் நீள்தெங்கு!
அயலெல்லாம் கணுக்கரும்பு! அங்குமிங்கு மாகக்

கார்தேங்கி நிற்கும் கவின்சேர் மலர்க்கு ளங்கள்!
ஏர்நடத்தும் பாட்டோ இருசெவிக்கு நல்விருந்தாம்!

வான்முட்டும் கோபுரங்கள் வருவோர் வரவேற்கும்
தேன்முட்டும் பூக்கள் திருவிழிக்கு நல்விருந்தாம்!

அண்ணா மலையார் அமைத்துவைத்த பல்கலைகள்
கண்ணுடையோர் ஆக்கும் கருவூலம்! இத்தனையும்

காண்போர் மனங்கவரும் கவின்சேர் மணிமாட
மாண்புடைய தில்லை வளமாகும்! அவ்வளத்தின்

ஒளிசேர் பழங்குடியின் ஒப்பில்லாத் தோன்றல்
அளித்தளித்த செங்கை அறவோனாம் சுந்தரத்தின்

குடிவிளங்க ஆன்ற குளம்விளங்க வந்த
நெடியோனாம் திருச்செல்வன் சிதம்பரம் நெஞ்சள்ளும்

பாவலர்கள் போற்றும் பரமக் குடிச்செல்வி
காவல் திருவிளக்கை இராஜேஸ்வரிக் கண்ணைச்

RangaRakes tamilnavarasam.com

சந்தான கிருஷ்ணன் தமிழ்மகளைப் பூங்கொடியை
இந்நாள் இல்லாளாய் ஏற்றான் பலர்வாழ்த்த!

வானைத் தொடுகின்ற மாமலையின் உச்சியெலாம்
கானக் குயில்பாடிக் கார்தவழ்ந்து கொண்டிருக்கும்!

மழைபடர்ந்த வானில் எழுந்து வருமதிபோல்
கழைபடர்ந்த சாரல் சலசலக்கும் நீளருவி!

மாமலையி லேபிறந்து மன்னர் மடிதவழ்ந்து
பாமலைச் செஞ்சொற் பழம்புலவர் நாவளர்ந்த

கன்னித் தமிழ்த்தாயின் காற்சிலம்பும் குண்டலமும்
மின்னும் வளையும்நன் மேகலையும் செஞ்சொல்லும்

நாற்கூடல் மாடல் நடுத்தெருவு யாங்கணுமே
பாற்குடத்தில் தேன்கூட்டில் பல்லோர் பகிர்ந்தளிக்கும்

மதுரைத் திருநகரில் வணிகர் பெருங்குடியில்
புதுமைச் சுடர்வீசும் பொன்விளக்காம் கல்யாணி

சுந்தரத்தின் செல்வனாம் சூரிய மூர்த்தியை
இந்நாள் மணமகனாய் இனிதேற்றாய் வாழியவே!

மணம்பெற்ற என்னருமை மணமக்காள் நீவிர்
மணநாள்போல் என்றென்றும் வாழ்ந்திடுக நீடே!

மனைநடத்தும் போது வரும்போகும் தொல்லைபல!
நினைவினிலே உப்பைப நினைப்பீர்! சிறிதுப்பு

மிக்கினும் அன்றிக் குறையினும் ஆன்றசுவை
கைப்பேறிப் போகும்! கருத்தில் இதைக்கொள்வீர்!

உங்கள் பெயர்நிலைக்க ஒன்றிரண்டு தீஞ்சுவைச்
செங்கரும்புப் பிள்ளைகளைத் திருநாட்டிற் கேஅளித்துச்

சூழ்க பல்வளமும்! தூய தமிழேபோல்
வாழ்க என்றென்றும் மகிழ்ந்து!

12-7-'20

RangaRakes tamilnavarasam.com

# புது மகிழ்வில் வாழ்க

செவ்வான் எழுபரிதி செல்லும் திசையெண்ணி
அவ்வழியே நோக்கும் நெருஞ்சிபோல்—கொவ்வை
இதழ்ப்பொன்னி! என்றென்றும் கொண்டான் குறிப்பில்
புதுமகிழ்வில் வாழ்க பொலிந்து! 1

வள்ளியம்மை என்னும் மலிநீர்ப்பூம் பொன்னியைக்
கொள்ளும் குணத்தோய் பழனியப்ப!—வெள்ளம்
உலகூட்டும் தன்மைபோல் உண்டிட்டு வாழும்
கலந்த மனையறமே காண்! 2

ஆன்ற குடிப்பிறந்த அன்பு மணமக்காள்!
ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்—சான்றோர்
பலர்புகழ் நன்மக்கள் நாட்டிற் களித்தே
உலகொத்து வாழ்க உயர்ந்து! 3

28-6-'74

*'எனை வளர்த்த பொன்னி' எனக் கவிஞரால் கருதப்பட்ட பொன்னியின் ஆசிரியரும், கோலாலம்பூர் தமிழ் நேசன் ஆசிரியருமான திரு. முருகு. சுப்பிரமணியன் திருமகள் வள்ளியம்மை என்னும் பொன்னிக்கு 1-7-'74 இல் திருமணம் நடந்தபோது வாழ்த்திய வாழ்த்துப்பா! இதுவே 7-8-'74 இல் இயற்கை எய்திய கவிஞரின் இறுதிப்பா!*

RangaRakes tamilnavarasam.com

# பல்சுவை

## பொன் மாலை!

வான்பரப்பும் பொன்னொளியை உண்டு—மாலை
வாய்குலுங்க நகைக்குமலர் கண்டு—கூன்
மாமரத்து நீள்கிளையில்
வந்தடைந்த பெண்குயில்கள் கூவும்!
ஆண்கள் தாவும்!

தேனையுண்ட வண்டினங்கள் சோலை—தனில்
செம்பரிதி சாயுமந்தி மாலை—முச்
செந்தமிழ்ப்பா அமிழ்துதந்த
தீஞ்சுவையைப் பாவலர்போல் மீட்டும்!
இன்பம் கூட்டும்! 1

முன்னிருக்கும் தென்னைமரக் காட்டில்—சிறு
முட்புதரின் முனைஅமைந்த கூட்டில்—பொன்
முட்டைகளைச் சிட்டிணைகள்
விட்டுவிட்டுக் காத்திருக்கும் காலை!
பொன் மாலை!

கன்னிமணப் பெண்நடக்கும் கூறு—போலக்
கரைஉராய்ந்து நகர்ந்துசெல்லும் ஆறு—முன்
கால்மடித்து நீரையுண்ணும்
கலைவிடுத்துப் பிணைஒதுங்கி ஊடும்!
துணை தேடும்! 2

RangaRakes tamilnavarasam.com

செங்கருப்பங் காட்டெழுந்த நெருப்பு!—மேல்
செவ்வானம் ஏங்குகின்ற தவிப்பு—வான்
தீயணைத்து வந்த நிலா
திரையிடுமே கருஞ்சரிகைச் சேலை!
பொன் மாலை!

பொங்குகடல் நீள்இசையைக் கேட்டு—விண்
பூத்திருக்கும் மீனினத்தைக் காத்து—வெண்
சங்குநிறப் பிள்ளைமதி
தங்கிவிழித் தொளிவீசும் சாலை!
பொன் மாலை! 3

புன்னைமர நீள்கடலின் ஓரம்—கடல்
புரண்டுவரும் மாலைமங்கும் நேரம்—கரை
பூத்திருக்கும் தாழைமடல்
காத்திருக்கும் நாரையைப்போல்—நானே
இருந் தேனே!

என்னருகில் வந்துவிட்டாய்; இன்பம்!—நீ
இல்லையெனில் என்வாழ்வே துன்பம்!—இசை
எழுப்புகடல் போல்கவிதை
எழுப்பியதே என்னுளத்தில் வேலை!
பொன் மாலை! 4

24-11-'66

RangaRakes tamilnavarasam.com

# என்றன் வீடு!

(கலித்துறை)

என்றன் வீடென இயம்பிடப்
போற்றிட ஏதுரிமை?
உன்றன் வீடெனும் உணர்வினை
உணர்த்திய உன்முன்னோர்
சென்ற செய்தியைச் செப்பிடச்
செவியினில் சேர்த்தாயோ?
என்றும் வீடெனும் இடமெலாம்
எவர்க்குமே இடமாமே! 1

சின்ன வீட்டினில் சேலிய
மேட்டினில் சிறாரோடு
முன்னம் வாழ்ந்ததை முதுமையில்
வாழ்வதை முறையாக்கி
இன்னும் ஏங்கிடும் என்மன
வியப்பினுக் கென்சொல்வேன்?
அன்னை தந்தையின் அன்புளம்
என்னரும் வீடாமே! 2

கன்று மாடுகள் கத்திடக்
கதவினில் கையூன்றிச்
சென்ற நாட்களின் செழுமையும்
வறுமையும் சிரித்தெண்ணி
இன்றும் நாளையும் ஏகிடு
மியல்பினை எண்ணாமல்
நின்றி ருக்கநான் நின்றிடும்
சிறுகுடி நீள்வீடே! 3

RangaRakes tamilnavarasam.com

கோழி கூவிடக் குழந்தைகள்
உறங்கிட நீள்குப்பை
தாழி கூழடு புகையெனச்
சிறுபுகை தலைநீட்ட
மேழி ஏந்திய உழவரோ
வயல்வெளி மேவாமுன்
''வாழி செங்கதிர்'' வாழ்த்தினை
வழங்கிடும் என்வீடே! 4

சோம்ப லுற்றநான் தூங்கிடத்
தூங்கிடத் தூங்காத
ஆம்பல் போல்விழி அழகிய
பெயர்த்தியர் அண்டிவந்தே
தேம்பல் அன்னையர் சிறுகுளம்
சென்றவர் செயலெண்ணிக்
கூம்பல் நல்லிராக் குளிர்செயக்
குளிர்செயும் என்வீடே! 5

பொன்செய் செங்கதிர் புதரிடைப்
புகுந்திட எழுந்துவரு
விண்செய் விந்தையை வியந்திட
விடியலில் வெளிவந்தே
பண்செய் புட்களின் பாடலில்
அறிவைநான் பறிகொடுக்கப்
புண்செய் மக்களின் குறையினைப்
போக்கிடும் என்வீடே! 6

கன்று தாய்முலை முட்டிடக்
களிப்பினில் காரெருமை
நின்று பால்சொரி நிலையினில்
கொட்டகை நீண்டிருக்க
முன்றில் சிட்டிணை அணிலிசை
முழவயர் தெருத்திண்ணைத்
தென்றல் பாய்ந்திடச் சிரிப்பொலி
பாய்ந்திடும் என்வீடே! 7

RangaRakes tamilnavarasam.com

நாயு றங்கிட நானுறங்
கிடச்சிறு நலங்கிள்ளித்
தாயு றங்கிடத் தழையிருள்
உறங்கிடத் தாழ்வெள்ளி
போயு றங்கிடப் பொன்னொளி
எழுந்திடப் புலர்காலை
வாயு றங்கிடாப் புள்ளினம்
வாழ்ந்திடும் என்வீடே! 8

வெள்ள மேவிய விரிமலர்
இளநகை மெல்லியலார்
உள்ளம் மேவிய உவகையின்
உருவொளி ஒண்சிறார்கள்
பள்ள நீரினில் படர்ந்திடு
பறவைகள்; கதிர்முன்னே
கொள்ளு மின்பமே குவித்திடு
குடிசையாம் என்வீடே! 9

கொடிய சைந்திடக் குளிர்மலர்
சிரித்திடக் குயில்கூவ
மடிக றந்திடப் பால்வளம்
வற்றிடாக் கொம்பெருமை
அடிபெ யர்த்திடும்; ஆனினம்
அடிக்கடி கன்றுன்னிக்
கடித ழைத்திடும் முகப்பகம்
கவின்மிகு என்வீடே! 10

9-7-'71

*குறிய மாவொடு கூவிளம் இருவிளம் காயொன்று அறிதி "காயது அந்தம் ஊர் தரும்" என்னும் விருத்தப்பாவின்படி காய்ச்சீர் இறுதியில் அமைந்த கலித்துறைச் செய்யுள் இது.*

RangaRakes tamilnavarasam.com

# குயில்!

(கலித்துறை)

தேன்மி குந்திடு திருமலர்
பூத்திடு செய்யின்
கூன்மி குந்திடு குளிர்நிழல் 1
ஆலிடைக் கூண்டின்
கான்மி குந்திடக் கரைந்திடு
காக்கைகள் கண்ட
வானி டையெழு மரக்கிளை
வளர்ந்தசெங் குயிலே!

ஏனெ ழுந்துநீ இரவிடைப்
பகலவன் எழாமுன்
தேனெ ழுந்திடு செழுங்கவிப் 2
பாவலர் பாட்டை
வானெ ழுந்துநீ வகையுளி
நீக்கியே வாயால்
கானெ ழுந்துமே பாடுதல்
கண்டனன்; களிப்பே!

பெற்ற தாயினைக் கூண்டிடைக்
கண்டிடு பேற்றை
உற்ற னமெனும் பொய்மையில் 3
மகிழ்ந்தனை; உண்மைச்
சுற்ற மாரெனக் காக்கைகள்
கூவியே துரத்தக்
கற்ற னையவ ரவரினம்
காப்பதே கடனாம்!

RangaRakes tamilnavarasam.com

புள்ளி பெற்றனை ஓவியப்
      பொறியென வுடலில்;
வெள்ள மாமலர் மேவிய
      தேரையைப் போல்நீ
கள்ள மற்றனை; காவினில்
      கூவிநீ குயிலே
உள்ள மீர்த்தனை உயிரையும்
      கொடியவர் உணவே! 4

கூடு கட்டிடக் குடிசெயக்
      கற்றிடாக் குயிலே!
பாடு பாவலர் பாவையர்
      பற்றுமிக் கூரக்
காடு தாண்டியே காதலர்
      கண்டுவந் துரைக்க
நாடு முற்றிலும் உன்துணை
      நாடினர் என்னாம்? 5

இன்ப வாழ்க்கையில் இரண்டறக்
      கலந்துமே யொன்றும்
அன்பு வாழ்க்கையை அடைவதே
      உயிரின ஆக்கம்!
துன்ப வாழ்க்கையின் தொடக்கமே
      தனிக்குடி; வேண்டாம்
என்று ரைத்துநீ குடிசெயா
      திருப்பதும் முறையோ? 6

கூசு கின்றனர் குமரிகள்
      குயிலிளம் பிள்ளாய்!
காசு நாண்மலர் பிறப்பெனும்
      வெண்டளைக் கவியோ?

RangaRakes tamilnavarasam.com

மாசு போக்கிய வீணையில்
வடித்திடு பாட்டோ?
பேச வாய்த்தவுன் வாய்மொழிப்
பெற்றியைக் கண்டே! 7

கிள்ளை போலுனைக் கிளிமொழிக்
குமரிகள் கூண்டில்
தள்ளிப் பாலொடு மிகுபழம்
தந்துமே வளர்த்துக்
கள்ளை மீறிடு பேச்சினைக்
கற்றிட விழையார்!
கொள்ளை யின்பமாம் உன்மொழிக்
கூற்றுணர்ந் தோர்க்கே! 8

காடு சுற்றியே காவினில்
கிளைகளில் கண்ட
கூடு சுற்றியே காக்கையின்
கூண்டினில் முட்டை
தேடி யிட்டனை; ஆயினும்
செழுமரச் சோலை
கூடு கட்டிடக் குறியிலாக்
குறைபெருங் குறையே! 9

தெள்ளு தீந்தமிழ்ச் செழுங்கவி
வாணனைப் போன்றே
உள்ளம் பொங்கிட உணர்வுமே
லெழுந்திட நெஞ்சம்
அள்ளுறு பாட்டினை இசைக்கிறாய்
அடிக்கடி; ஆனால்
வள்ளல் யாருளார் இசைப்பொருள்
உணர்ந்துமே வழங்க! 10

9-7-'71

*"குறிய மாவொடு கூவிளம் இருவிளம் மாவொன்று அறிதி" என்னும் விருத்தப்பாவின் படி அமைந்த கலித்துறைச் செய்யுள் இது.*

RangaRakes tamilnavarasam.com

# கலங்கவில்லை!

எதற்கும் கலங்கவில்லை—நான்
எதற்கும் கலங்கவில்லை! 1

மதுமலர் வண்டு
வானம் பாடி
வாழ்வதுபோல் வாழ்வேன்—இசைத்தே
வாழ்வதுபோல் வாழ்வேன்! 2

(எதற்கும்)

அன்னை இழந்தேன்
அப்பன் இழந்தேன்
அன்றும் கலங்கவில்லை—வறுமைக்
கென்றும் கலங்கவில்லை!
முன்னர்ப் புகழ்ந்தோர்
பின்னர் இகழ்ந்தோர்
மூடர் நனிகண்டேன்—வாழ்வில்
மூடர் நனிகண்டேன்! 3

(எதற்கும்)

ஈருயிர் இணக்கம்
இன்பப் பெருக்கம்
என்பார் உலகினிலே—காதல்
என்பார் உலகினிலே!
காரிருள் வானில்
நிலவைத் தேடும்
கதையாய்ப் போனதுவே—காதல்
கதையாய்ப் போனதுவே! 4



(எதற்கும்)

RangaRakes tamilnavarasam.com

காய்ந்தால் என்னாம்
பேய்ந்தால் என்னாம்
கைப்பொருள் தொலைந்தென்னாம்—தேடிய
கைப்பொருள் தொலைந்தென்னாம்?
மாய்ந்தால் என்னாம்
வாழ்ந்தால் என்னாம்
மாற்றார் பகைத்தென்னாம்—கொடிய
மாற்றார் பகைத்தென்னாம்! 5

(எதற்கும்)

எதுதான் நடந்தால்
என்னதான் எனக்கே
என்றே சிரித்திருப்பேன்—நன்மை
என்றே சிரித்திருப்பேன்
புதுமையும் ஒன்றே
பழமையும் ஒன்றே
போனது வருவதில்லை—நடந்து
போனது வருவதில்லை! 6

(எதற்கும்)

நன்செய் விளைந்தென்?
புன்செய் விளைந்தென்?
நட்டவன் அறுப்பதில்லை—உழுது
நட்டவன் அறுப்பதில்லை!
என்செயல் வேறே
என்குறி வேறே
என்வழியும் வேறே! 7

27-7-'66

RangaRakes tamilnavarasam.com

# நான் கண்ட கவிஞர்!

அன்னையை இழந்தேன் எட்டாம்
ஆண்டினில்; அழுதேன் இல்லை!
என்னைக்கொண் டவரி டத்தில்
எழுத்தோத விட்டார் என்னை!
அந்நாளில் கண்டேன்! வாழ்வில்
அவரேஎன் ஆசான்! தந்தை!
என்னைநீர் பொறுப்பீர்! நானோ
இருமுறை அழவேண் டும்மே! 1

பாரினைத் திருத்தும் ஆசான்!
பழமையைத் திருத்தும் ஆசான்!
சீர்தளை திருத்தி நல்ல
செந்தமிழ் திருத்தும் ஆசான்!
ஊர்கண்ட ஆசான்! என்றன்
உளங்கண்ட ஆசான்! இன்றோ
வேரற்றுச் சாய்ந்தார்! நெஞ்சில்
வேல்பாய்ந்து வேகின் றேனே! 2

மன்னர்மன் னனையும் மூன்று
மணிப்பெண்ணும் அறிவார் சில்லோர்!
மன்னர்மன் னனைப்போல் ஆசான்!
மனத்தினில் பயின்ற நாங்கள்
தென்மொழி மாண வர்கள்
சிறப்பிடம் பெற்றே வாழ்ந்தோம்!
என்சொல்வேன்! தமிழ் இழந்தேன்!
இருவிழி இழந்தேன் இன்றே! 3

RangaRakes tamilnavarasam.com

தேன்சொட்டச் சொட்டஎன்றும்
செந்தமிழ்க் கவிதை யாத்த
நான்கண்ட கவிஞர் ஆசான்
நமைவிட்டுப் பிரிந்தார்! என்றன்
ஊன்சுட்டுத் தீய்ந்த தந்தோ!
உளம்சுட்டுக் கொதிக்கு தந்தோ!
வான்சொட்டும் தூறல் ஒக்கும்
மக்களின் கண்ணீர் வெள்ளம்! 4

பைந்தமிழ் வழிவந் தோரே!
பாவேந்தர் பயிற்றத் தேர்ந்த
செந்தமிழ் மாண வர்காள்!
செல்வங்காள்! மன்னர் மன்ன!
இந்தநாள் துணைபி ரிந்த
எமதன்னாய் பழனி யம்மா!
நொந்துளோம் பிரிவால்! நாமே
நோயினை மாற்று வோமே! 5

மனம்நொந்தே இங்குச் சூழ்ந்த
மாணவத் தோழ ரேறே!
இனம்நொந்த போழ்தி லெல்லாம்
நான்கண்ட கவிஞர் என்றும்
சினவேங்கை ஆன துண்டே!
செந்தமிழ் வாழ்ந்த துண்டே!
இனம்காப்போம்! தமிழைக் காப்போம்!
இதுவேநம் வேலை யாமே!! 6

24-4-'64

*பாரதிதாசனார் இல்லத்தில், அவர்தம் மாண வர்கள் ஆசிரியரைப் பாராட்டிய இரங்கல் நிகழ்ச்சியில் பாடியது.*

RangaRakes tamilnavarasam.com

# சீர்ப்புதுவை

கடற்கரையில் நீள்தாழை
கரையோரம் புன்னைமலர்
இடமகன்ற சீர்ப்புதுவை வாருங்கள்!—தமிழ்
இன்கவிகள் பிறந்தவிடம் பாருங்கள்! 1

கல்லாதார் இல்லாத
கவின்மிகுந்த சீர்ப்புதுவை
வல்லோர்கள் வாழுமிடம் வாருங்கள்!—இருள்
மனமாசைப் போக்குமிடம் பாருங்கள்! 2

மேல்நாட்டுக் கலைவிளக்கம்
விளங்கவைக்கும் சாலைகளும்
தாலாட்டுக் கடற்கரையும் பாருங்கள்!—மேலைத்
தமிழறிஞர் மொழிபெயர்ப்பைக் கேளுங்கள்! 3

மருத்துவம்செய் நீள்மனைகள்
மாமுனிவன் தன்வந்திரி
கருத்துரைக்கும் பல்லோரைக் கேளுங்கள்!—அவர்
காட்டுகின்ற வழிநடந்து பாருங்கள்! 4

காவேந்து தென்னைமரக்
கடலோர வடதிசையில்
பாவேந்தர் கல்லறையில் குந்துங்கள்!—அவர்
பாடிவைத்த படிநடக்க முந்துங்கள்! 5

*1971ஆம் ஆண்டு சனவரிக்கும் மார்ச்சுக்கும் இடையே எழுதப்பட்டது.*

RangaRakes tamilnavarasam.com

# சௌமிய ஆண்டுச் செய்தி

சூலகத்துக் கார்மேகம் வானில் ஓடித்
துறைதோறும் துறைதோறும் குளிர்மை சேர்க்கும்
காலகத்தை மருவாது வறட்சி தேக்கிக்
கடுங்கோடை ஆக்கியதால் கடந்தஆண்டுக்
கீலகத்தைச் சரிசெய்யும் சௌமி யத்தைக்
கிட்டிடுவோம்! வாழ்ந்திடுவோம்! பிறந்த ஆண்டு
வாலகத்தை நிறைத்திடுக! வறுமை நீக்க
வருகவென சௌமியத்தை வரவேற் போமே!

இவ்வாண்டு வள்ளுவர்க்கோ ஆயி ரத்தை
இரட்டிக்கும் புத்தாண்டாம்! வாழ்க! வாழ்க!
இவ்வாண்டு புத்தாண்டாம்! அண்ணல் காந்தி
இன்றிருந்தால் அவர்வயதோ ஒருநூ றாண்டாம்!
இவ்வாண்டு புத்தாண்டாம்! அறிஞர் அண்ணா
இன்றிருந்தால் அவர்வயதோ அறுப தாண்டாம்!
இவ்வாண்டு சௌமியமே மக்கள் வாழ்வில்
இன்பத்தை நிறைத்தருள்! வரவேற் போமே!

குளத்தினிலே நீர்நிறைக! குளத்தில் பூக்கும்
கொடிமலர்கள் மலிந்திடுக! நன்செய் புன்செய்
வளத்தினிலே பழுத்திடுக! காட்டில் மேயும்
மாடுகன்று கொழுத்திடுக! வறுமை இன்றிக்
களத்தினிலே வளம்பெருக்கி இங்கு வாழும்
கற்றோர்க்கும் மற்றோர்க்கும் வாரித் தந்தே
உளத்தினிலே அறநெறியை ஓம்பிக் காப்போம்!
ஒப்பில்லா சௌமியத்தில் வாழ்வோம் நாமே!

RangaRakes tamilnavarasam.com

தன்னாட்டைப் பொன்னாட்டைத் தான்பிறந்த
தாய்நாட்டை அழிப்பதற்குச் சீறி வந்த
முன்னாட்டுப் பெரும்படையைக் கொள்ளி வைப்பை
முறியடிக்க இயலாத அரசை வாழ்வை
மின்னாட்டு வாள்வீச்சால் தனித்து நின்று
வெற்றிகொள்ளும் தறுகண்மை மிக்க வீரன்
எந்நாட்டும் புகழ்பரப்பி நாட்டைக் காத்தே
இருந்திறந்து போனசெய்தி கேட்ட துண்டாம்! 4

வான்பெய்ய புல்பூண்டு மரங்கள் தோன்றி
மலர்பெய்ய வண்டினங்கள் தேக்கி வைத்த
தேன்பெய்ய மலைமுகட்டில் நன்செய் புன்செய்
செந்நெல்லும் முக்கனியும் கறவைப் பாலும்
கான்பெய்யக் களித்திருந்த அந்த நாளும்
களிபெய்யக் கண்டிருக்கும் இந்த நாளும்
கூன்பெய்யும் பிள்ளைமதிப் பாணி பாணன்
குடியரசை வளம்செய்தார்; கேட்ட துண்டாம்! 5

நீர்தேக்கி நிலம்விளைத்து நிலத்தின் மீது
நெடுமாடக் கூடம்நல் கோட்டை கட்டி
ஊர்தேக்கி உயர்வானை முட்டு கின்ற
ஓங்கலிடைக் கல்பிளந்து சிலைகள் சிற்பச்
சீர்தேக்கிச் செங்கல்லால் கோபு ரங்கள்
திருக்குளங்கள் படித்துறைகள்; கோயில் முன்னர்த்
தேர்தேக்கி நல்வாழ்வின் செழுமை தேக்கிச்
சென்றவர்கள் பலராவார்! கேட்ட துண்டாம்! 6

பொய்கூட்டிச் சுவைகூட்டிப் புளுகு கின்ற
திறமைமிகு போக்கற்ற புலவ ரெல்லாம்
மெய்கூட்டிக் கதைத்ததனால் நாட்டில் மக்கள்
விதிவிதியென் றேமாந்தே சோம்பல் உற்றார்!

RangaRakes tamilnavarasam.com

கைகூட்டிக் குழப்புகின்ற எருமை போல
வாழ்ந்திருந்த நாட்களிலே அறிஞர் தோன்றிக்
கைகூட்டி மனத்திடையில் நிலவி வந்த
காரிருளைக் களைந்தார்கள்! கேட்ட துண்டாம்!

மனம்போல அரசாண்ட மன்னர், அன்னோர்
வால்பிடித்து வாழ்ந்திருந்த அமைச்சர், தம்மின்
இனம்போல வாழுகின்ற மற்றோர் எல்லாம்
எழுச்சியுற எண்ணாதார்; தன்னைக் கொல்லும்
சினம்போல ஒழுக்கமின்றி வாழ்ந்த மக்கள்
சீர்பெறவே நன்னெறியைப் பண்பைக் கோடைப்
பனம்போல நல்லறிஞர் வகுத்துத் தந்தார்!
பார்த்ததுண்டாம்! அவரவரின் தனிச்சி றப்பு!

நல்லரசு சௌமியத்தில் தழைக்கச் செய்வோம்!
நமக்குள்ளே பகையில்லா வாழ்க்கை செய்வோம்!
சொல்லரசின் வழிநடப்போம்! துன்பம் கண்டால்
துயர்நீக்க முனைந்திடுவோம்! தாய கத்தின்
வில் அரசாய் இளைஞரெலாம் வாழ்வோம்! பண்டை
வேல்வீரர் மரபினர்நாம் நாட்டைக் காப்போம்!
பல்லரசும் நல்லரசாய்ப் பகையே இன்றிப்
பல்லாண்டு வாழ்ந்திருக்க வகைசெய் வோமே!

3-4-'69

RangaRakes tamilnavarasam.com